تاميلي

https://www.path-2-happiness.com/ta

The Path to Happiness

சுபீட்சத்திற்கான உன்னத உரையாடல்கள்

காலித் அபுல் பத்தாஹ்

فضاء القنوات
SPACE CHANNELS

1435 - 2014

The Path to Happiness
சுபீட்சத்திற்கான உன்னத உரையாடல்கள்
காலித் அபுல் பத்தாஹ்

https://www.path-2-happiness.com/ta

வெளியீடுகள்:

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்

தகவல் மையம்

சுபீட்சத்திற்கான உன்னத உரையாடல்கள்

இம்மை, மறுமை சுபீட்சத்தை நோக்காகக்கொண்ட உன்னத உரையாடல்கள்

காலித் அபுல் பத்தாஹ்

بسم الله الرحمن الرحيم

முகவுரை

இற்றய நவயுகம் தகவல்களை கண்டறிவதிலும் அவற்றை துரித கதியில் பரிமாறுவதிலும் எட்டாச்சிகரம் அடைந்துவிட்டபோதிலும், இன்றைய மனிதன் தன் வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற மிகப்பெரும் புதிர்களுக்கு விடை கொடுக்கமுடியாமலும், அவன் வாழ்கின்ற இத்தடுமாற்றமிக்க பாதையில் இருந்து அவனை வெளியேற்ற முடியாலாமலும் சிந்தனைகளால் அலைமோதிக்கொண்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனடிப்படையில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற வழிமுறையில் மனிதசமுதாயத்திற்கு இறைவேதத்தை எத்திவைக்கக்கடமைப்பட்டவர்கள். இதுவே இறைதூதர்களின் பணியாகவும் இருந்தது..

மேலும் அல்குர்ஆன் வாய்மையை அடிப்படையாகக்கொண்ட விவாதத்தை தூண்டியுள்ளதொடு அது அழகிய அழைப்புப்பணியில் அமைந்திருப்பதையும் விரும்புகிறது. {(நபியே) நீர் விவேகத்தைக்கொண்டு, மற்றும் அழகிய நல்லுபதேசத்தைக்கொண்டு உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எதுமிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன், அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன்; இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் மிக்க அறிந்தவன்} [அந்நஹ்ல் : 125] குறிப்பாக வேதங்கொடுக்கப்பட்டவர்களுடன் வழியுறுத்துகிறது. { (விசுவாசிகளே!) நீங்கள் வேதக்காரர்களுடன் எது மிக அழகானதோ அதைக்கொண்டல்லாது தர்க்கிக்கவேண்டாம்; (ஆயினும்) அவர்களில் அநியாயம் செயதோரைத்தவிர; (அவர்களுடன் தர்க்கித்தால்) " எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும், உங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் நாங்கள் விசுவாசிக்கிறோம்; எங்கள் வணக்கத்திற்குரியவனும், உங்கள் வணக்கத்திற்குரியவனும் ஒருவனே; மேலும், நாங்கள் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கின்றவர்கள்" என்று கூறுங்கள்} [ஸூறா அல்அன்கபூத் : 46] வேதம் கொடுக்கப்பட்ட இறைத்தூதர்களும், நபிமார்களும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நூஹ்(அலை) அவர்கள் தன் கூட்டத்தாருடன் தர்க்கித்தார் { அவர்கள், நூஹே! நிச்சயமாக நீர் எங்களுடன் தர்க்கித்துவிட்டீர்; பின்னும், எங்களுடன் தர்க்கிப்பதை அதிகமாக்கிவிட்டீர் . ஆகவே, நீர் உண்மையாளர்களில் இருந்தால், நீர் எங்களுக்கு வாக்களித்ததை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள்} [ஸூறா அல்ஹூத் : 32] திருக்குர்ஆன் இனைவைப்பாலர்களுடனான நூஹ் நபியின் வாதப்பிரதிவாதத்தில் எமக்குப்பல படிப்பினைகளை எடுத்தியம்புகிறது; அவரின் தூதுத்துவத்திற்கெதிராக அவர்கள் முன்வைத்த ஆதாரங்களை எவ்வித திரிபுமின்றி கூறுகிறது. இஸ்லாம் நம்பிக்கைசார் அழைப்பு மட்டுமல்ல, மாறாக சீர்திருத்த அழைப்புமாகும் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.இவ்விரு அழைப்புமுறைகளும் சிந்தனை சீராக்கத்தின் விளைவால் விருத்தியடைகின்றன; சிந்தனைசீராக்கம் வாதப்பிரதிவாதங்களினால் ஒன்றை ஏற்கச்செய்வதனூடாகவே முழுமையடைகிறது.

இவ்வுரையாடல் இஸ்லாத்தை பரிபூரண அமைப்பில் விளக்கவோ அல்லது

அதன் எதிரிகளால் எழுப்பப்படும் எல்லா சந்தேகங்களையும் தீர்த்துவைக்கவோ போதாது. எனினும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் இடையில் உள்ள முட்டுக்கட்டையை நீக்கி அவர்கள் அதை அறிந்துகொள்வதற்கான வழியை திறந்துவைக்கவல்லது.

இதன்போது பல மூலாதாரங்களையும், துணைமூலாதாரங்களையும், இணையத்தளபக்கங்களையும் நாட வேண்டியேற்பட்டது. வாசகர்களின் நலன்கருதி அவற்றை அடிக்குறிப்பிலிடவில்லை. என்றாலும் சில இணையத்தள பக்கங்களைத்தவிர அவற்றில் முக்கியமானவற்றை நூலின் இறுதிப்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன்

இறுதியாக... இவ்வுரையாடலில் மூன்று கதாப்பாத்திரங்கள் உள்ளனர். .அவர்களில் இருவரைக்கொண்டே உரையாடல் துவங்குகி முற்றுப்பெறுகிறது. முதல்பாத்திரம்: றாஷித்; பிரித்தானியாவில் வசிக்கும் முஸ்லிம் எழுத்தாளர். இரண்டாமவர்: மைக்கல்; இங்கிலாந்தை பிறப்பிடமாகக்கொண்ட இவர் ஆசிரியராக பணியாற்றுகிறார். இவர்கள் இருவரும் சமூகவலையத்தளமொன்றில் சந்திக்கின்றனர்; பின்பு நேரடியாக ஒருவரையொருவர் சந்தித்து உரையாட ஆரம்பிக்கின்றனர். இவர்களுடைய பெரிஸ் நகர சுற்றுப்பிரயாணத்தின்போது ஜெர்மனியில் வசிக்கும் இந்தியாவைச்சேர்ந்த பொறியியல் மாணவர் (மூன்றாம் பாத்திரம்) ரஜீவை சந்திக்கின்றனர்...

இதோ! ராஷித், மைக்கல் ஆகியோருக்கிடையிலான முதல் உரையாடலில் உங்களை விட்டுச்செல்கிறேன்...

காலித் அபுல் பத்தாஹ்

Khaled@alfotoh.com

https://www.path-2-happiness.com/ta

மதுக்கோப்பை

மதுக்கோப்பை

ராஷித் தனது நண்பன் **மைக்கை** *குறிப்பிட்ட தினத்தன்று உணவகத்தில் சந்தித்தார். இருவரும் தமது கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக அமர எத்தணிக்கவே* **மைக்கல்** *றாஷிதை நோக்கி :*

இன்று நான் முன்வைக்கப்போகும் விடயத்தில் எனது கருத்திற்கு நீங்கள் உடன்படுவீர்கள் என நினைக்கிறேன்.

றாஷித்: *நண்பரே! சற்று பொறுங்கள்... ஏதாவது பருகிக்கொண்டே பேசலாமே!*

மைக்கல்: *மன்னிக்கவும், அவ்வாறே..*

மைக்கல் சிற்றூழியரை அழைக்கவே அவர் அவர்களிடம் வந்தார்; ராஷித் அவருக்குத்தேவையானதைக் கூறினார்.

றாஷித்: *தேனீர்...*

சிற்றூழியர் (ஆச்சரியமாக): *தேனீரா?!!*

றாஷித்: *எலுமிச்சப்பழச்சாறினாலான*

சிற்றூழியர் (மேலும் ஆச்சரியமாக): *எலுமிச்சப்பழச்சாறிலா?!!*

சற்று சிரித்தவராக {மைக்கல் சிற்றூழியரைப் பார்த்து): *ஆம், அவர் முஸ்லிம் , மதுபானம் அருந்துவதில்லை. எனக்கும் அவ்வாறே எலுமிச்சப்பழச்சாறினாலான தேனீர்.*

சிற்றூழியர் அவர்களுக்கு தேவையானவற்றை கொண்டுவருவதற்காக சென்றுவிட்டார். அந்நேரத்தில் சற்று முனுமுனுத்தவராக றாஷித்: இதில் என்னதான் புதுமையோ தெறியவில்லை ?!

மைக்கல: *எனது நண்பரே எமது நாட்டில் மதுபானம் பருகுவதென்பது தண்ணீர் குடிப்பதைப்போல, இங்கே பல்வேறுபட்ட மதுபானங்கள் உள்ளன. அவற்றைப்பருகும் வழிமுறைகளும் உள்ளன. நீங்கள் விரும்பும் ஓன்றும் அவற்றில் இல்லையென்பதாலே சிற்றூழியர் சற்று ஆச்சரியப்பட்டார்... மன்னிக்கவும் நண்பரே...*

றாஷித்: *என்றாலும், புதுமை..*

மைக்கல்: *இதிலென்ன புதுமை இருக்கிறது? இதுவொன்றும் எங்களுக்கு புதுவிடயமல்ல, இங்கு மட்டுமல்ல மேற்குலகு புராகக் கானப்படும் ஓர் சாதாரண விடயம்.*

றாஷித்: *ஆம், ஆச்சரியமாக உள்ளது.*

மைக்கல்: *அதெப்படி?!*

றாஷித்: *எப்படிஎன்றால்... உங்களில் அதிகமானோர் கிறிஸ்தவர்கள்;. பரிசுத்த வேதாகமத்தை நம்புவது உங்களது கடமை. மதுபானம் தீங்குவிளைவீக்கக்ககூடியது என தவ்ராத் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; அதை எச்சரித்துமுள்ளது. {மதுபானப்பிரியரையும் மாமிசப்பெருந்தீணிக்காரரையும் சேராதே! } [நீதிமொழிகள்: அதிகாரம்23: வசனம்20] {சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து மதுபானம் தங்களை சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகும் அளவு குடித்துக்கொண்டே இருக்கிறவர்களுக்கு ஐயோ! } [ஏசாயா: அதிகாரம் 5: வசனம்11]*

{ நீரும் உன்னோடே கூட உன்குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால், ஆசாரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரசத்தையும், மதுவையும் குடிக்க வேண்டாம் } [லேவியராகமம்::அதிகாரம்10:வசனம்9] {திராட்சைச்செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும், மதுபானமும் குடியாமல் தீட்டானதொன்றும்

புசியாமலும் நான் அவளுக்கு கட்டளையிட்டதெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார்.} [நியாயாதிபதிகள்:அதிகாரம்13:வசனம்14] மதுபானம் அருந்துவதை இகழ்ந்து இவையல்லாத பல அத்தியாயங்களும்; போதையில் இருப்பவர்களுடன் சேர்ந்து இருப்பதையும் அவர்களைப் பார்பவர்களையும் இகழ்ந்து பல அத்தியாயங்களும் உங்கள் வேத்திலேயே வந்துள்ளன.

மைக்கல்: *றாஷிதே! மண்னிக்கவும்... உங்களுக்கு மட்டும்தான் வேதாகம்ம் நன்றாகத்தெறியும் என்று நீங்கள் நிணைக்க வேன்டாம். எங்களிடம் உள்ள மார்க்க அறிஞர்கள் பலரும் மதுபானம் அருந்துவது தொடர்பாக பலஆய்வுகளை மேற்கொள்கிறார்கள்தான். அவர்களுள் சிலர் சில நபிமார்கள் போதையேறும் அளவு மதுபானம் அருந்தியிருக்கிறார்கள் என தவ்ராத் வேதத்திலிருந்தே ஆதாரங்களை முன்வைத்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் போதைமட்டுமே தடைசெய்யப்பட்டுள்ளது எனகூறுகிரார்கள். இயேசுகிறிஸ்துவும் மது அருந்தினாரென இன்ஜீல் வேதத்திலேயே உள்ளது.*

{ எப்படியெனில் யோவான்ஸ்நாணன் அப்பம் புசியாதவனும், திராட்சரசம் குடியாதவனுமாய் வந்தான், அதற்கு நீங்கள் அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்கிறீர்கள்.} { மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார், அதற்கு நீங்கள் இதோ போஜனப்பிரியனும், மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்.}

[லுகா: அதிகாரம்7: வசனம்:33,34]

றாஷித்: *நண்பரே! நீங்கள் சொல்லும் விடயம் மேற்கத்திய சமுகத்தை பாதிக்கக்கூடிய வேறு இரு பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்கிறது.*

முதலாவது: கூறுவதற்கே கவலையளிப்பது என்னவென்றால், தற்போதுள்ள உங்கள் வேதாகமத்தில் பல திரிபுகளும், உட்பூசல்களும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாத்தானுக்கு பணிபுரியும் சில கரங்கள் செய்த மாற்றத்தினால் அவற்றில் பல கோட்பாடுகள் முன்னுக்குப்பின் முரணாக இருக்கின்றன. அதில் ஒன்றுதான் மதுபானத்தை ஆகுமாக்கலும், தடை செய்தலும். அதாவது: இயேசு கிறிஸ்து அவர்கள் மதுபானம் அருந்தினார் என்று கூறிய அதே நேரத்தில் அவர் அதை அருந்துபவர் இல்லையென்றும் இன்னோர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் வேதாகமத்தை படிக்கும் போதே... புரியும். ஜிப்ராயீல்(அலை) அவர்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றி கூறும்போது { அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். } [லூக்கா: அதிகாரம்1: வசனம்15]

இரண்டாவது விடயம்: உங்கள் மார்க அறிஞர்கள் (பாதிரியார்கள்) சிலர் வேதாகமத்தை பதுக்குகிறார்கள்; (அவற்றில் உள்ளவற்றை மறைக்கிறார்கள்) அவற்றில் சிலர் தமக்கு வேதவாக்கு வருவதாகவும் (ஹலாலாக்குதல்,ஹராமாக்குதல்) ஆகுமாக்கல், தடைசெய்தல் போன்ற அதிகாரங்கள் தமக்கிருப்பதாகவும் வாதிடுகிறார்கள். நீங்கள்தான் அவர்களை பின்பற்றுகிறீர்கள்

மைக்கல்: இதில் நீங்கள் கூறுவது உண்மைதான். அதனால்தான் உங்களுக்கு ஒரு விடயத்தை வேளிப்படையாகச்சொல்கிறேன்: எங்களில் அதிகமானோர் வேதாகமத்தையும், பாதிரியார்களையும் நம்புவதில்லை. எமது சமூகம் எழுச்சி பெற்ற காலம் தொடக்கமே பெரும்மாற்றம் நிகழ்ந்துவிட்டது. நாங்கள் நம்புவதெல்லாம் சடரீதியான இவ்வறிவியலையும், சிந்தனையையுமே. இந்த வேதம்,வேதாகமங்களை ஒரு புறம் வைத்துவிட்டு சிந்தனைரீதியாக ஏதாவது பேசலாம்.

றாஷித்: மன்னிக்கவும்... இந்த உங்களுடைய பிரச்சினைகளெல்லாம்; குறிப்பாக மத்திய காலப்பகுதியில் ஏற்பட்ட திருச்சபையின் அறிவியலுக்கெதிரான போராட்டம் நீங்கள் இடம் கொடுத்ததன் விளைவால் ஏற்பட்டவை. அதில் கவலையலளிக்கக் கூடிய விடயம் என்னவென்றால்; அதே போன்றே எல்லா மதங்களையும் நினைக்கிறீர்கள். ஆனால் இஸ்லாத்தை பொறுத்தமட்டில் நாங்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதில்லை. இஸ்லாம் அறிவைப் போற்றுகிறது. மார்க்கஅறிஞர்கள் மறைத்து வைக்குமளவு அதிலே எவ்வித அபூர்வ இரகசியங்களும் இல்லை.

சரி, அது ஒருபுறம் இருக்கட்டும் நீங்கள் விரும்பியவாறே.. அறிவியல், சிந்தனைரீதியாகப் பேசலாம். என்றாலும் நான் பின்பற்றும் மார்க்கத்திற்கு அது ஒன்றும் முரணானது அல்ல. அதை நிரூபித்தும் காட்டுவேன்.

மைக்கல்: அப்படியா?.. தயவுசெய்து

றாஷித்: சற்றுமுன் நீங்கள் அறிவு, சிந்தனை முதலியவற்றையே நம்புவதாகக் கூறினீர். எனவே உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன்; சிந்தனை இவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருந்தால், மதுபானம் அருந்துவது அதை பாதுகாக்குமா அல்லது மங்கச் செய்யுமா?

மைக்கல்: இதுவொரு கேள்வியே அல்ல..

றாஷித்: அல்லாஹ் மனிதனை அவனுடைய ஏனைய அதிகமான படைபுக்களை விட சிறப்பாக்கியுள்ளான். அவனுக்கு சிந்திக்கும் ஆற்றலை வழங்கியுள்ளான். இஸ்லாத்தில் சிந்தனையாற்றல் (புத்தி) இல்லாதவர் மார்க்கக் கடமைகளைவிட்டும் நீங்கியவராகவே கருதப்படுவார். எனவேதான் இம்மகத்தான அருக்கொடையை பாதிக்கும் எந்தவொன்றையும் தீண்டக்குடாதென அல்லாஹ் நமக்கு ஏவியுள்ளான். அதுமட்டுமன்றி இஸ்லாத்தில் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஐந்து அம்சங்களில் ஒன்றாகவும் அது திகழ்கிறது. இதனால்தான் இஸ்லாம் மதுபானம், போதைப்பொருள் என புத்தியை மங்கச்செய்யும் எல்லாப்பொருட்களையும் தடைசெய்துள்ளது..

மைக்கல்: அந்த ஐந்து அம்சங்களும் எவை?

றாஷித்: அவற்றைப்பற்றி விரிவாக பேசுவது எங்களுடைய தலைப்பிற்கு அப்பாற்பட்டவொன்று. என்றாலும்... அவற்றை சுருக்கமாகச் சொல்கிறேன்: மார்க்கம், ஆனமா, சிந்தனை, மானம், செல்வம்.

மைக்கல்: பிரமாதம் .

றாஷித்: அறிவியல்ரீதியான ஒன்றுதான்: மதுவிலுள்ள அல்கஹோல் குடல் வழியாக சென்று, நாளங்களில் உறிஞ்சப்பட்டு . இரத்த ஓட்டத்தால் உடலின் அனைத்துப் பாகங்களையும் சென்று மிகவிறை தாக்குகிறது. இதனால் மைய நரம்புத்தொகுதியில் கோளாறுகல் ஏற்படுகின்றன. .

அல்கஹோல் அற்ப அளவு இருந்தாலும் நரம்புத்தொகுதியின் தொழிற்பாடுகளில் துரிதகதியில் தாக்கம் செலுத்தும்;. அவற்றிலுள்ள நரம்பலைகளின் ஓட்டத்தில் தாமதத்தை ஏற்படுத்தும். இதனால் கவனயீனம், மந்தநிலை, அசைவில் தடுமாற்றம் போன்றன ஏற்படும். இதனாலேயே நம் வேதநூலான அல்குர்ஆன் அதைத்தடுத்துள்ளது. {நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம், மதுவிழும், சூதாட்டத்திலும் (அதன்மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வை நினைவுகூறுவதை விட்டும், தொழுகையை விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமேயாகும்; (அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக்கொள்கிரீர்களா? } [அல்மாஇதா:90]

மைக்கல்: என்றாலும் மதுபானத்தில் புத்துணர்ச்சி மற்றும் குளிரை தடுப்தற்கான உஷ்ணம் போன்ற பல பயன்களும் உள்ளன.

றாஷித்: ஆம், சில நன்மைகள் இருக்கின்றன என்பதை குர்ஆன் மறுக்கவில்லை. { (நபியே!) மதுவையும், சூதாட்டத்தையும்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: "அவ்விரண்டிலும் பெரும் பாவமும், மனிதர்களுக்கு (சில) பயன்களுமிருக்கின்றன. மேலும், அவ்விரண்டின் பாவம், அவ்விரண்டின் பலனை விட மிகப்பெரியதாகும்; ("தர்மத்திற்காக) எதைச்செலவு செய்வது?" என்றும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் "எஞ்சியிருப்பதை"

எனக்கூறுவீராக! இவ்வாறே நீங்கள் சிந்தித்துணர்வதற்காக, உங்களுக்கு அல்லாஹ் தெளிவாக்குகிறான். } [அல்பகரா: 219] ஆனால் அதிலுள்ள நன்மைகளை விட தீமைகளே அதிகமென்பதால் அதனை தடை செய்துள்ளது. ஹ்ம்... சரி, வாருங்கள் நீங்கள் கூறிய அறிவியலைப்பற்றி சற்று பேசலாம்.

மதுபானம் அறுந்துதல் பிறரை துன்புறுத்துதல், தனிமனித, சமூக, பொருளாதார தீங்குகளுக்கு இட்டுச்செல்லல் போன்ற நடத்தைசார் பாதிப்புகளை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல் பின்வரும் ஆரோக்கிய ரீதியான தீங்குகளுக்கும் இட்டுச் செல்கிறதென்பதை அறிவியல் உறுதிப்படுத்தியுள்ளது.

1- பொதுவாக உடம்பிலுள்ள சுரப்பிகளை பாதிப்படையச் செய்வதோடு உடல் மற்றும் இருதய அழுத்தங்களுக்கு காரணமாக அமைகிறது.

2- இனப்பெருக்கத் தொகுதியை பாதிப்படையச் செய்வதால் ஆண்மையை இழக்க நேரிடலாம்.

3- குடல், முன்சிறுகுடல், மற்றும் சமிபாட்டுத் தொகுதி போன்றவற்றில் புன் ஏற்படல்

4- வாய், தொண்டை, குடல்,சிறுகுடல்கள், நரம்புகள் மற்றும் நாளமில்லாசுரப்பிகள் போன்றன நேரடியாக கடும் பாதிப்புக்குள்ளாகின்றன.

5- ஈரல் சின்னாபின்னமாகி புற்றுகள் ஏற்பட காரணமாக அமைகிறது. பின்னர் அது உரையவே ஈரல் நோய், ஈரல் புற்று நோய் போன்ற குனப்படுத்த முடியாத கட்டத்திற்கு இட்டுச்செல்லும்.

6- சுவாசத்தொகுதி உருப்புகளை மட்டிட முடியாதளவு பாதிப்படையச் செய்கிறது.

ஆனால் நீங்கள் கூறுய உஷ்ணம் இரத்த நுண்குழாய் பரந்து காணப்படும் தோளில் மது கலந்த இரத்தம் செல்வதால் ஏற்படுவதாகும். உடம்பின் அனைத்து பாகங்களிலிருந்தும் உஷ்னம் மற்றும் குளிரை சுமந்துவரும் குருதியினால் உடல் நிரம்பியிருப்பதை க்காணலாம். இதன்போது மது பாவனையாளர் போலியான உஷ்ணத்தை உணர்வார். இவ்வாறு அவரின் தோள் உஷ்ணமடையவே அவர் குளிரை உணரமாட்டார். உடலின் அனைத்து பாகங்களிலிருந்தும் தோளைநோக்கி தன் வழமையான சுற்றில் இவ்வுஷ்ணக்குருதி தொடர்ந்தும் பாய்வதால் அன்றாட உடலியற்தொழிற்பாடுகளுக்கு அத்தியவசியமான உளஉஷ்ணத்தை இழக்க நேரிடும்.

குளிரைத்தனிக்க மதுபானம் தவிர்ந்த பல வழிமுறைகள் உள்ளன. குளிர்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் அதற்காக மதுபானம் அருந்துகிறார்களா?! நிச்சயமாக இல்லை .

மைக்கல்: தலைவர் றாஷித், சற்று கவனியுங்கள்!... நீங்கள் சொல்வதைப்பார்த்தால் போதையேறும் அளவு மது அருந்துவதால்தான் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்தவகையில் மது கொஞ்சமாக அருந்துவதை நான் குற்றமாக நினைப்பதில்லை.

றாஷித்: மதுமானத்தைப் பொருத்தமட்டில் அதைப்பருக ஆரம்பிப்பதிலேயே

பிரச்சினை தோன்றுகிறது; மனதிற்கு புத்துணர்ச்சியளிக்கிறது. பின்னர் உடலுக்கு அல்கஹோலின், தேவை அதிகரிக்க மது அருந்துபவருடைய மதுவின் தேவையும் அதிகரிக்கிறது. இவ்வாறு அல்கஹோலின் தன்மை உடலின் அதிகரிக்க மதுவை நோக்கி உடலின் தேவையும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

நியூஸீலாந்தின் வைத்தியக்குறிப்பொன்றை கூறுகின்றேன். அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது: அல்கஹோல் குடிபானங்கள் அவை கொஞ்சமாக இருந்தாலும், அவற்றினால் எதிர்ப்பார்க்கப்படும். நன்மைகளை விட தீமைகளே அதிகம். இது ‘நாள்தோறும் பருகும் ஒருகோப்பை மதுபானம் உளநோய்களிலிருந்து பாதுகாக்கிறது.’ என்ற மேற்கத்திய வாதத்திற்கு முற்றிலும் புறம்பானது. நியூஸிலாந்தின் ஒக்லான்து பல்கலைக்கழக தொற்றுநோய்க்கலை விரிவுறையாளர் கலாநிதி ரோட் ஜெக்ஷன், "லண்சித்" என்ற வைத்திய சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட அவருடைய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையினால் உளநோய்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதென்பது மடத்தனமானவொன்று. அவைகளால் ஏற்படும் தீயவிளைவுகளுக்கு எவ்விதத்திலும் சமனாகாது.

ஏன் , ஹதீஸிலும் இந்த அறிவியல் அற்புதம் மறைந்திருக்கிறது; நபி(ஸல்) அவர்கள் ((போதையூட்டும் அனைத்தும் ஹராமாகும் (தடைசெய்யப்பட்டதாகும்) அதில் சொற்பமோ அதிகமோ அனைத்தும் ஹராம்.)) எனகூறினார்கள்.

மைக்கல்: ஒஹ்ஹ்...! இது சூடு பிடிக்கும் வாதம் மட்டுமல்ல சற்று வெதுவெதுப்பானதும்கூட. குளிரான ஒருகோப்பை எழுமிச்சச்சாறை குடித்து விட்டு இத்தோடு முடித்துக்கொள்ளலாம்.

றாஷித் (சிரித்துக்கொண்டு சற்று நகைச்சுவையாக): எழுமிச்சச்சாறா, தேனீர் இல்லாமலா?! என்றாலும் நீங்கள் ஆரம்பத்தில் கூறவந்த விடயத்தை கூறவே இல்லை.

மைக்கல்: சரி.. அதை அடுத்த சந்திப்பில் பார்ப்போம்.

றாஷித்: இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்).

https://www.path-2-happiness.com/ta

ஒரே மனைவி போதுமா?!..

ஒரே மனைவி போதுமா?!..

றாஷித் உடன்பட்ட தவனையில், குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்ததும் வட்ட மேசையில் மைக்கல் தனக்காக எதிர்பாத்திருப்பதைக்கண்டார். அவர் பருகுவதற்காக குடிபானம் ஒன்றையும் தயாரித்து வைத்திருந்தார். அவருக்கு வந்தனம் தெரிவித்துவிட்டு தன்னுடைய இடத்தில் அமர்ந்து கொண்டான் றாஷித்.

மைக்கல்: *உங்குக்குப்பிடித்த குடிபானத்தை கொண்டுவந்திருக்கிறேன்; எழுமிச்சப்பழச்சாற்றிலான தேனீர்!.. எப்போதும் நீங்கள் விரும்பியதையே பருக வேண்டும் என நினைக்கிறேன்.*

றாஷித்: *ம்ம்.. நல்ல வரவேற்பு, இதை நான் மிக விரும்பினாலுமகூட எப்போதும் மாற்றத்தையே விரும்புவேன். அது மனிதனின் பொதுவான இயல்பல்லவா?.*

மைக்கல்: *ஆம் அதை ஏற்றுக்கொள்கிறேன்.. சரி இவற்றை ஒரு புறம் வைத்துவிட்டு நாம் தலைப்பிற்குச் செல்லலாம். மண்ணிக்கவும், உங்களுக்கு இன்னுமோர் பானத்தை வேண்டவா?*

றாஷித்: *இல்லை இல்லை.. நன்றி, நீங்கள் வாதத்திற்கு மும்முரமாக தயாராக இறுக்கிறீர்கள் போலும்..*

மைக்கல்: *அப்படியொன்றுமில்லை, சென்ற சந்திப்பைப்போல் இந்த முறையும் எங்கள் நேரத்தை வேறொரு தலைப்பு எடுத்துவிடாமல் இருக்க வேண்டுமல்லவா?*

றாஷித்: *அப்படியென்றால்.. தயவுசெய்து.*

மைக்கல்: *நான் ஏலவே கூறியதைப்போன்று இந்த தலைப்பில் எனது கருத்திற்கு உடன்படுவீர்களென நம்புகிறேன் நான் அறிந்தமட்டில் அக்கொள்கை உங்களுடைய சமுகத்தில் பரவலாக இருக்கிறது.*

றாஷித்: *ம்.. மிக அறுமை, நானும் பிரச்சினையை விரும்புபவன் அல்ல. இந்த கலந்துரையாடல்களின் நோக்கமே இருவரும் ஓர் பொதுவான தீர்வை எட்டுவதுதான் அல்லது குறைந்த பட்சம் சரியானதையாவது விளங்கிக்கொள்ளவேண்டும். சரி என்ன தலைப்பு.?*

மைக்கல்: *சுருங்கக்கூறின், திருமன உறவைப் பொருத்தமட்டில் கணவன், மனைவி இரு சாராரிடமும் சமத்துவம் அவசியமென கருதுகிறேன்; இன்னும் தெளிவாக சொன்னால், பலதார மணவுரிமையை இஸ்லாம் ஆகுமாக்கியிறுப்பதை பெண்ணிற்கு புரியும் ஒரு வகை அநியாயமாகவே பார்க்கிறேன். என்ன சரிதானே?..*

றாஷித்: *எந்தப்பெண்ணை நாடுகிறீர்?*

மைக்கல்: *பெண்! அவள்தான் மனைவி! இத்தொடர்பில் பெண்ணல்லாத வேறுயாறுமுண்டா?!*

றாஷித்: நாம் ஏலவே உடன்பட்டதற்கிணங்க, ஒரு விடயம் சம்பந்தமான ஆய்வு அதன் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய முழுமையான வடிவில் அமைய வேண்டும்.

மைக்கல்: நல்லது, அதற்கும் எமது தலைப்பிற்கும் என்ன சம்பந்தம்?

றாஷித்: சம்பந்தம் இருக்கிறது. அதாவது; பெண்ணென்ற அடிப்படையில் அவளுடைய தனிப்பட்ட நலன், சமுதாய நலன், ஆணுடைய நலன், மற்றும் ஆண், பெண் என இரு சாராருக்குமிடையிலுள்ள வேறுபாடுகள் என அனைத்தையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

உடனே மைக்கல் (குறிக்கிட்டவராக): ஆம், இதோ! வேறுபாடுகள் என பெண்ணை ஒதுக்கிவைக்கும் இன்னொரு தலைப்பிற்கு வந்துவிட்டோம். இந்த வேறுபாடுகளெல்லாம் பெண்ணை அடக்கியாள்வதற்காக கீழைத்தேய ஆண்சமூகத்தால் உருவாக்கப்பட்டவை. அதென்ன வேறுபாடுகள்?! ஏன் அவளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை திருமணம் செய்து கொள்ள முடியாது?! இது அச்சமூகவாழ் ஆண்களின் மிலேச்சஉணர்வை பிரதிபலிக்கிறதே?!

றாஷித்: நண்பரே! சற்று அமைதி... என்மீது ஒரே நேரத்தில் பல கேள்விக்குண்டுகளையல்லவா போட்டு விட்டீர்கள். அதை ஒவ்வொன்றாக ஆராயலாம். சரி, முதலில் இதற்கோர் தீர்வு காண்போம். அதாவது: ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை நம்பமாட்டீர்களா?

மைக்கள்: என்ன வேறுபாடுகள்?

றாஷித்: முதலில்... உயிரியல் வேறுபாடுகள்.

மைக்கல்: உயிரியல் வேறுபாடுகள் பல உள்ளன. ஆனால் அவற்றிக்கும் நமது தலைப்பிற்கும் என்ன சம்பந்தம்?

றாஷித்: நான் நம்புகிற மார்க்க அடிப்படையிலன்றி நீங்கள் நம்புகிற அறிவியல், சிந்தனைரீதியாக அவற்றை விளக்குகிறேன்... நண்பரே கேளுங்கள்:

ஆண், பெண் இருவுக்குமிடையிலுள்ள அன்புணர்ச்சியில் வேறுபாடுகளுள்ளன என்பதை அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. . பெண்ணின் மரபணு தனிநபர் மற்றும் திறந்த நிலைத் தொடர்பை தூண்டக்கூடிய அதே வேளை ஓர் ஆணின் மரபணு பல்வகைத் தொடர்பை தூண்டக்கூடியது என்ற உண்மையையும். ஒரு நபர் ஒருவரையொருவர் பாதிக்காத வண்ணம் ஒன்றிற்கும் அதிகமான பெண்களை நேசிக்க முடியும் என்ற உண்மையையும் இன்றைய விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது.

ஆணின் பல்வகைமைத்தொடர்பு அவர்களின் உடல் கட்டமைப்பினால் ஏற்படக்கூடியவொன்று. இதற்கு பல்வேறுபட்ட உயிரியல் ஆதாரங்கள் இருப்பதாக அமெரிக்காவின் யுதா மாநிலத்தின் பல்கலைக்கழக உலவியற்துறை பேராசிரியை

லிஸா டயமன்ட் தனது இணயத்தள பக்கமான CNN இல் தெரிவித்துள்ளார்.

பெண்கள் ஆண்களுக்கு மாற்றமானவர்கள்; [Aloxtosen] அலொக்ஸ்டோஸன் என்ற ஓமோன் காரனமாக அவர்களின் முழுக்கவனமும் அவர்களுடைய மேணியில் அல்லது குழந்தையில் தங்கியிருக்குமென பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் (OXFORD) பல்கழைக்கழகத்தின் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆண்களின் மூலையிலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகள் பெண்களுடைய மூளையை விட பருமனில் பெருதானவை; பெண்ணை விட ஆணிற்கு இரண்டரை மடங்கதிகமான பாலியல் உணர்வை தூண்டக்கூடிய பகுதி மூளையில் இருப்பதால் பெண்ணைவிட ஆணுடைய மூளையில் பெரும் வித்தியாசங்கள் இருப்பதாகவும் புதிய பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நண்பரே! இவ்வாறான வெறுபாடுகளால் நடைமுறையில் தாக்கம் இல்லையென நினைக்கிறீர்களா?!

மைக்கல்: இத்தகவல்கள் உண்மையாக இருந்தால்... தாக்கம் இருக்கலாம்.

றாஷித்: அப்படியென்றால் நீங்கள் கூறிய பலதார(பெண்)தொடர்புடைமைக்கும் இஸ்லாத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. சரி, இப்பொழுது நான் உங்களிடம் ஓர் கேள்வியைக் கேட்கிறேன், அதற்கு நீங்கள்.. மிகத்தெளிவாக பதிலளிக்கவேண்டும்; உங்கள் நண்பர்களில் அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களில் எத்தனைபேர் பலதாரப் பெண் தொடர்பற்றவர்களாக இருக்கிறார்கள்? நான் உங்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

மைக்கல்: நீங்கள் என்னைப்பற்றிக் கேட்டாலும் பரவாயில்லை. ஏனென்றால் அது எங்களிடம் சாதாரன விடயம், ஆனால் திருமணரீதியாக அல்ல.

றாஷித்: அப்படியென்றால்... எங்கள் சமூகத்தில் இருப்பதாக நீங்கள் கூறிய விடயம் மிகப்பெரிய வித்தியாசத்தில் உங்கள் சமூகத்திலும் உண்டு,

அதற்குமுன்.. பலதாரமண வொழுங்குமுறையை இஸ்லாம் புதிதாக உருவாக்கவில்லை மாறாக பண்டய நாகரீகங்களிலும் ஏனைய பரலோகமதங்களிலும் காணப்பட்டது. பண்டயகால ஆண்களிடம் பலதார மணம் எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்பட்டதாகக்கூட இருக்கவில்லை. சன்னியாசியர் கொர்ஷோம்அல்இஷ்கன்ஸி (கி.பி 960-1040) தடைச்சட்டத்தை அறிவிக்கின்ற வரை மத்திய கால யூதகுலத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. கிறிஸ்தவ திருச்சபையை பொருத்தமட்டில் பதினேழாம் நூற்றாண்டிற்கு முன்னர் பலதார மணம் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை ஏன் இன்றுகூட மர்மூன் பிரிவினரிடம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மைக்கல்: அப்படியென்றால்.. இவையனைத்தும் பண்டயகாலத்திற்குரியவை, தற்போதுதான் மனிதன் முன்னேற்றமடைந்துவிட்டானே.

றாஷித்: முன்னேற்றம், நாகரீகமென்பன மனித இயல்பிற்கு முரணானதல்ல. பண்டயகால மனிதன் கால் நடைகளை சாப்பிட்டு, கம்பளிகளை அணிந்துவந்தான்.

இவ்வாறு இறைச்சி சாப்பிடுதல், கம்பளி அணிதல் போன்றன காலப்போக்கில் நாகரீகமற்ற செயலாக மாறிவிட்டன என்று கூறமுடியுமா ? நிச்சயமாக இல்லை. என்றாலும், நாகரீக எழுச்சியானது மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் முறையில் வளர்ச்சியை ஏற்படுத்தகூடியது எனக்கூறலாம்.. இஸ்லாமும் இதைத்தான் செய்தது.

மைக்கல்: *எப்படி?*

றாஷித்: *பாலியல் தொடர்புகள் உங்களுடைய சமூகத்தில் சாதாரண ஒன்றென கூறினீர்களே. அதுதான் பெண்ணிற்கு புரியும் மிகப்பெரும் அநியாயம்; அவைகளால் மனஅமைதியைக் கொண்டுவரவோ, உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கவோ, அல்லது ஓர் சீரான சமூகத்தை கட்டியெழுப்பவோ முடியாது . பண்டய நாகரீகங்களில் பாலியல் தொடர்புகள் கட்டுப்பாடின்றி காணப்பட்ட நேரத்தில்தான் இஸ்லாம் உதித்தது; பெண்ணிற்கு நீதத்தைப் பெற்றுக்கொடுத்தது; திருமணத்தில் அவளை ஓர் சட்டரீதியான பங்காளியாக மாற்றியது; சமூகக் கட்டமைப்பின் வெற்றிக்காரணிகளில் மிகமுக்கியமான ஒன்றை பாதுகாப்பதற்காக இத்திருமணத்தில் பல விதி முறைகளை வைத்தது... முக்கியத்துவம் வாய்ந்த காரணியென குடும்பத்தைச் சொன்னேன்.*

இஸ்லாம் பெண்ணுடைய நலன்களில் கரிசணை காட்டுகிறது; ஒரு ஆண் இச்சையை அடக்கி வைப்பதற்கும் அதை வெளிப்படுத்துவதற்குமான சில வரையறைகளை வைத்துள்ளது. குடும்பக் கட்டமைப்பு உங்கள் நாடுகளில் சீர்குலைந்து காணப்படுகிறதே.

மைக்கல்: *எனினும் கணக்கெடுப்புகள் ஆண்களின் பிறப்பு வீதம் பெண்களின் பிறப்பு வீதத்திற்கு சமனானவை என கூறுகின்றன. இந்நிலையில் நாம் பலதார மனவுரிமைக்கொள்கையை அமுல்படுத்திமானால் பல ஆண்கள் மணைவியற்றவர்களாக இருக்கவேண்டிய நிலையேற்படும். இது பாரதூரமானதாகத் தெரியவில்லையா?!*

றாஷித்: *அதே கணக்கெடுப்புகள்தான் ஆண்களின் ஆயுற்காலத்தை விட பெண்களின் ஆயுற்காலம் அதி கூடியது எனவும், மேற்கத்திய நாடுகளில் வாழும் ஆண்கள் பெண்களை விட அண்ணளவாகவாக ஏழு வருடங்கள் குறைவாகவே வாழுகிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. ஜேர்மனியில் வசிக்கும் ஒரு பெண்ணின் ஆயுற்காலம் சராசரியாக 80 வருடங்கள்; ஓர் ஆணின் ஆயுற்காலம் 70 வருடங்கள்; என்ற அடிப்படையில் காணப்படுகிறது. 1900 ஆம் ஆன்டுகளில் இரண்டு வருட வித்தியாசத்தில் இருந்த இவ்விடைவேளை கடந்த நூற்றாண்டில் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது.*

ஐக்கிய அமெரிக்காவின் மிஷ்பன் பல்கலைக்கழக விஞ்ஞானி நடால் க்ரொகர் " உலகில் பெரும்பாலான நாடுகளில் பெண்களை விட ஆண்கள் மிகக் குறைவான ஆயுட்காலமே வாழ்கின்றனர். ஆணிற்கும் பெண்ணிற்கும் மத்தியில் உள்ள ஓமோன்களின் வேறுபாடும் இதற்குக்காரணமாகும். குறுதிச்சுற்றோட்ட மற்றும் இருதய நோய்களுக்கு காரணமாக அமையும், மரபணுக்களை தூண்டக்கூடிய ஓமோன்கள் ஆணுடலில் உள்ளன." எனக்குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு நானும் ஒன்றைக் கூறுகிறேன்: மோதல்கள், வன்முறைகள், அபாயகரமான வேலைகளிலுள்ள ஆபத்துக்கள், வீதி விபத்துகள் இவையல்லாத இதர நிகழ்வுகள் போன்றவற்றால் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகின்றனர். அவற்றில் பெரும்பாலானோர் ஆண்களே.

அதாவது; சமூகத்திலுள்ள பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகரித்து வருகிறது; உலக நாடுகளில் பெரும்பாலானவற்றின் சனத்தொகைக் கணக்கெடுப்புகளை பார்த்தாலே புரிந்துகொள்ளலாம். அதுமட்டுமன்றி விதவைகள், விவாகரத்தான பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகிறது.

எனவே, திருமணம் முடிக்காத பெண்களை உளவியல், சமூக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க அப்படியே விட்டு விடுவதா, அல்லது சமூகபாதகங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பாலுணர்வுகளை மறைமுகமாக நிறைவேற்றுவதற்கு அவர்களைத் தூண்டுவதா, அல்லது ஓர் சமூகஒழுங்கமைப்பை கடமையாக்கி எவரும் பாதிப்படையாவண்ணம் அவர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதா?!

இதைப்பற்றி பிரான்ஸ் சமூக ஆய்வாளர் ஜொன்ஸ்டன் லொபொன் கூறியிருப்பதை பாருங்கள்: " கீழைத்தேய பலதார மணவுரிமை மிகச்சிறந்த கோட்பாடாகும்; ஓர் சமூகம் விலியுறுத்தக்கூடிய பண்பாட்டு மட்டத்தை அது உயர்த்துகிறது; குடும்பக் கட்டமைப்பை வலுப்படுத்துகிறது. ஐரோப்பாவில் நீங்கள் காண முடியாத அந்தஸ்த்தை ஒரு பெண்ணிற்கு வழங்குகிறது"...

ஹ்ம்ம்...சரி, எனக்கொரு கோப்பை எழுமிச்சச்சாறும், தேனீரும் பருகலாமா?

https://www.path-2-happiness.com/ta

உதிரும் ரோஜா

உதிரும் ரோஜா

றாஷித் வட்ட மேசையில் அமர்ந்து, தனது பையில் இருந்த மடிக்கணனியை வெளியில் எடுத்து, அதை இயக்கியவாறு மைக்கலோடு உரையாட ஆரம்பித்தான்.

இன்றிரவு வழமைக்கு மாற்றமாக அறைநிமிட நேர காணொலியொன்றைக் காட்டுகிறேன். அது எங்களுக்கு ஓர்நூற்றாண்டின் வரலாற்றைப் படமாகக்காட்டும் .

(http://www.youtube.com/watch?v=Rb6R7Mmhjq8)

மிகஆர்வமாக திறையை பார்த்தவர்களாக மைக்கல், றாஷித் இருவரும் தமது தலைகளை கணனிக்கு அருகாமையில் கொண்டு சென்றனர்.

மைக்கல்: வாவ்.. மிக அருமையாகவுள்ளது! நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எனது பிரித்தானியாவின் வாழ்க்கை மாதிரியைப் பார்ப்பதையிட்டு பூரிப்படைகிறேன்... பாதையில் செல்பவர்களின் முகத்திலுள்ள வசீகரத்தை பாருங்கள்!.. வாழ்க்கை இயல்பிற்கு மிக நெருக்கமாக இருந்தது.. உள்ளம் குளிர்ந்த எவ்வளவு ஒரு நிம்மதியான வாழ்க்கை.

றாஷித்: காணொலியை இன்னொரு முறை இயக்குகிறேன், நன்றாகக் கூர்ந்து கவனியுங்கள்.

றாஷித் காணொலியை மீண்டும் இயக்கிக்கொண்டு மைக்களுடன் பேசலானார்:

இதோ... இந்தப்பெண்ணை பாருங்கள் இவர்கள் இருவர்... இதோ...இந்த ஐந்தாறு பேர், என்னோடு கூர்ந்து கவனியுங்கள்... அவர்களுடைய மணிக்கட்டுகளையும் (தொப்பியால் மறைக்கப்பட்ட) தலைகளையும் தவிர வேறொன்றும் தென்படவில்லை. மேனியை எடுத்துக்காட்டா வண்ணம் அவர்களுடைய ஆடைகள் அகன்றதாகவுள்ளன.

மைக்கல்: ம்ம்.. நீங்கள் கூறுவது சரி!

றாஷித்: அப்படியென்றால் அவர்களுக்கு என்ன நடந்தது?!

மைக்கல்: எதில் கேட்கிறீர்?

றாஷித்: உங்கள் சமுதாயத்தில்...

மைக்கல்: அறை நிர்வாண நிலையைப்பற்றியா ?!

றாஷித்: ஆம், அதைப்பற்றிதான்.. அதை ஒரு பண்பாட்டுச்சீர்கேடாகவே பார்க்கிறேன்.

மைக்கல்: அது தனிமனித சுதந்திரம்; நாங்கள் சுதந்திரத்தை மதிப்பவர்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பிய வாழ்க்கையை வாழ அவனுக்கு உரிமையுண்டு.

ராஷித்: *ஆம், எனக்கும் விளங்குகிறது அதைப்பற்றி ஓரமர்வில் கலந்துரையாடவேண்டும். இதில் கவனத்தையீர்க்கக்கூடிய விடயம் என்னவென்றால்; பண்பாடில் ஏற்பட்ட மாற்றமே; சமூகத்திலுள்ள தனிமனிதர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒரே தெரிவை நோக்கி சென்றதைப் போன்றிருக்கிறது!.*

மைக்கல்: *தனி நபர் அனைவரும் பின்பற்றும் சமூகக் கலாசாரமெனை ஒன்றிருக்கிறதை நன்கு அறிவீர்கள். இக்கலாசாரத்தை தேர்ந்தெடுப்பதற்கு மத்தியில் தனிநபர்கள் வித்தியாசப்படலாம்.*

ராஷித்: *மிக அருமையான விளக்கம், இது தொடர்பாக உங்களுடைய பரிசுத்த வேதாகமம் என்ன கூறியிருக்கிறது எனப்பார்த்தால், அதிலுள்ள சரி, பிழைகளைக் கண்டறியலாம். புனித பவ்ல் திமோதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: {ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் * தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்} [தீமோத்தேயு: அதிகாரம்2: வசனம்9,10]*

மைக்கல்: *தலைவரே! இவ்விடயம் தேவாலயத்திலுள்ள சன்னியாசிகளுக்கு பொருந்தும். ஆனால் நாங்களோ; தேவாலயத்திற்கு வெளியே இருப்பவர்கள். நான் உங்களுக்கு ஏற்கனவே கூறியதைப்போன்று சமயம் வளர்ச்சி கண்ட காலம் தொட்டே நாங்கள் அதை பின்பற்றுவதில்லை.*

ராஷித்: *ஆனால் நண்பரே! நாங்கள் பார்த்த காணொலியில் மிக ஒழுக்கமாக பாதையில் சென்று கொண்டிருந்த பெண்கள் தேவாலயத்தில் உள்ள சன்னியாசிகள் அல்ல. இந்நவீன கோட்பாடுகளிலிருந்து மார்க்கம் வெளியேறிவிட்டதென வைத்துக் கொண்டாலும், நவீனத்திற்கு முன் பல நூற்றாண்டுகள் இருந்தன. நான் மீண்டும் அதே கேள்வியை கேட்கிறேன்: உங்களுடைய பெண்கள் அறை நிர்வாணிகளாகவும், கூச்சமற்றவர்களாகவும் மாற்றியது எப்படி?.. அவர்களுக்கு என்ன நேர்ந்தது?...*

மைக்கல்: *உங்களுக்கு புதுமையாக இருந்தாலும், எனக்கு அது சாதாரனமானவொன்று. அந்தக் காணொளியை கூர்ந்து கவனித்தீர்கள் என்றால், அது குளிர் காலக்காட்சி என்பது உங்களுக்கே புரியும். அந்நேரத்தில் குழந்தைகள், ஆண்கள், பெண்களென அணைவரும் கடும் நிறத்திலான ஆடைகளையே அணிவார்கள். அந்த அடக்க ஒழுக்கம் குளிர் காரனமாகவும் இருக்கலாமல்லவா?! அப்படித்தான் நீங்கள் கூறுவதைப்போன்று இருந்தாலும், அதை எவராலும் மறுக்க முடியாது. ஏனன்றால், அக்காலத்து பெண்கள் மிக ஒழுக்கமானவர்களாக இருந்தார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் அதற்குப்பிறகு என்ன நடந்தது என்றால்; சமூகமும், கோட்பாடுகளும் மாறிவிட்டன.*

றாஷித்: *ம்.. இது பண்பாடு சம்பந்தமான வேறொரு பிரச்சினை இதுற்றி பிரிதொரு அமர்வில் உரையாடலாம். பண்பாடு, கோட்பாடுகள் என்பன விஞ்ஞானம், கருவிகள், சாதனங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதில் வித்தியாசப்படுகின்றன.*

மைக்கல்: *இப்போதே உரையாடினாலும் பரவாயில்லை.. றாஷிதே என்னை மன்னிக்கவும்!... ஏனெனில், பெண்கள் என்றால் அவர்களுடைய உடல்தான் என்று சொல்லும் அளவு ஏன் இவ்வாறு பேசுகிறீர் ? அதற்கான காரணம் என்ன?---*

றாஷித்: *இஸ்லாம் ஆண், பெண் இருவரையும் மனிதன் என்றடிப்படையிலேயே நோக்குகிறது. மனிதன் உடல்,ஆவி,சிந்தனை முதலியவற்றினாலான ஓர் படைப்பினமாவான். பேசும் பிராணியான இவன் சிறந்த பண்பாடு,ஆன்மா,சமூகஅமைப்பு என்பனவற்றால் முழு மனிதண் என்ற நிலையை அடைகிறான். நீங்கள் நாகரீகமடைந்து விட்டதாக எண்ணி வாழ்க்கையிலிருந்து மார்க்கத்தை தூரப்படுத்தி விட்டீர்கள். சிந்தனை மார்க்கத்துக்கு அப்பாற்பட்டதென மாயக்காரணங்காட்டி, உடலால் நீங்கள் நினைத்தவற்றைப் புரிவதற்காக, தேவாலயத்தை ஆன்மீகத்தால் தனிமைப்படுத்திவிட்டீர்கள். சடவாத நாகரீகத்தின் அராஜகக்காரர்கள் மிலேச்சுத்தனமான உடலியல் இச்சைகளை தீர்த்துக்கொள்வதற்காக பெண்களின் அங்க அவயங்களை அவர்கள் வெளிப்படுத்தவேண்டுமென வலியுறுத்துகிறார்கள்; அதற்கு சுதந்திரம்,உரிமைகள் என நாமம் சூட்டுகிறார்கள்.*

மைக்கல்: *நாங்கள் காலையிலும் மாலையிலும் பெண்களை அறை நிர்வாணத்துடன்தான் காண்கிறோம்; ஆனால் நீங்கள் கூறுகிற மிலேச்சத்தனமான மனோ இச்சைகள் எங்களுக்கு வருவதில்லையே.*

றாஷித்: *இதை நீங்கள் நற்செயலென நினைக்கிறீர்களா? இவ்வாறு ஒரு நபர் இச்சையைத் தூண்டக்கூடிய காட்சிகளை வழமையாக பார்த்தால், அவரை பல்லினச்சேர்க்கை போன்ற குறுகிய விளைவுகளுக்கு இட்டுச்செல்லும். காலப்போக்கில் அது அவருக்கு பழகிப்போகவே உணர்ச்சியை தூண்டும் வேறொன்றைத் தேட ஆரம்பிப்பார்; அது காலப்போக்கில் அவரை ஓரினச்சேர்க்கைக்கு இட்டுச் செல்லும்.*

மைக்கல்: *தலைவர் றாஷித் அவர்களே! குறுகிய விளைவு தூர விளைவுகளென உங்களிடம் பல விளைவுகள் உள்ளன.*

றாஷித்: *ஆம், விளைவுகள் எண்ணிலடங்காதவை. ஒருவர் சில காரணிகளால் அவருடைய மனோஇச்சையை அடைய முடியாது போகுமிடத்து அதை எப்படியாவது அடைய வேண்டுமென்ற தாக்கங்களுக்குள்ளாகிறார். இதனால் கற்பழிப்புச்சம்பவங்கள் நிகழுகின்றன. இவ்வாறு புள்ளிவிரபவியல்களால் பதியப்பட்ட கற்பழிப்புகள் சிலவற்றைக் கூறுகிறேன்*

பிரான்ஸில் ஓராண்டுக்கு இரண்டு மணித்தியாளத்திற்கு ஒன்று என்றடிப்படையில் 4412 கற்பழிப்புகள் இடம்பெறுவதாக பிரான்ஸிய உள்விவகார அமைச்சிற்குரிய புள்ளிவிபரவியல் சுட்டிக்காட்டுகிறது.

பிரித்தாணியாவின் தலைநகர் லன்டன் பொலிஸ்பிரிவு, ஆண்களின் தாக்குதலுக்கு உள்ளாகின்ற நேரத்தில் அவர்களிடம் சரணாகதியாக மாறுவதற்கு மாற்றீடாக சாதகமான நிலவரங்களை உருவாக்கிக்கொள்வது தொடர்பான தற்பாதுகாப்புக்கலைகளை பயிழ்வதில் பெண்களை ஊக்குவித்துவருகிறது. லன்டன்மாநகர் வீதிகளில் கொடூரமான கற்பழிப்புகள் நிகழும் வீதம் ஓராண்டிற்கு 11% என்றடிப்படையில் உயர்ந்து செல்வதனாலேயே இவ்வாறானதொரு திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

அமெரிக்காவின் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் தேசிய புணர்வாழ்வு மையம்; ஐக்கிய அமெரிக்காவில் பருவ வயதை அடைந்த பெண்களின் கற்பழிப்பு ஒரு நிமிடத்தில் மூன்றுகொன்று(1/3) என்ற வீதத்தை அடைந்திருப்பதாகவும், அவர்கள் எட்டிக்கு ஒன்று (1/8) என்ற வீதத்தில் கற்பழிப்புக்குள்ளாக்கப் படுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளது.. இவையனைத்தும் 1991 ஆம் ஆண்டிற்குரியவை

ஆனால் 2009 ஆண்டின் அறிக்கைப்படி வாலிபப் பெண்கள் மூன்றிட்கு ஒன்று(1/3) என்ற வீதத்தில் பதினான்கு வயதிலேயே கற்பழிக்கப்படுகிறார்கள் என புள்ளி விபரவியல் சுட்டிக்காட்டுகிறது. அமெரிக்காவில் வருடாந்தம் அரை(1/2) மில்லியன் கற்பழிப்புச்சம்பவங்கள் அரங்கேறுகின்றன; அமெரிக்காவைச்சேர்ந்த பெண்பிள்ளைகளில் 61% பன்னிரெண்டு வயதிற்கு முன்னரே கன்னித்தன்மையை இழந்து விடுகின்றனர்.

அது மட்டுமன்றி பேசப்படாத குற்றங்கள் என்றழைக்கப்படும் வேறு பல குற்றங்களும் உள்ளன. அவைகள்; அலுவலக உத்தியோகத்தர்கள், தலைவர்கள் அவர்களுக்குக்கீழால் பணிபுரியும் பெண்களிடம் புரியும் சில்மிசங்களாகும் அந்தப்பெண்களின் உத்தியோகம் பறிபோய்விடும் என்ற பயத்தினால் இவ்வாறான குற்றங்கள் வழமையில் பதியப்படுவதில்லை.

இக்கணக்கெடுப்புக்கள் யாவும் யதார்த்தத்தை முற்று முழுதாக பிரதிபலிப்பவையன்று;பதியப்படாதவை ஏராளமாகவுள்ளன.

மைக்கல்: என்றாலும் இதுபோன்ற குற்றங்களுக்கு உள, சமூக, வளர்ப்புமுறை, பொருளாதாரம் என பல காரணிகள் உள்ளன.

றாஷித்: ஆம் நீங்கள் கூறுவதும்… சரிதான். என்றாலும் உடல் கவர்ச்சியே மிக முக்கிய காரணியாக திகழ்கிறது என்பதை எம்மால் மறுக்க முடியாது. மாரிகாலத்தில் பாலியல் குற்றங்கள் கணிசமடைவதாக அமெரிக்க ஆய்வொன்று குறிப்பிட்டுள்ளது; இதற்கான காரணம் மாரி காலங்களில் அவர்கள் அணியும் ஆடைகள், அதேபோன்று மக்கள் அக்காலங்களில் அதிகம் வெளியேறுவதில்லை இதனால் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளும் மிகக்குறைவு. எது எவ்வாறாயினும்இவ்விரு அம்சங்களும் ஒரே காரணத்தையே வலுப்படுத்துகின்றன.

மைக்கல் எனினும் இறுதியில் அப்பெண்கள் தாங்களாகவே அவற்றை(அரைகுறை

ஆடைகளை) விரும்புகிறார்களே... உங்களுக்கு ஏலவே கூறியதைப்போன்று அது ஓர் தனிமனித சுதந்திரம்; அதை எம்மால் தடுக்கமுடியாது

றாஷித் வெளிப்படையில் அவ்வாறு தோன்றினாலும், யதார்த்தம் என்னவெனில் மேற்கத்திய சமூகத்தை வழிநடாத்த கூடியவர்கள் குறிப்பாக ஆண்களே இவ்வரைநிர்வாண கலாச்சாரத்தை மெருகூட்டி புதுமுகப்படுத்தி காட்டுகிறார்கள்; அதற்கு வழிகோழக்கூடிய ஆதாரங்களையும், சாதனங்களையயும் கண்டுபிடிக்கிறார்கள் அதுமட்டுமன்றி பெண்ணிற்கு அநியாயம் இழைக்ககூடிய பலசட்டங்களையும் இயற்றுகிறார்கள். மேற்கத்திய சட்டங்கள் சில பாலியலை விலைக்கு வாங்க வழிகோலுகின்றன; பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்ற பெண்ணை விட வல்லுறவுக்குள்ளாக்குகின்ற ஆணை சீர்தூக்கிப்பார்க்கக்கூடியனவாக இருக்கின்றன. அதுமட்டுமன்றி இன்னும் சில மேற்கத்திய நாடுகள் பாலியல்வல்லுறவை ஒரு குற்றமாகவே பார்ப்பதில்லை.

பெண்கள் விடயத்தில் கரிசணை செலுத்தக்கூடிய முன்னனி நாடுகளில் ஒன்றான பின்லாந்தில் இடம்பெற்ற சம்பவத்தை எடுத்துக்கொள்வோம்: ஒருவன் வாகனத்தரிப்பிடத்திலுள்ள கலிவறைக்குச்சென்று ஒரு பெண்ணின் தலையை சுவரில் அடித்து மிகக்கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றிருக்கிறான். அவன் மேற்கொண்ட வழிமறை பாரதூரமற்றது என்பதைக்காரணங்காட்டி அதையொரு வல்லுறவாகவே கருதவில்லை, கற்பழிக்க முயன்ற குற்றத்திற்காக அவனுக்கு வெறுமனே ஏழு மாதகால சிறைத்தண்டனையே தீர்ப்பளிக்கப்பட்டது!!

எனதருமை நண்பரே! பண்பாடு மிக்க சமூகம் எது: இன்றைய சமூகமா, அல்லது கடந்த நூற்றாண்டு சமூகமா?! என்ன..மீண்டும் ஒரு முறை அந்தக்காணொளியைப் பார்க்க விரும்புகிறீர்களா?!

மைக்கல்: *தலைவர் றைஷித்! விடயம் தெளிவானது. இதைப்பற்றி இஸ்லாம் என்னகூறுகிறது?*

றாஷித்: *அதைக்கூற ஒன்றல்ல பல அமர்வுகள் தேவை.*

https://www.path-2-happiness.com/ta

பண்பாட்டுத்திரை

பண்பாட்டுத்திரை

றாஷித், மைக்கல் இருவரும் குறிப்பிட்ட தினத்தன்று பெரிஸ் நகரின் மனிஸ் கடலோரத்தை நோக்கி புறப்பட இருந்த புகையிரத நிலைய நடைபாதையில் சந்தித்துக்கொண்டனர். பொருத்தமான இருக்கையை தேடியவர்களாக புகையிரதம் நகர ஆரம்பிக்கும் நேரத்தை எதிர்பாத்திருந்தனர்.

மைக்கல்: பெண்களுடைய ஆடை தொடர்பாக இஸ்லாமிய கருத்துக்கள் சிலதை பரிமாரிக்கொள்ள நேரம் எமக்கு இடமளிக்குமென எண்ணுகிறேன். ஆம், அந்த ஹிஜாபை பற்றிதான்... அப்படித்தானே?!

றாஷித்: பெரும் பாலானோர் ஹிஜாப் என்றால் வேறுமனே தலையை மறைக்கும் ஒரு திரையாகவே எண்ணுகிறார்கள். ஆனால், ஹறஜாப் ஒருசமூக ஒழுங்குமுறை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அந்த அடிப்படையில் ஓர் விடயத்தை பார்ப்போம்:

மைக்கல்: நான் எதிர்பாத்ததற்கு மாற்றமாக ஒரு தலைப்பையே எடுத்துவிட்டீர்கள் என நினைக்கிறேன்!

றாஷித்: மனிதர்களை, மேனியை மறைத்துக்கொள்ள வேண்டிய வரையறைகளில் பலதரப்பட்டவர்களாக காண்கிறோம்; ஒவ்வொருவரும் தங்களுடைய வரையறைகளையே நாகரீகம் என வாதிடுகின்றனர் . இதனால் ஒரு பிரிவினர் மற்றவர்களை பின்தங்கியவர்களாகவும், மற்றவர்கள் இவர்களை தவறிழைப்பவர்களாகவும் பார்க்கின்றனர். இதனடிப்படையில் ஒவ்வொரு பிரிவினரினதும் பார்வை குறிப்பட்ட ஓர் சிந்தனையை அடிப்படையாகக்கொண்டிருப்பதால், இவ்விடயத்தில் பொதுவான ஒரு அம்சத்தில் ஒன்றுபடுவது அவசியமாகும்.

விடயம்... சற்று விரிவானதுதான். ஆகவே எனக்கு அனுமதியளித்தால் இவ்விடயத்தில் முஸ்லீம்களாகிய எமது கண்ணோட்டங்கள் சிலவற்றை தெளிவு படுத்துவேன்

மைக்கல்: தயவுசெய்து.

றாஷித்: மனிதனைப்பற்றி பூரனமாக அறியாமல் அவனுடைய வாழ்க்கையில் எழும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பதில் இருவறும் உடன்படுகிறோம் என நினைக்கிறேன்.

மைக்கல்: அதில் சந்தேகமே இல்லை.

றாஷித்: நாம் பார்க்கக்கூடிய அறிவியலின் தொடர் முன்னேற்றம் மனித அறிவு மட்டுப்படுத்தப்பட்டது என்பதற்கான ஆதாரமென எண்ணுகிறேன்; நேற்று வரை அறியாமல் இருந்தவற்றை இன்று கண்டுபிடிக்கிறான்; நேற்று வரை சரியென எண்ணியவற்றை இன்று ஆய்வுசெய்து சரிகான்கிறான்; இன்றுவரை அறியாமல் இருந்தவற்றை நாளை கண்டுபிடிப்பான்;. இதைத்தான் திருக்குர்ஆனும் நுவலுகிறது:

{ (நபியே!) ரூஹை(ஆன்மாவை)ப்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றார்கள்; (அதற்கு) நீர், "ரூஹ் எனது இரட்சகனின் கட்டளையில் உள்ளதாகும்; (அதைப்பற்றிய) அறிவிலிருந்து வெகு சொற்பமே தவிர நீங்கள் கொடுக்கப்படவில்லை; (ஆதலால் அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது)" என்று கூறுவீராக!} *[அல்இஸ்ரா :85]*

மைக்கல்: *ஆம். உடண்படுகிறேன். ஆனால் அதற்கும் எமது தலைப்பிற்கும் என்ன சம்பந்தம்?!*

றாஷித்: *நன்பரே! சற்று பொறுங்கள் நான் இன்னும் கூறி முடிக்கவில்லை. இப்பிரச்சினைகளில் தீர்வு காண முடியாத சில பக்கங்கள் இருக்கின்றன. என்ற விடயத்தில் நாம் உடன்படுவோமேயானால், பாலியல் உணர்ச்சியை தூண்டும் சூழலிருந்து தவிர்ந்திருப்பது கடினம் என்ற நிலைக்கு தள்ளப்படுகிறோம் எனவே இதனடிப்படையில் சிக்கல்களுக்கு தீர்வு காண முற்படுவோமேயானால் தீர்வுகள் அணைத்தும் குறையானதாகவே அமையும்.*

மைக்கல்: *இதுவோர் தர்க்க ரீதியான முடிவு, எனினும இப்பிரச்சினைகளை எவ்வித தீர்வுமற்ற நிலையில் விட்டுவிடுவதை விட அறிவு, அனுபவம் முதலியவற்றைக் கையாண்டு ஓரளவுக்காவது சீர்நிலைக்கு கொண்டுவர முயலவேண்டும்...*

றாஷித்: *அப்படியன்றால் குறைபாடோ மிதமிச்சமோகொண்ட ஒன்றினால் இதற்கான தீர்வுகள் அமையப்பெற்றிருக்க வேண்டும்யென்பதில் நிங்கள் உடண்படுகிறீர்கள். எனினும் அதைத்தவிர வேறெந்தக் தெரிவும் இல்லையென்று சொல்லும் அளவு அதன்பால் நிர்பந்திக்கப்பட்டிருக்கிறீர்...*

மைக்கல்: *ஆம் அவ்வாறுதான்.*

றாஷித்: *ஆனால் இப்பாதிப்புக்களை தவிர்பதற்கான வேறொரு தெரிவும் எங்களிடம் உண்டு*

மைக்கல்: *எங்களிடம் என்றால்?*

றாஷித்: *அதாவது முஸ்லீம்களாகிய எங்களிடத்தில் மனித சமூகத்தைப் பாதுகாப்பதற்கான தெரிவுண்டு. அத்தெரிவானது; மனிதனைப்படைத்தவன் அவனிலும் மிக அறிந்தவனே, என்பதை சொட்செட்டாக விளக்குகிறது. அல்லாஹுூத்தஆலா திருக்குர்ஆனில் கூறுகிறான்: {யாவற்றையும், படைத்தவன் நுற்பமான அறிவுடையவனும் யாவற்றையும் நன்குணர்பவனும் ஆவான், என்பதை அவன் அறியமாட்டானா}* *[அல் முல்க்: 14]* *அவனொருவனே மனிதனுக்கு தேவையான அனைத்தையும் நன்கு அறிந்தவன். அதேநேரம் மனிதனின் ஆசை, கோபம், அன்பு, ஆதரவு என யாவற்றையும் விட்டும் தேவையற்றவன். எனவே மனிதனுக்குப் பொருந்தும் சட்டங்களை இயற்ற ஆற்றல் படைத்தவன் அவன் ஒருவனே. இதையே குர்ஆன் சுட்டிக்காட்டியுள்ளது.*

உடனே மைக்கல் குறிக்கிட்டவறாக: *உங்களுடைய பேச்சு சற்று காத்திரமாக*

இருக்கிறது தலைவர் றாஷித்!.. உங்கள் மார்க்கத்தில் நான் மாட்டேன், என்ற விடயத்தை மட்டும் மறந்துவிட வேண்டாம். நான் நம்பாத ஓர் விடயத்தில் என்னை வற்புறுத்தவும் வேண்டாம். எனது நோக்கம் நாம் ஏற்கனவே கூறியதற்கமைய கருத்துத்பறிமாறல் மட்டுமே..

றாஷித்: இவ்வடிப்படையை முழு மனித சமுதாயமும் பின்பற்றுவது அவசியமென கருதுகிறேன். நீங்கள் விரும்பியதற்கினங்க எங்களுடைய உறையாடல் முழுமையடைய வேண்டுமென்பதால், நான் அதற்குத் தடையாக இருக்க விரும்பவில்லை. என்றாலும், ஹிஜாப் சமூக ஒழுங்கின் ஓர் அங்கம் என நான் ஏலவே குறிப்பிட்ட எனது சுய முடிவில் மிக உறுதியாக உள்ளேன்.

மைக்கல்: பரவாயில்லை.

றாஷித்: நான் சென்ற உரையாடலில் கூறியதைப்போன்று; மனித உடலில் சடவாதம் மாத்திரமன்றி மிலேச்சத்தனமும் உள்ளது; இதை யாவரும் அறிந்ததே. ஓர் ஆண் இயல்பிலேயே பெண்ணால் கவரப்படுகிறான். அவனைக் கவரும் முதல் அம்சம் அவளுடைய உடலமைப்பாகும். பெண்கள் அணியும் கவர்ச்சியான ஆடைகள் ஆண்களை ஓர் பிரதிபலிப்பை(REACTION) நோக்கி தூண்டுகிறது.

மைக்கல்: என்றாலும் இதை நான்.. ஆண், பெண் இருவருக்குமான ஓர் இழிவான கண்ணோட்டமாகவே கருதுகிறேன்; பெண்ணை உதாசீனம் செய்தல், அவளால் தன்னையே பாதுகாத்துக்கொள்ள முடியாத பலவீனமான படைப்பாக நோக்குதல் போன்றன அவளை இழிவு படுத்துகின்றன. அதேநேரம் ஆணை பாலியல் வேட்டையாடும் சிந்தனை கொண்ட ஓர் ஓநாயாக நோக்குவது, ஆணினத்திற்கே இழுக்கை ஏற்படுத்துகிறது.

றாஷித்: எனதருமை நன்பரே! ஒரு பெண் தன்னை அலங்கரித்துக்கொள்வதற்காக கண்ணாடி முன் நின்று அரைகுறை ஆடைகளை தெரிவு செய்கிற போது ஒரு ஆணுடைய நல்லெண்ணத்தை அடைந்துகொள்வதற்காக அதைச்செய்கிறாள் என கருதுகிறீர்களா? அதே போன்று ஓர் ஆண் அலங்காரமிட்ட ஓர் அழகிய பெண்ணை பார்க்கின்றபோது அவளுடைய சிறந்த பண்பாட்டினால் பிரமிப்படைகிறான் என கருதுகிறீர்களா? அல்லது அவளை பார்த்த முதல் பார்வையிலேயே (அவளுடைய கலாச்சார சீர்கேட்டினால்) காதல் வயப்படுகிறான் என கருதுகிறீர்களா?!

மனிதஇனம் உயர்வால், கண்ணியத்தால், ஒழுக்கத்தால் ஒருவரையொருவர் வேறுபடுவதைப்போன்றே உணர்வால், இச்சையால் ஒருவரையோருவர் வேறுபடுகின்றனர் என்பதை, நாம் அனைவரும் அறிந்ததே. ஹிஜாப், அதை அணியக்கூடிய பெண்ணை ஓர் பத்தினியாக எடுத்துக்காட்டுகிறது. தீய பண்பாடுகள், உளப்பலவீனங்கள் முதலியவற்றை அவளைவிட்டும் தூரப்படுத்துகிறது.. ஹிஜாப் பெண்களை தீயவர்களிடமிருந்து பாதுகாக்கும் ஓர் தடுப்பு என்பதை அல்குர்ஆன் துலாம்பரமாக விளக்கியுள்ளது.

மைக்கல்: ஆனாலும் தலைவர் றாஷித்! ஹிஜாப் அணிந்த சில பெண்களின்

நடத்தைகள் சிறந்த பண்பாடுகளுக்கு பொருத்தமற்றதாக காண்கிறேன். எனவே சிறந்த பண்பாடு ,ஹிஜாப் அல்லாத சிறந்த வளர்ப்பு, கோட்பாடுகளை கடைபிடித்தல் போன்ற வேறு காரணிகளில் தங்கியிருக்கிறது என்பதை.. இது வலுப்படுத்துகிறது.

றாஷித: நீங்கள் கூறுவதும் ஒரு வகையில் சரிதான். ஒரு பெண் முந்தானைத்துண்டொன்றை மாட்டிக்கொள்வதால் அவள் சிறந்த பெண்ணாக மாறிவிடுகிறாளென எவரும் வாதிடவில்லை; அதற்காக அவள் ஹிஜாப் அணியக்கூடாது என்ற அர்த்தமுமல்ல. ஓர் வைத்தியர் தவறிழைத்துவிட்டார் அல்லது அவருடைய துறையை தவறாக உபயோகித்துவிட்டார் என்பதற்காக, முழு வைத்தியத்துறையையும் குறை கூறுவதில் அர்த்தமில்லை; மாறாக அவர் அத்தவறை திருத்திக்கொள்ளவேண்டும் எனக் கூறலாம். இவ்வாறுதான் மனிதனென்ற அடிப்படையில் அனைவரும் தவறிழைக்கலாம்.

ஆனால், அதேநேரம் இஸ்லாம் பெண்ணிடம் தவறு நிகழாமல் பாதுகாப்பதற்காக ஹிஜாபை கடமையாக்கியுள்ளதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அவள் நடைமுறையில் மிகச்சிறந்த அந்தஸ்தை அடைய வேண்டுமென்பதற்காக பண்பாட்டு ரீதியான ஒழுங்கையும் அவளுக்கு விதித்துள்ளது. சுருங்கக் கூறின் ஒரு சிறந்த பெண் ஹிஜாபை அணியக்கூடியவள்; ஹிஜாப் அணியும் அனைத்துப் பெண்களும் சிறந்தவர்கள் அல்ல.

மைக்கல்: என்றாலும்.. இது பெண்ணுடைய உடலை பூதாகரமாக பிரதிபலிக்கும் பாதகமான கண்ணோட்டமாகத் தெரியவில்லையா?! எங்களுடைய உடலை நாங்களே ஏன் வெறுத்தொதுக்கவேண்டும்?!

றாஷித்: இஸ்லாம் அவளின் உடல் மறைக்கப்பட வேண்டிய அங்கம் என்பதால் மாத்திரம் ஹிஜாபை கடமையாக்கவில்லை; மாறாக ஆண்களின் பாலியல் உணர்வுகளை தூண்டாமல் இருப்பதற்காகவும்தான். ஆண்களின் சீண்டலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஓர் கேடயமாக அதை ஆக்கியுள்ளது. மேலும் இவ்வாரான பாலியல் தூண்டல்களும், துலம்பல்களும் கணவன் மனைவியென்ற இல்லற வாழ்க்கையில் மாத்திரம் அமையப்பெற்றிருக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. இதுவே சிறந்த சமுதாயத்தையும் கட்டி எழுப்புகிறது.

மைக்கல்: தலைவர் றாஷித்! இவ்வாறு ஹிஜாப் ஆண்களைக்கவருவதிலிருந்து ஓர் தடுப்பாக இருக்குமெனின், பெண்களிடமிருந்து தடுப்பாக ஏன் ஆண்களும் ஹிஜாப் அணிவதில்லை? ஆண்கள்மீதும் பெண்ணிற்கும் இச்சையுண்டல்லவா?

றாஷித் (சற்று சிரித்தவராக): அருமையான கேள்வி... இஸ்லாம் ஆண்களுக்கு மறைக்குமாறு விதித்துள்ள பகுதிகள் பெண்களுக்கு விதித்துள்ளதை விட குறுகியவை. அதற்கான சில நோக்கங்களை பார்ப்போம்: ஜெர்மனிய பத்திரிகை "பெர்லின் மொர்ஜ் பொஸ்த்"இல் பிரசுரமான டியுக் பல்கலைக்கழக நரம்பியற்கலை பேராசிரியர் புன்யாமின் ஹெய்டனுக்குரிய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:: ((சுய இன்பத்தைத் தூண்டும் சில பகுதிகள் ஒரு ஆணின் மூலையில் இருப்பதால் ஒரு அழகிய பெண்ணைக் பார்த்தவுடனேயே அவனால் சுய இன்பமடைய முடியும்.

ஆனால் அதேநேரம் ஒரு பெண் வசீகரமான ஆணைப்பார்க்க கடும்முயற்சியில் ஈடுபடமாட்டாள்.))

இவ்வாய்வில் அதற்கான காரணங்கள் ஆராயப்பட்டன. ஆண்,பெண் இனங்களிட்கிடையிளன வித்தியாசம் மூலையில் இருந்து ஆரம்பிக்கின்றது; ஒரு ஆண் அழகிய பெண்ணைபார்க்கும் போது அவனைத்தூண்டக்கூடிய மூலையின் சில பகுதிகள் அவனை சிற்றின்பமடையச்செய்கின்ரன.ஆனால் ஒருபென்னைப்பொருத்தமட்டில் அவள் எந்த ஒரு வசீகரமான ஆணைப்பார்த்தாலும் தாக்கமடையா வண்ணம் அவளுடைய முளையின் அமைப்பு காணப்படுகின்றது.

இவ்வாய்வின் பிரகாரம்; பெண்களின் உருப்புகளில் ஆண்களைக்கவரும் முதல் உறுப்பு அவர்களுடைய முகமே எனத்தெரியவந்தது.. குறிப்பிட்ட இடத்தை மாத்திரம் உற்று நோக்காது ஒரே பார்வையில் மொத்தமாக பார்க்கின்ற போதுதான் இக்கவர்ச்சியேற்றப்படுகின்றது.

மற்றொரு தகவல்: பெண்ணைவிட ஆணே அதிக துணிச்சலுடையவன். .ஆய்வுகளின் பிரகாரம்; ஆண்கள் புரியக்கூடிய குற்றம் பெண்களைவிட ஐந்து மடங்கு பெரியது. ஒரு பெண் கவர்ச்சிக்கான முதல் அடியை எப்பொழுது தவிர்ந்துகொள்கிறாளோ, அப்பொழுதே ஆணிற்கும் எல்லைமீற நினைக்கும் அவனுடைய துணிச்சலிற்கும் மத்தியில் திரையிடப்படுகிறது என தெரியவந்தது..

மைக்கல் (சற்று அவசரமாக): *ஆம், புகையிரதத்திற்கு நேரமாகி விட்டதென நினைக்கிறேன்... .புறப்படலாம் தயாராகுங்கள்.*

https://www.path-2-happiness.com/ta

பெண்ணாதிக்கம்

பெண்ணாதிக்கம்

புகையிரதம் நகர ஆரம்பித்து ஒரு ணித்தியாலத்தின் பின் மைக்கல்,ராஷித் ஆகிய இருவரும் பிரயானப்பொழுது கழிவதற்க்காக உரையாட ஆரம்பித்தனர்.

மைக்கல்: நாங்கள் பெண்கள் தொடர்பாக பலதாரமனவுரிமை, ஹிஜாப் என இருவிடயங்களை பற்றி கலந்துரையாடினோம். இதற்குட்பட்ட ஏனைய விடயங்களையும் பற்றி கலந்துரையாடுவதில் உங்கள் அபிப்பிராயமென்ன ?

ராஷித்: நல்ல யோசனை.

மைக்கல்: இதில் முதலாவது என்சிந்தனைக்கு வரக்கூடிய விடயம்: பெண்ணுடைய பங்களிப்பு. முஸ்லிம்கள் ஏன் வாழ்க்கையின் அனைத்துக்கட்டங்களிலும் ஓர் ஆணிற்கு சமமாக பெண் பங்குபற்றுவதை வெறுக்கிறார்கள்?

ராஷித்: நண்பரே! மனிதனிடமுள்ள மிலேச்சுத்தனம்(மிருகத்தனம்) மிருகங்களிடம் இருப்பதைப்போன்றதல்ல; மாறாக மிகப்பெரிய வித்தியாசமுண்டு. மனிதனுடைய பாலியல் மிலன்கள் மிருகத்திலிருப்பதைவிட அதிகமானவை. அதேவேளை உடலுறவு சக்தி அதற்கு மாற்றமாக மிருகத்திலிருப்பதை விட மிகப்பலவீனமானது

ஒரு பெண்ணிடம் இயல்பிலேயே அமையப்பெற்ற வெட்கம், நாணம், தவிர்ப்பு போன்றவற்றை நாம் கருத்திற்கொண்டால், மனிதனிடமுள்ள பாலியல் ரீதியான கவர்ச்சியாற்றலின் நோக்கம் கணவன் மணைவிக்கிடையிலான தொடர்ச்சியான உறவை தக்கவைத்துக் கொள்வதே. இவை உளவியல் ரீதியான பயன்கள். இதையே அல்குர்ஆன் அமைதி, அன்பு, இறக்கம் என்ற பெயர்களால் அழைக்கிறது. என்ன... தெளிவாகவுள்ளதா?...

மைக்கல்: ஓரளவு தெள்வாகவுள்ளது.

றாஷித்: உயிரியல் பகுதியைப் பார்த்தால், உடலின் உள்ளுருப்பு, வெளியுருப்பு ஆகியவற்றிலுள்ள செல்கள், அனுக்கல் என அனைத்திலும் ஒரு பெண் ஆணிடமிருந்து வேறுபடுகிறாள் என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அவளுடைய செல்கள் தனித்துவமானவை; பெண்ணியல்பினால் உருவாக்கப்பட்டவை. அவளின் உடல் பருமன், நரம்பியல் தொகுதி ஆகியன ஆணிலிருந்து முற்றாக வேறுபட்டவை. அவளுடைய முழு உடலமைப்பும் பிள்ளை பெற்றடுத்தல், அதை வளர்த்தல் போன்ற ஒரு தாயின் தொழிற்பாடுகளுக்கு ஏற்றாட்போல் அமையப்பெற்றது. அவள் பருவ வயதை அடைந்தவுடன், அவளுடைய புல உருப்புகளின் செயற்பாடுகள் மாத்திரமன்றி உளரீதியான செயற்பாடுகளும் மாற்றமடைகின்றன; மாதவிடாயும் ஏற்படுகிறது இவையனைத்தும் அவளுடைய கருவுறல், பிள்ளைப்பேற்றுத்தீட்டு, பாலூட்டல் தவிர்ந்தவைகளாகும்.

அதுமட்டுமல்ல பெண்ணுடைய ஓமோன்கள், குணங்கள் என்பன ஆண்களுடையவற்றைவிட வேறுபட்டன; ஒரு ஆணுடைய துணிவு, கடினம்

என்பன பெண்ணுடைய வெட்கம் பிரியத்துக்கு நிகரானவை.

இதுவோர் புறமிருக்க, மனிதப்பிறவி ஏனைய விலங்குகளுக்கு மாற்றமாக பிறப்பிலிருந்து வாழ்க்கையில் சுயமாக செயற்படும் ஆற்றலைப் பெறும் வரை பெற்றோரின் அரவனைப்பு தேவையுடையவன். இதன் நோக்கங்களில் ஒன்றுதான் கணவன் மனைவி ஆகிய இருவரும் தங்களுடைய பாலியல் தொடர்புகளை தொடர்ந்தும் பேனுவதாகும். அதுமட்டுமன்றி இத்தொடர்புகளுக்கான பிரதி பலன் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரபவரையொருவர் புரிந்து உதவிநல்குவற்கு வழிகோலும். இதனாலேயே மனிதன் ஏனைய அனைத்து விலங்குகளைவிடவும் தன் குழந்தை மீது அதிக இரக்கம் கொண்டவனாக படைக்கப்பட்டுள்ளான்.

மைக்கல்: *பிறகு என்ன?*

ராஷித்: *சுருங்கக்கூறின்; குடும்பம் மனிதனுக்கு இயற்கையாகவே அமையப்பெற்ற சமுகக்கட்டமைப்பகும். இதில் ஒவ்வொருவருடைய சக்திக்கும், ஆற்றல்களுக்கும் ஏற்ப பொறுப்புக்களும், பங்களிப்பும் உள்ளன.*

மைக்கல்: *ம்ம்.. விளங்கிக்கொண்டேன்; .ஆகவே ஒரு பெண்ணுடைய பங்களிப்பு குழந்தையை பெற்றெடுப்பதும், குடும்பத்தில் தனெக்கென ஓர் இருப்பை தக்கவைத்துக்கொள்வதும், கணவன் மற்றும் குழந்தைகளை பராமரிப்பதுமே. அப்படித்தானே...*

ராஷித்: *ஆம், அவ்வாறே ஓர் ஆணின் பங்களிப்பு குடும்பத்திற்கான வாழ்க்கை கட்டமைப்புகளுக்கு வழிசமைத்தலும், இதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை எற்றுக்கொள்ளலுமாகும் .*

மைக்கல்: *என்றாலும்.. இக்கண்ணோட்டத்தால் சமுக உற்பத்தித் திறனில் அரைவாசியை இலக்க நேரிடலாமல்லவா?...*

ராஷித்: *இல்லை, அதற்கு மாற்றமாக முழு சமுகத்தையும் உற்பத்தித்திறன் மிக்கவர்களாக மாற்றியமைக்கிறது. ஏனெனில், ஒவ்வொருவரும் அவரவருக்குப் பொருத்தமான துறையிலும் தங்கியிருக்கின்றனர். எனவே ஒரு பெண் அவளுடைய இயல்பிற்குப் புறம்பாக வேலைக்குச்சென்று ஆண்களுடன் ஒட்டி உறவாடுவாளேயானால், அவள் தன்னை புதியதொரு வேலைப்பளுவினால் சீரழித்துக்கொள்கிறாள்; அவளுடைய குடும்பம், கணவன் என முழு சமுகமும் சீரழிகிறது. அவள் தனது வேலைக்கும், குடும்பப்பளுக்களுக்கும், பிள்ளை பராமரிப்புக்கும் மத்தியில் வெற்றிகாண தொடராக முயற்சிக்கிறாள்; ஈற்றில் தோற்றுப்போகிறாள். ஓர் சிறந்த தாயாகவும், திருப்தியான மனைவியாகவும், சுறுசுறுப்பான பணிப்பெண்ணாகவும் இருக்கவேண்டும் என்ற கடமைகள் சுமத்தப்பட்டால் அவற்றை அவள் எவ்வாறு சமாளிப்பாள்?!.. அவள் ஒய்விற்கென ஒதுக்கியுள்ள நேரங்களை வேறுசில பகுதிகள் அபகரித்து அவளை நிம்மதியற்றவளாக மாற்றிவிடுகின்றன. அத்தோடு ஒரு பெண் வீட்டுக்கு வெளியே சென்று உத்தியோகத்தில் ஆண்களுடன் ஒட்டியுறவாடுவதால் பாலியல் பலாத்காரங்களுக்குள்ளாகிறாள். இதுவே அவளுக்கு உண்மையான இழுக்கு.*

மைக்கல்: *வாழ்கையில் பெண்ணுடைய பங்களிப்பு என்றால் அது குடும்பப் பங்களிப்பே. என்று நாம் கூறுவோமானால், பெண்களுக்கெதிரான ஆணாதிக்கம் என்ற இன்னொரு பாதிப்பிற்கு இட்டுச்செல்கிறதே?..*

ராஷித்: *ஆதிக்கமென்பது ஆண்களுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. மாறாக குடும்பம் எனப்படும் சமூக நிறுவனத்திற்கான ஒழுங்கு. எந்தவொரு நிறுவனமாக இருப்பினும் அதிலுள்ள உறுப்பினர்களுடைய தகமைகள், ஆற்றல்களுக்கேற்ப அவர்களுடைய பொறுப்புக்களும் வரையறுக்கப்படும். ஒரு நிறுவனத்தின் தலைவர், கணக்காளர் என்போர் அதன் சிற்றூழியரை விட உயர்ந்த இடம் வகிப்பது அந்நிறுவனத்தின் நலனுக்கே.*

நடைமுறையில் பார்ப்போமானால், ஒரு நிருவனத்தின் நம்பிக்கையாளர்கள் யூகிக்கின்ற நலவுகளை கருத்திற் கொண்டு அந்நிருவன அங்கத்தவர்கள் செயற்படும் விதமாக சில வரையறைகள் விதிக்கப்படுவதைக் காண்கிறோம்; குறிப்பிட்ட சீருடையை அணியப் பணித்தல், குறிப்பிட்ட பாதுகாப்பு செயற்திட்டமொன்றை அல்லது பயிற்சி முறையை அமுல்படுத்தல், உத்தியோக நேரங்களில் அனுமதியின்றி வெளியில் செல்வதைத்தடுத்தல், உத்தியோகமல்லாத வேறு வேலைகளில் ஈடுபடுவதை தடுத்தல் என பல விதிமுறைகளை உதாரணமாகக் கொள்ளலாம். அதுமட்டுமன்றி அந்நிருவனத்தின் ஊழியர் அதை விட்டு விலகிய பின்னரும் அவன் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகளும் உள்ளன. இவற்றை நாம் அனைவரும் அறிந்ததே. இவ்வரையறைகளை அந்நிருவனம் அதன் ஊழியர்கள் மீது பிரயோகிக்கும் அதிகாரமாக எவரும் நினைக்கமாட்டார்கள். இவையனைத்தும் தகைமைகளைக் கொண்ட ஒரு தலைவர் இல்லாமல் வெற்றிகரமானதாக இருக்க முடியாது.

இவ்வாறுதான் குடும்பமென்ற நிறுவனம் வெற்றிகரமானதாக அமைய அங்கத்தவர்கள் அனைவரும் பின்பற்றத்தக்க ஓர் ஒழுங்குமுறை அவசியமாகும். அதில் குடும்ப அங்கத்தவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய சில வரையறைகளும், தகுதிகளைக்கொண்ட ஒரு தலைவரும் இருக்க வேண்டும். கருத்து முரண்பாடுகளின் போது உறுதியான முடிவுகளை எடுக்கக்கூடிய ஆற்றல் அவரிடத்தில் இருக்கவேண்டும். அவ்வாறே அவரும் அவ்வொழுங்கு முறைகளை கடைப்பிடிப்பதோடு நான் ஏலவே கூறிய அன்பு,இறக்கம்,நிம்மதி முதலியவற்றை நிலைநாட்ட தன் ஆற்றல்களை பயன்படுத்த வேண்டும்.

மைக்கல்: *அவ்வாறாயின், ஆதிக்கம் ஏன் ஆண்களிடம் மாத்திரம் இருக்கவேண்டும் ? பெண்களிடமில்லையா? இதுவோர் சமத்துவமின்மையாகத்தெரியவில்லையா?*

ராஷித்: *நீங்கள் கூறிய சமத்துவம் என்ற சொல்லைவிட நீதம் என்ற சொல் சாலப்பொருத்தமானது என நினைக்கிறேன். என்றாலும் பரவாயில்லை, நான் கூறுவது என்னவென்றால்; சமத்துவம் அல்லது நீதம் என்பன உரிமைகளில் இருக்கவேண்டியவை. ஆனால் நாங்கள் உரையாடுகிற விடயம் ஒவ்வொரு தனிமனிதனும் தனது சக்திக்கேற்றாட்போல் சமூக சேவையில் ஈடுபடுவதைப் பற்றியதாகும்.*

நாம் ஏலவே கூறியதைப்போன்று; ஆண், பெண் இருவரும் வித்தியாசமான விதத்தில் படைக்கப்பட்டுள்ளனர். இவ்வித்தியாசங்கள் பல்வேறுபட்ட சமூக அலுவல்களுக்கு பொருந்தக்கூடியன. ஓர் ஆண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள இவ்வதிகாரத்தை பெண்ணிற்கு வழங்கப்படாத சில பொறுப்புக்களும், கடமைகளும் எதிர்நோக்குகின்றன என்பதை நீங்கள் மறவ வேண்டாம். இங்கே அதிகாரம் என்பது சிறப்பான ஒன்று என்பதைவிட சிரமமான ஒன்று எனலாம். ஏனெனில், ஆண் மீது குறிப்பிட்டசில பொறுப்புகள் சுமத்தபடுவதனால் அவன் உறுதியான சிந்தனையுடனும், தீர்மானங்ளின்போது நிதானமாகவும் இருப்பது அவசியமாகும். இதனால் ஒரு பெண்ணுடைய கருத்தை உதாசீனம் செய்வதென்றோ அல்லது அவளுடைய ஆளுமையை அலட்சியப் படுத்துவதென்றோ அரத்தமல்ல.

அதேநேரம் ஒரு பெண் இவ்வாறான சமூக அலுவல்களுக்கு தகுதியானவளும் அல்ல. ஏனென்றால் நபி(ஸல்) அவர்கள் கூறியதைப்போன்று அவள் மார்க்கத்திலும், சிந்தனையிலும் குறைபாடுடையவள்.

மைக்கல்: சிந்தனை குறைபாடுடையவர்களா? இதென்ன அநியாயம்!.. பெண் அவளுடைய அறிவியல் ஆற்றல், வெற்றி, விவேகம் என எவ்விதத்திலும் ஆணிற்கு குறைந்தவளல்ல என்பதை நிரூபித்திருக்கிறாள்.

றாஷித் (சிரித்தவராக): நண்பரே புதுமை என்னவென்றால் நான் இந்த ஹதீஸை கூறிய எத்தனையோ பேர் இவ்வாறுதான் விளங்கியிருந்தனர். இங்கே சிந்தனையென்பது விவேகமல்ல மாறாக சரியானமுறையில் விடயங்களை நிர்ணயிக்கும் ஆற்றல், மனோபலம், இக்கட்டான சூல்நிலைகளில் முடிவை எடுக்கும் திறன் என்பதே. அதன் இன்னொரு அர்த்தம்; கேளிக்கைகளை வெறுப்பது எனலாம். பெண்கள் ஆண்களைவிட உணர்வுகளை அதிகமாக மதிப்பவர்கள். இதை நாம் அனைவரும் அறிந்ததே. அவர்களுடைய இந்த மனஇயல்பு குடும்ப அமைப்பு விவாகரத்து மூலம் முடிவுக்குக்கொண்டுவரப்படுவதை தடுக்கிறது.

மைக்கல்: பெண்ணுரிமையைப் பற்றி உரையாடும்போது அனந்தரச்சொத்தில் அவளுடைய பங்கையும் குரிப்பிடுவது அவசியமே; எனவே ஏன் பெண்ணுடைய அனந்தரச்சொத்து ஆணுடையதைவிட அரைவாசியாக இருக்க வேண்டும்?!

ராஷித்: ஆரம்பமாக... பெண்ணுடைய அனந்தரப்பங்கு ஆணுடைய பங்கில் அரைவாசி என்பது அனைத்து நிலமைகளிலும் அல்ல.

இரண்டாவதாக: ஒரு மனிதரின் மேன்மை அவருக்கு வழங்கப்படும் எல்லா உரிமைகளையும் வழங்குவதால் எற்படுகிறது என்ற அர்த்தமோ, அல்லது நீதம் என்றால் அனைத்து நிலைமைகளிலும் சமத்துவத்தை பேணுதல் என்ற அர்த்தமோ அல்ல. என்றாலும் நிலைமைகளுக்கேற்ற சமத்துவம் அவசியமாகும். எனவே பெண்ணுடைய குடும்ப பங்களிப்பை கவனத்திற்கொண்டு, அவளுடைய கடமைகளுடன் உரிமைகளை ஒப்புநோக்குவது அவசியமாகும்.

உதாரணமாக: ஒரு பெண் பெறக்கூடிய அனந்தரச்சொத்து அவளுக்கு மட்டுமே

உரித்தானது. அதேநேரம் ஒரு ஆண் பெறக்கூடியவை அவனுடைய மனைவி, குழந்தைகள், திருமணமுடிக்காத அவனுடைய சகோதரிகள், உயிருடன் இருக்கும் பெற்றோர்கள் என அனைவருக்குமிடையில் பகிரப்படும். இவை தவிர்ந்த நன்கொடையாக மணப்பெண்ணுக்கு வழங்கப்படும் மகர்க்கொடுப்பனவு, திருமணவீட்டிற்கு தேவையான செலவுகள் என அனைத்தையும் அவனே சுமக்கிறான். மனைவியை வேலைக்கு செல்லுமாறு வற்புருத்தவோ, அவளுடைய சொத்து செல்வங்களில் காலத்தைக்கடத்தவோ முடியாது. ஒரு பெண் தனக்குச்சொந்தமான செல்வத்தை முழுமையாக அனுபவித்தல் மேற்கத்தயப்பெண்கள் வாதிடக்கூடிய நீதமான அளவைவிட மிகச்சிறந்ததே.

ம்...சரி..இத்தலைப்பில் நாம் பார்க்கவேண்டிய விடயம் ஏதும் உள்ளதா?

மைக்கல்: ஆம், விவாகரத்து தொடர்பான சிக்கல் உள்ளது. என்றாலும் நாங்கள் சற்று ஓய்வெடுப்பது நல்லதென நினைக்கிறேன்.

குடும்பப்பிளவு

குடும்பப்பிளவு

சிறிது நேரத்தின் பின் நண்பர்கள் இருவரும் தங்களது இருக்கையை மாற்றி அமர்ந்து கொண்டனர்.பின்னர் மைக்கல்:

இஸ்லாமிய சமூகத்தில் விவாகரத்து பரவலாகக் காணப்படுகிறது.. இஸ்லாம் அதை அனுமதித்திருப்பதும் அதற்க்கான காரணங்களில் ஒன்றே.

ராஷித்: ஆரம்பமாக: விவாகரத்தை முதலில் ஆகுமாக்கியது இஸ்லாம் மார்க்கமல்ல. இஸ்லாத்திற்கு முன்னரே உலகம்பூராகவும் விவாகரத்து பரவியிருந்தது. ஒரு ஆண் கோபப்பட்டவுடன் அவனுக்கெதிராக எவ்வித மாற்றீடும் அற்றவனாக அநியாயமாகவோ அல்லது உரிமையுடனோ அவளை விரட்டுபவனாக இருந்தான். கிரேக்க நாகரீகம் எழுச்சிபெற்ற காலத்தில் அவர்களிடையே விவாகரத்து எவ்வித வரையரையுமின்றி பரவிக்கானப்பட்டது. யூத மதத்திலும் விவாகரத்து ஆகுமாக்கப்பட்டிருந்தது; அவர்களிடம் கணவன் மாத்திரம் மனைவியை எவ்வித காரணமும் இன்றி விவாகரத்துச்செய்ய உரிமைபெற்றவனாகவும், அவ்விவாகரத்து காரணத்தோடு அமைந்திருப்பது விரும்பத்தக்கவொன்றாகவும் காணப்பட்டது. ஒரு பெண் வேறொருவரை திருமனம்முடித்தால் அவளுடைய முதல் கணவனிடம் ‘திரும்பிச்செல்ல முடியாத நிலை அவர்களுடைய விவாகரத்தில் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இரண்டாவதாக: இஸ்லாம் ஆகுமாக்கியிருப்பதுதான் விவாகரத்து பரவுவதற்கான காரணம் என்று சொல்லும் அளவு இஸ்லாமிய சமூகத்தில் பரவிக்காணப்படுகிறது என்றீர். சரி, ஒப்பீட்டுரீதியாக உலகக்கணக்கெடுப்புக்கள் சிலவற்றை பார்ப்போம்:.

அமெரிக்காவில் (1992-1995) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்ப்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 திருமணத்துக்கும் 502 என்ற வீதத்தை அடைந்துள்ளது. இவ்வீதம் பாரிய அளவில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சில வேலை 1999 ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் நடைபெற்ற திருமணங்களில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் எண்ணிக்கை தொடர்பான அறிகையை அமெரிக்க நிர்வாகம் வெளியிடாமல் மறைத்திருக்கலாம். சோவியத்ரஷ்யாவில் (2001-2004) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 விவாகங்களுக்கும் 750 என்ற வீதத்தை அடைந்துள்ளது. சுவீடனில் அதே ஆண்டு காலப்பகுதிகளுக்கிடையில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 விவாகங்களுக்கும் 539 என்ற வீதத்தை அடைந்துள்ளது. பிரித்தானியாவில் (2000-2003) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 விவாகங்களுக்கும் 538 என்ற வீதத்தை அடைந்துள்ளது.

ஜப்பானில் (1000-2004) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 திருமணங்களுக்கும் 366 என்ற வீதத்தை அடைந்துள்ளது.

அதேநேரம் இஸ்லாமிய சமூகங்களுக்கிடையே உற்றுநோக்கினால், அதிகமாக விவாகரத்து நிகழும் நாடாக குவைத் காணப்படுகின்றது அங்கே (2000-2004) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்ப்பட்ட விவாகரத்துக்களின் சராசரி எண்ணிக்கை ஒவ்வோர் 1000 திருமணங்களுக்கும் 347 என்ற வீதத்தை அடைந்துள்ளது. ஆனால் அதுதவிர்ந்த ஏனைய நாடுகலைப்பொருத்தமட்டில் அதை விட மிகக்குறைவான என்னிக்கையையே கொண்டுள்ளன. உதாரணமாக; ஜோர்டானில் (2000-2004) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் நிகழ்ந்த விவாகரத்துக்களின் எண்ணிக்கை ஒவ்வோர் 1000 விவாகத்திற்கும் 184 என்ற வீதத்தை அடைந்துள்ள அதேவேளை பலஸ்தீனில் அதேகாலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரி எண்ணிக்கை ஒவ்வொரு 1000 விவாகங்களுக்கும் 142 என்ற வீதத்தையே அடைந்துள்ளது.

எகிப்தில் (2000-2003) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்ப்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வோர் 1000 திருமணங்களுக்கும் 134 என்ற வீதத்தை அடைந்துள்ளது. சிரியா நாட்டில் (2000-2002) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரி எண்ணிக்கை ஒவ்வொரு 1000 திருமணத்திற்கும் 84 என்ற வீதத்தை அடைந்துள்ளது. லிபியாவில் (2000-2004) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்ப்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வொரு 1000 திருமணங்களுக்கும் 51 என்ற வீதத்தை அடைந்துள்ளது. இறுதியாக ஈரானில் (2000-2003) ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட விவாகரத்துக்களின் சராசரியளவு ஒவ்வொரு 1000 திருமணங்களுக்கும் 97 என்ற வீதத்தை அடைந்துள்ளது.

எனவே இஸ்லாமிய சமூகங்களுக்கிடையில் விவாகரத்து பரவியிருப்பதட்கானதற்கான காரணம் இஸ்லாம் அதை ஆகுமாக்கியிருப்பதுதான், என இதற்குப் பிறகும் கூறுவீர்களா?!

மைக்கல்: என்றாலும்.. ஏனைய மதங்களோடு ஒப்பிடும் பொழுது இஸ்லாம் மிக எழுதில் விவாகரத்து வழங்குவதில் பிரபல்யம் பெற்றிருப்பதை யாவரும் அறிந்ததே.

ராஷித்: இவ்விடயம் பல தலைப்புக்களை உள்ளடக்கியது. நீங்கள் அனுமதித்தால் அவற்றை விளக்கமாக கூறுலாம்.

மைக்கல்:தயவுசெய்து.

ராஷித்: முதல் விடயம்: இஸ்லாத்தில் விவாகரத்து என்பது மிக எளிதாக நிகழக்கூடிய ஒன்று என பொதுவாக நம்புதல்; விவாகரத்தை ஊக்குவித்து எந்தவொரு ஆதாரமோ இஸ்லாத்தில் இல்லையென்பது உறுதி, இஸ்லாமிய போதனைகளை சரிவர கடைப்பிடிக்காத சிலர் நடைமுறையில் இவ்விடயத்தில் அலட்சியமாக உள்ளனர் என்பதில் உங்களோடு நான் உடன்படுகிறேன். அதேநேரம் இஸ்லாமிய போதனைகள் இந்நடவடிக்கைகளை விட்டும் முற்றிலும் தூரமானவை, என்பதையும் நாம் அறிந்திருப்பது அவசியமே. இஸ்லாம் இவ்விடயத்தை (விவாகரத்தை) தெளிவாக

வரையறுத்துள்ளது. எனினும் சில சமூக உறுப்பினர்களிடம் நிகழக்கூடியவை, அவர்கள் இஸ்லாமிய ஒழுங்கு முறையை விட்டும் தூரவிலகியதன் விளைவுகளாகும்.

மைக்கல்: சற்று விளக்கமாகக் கூற முடியுமா?

ராஷித்: இஸ்லாத்தில் திருமணமென்பது நிரந்தற உடன்படிக்கையாகும். அதைக்குறிப்பிட்ட நேரத்தால் வரையறுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. (ஹராமாக்கப்பட்டுள்ளது) அதாவது; கணவன்,மனைவி ஆகிய இருவருக்குமிடையில் உள்ள பந்த உறவு அவர்களில் ஒருவர் மரணிக்கும் வரை தொடர்ந்திருக்க வேண்டுமென்றே இஸ்லாம் வலியுறுத்துகிறது. திருமணம் மிகக்கெட்டியான உடன்படிக்கையென (குர்ஆனில்) வர்நிக்கப்பட்டுள்ளதாவது அதை முறிக்க நினைக்கக்கூடாது என்பதையே சுட்டிக்காட்டுகிறது. விவாகரத்து இஸ்லாத்தில் நிர்ப்பந்தமான நிலமைகளைத்தவிர ஏனையவற்றில் வெறுக்கத்தக்க ஒன்றாகும். அவ்வாறான நிலமைகளிலும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. அவ்வாறு (விவாகரத்து) நிகழும் பட்சத்தில் அனைத்து தரப்பினர்களினதும் கௌரவத்தை பேணிப்பாதுகாக்கும் விதத்தில் அமையப்பெற்றிருக்க வேண்டுமெனவும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாம் மனைவியை பற்றிப்பிடிக்குமாறும்,.

கணவன் வெறுக்கும் ஓர் பண்பை அவள் பெற்றிருப்பதால் அவளை விவாகரத்துச்செய்யக்கூடாது எனவும் வலியுறுத்துகிறது. அவளிடம் காணப்படும் ஏனைய நற்பண்புகளைக் கவனிக்குமாறும், அவற்றை பற்றிப்பிடிப்பதற்கு அவளைத்தூண்டுமாறும் கணவனை வலியுறுத்துகிறது. மனைவியின் மகத்துவத்தை பாதுகாக்கிறது; அதாவது, தன் மனைவியை சீர்செய்வதில் கணவனை ஏவுகின்ற அதேவேளை "தலாக்"(விவாகரத்து) என்ற வார்த்தையை பராமுகமாக பிரயோகிப்பதை எச்சரித்துள்ளது. கணவன்,மனைவி ஆகியோருக்கிடையில் எழக்கூடிய பிரச்சினைகளை அவர்களால் தீர்மானிக்கமுடியாதவிடத்து அவற்றை தீர்ப்பதற்காக இருவரினதும் நலனைக்கருத்திற்கொண்ட மூன்றாந்தரப்பினரிடத்தில் செல்வதை இஸ்லாம் விரும்புகிறது. பின்னர் இறுதித்தலாக்கை(விவாகரத்தை) அவ்விருவரும் மீள ஒன்றுசேர்வதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டதாக ஆகியுள்ளது. அவர்களுக்கு மத்தியில் எழும் முதல்பிரச்சினையிலேயே அவர்களின் திருமணவாழ்வை கலைத்துவிடவேண்டுமென தீர்ப்பளிக்கவில்லை. மாறாக மூன்று கட்டங்களைக்கொண்டதாக ஆக்கியுள்ளது; முதலிரண்டு கட்டங்களின் பின்னர் கணவன் தன் மனைவியை மீட்டெடுக்க முடியும், அதேநேரம் அவ்வாய்ப்பை மூன்றாம் கட்டத்தின் பின்னரும் வழங்கியுள்ளது. எனினும், அதன் பின்னரும் அவ்விருவருக்கும் மத்தியில் மிக மோசமான, வெறுக்கத்தக்க ஒன்று நிகழுமாயின் விவாகரத்து வழங்கப்பட்ட பெண் வேறொருவரை திருமணம் செய்வாள்.

மைக்கல்: அது என்ன.. முதல் விடயம், ஏனையவைகள் எவை?

ராஷித்: அடுத்து மிகமுக்கிய அம்சம் யாதெனில்; முஸ்லிம்கள் அல்லாத ஏனைய சமூகத்தினரிடம் நிகழக்கூடியவற்றை பார்ப்போம்; அவர்களிடத்தில் அற்ப

காரனங்களுக்காக விவாகரத்து நிகழ்கிறதென்பதே உண்மை. அதை நீங்களே அறிவீர்கள்; உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் கணவன், மனைவி இருவரில் ஒருவர் கணணியை தொடர்ந்து உபயோகிப்பவராக அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சியை தொடர்ந்து பார்ப்பவராக இருந்தாலே விவாகரத்தை பெற்றுக்கொள்ளமுடியுமென நீதிமன்ற வழக்குகள் தெரிவிக்கின்றன. கனடாவில் தம்பதியினரில் ஒருவர் தூங்கும் போது குறட்டை விடுவதால் மற்றவர் பாதிக்கப்படுகிறார் எனக்கூறினாலே விவாகரத்தை பெற்றுவிடலாம். இத்தாலியில் இருவரில் ஒருவர் மற்றவரை வீட்டுவேலைகளை செய்ய நிர்ப்பந்தித்தாலே விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜப்பானில் தம்பதியினரில் ஒருவர் மற்றவரை கவரும் விதத்தில் தூங்கவில்லையென்று விவாகரத்துக்கோரினாலும், அதைத் தீர்ப்பாக வழங்குவதில் நீதிமன்றம் பின்னிற்பதில்லை.

மைக்கல்: தலைவர் ராஷித! நீங்கள் கூறியது சரிதான், ஆனால் அவைகள் மதச்சார்பற்ற ஒழுங்குமுறையில் நிகழக்கூடியவை. ஆனால் கிறிஸ்துவ மதத்தைபொருத்த மட்டில் யதார்த்தத்தில் உறுதிப்படுத்த முடியாத சில காரணங்களுக்காகவே தவிர விவாகரத்துக் கோருவது கடுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதை யாவரும் அறிந்ததே.

ராஷித்: இக்கடும்போக்குவாதம் மனித இயல்பிற்கு பொருத்தமற்றது எனக்கருதுகின்றேன். இஸ்லாமிய நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் இரு மார்க்கங்களுக்குமிடையிலான வேறுபாட்டை பார்த்துவிட்டு, அவர்களுடைய மார்க்கத்தில் இயல்பு வாழ்க்கைக்கைக்குப் பொருந்தமான தீர்வைப் பெறாததால் அதைவிட்டு விரண்டோடுகிறார்கள். இது எனது கருத்தை தெளிவுபடுத்துகிறது.

திருமணம் உலகில் மனிதர்களுக்காக கடமையாக்கப்பட்ட ஒன்று; அவர்களுக்கென இயல்புகளும், மாற்றமடையும் நிலவரங்களும் உள்ளன, என்பதை விளங்கிக்கொள்ளும் பொருட்டு திருமண உடன்படிக்கை நிரந்தரமானதாக இருக்கவேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. அதேநேரம் அனுபவத்தால் மாத்திரம் விளங்கமுடியுமான தவறுகளுக்கென எல்லையையும் வகுத்துள்ளது. மனிதனின் இந்நிலைமாற்றம் பல்வேறுபட்ட பாதகங்களை விளைவிக்கும்; அப்பாதகங்கள் சிறியதாயினும் அதனால் ஏற்படும் நஷ்டங்கள் பாரியதாக அமையலாம். எனவே, வாழ்க்கைத் தடுமாற்றமடைந்து அனைத்து வழிகளாலும் நெருக்குதலுக்குள்ளாகும்போது இவ்வாறான தவறுகளை திருத்திக்கொள்வதற்கான முறையையும் இஸ்லாம் காட்டித்தந்துள்ளது. கணவன், மனைவி குடும்பம் என அனைவருக்குமான மிகச்சிறந்த நீதியை நிலைநாட்டக்கூடிய மார்க்கம் இஸ்லாம் மட்டுமே. திருமணத்தின் மிகமுக்கியமான நோக்கங்களான அன்பு, இரக்கம் என்பன தொடர்ச்சியாக இழப்பதை விட அல்லது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பிரச்சினைகளால் அவதியுறுவதை விட பிரிவினால் பாதையை சரிசெய்து புதியதோர் அனுபவத்தைத் தொடர்வது மிகச்சிறந்ததாகும். இஸ்லாத்தில் விவாகரத்து பாதையை சரிசெய்யும் ஓர் சிகிச்சையும், வெற்றிகரமான புதியதோர் வாழ்க்கையை தொடர்வதற்கான

சந்தர்ப்பமுமாகும்.

மேற்கூறப்பட்ட காரணிகளின் அடிப்படையில், இஸ்லாத்தில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருப்பது அம்மார்க்கத்தின் தாராளத்தன்மையையும், நடைமுறைகேற்ற பண்பையும் எதுத்துக்காட்டுகிறது எனக் கருதுகிறேன்.

மைக்கல்: என்றாலும், இஸ்லாம் விவாகரத்தை ஏன் ஆண்களுக்கு மாத்திரம் உடமையாக்கியுள்ளது. இது பெண்ணிற்கிழைக்கும் அனியாயமல்லவா?!

றாஷித்: மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்துகிறேன்; அதாவது, ஒரு விடயத்தை ஆராயும்போது அதன் அனைத்துப் பகுதிகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும். திருமணம், அதன் நோக்கங்களில் ஆரம்பித்து குடும்பம் அதன் உறுப்பினர்கள், அவர்கள் ஒவ்வொருவரினதும் அலுவல்கள், கடமைகள், உரிமைகள், பொருப்புக்கள் என அனைத்தையும் கடந்து செல்லும் விதமாக ஒரு பூரண அமைப்பில் இவ்விடயத்தை நோக்க வேண்டுமென நினைக்கிறேன்.

ஒரு பெண் இயல்பிலேயே அதிகம் உணர்வுகளுக்கு அடிபணிபவள் என்பது அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட உண்மை. இவ்வாறான பண்புகள் ஒரு ஆணை முடிவுகளை அதிகம் தனக்கு சாதகமாக பயன்படுத்தக்கூடியவனாகவும், பிடிவாதத்தில் மிக உறுதியானவனாகவும், கோபத்தின் போது உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தகூடியவனாகவும் மாற்றியமைக்கின்றன.

இஸ்லாத்தில் விவாகரத்து வழங்குவதால் கணவன் மாத்திரம் பொருளாதார நஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது விவாகரத்தின் பின் அவனை பொருளாதார ரீதியான பொறுப்புகள் உடையவனாக மாற்றியமைக்கிறது; இதனால் அவன் மன அழுத்தத்திற்குள்ளாகிறான் என்பதில் ஐயமில்லை.

அத்தோடு இஸ்லாம் "தலாக்கை" கணவனுக்கு உடமையாக்கியிருப்பதை போன்று, அணைத்து தரப்பினருடைய உரிமைகளை பேணும் பொருட்டு கணவனை விட்டும் மணைவி பிரிந்து செல்வதற்காக ஒரு வழியையும் காட்டித்தந்துள்ளது; அதுவ"குல்உ" எனப்படும்.

எனதருமை நண்பரே! உங்களுடைய நாட்டிலுள்ள பெண்களின் நிலைபற்றியும் நாம் உறையாடுவது உங்களுக்கு விருப்பமா?!

மைக்கல்: நாம் பகற்போசனம் பரிமாறலாம் என நினைக்கிறேன்.

https://www.path-2-happiness.com/ta

சுதந்திரத்தின் பின் பெண்

சுதந்திரத்தின் பின் பெண்

மைக்கல், ராஷித் இருவருமாக பகற்போசனம் உண்டனர்........ராஷித் தனது பார்வையை உயர்த்தியவராக நண்பரை நோக்கி:

எனதருமைத்தோழர் மைக்கலே! என்மீது விமர்சன அம்புமாரிப் பொளிந்துவிட்டீர்கள், என் நாகரீகத்தை சந்தேககூண்டுக்குள் அடைத்து விட்டீர்கள்.

மைக்கல்: நண்பரே இது அம்போ, சந்தேகங்களோ அல்ல. சத்தியத்தை நோக்காகக்கொண்ட உரையாடல். இதன்மூலம் சத்தியத்தை நெருங்கி பல சுற்றுக்களை கடந்துவிட்டோமென நினைக்கிறேன். அத்தோடு உங்களினால் கருத்துக்களை ஏற்கக்கூடிய பரந்துபட்ட உள்ளத்தை பழக்கப்படுத்திக்கொண்டேன். நான் முன்னர் கூறிய வார்த்தைகளில் ஏதாவது உங்களை துன்புறுத்தியதா?

ராஷித்: இல்லை, துன்புறுத்தவில்லை.. என்றாலும் ஒரு வடிவம் முழுமையடைய வேண்டுமெனின், அதன் அனைத்து பக்கங்களையும் கடப்பது அவசியமென நினைக்கிறேன். உங்களுடைய நாகரீகத்திற்கும் எங்களுடைய நாகரீகத்திற்கும் இடையிலுள்ள பெண்களின் நிலமைகளை ஒப்புநோக்குவதால், அவ்வடிவம் முழுமையடையுமென நினைக்கிறேன். கடந்த எங்களுடைய உரையாடலில் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பெண்கள் தொடர்பான சில விளக்கங்களைப் பெற்றுக்கொண்டோம். ஆகவே இது தொடர்பாக உங்களுடைய நாகரிகக் கண்ணோட்டத்தையும் பார்க்கலாமே...

மைக்கல்(சிரித்தவராக): ஆ.. இதோ.. இந்தவிடயம்தான் அம்புகளுக்காக எனது உள்ளத்தையும் (சந்தேகக்)கூண்டிற்கான கதவுகளையும் திறந்து வைக்கிறது.

ராஷித்(சற்று புன்னகைத்தவராக): ஏன் நாங்களே எங்களை ஒரு முறுகல் நிலைக்குத் தள்ள வேண்டும்? ஏற்கனவே கூறியதற்கிணங்க, இவ்வுரையாடல் சத்தியத்தை சென்றடைவதற்காக ஒருவரையொருவர் உதவிபுரிவதை நோக்காகக்கொண்டிருப்பது நல்லது.

மைக்கல்: ஆம், முழுமையாக உடன்படுகிறேன்; எங்கிருந்து ஆரம்பிக்கலாமென விரும்புகிறீர்கள்?

ராஷித்: முதலாவதாக.. பண்டைய நாகரீகங்களில் பெண்ணுடைய அந்தஸ்த்தைப் பற்றி பார்க்கலாம்.

மைக்கல்: பெண்கள் தொடர்பான கண்ணோட்டம் ஒருவருக்கொருவர், கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் என அனைத்திலும் வேறுபடுவதால், அது ஒரு பிரச்சினையே ஒரு பிரச்சினையே அல்ல.

ராஷித்: அது சரிதான், அதேநேரம்... ஒரு தனி நபருடைய கோட்பாடுகளை பிரதிபலிக்கக்கூடிய, மூலக்குறிப்புகளை விட்டும் நாம் பராமுகமாக இருந்து விட

முடியாது. மூலக்குறிப்புகள் எனும்போது தகவல்களைக்கொண்ட மூலநூல்களை மாத்திரம் நான் நாடவில்லை, மாறாக தனி மனிதனுடைய சிந்தனை, கலாசாரம் முதலியவற்றில் தாக்கம் விளைவிக்கக்கூடிய அனைத்தையும்தான். சில வேளை நாட்டுப்புறத்தை சித்தரிக்கும் கட்டுக்கதைகளாகவும் இருக்கலாம்.... அந்த வகையில் மூலாதாரங்கள் அதன் வளர்ச்சியிலும், எழுச்சியிலும் தாக்கம் விளைவிக்கக்கூடியன.

மைக்கல்: பெண்கள் தொடர்பாக பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் ஏனைய வேதநூட்களில் உள்ளவற்றிட்கு பெரியஅளவில் வித்தியாசப்படாது என நினைக்கிறேன்; அதேபோன்று, எங்களுடைய பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் அதிகமானவை உங்களுடைய வேத நூலான குர்ஆனில் உள்ளவற்றிக்கு ஒத்துப்போவதை காணலாம்; இவற்றில் பெண் படைக்கப்பட்ட விதம்; அவள் ஆணிலிருந்து படைக்கப்பட்டால், முதல் தவறுக்கும், சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கும் காரணமாக இருந்தால், மற்றும் அவளுடைய சமூக நிலை போன்ற அம்சங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

றாஷித்: நீங்கள் இறுதியாகக் கூறிய சில விடயங்களுடன் முரண்படுகிறேன். அதாவது; முதல் தவறு மற்றும் ஆதம், ஹவ்வா ஆகியோர் சுவனத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை சம்பந்தமாக வேதாகமத்தில் வந்துள்ள விளக்கங்கள் குர்ஆனில் உள்ளவற்றிட்கு முரண்படுகின்றன. ஆதாம் அவர்களை ஷைத்தான் ஏமாற்றியதற்கு ஹவ்வா பொருப்பல்ல என்றே அல்குர்ஆனில் வந்துள்ளது. அதேபோன்று சுவனத்தை விட்டு வெளியேற்றப்பட்டதற்கான பொறுப்பு ஒரு பெண் மீது சுமத்தப்படமாட்டாது.

வேதாகமத்தில் பெண்களைப்பற்றி குறிப்பிடும்போது; பெண்குழந்தைகளின் பிறப்பு தாய் மார்களின் அசுத்தத்தை பண்மடங்காக்குகிறது என வந்துள்ளது. ஒரு தாய் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தால், ஏழு நாட்கள் அசுத்தமாக இருப்பதாகவும்; அதேநேரம் பெண்குழந்தையைப் பெற்றெடுத்தால், இரு வாரங்கள் அசுத்தமாக இருப்பதாகவும் இன்ஜீல் வேதம் குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவ மதத்தில் பெண்கள் தேவாலயத்தில் வாய்திறப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளார்கள்; பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் முதலாம் கொன்சொஷ் கடிதத்தில் குரிப்பிடப்பட்டுள்ளதாவது: "தேவாலயங்களில் உங்களுடைய பெண்கள் மௌனமாக இருக்கட்டும், ஏனென்றால் அங்கே அவர்களுக்கு பேசஅனுமதியில்லை, மாறாக அவர்கள்(வேதாகம)சட்டம் கூறுவதைப்போன்று அடிபணியட்டும், எனினும் அவர்கள் எதாவது ஒன்றை கேட்கவிரும்பினால் வீட்டினுள் அவர்களின் ஆண்களிடம் கேட்கட்டும். ஏனெனில் தேவாலயத்தில் பெண்கள் பேசுவது வெறுக்கத்தக்கது"... இவ்வாறான விடயங்கள் குர்ஆனில் இல்லை.

மைக்கல்: புரோட்டஸ்த்தாந்து மதச்சீர்திருத்த இயக்கம், ஐரோப்பிய மறுமலர்ச்சி, பிரான்சியப்புரட்சி, கைத்தொழில் புரட்சி முதலியவற்றின் தாக்கங்கள், அதேபோன்று

கிரேக்கக, உரோம கலாச்சார வேர்கள் என்பன எம் சமூகத்தில் ஊடுருவவில்லையாயின் அதன் வலர்ச்சியை விளங்கிக்கொள்ள முடியாது போய்விடும்.

ராஷித்: கிரேக்க மற்றும் உரோம கலாச்சாரங்கள் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள், ஆனால் அதிலே அக்காலம் தொடக்கம் நாங்கள் காணக்கூடிய இற்றைய நவீன காலம்வரை பெண்கள் தொடர்பான கண்ணோட்டத்தில் பெரும்புரல்வு காணப்படுகிறது. நாம் கிரேக்க காலத்து பெண்களின் வரலாற்றை பிரட்டிப்பார்ப்போமேயானால், சுதந்திரம்,,சமூக அந்தஸ்த்து என அனைத்தும் பறிக்கப்பட்டனவாகவே இருந்தாள்; அவளை வாங்குவதும், விற்பதுமான ஓர் மிருகமாகக் கருதினார்கள். நிர்வாக உடமையை அவளிடமிருந்து பறித்தார்கள், சட்ட ரீதியான அனந்தரச்சொத்திலிருந்து அவளை தடுத்தார்கள். கிரேக்க நாகரீகம் சடுதியாக முன்னேறி வளர்ச்சியடைய ஆரம்பித்தபோது அந்நாகரீக பெண்களின் நிலை மிகதுரிதமாக தீவிர அமைப்பபில் மாற்றமடைந்தது. கழகங்களில் பங்குபற்றவும், ஆண்களுடன் இரண்டரக்கலக்கவும் ஆரம்பித்தனர். இவ்வாறான நிலை விபாச்சாரம் போன்ற மானக்கேடானவைகள் பரவுவதற்கு இட்டுச்சென்றது. கலை, அரசியல் முதலியவற்றில் கேந்திரஸ்த்தளமாக விபாச்சார விடுதிகள் தோற்றம் பெற்றன. இலக்கியம்,கலை என்ற பெயரில் பெண்களின் நிர்வாண சிலைகள் வடிக்கப்பட்டன.

பெண்கள் தொடர்பான ரோம நாகரீகத்தின் நிலைப்பாடு சம்மந்தமான பெறப்பட்ட தகவல்களின் சில முரண்பட்டவைகளாயினும், அவை அடிப்பை அம்சத்தில் ஒன்று பட்டவையே. அவ்வடிப்படை அம்சம் யாதெனில்; பெண்களை மதிப்பிடுதலாகும். ஒரு ஆண் அவளை விரும்பியவாறு நிர்வகிக்கலாம் என்று சொல்லும் அளவு அவளுடைய அந்தஸ்த்து மிகக்கீழ்த்தரமாக கணிக்கப்பட்டது. வாழ்கையில் பல கட்டங்களிலுள்ள சிவில் உரிமைகளில் பெரும்பாலானவற்றை விட்டும் உரோம சட்டங்கள் அவளைத்தனிமைப்படுத்தின. பின்னர் பெண்கள் தொடர்பான உரோம நாகரீகத்தின் கண்ணோட்டம் மாற்றமடையத்துவங்கியது. அவ்வாறே அவர்களுடைய ஒழுங்கு, குடும்ப சம்பந்தப்பட்ட சட்டங்கள், விவாக ஒப்பந்தம், விவாகரத்து என அனைத்தும் மாற்றமடையத்துவங்கின. திருமண ஒப்பந்தம் என்ற ஒன்று அவர்களிடம் இல்லை என்று கூறும் அளவு நிலைமை தலைகீழாக மாறியது. ஆட்சி, அனந்தரச்சொத்து முதலிய அனைத்து உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட்டன. பின்பு அவர்களின் பார்வை சட்டரீதியாக அன்றி ஆணிற்கும், பெண்ணிற்கும் மத்தியில் நிலவக்கூடிய உறவுகள் மற்றும் தொடர்புகளை நோக்கி நகர்ந்தது.

மைக்கல்: அத்தோடு நானும் ஒன்றைக்கூறுகிறேன்: பெண்கள் தொடர்பான உரோம, கிரேக்க நாகரீகக்கன்னோட்டங்களுக்கும், ஆன்மீகக்கன்னோட்டத்திற்கும் இடையிளுள்ள தாக்கங்கள் ஐரோப்பிய உலகம் கிறிஸ்த்தவ மதத்தில் நுழைந்ததன் விளைவாக எற்பட்டவை. அவர்கள் வாழ்ந்த காலகட்டத்திலிருந்த கிறிஸ்த்தவ திருச்சபை மதகுருக்களுடைய கருத்துக்கள் பெண்கள் தொடர்பான அவர்களுடைய கான்னோட்டத்தில் தாக்கம் செலுத்தின.

ராஷித்: ஆம் முன்னைய கிருஸ்தவ ஆண் சமூகம் உரோம சமூகத்தில் பரவிக்காணப்பட்ட மிக மோசமான பண்புகளை பின்பற்ற துவங்கினர், இதனால்

அவர்களை விட்டும் பிரிந்து சென்றிருந்த அப்பண்புகள் அவர்களை மீண்டும் ஆட்கொண்டன... மாது என்பவள் ஷாத்தானின் வாயல், அவளுடைய அழகு இப்லீஸின் ஆயுதம் எனவே அதிலிருந்து பாதுகாப்பு பெறவேண்டுமென்றும் பகிரங்கமாக அறிவித்தனர். இவையனைத்திற்கும் அவளே பொருப்புதாரியெனவும் கருதினர். மேற்க்கத்தியர்கள் பெண்ணை துச்சமாக கருதக்கூடிய இந்நிலை மத்திய நூற்றாண்டு முழுவதும காணப்பட்டது. அதுமட்டுமன்றி பெண்ணென்பவள் சமூக அந்தஸ்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டவள் என்று என்னும் அளவு இந்நிலை பாரசீகர்களின் காலம் வரைத்தொடர்ந்தது. கணவனுடைய அனுமதியின்றி சொத்தில் எந்தவொன்றையும் நிர்வக்கிக்கமுடியாத ஓர் அற்பப் பிராணியாக கருதப்பட்டாள்.

மைக்கல்: *நண்பரே நாங்கள் பழமையான வரலாற்றைப்பற்றியல்லவா கதைத்துக்கொண்டிருக்கிறோம்?! இதை ஒருபுறம் வைத்துவிட்டு தற்கால மாற்றத்திற்கு காரணமான ஐரோப்பிய மறுமலர்ச்சி, பிரான்சியப்புரட்சி மற்றும் அதைத்தொடர்ந்து வரக்கூடிய காலங்ககளைப்பற்றி உரையாடலாம்.*

றாஷித்: *இவை வெறும் வரலாறுகள் அல்ல; இதற்கும் மேற்கத்திய பெண்ணின் இன்றைய நிலைக்கும் மத்தியில் பலமான தொடர்புகள் இருப்பதை அவதானிக்கவில்லையா?*

இவ்விரு நிலைகளும் சற்று ஒரேமாதிரியாக இருப்பதை கவனிக்கவில்லையா?

மைக்கல்: *எப்படிக்கூறுகிறீர்?*

றாஷித்: *பெண்களை உள்ளாசப்பொருளாக பயன்படுத்தப்படுகிறார்களே! பெண் எல்லாவிதத்திலும் ஒரு ஆணுக்கு சமமானவள் என்ற சட்ட அறிக்கை வெளியிடப்பட்டபோது முழுச்சுதந்திரத்தையும் அவள் பெற்றுவிட்டதாக நினைத்தாள், ஆனால் அவள் இயல்பிலேயே ஒரு ஆணைச்சார்ந்திருப்பவள் என்றடிப்படையில் அவர்கள் கைகளில் தவழும் ஒரு விளையாட்டுப்பொருளாக மாறிவிட்டால் என்பதை உணர்ந்தாள். .இவ்வாணாதிக்கம் இருவதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தொடர்ந்திருந்தது.*

மைக்கல்: *ஆனால் இறுதியில் அவள் முழு உரிமையையும் பெற்றுக்கொண்டாள்; எல்லாத்துறைகளிலும் ஆணுக்குச்சமமானவளாக மாறிவிட்டாள்; அனைத்து உத்தியோகங்களிலும் நியமிக்கப்பட்டாள்.*

றாஷித்: *பேரளவில் அவள் உரிமையை பெற்றுக்கொண்டாலும் இன்று ஆண்கள் சுகம் அனுபவிக்கும் ஒரு மோகப்பொருளாகவும்,களியாட்டங்க ளில் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் வேடிக்கைப்பொருளாகவும் மாறிவிட்டாள். இது பெண்களுக்கு புரியும் மிகப்பெரும் அநியாயம். பெண்கள் வர்த்தக விளம்பரங்களுக்காக பயன்படுத்தப்படுவதை எதிர்த்து பல நாடுகளில் அவர்கள் ஆர்ப்பாட்டமும் மேற்கொண்டனர்.*

சுவீடன் நீதிபதி ப்ரிகன் ஒப் ஹார் இதைப்பற்றி குறிப்பிடுகையில் "சுவீடன்

பெண் உண்மையான சந்தோஷத்தைக் கொடுத்து மிகப்பெரும் துண்பத்தை விளைக்கு வாங்கிவிட்டாள்." என தெரிவித்தார்.

மேற்கத்திய நாடுகளில் பெண் உரிமை எவ்வித அர்த்தமற்ற சுலோகமாக இருப்பதைப்பற்றி ஐரோப்பிய ஆணைக்குழு அறிக்கை வெளியிடுகையில், ஐரோப்பிய நிருவணங்கள் உயர் நிர்வாக உத்தியோகங்களில் பெண்கள் பணிபுரிவதற்கான தடையை நீக்க போதிய நடவடிக்கையெடுப்பதில்லை, எனத்தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழு சமூக அலுவலக பொறுப்பாளர் டயமன் போலோ குறிப்பிடுகையில் "தொழில் மற்றும் வியாபரச்சந்தையில் பணிபுரியும் ஆண் , பெண்களுக்கிடையிலான எண்ணிக்கையில் பாரிய வித்தியாசம் காணப்படுகிறது . ஐரோப்பாவில் அரசதுறை உயர்மட்டப்பிரிவில் பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கை 25% மாக இருக்கக்கூடிய அதேநேரம் தனியார்துறையை எடுத்துக்கொண்டால் பிரான்சில்2% ,ஜெர்மனியில்3%,பிரித்தாணியாவில் 6.3% என மிகசொற்பமானவர்களே பணிபுரிகின்றனர். வங்கிகளில் வெறும் 5% மானவர்களே பணிபுரிகின்றனர்." எனத்தெரிவித்தார்.

ஆண்களின் கொடுப்பணவுடன் ஒப்பிடுகையில் பெண்கள் அதில் 16% இலும் குறைவாகவே பெறுகின்றனர்.

மைக்கல் (குறுக்கிட்டவராக): புகையிரதம் இறுதி நிலையத்தை வந்தடைந்துவிட்டது ..வாருங்கள் சென்று எங்கள் பொதிகளை எடுபபோம்.

https://www.path-2-happiness.com/ta

நாகரீகப்போர்வையில் பாரபட்சம்

நாகரீகப்போர்வையில் பாரபட்சம்

இரண்டேகால் மணிநேர பிரயானத்தைத்தொடர்ந்து இரு நண்பர்களும் பிரான்சின் தலைநகர் பெரிசை வந்தடைந்ததும், ஒருவழியாக புகையிரத நிலையத்திலிருந்து வெளியேறினர். மைக்கலை பார்த்தால் அவருக்கும் பெரிசிற்கும் இடையில் பலத்த உறவு இருப்பதாகவே தெரிந்தது. ஆனால் றாஷிதோ அங்கு இதற்கு முன் சென்றது கிடையாது.

மைக்கல்: ராஷித் இதுதான் பிரான்ஸ் நன்றாகப்பாருங்கள்; இதை ஒரு கலங்கரைவிளக்கு என்று கூறினாலும் மிகையல்ல. ஏனென்று தெரியுமா? முழு உலகத்திற்கும் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவத்தை கற்றுக்கொடுத்ததே இதுதானே! அடிப்படை மனிதவுரிமைகூட இங்கிருந்துதான் அவர்களுக்குப்போய்சேர்ந்தது.

ராஷித்: மைக்கல் அங்கே பாருங்கள்! அந்தக்காவல்துறை அதிகாரி எந்தக்குற்றமோ புரியாத அந்தப்பெண்ணை போகவிடாமல் ஏன் தடுத்து நிறுத்தவேண்டும்?

மைக்கல்: அதுவா?அந்தப்பெண் முகத்திரையணிந்திருக்கிறாள் பிரான்சில் பொது இடங்களில் முகத்திரையணியத்தடை விதிக்கப்பட்டு இரண்டு நாட்களுக்கு முன்னிருந்துதான் அச்சட்டம்அமுலுக்கு வந்தது. சட்டத்தை மீறியதால் அபராதம் விதிப்பதற்காக அவளை நிறுத்தியிருக்கலாம்.

றாஷித்: பொது இடங்களிலா!...? அப்படியென்றால் வீட்டில் மாத்திரம் நிகாப்(முகத்திரை) அணிய அனுமதி வழங்கி இருக்கிறது போலும் இந்தப்பொல்லாத சட்டம், பிரமாதம்.....இத்தோடு இஸ்லாமிய பெண்களுடிய சுதந்திரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்களே! பிரான்சில் மட்டுமல்ல, வடஇத்தாலி, பெல்ஜியம் போன்ற நாடுகளிலும் இதே நிலைதான். இதுபோன்ற சட்டங்களை விதித்து பெண்களின் உரிமையை முடக்க அயராமல் உழைக்கிறார்கள். இதற்கு ஸ்பெயின், ஒல்லாந்து போன்ற நாடுகளும் விதிவிலக்கல்ல அவுஸ்த்திரேலியாவில் நிகாப் அணிந்துவரும் பெண்களின் முகத்தை திறந்து பார்ப்பதற்கான முழு அதிகாரமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மைக்கல்: என்னைப்பொருத்தமட்டில், இச்சட்டம் ஒரு பெண் தான்விரும்பிய ஆடையை அணிவதில் உள்ள தனிப்பட்ட சுதந்திரத்திற்கு தடையாகவுள்ளது. மற்றவர்களின் உரிமைகளை மதிக்கக்கூடிய நூற்றுக்கணக்கான சட்டங்களைக்கொண்ட ஒரு நாட்டில் இவ்வாறு நிகழ்வது... பொருத்தமற்ற ஒன்றுதான்.

ஆனால் பிரான்சிய அரசு நிகாப் அணிவதை ஒரு மத அனுஷ்டானமாக பார்க்கிறது. அந்தடிப்படையில் மதச்சின்னங்களை பயன்படுத்துவது அவர்களுடைய மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணானதல்லவா? எனவே அதற்குத்தடைவிதிப்பதை அவர்கள் ஒரு அநியாயமாக நினைக்கவில்லை.

ராஷித்: ஹ்ம்ம்....அப்படியென்றால் முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஏன் இந்தத்தடை;

பாதிரியார் ஆடையணிந்த ஒருவருக்கோ அல்லது கழுத்தில் சிலுவை அடையாளத்தை மாட்டிக்கொண்டிருக்கும் ஒருவருக்கோ இப்படி செய்வார்களா? அடிமை முறை என்றால் அவர்களிடம் என்ன விளக்கமோ? ஆண்களின் இச்சையைத்தூண்டக்கூடிய அமைப்பில் ஒரு பெண்ணை அரைநிர்வாணமாக ஆடை அணியவைப்பது அடிமை முறையல்ல, ஆனால் அதே பெண் தன் விருப்பத்தின் பெயரால் அவளுடைய மேனியை மறைத்துக்கொண்டு சென்றால் அது அடிமை முறை? ஆம்... நிச்சயமாக அது அடிமை முறைதான் இறைவன் ஒருவனுக்கு மாத்திரம் உரித்தான...

பிரான்சியப்புரட்சியின் சுலோகத்திலுள்ள சுதந்திரத்தின் உண்மையான அர்த்தம் மனிதனிடமிருந்து விடுபடுவதல்ல, மாறாக இறைவனிடமிருந்தும், அவனை வழிப்படுவதிலிருந்தும் விடுதலைப்பெருவதே என்பதை இப்போது நான் புரிந்து கொண்டேன். சுதந்திரம் யாருக்கு எப்படி வழக்க வேண்டுமென்ற அதிகாரம் இறைவனுக்கு மாத்திரம் உரியது. அதை கையிலெடுத்துள்ள மதச்சார்பற்ற அரசுகள் கொக்கரிக்கின்ற சுதந்திரத்தின் வியாக்கியானமல்லவா இது!..... ((உன் சுதந்திர முடிவில் பிறர் சுதந்திரம் தொடர்கிறது)) எனக்கூறிக்கொண்டிருந்தவர்கலல்லவா இவர்கள். பெண்களின் மேனியை பிறர் பார்ப்பதே சுதந்திரம், எனவே இஸ்லாமியப்பெண்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றா நினைக்கிறார்கள்? நண்பரே இங்கு பிரச்சினை ஹிஜாபல்ல, இஸ்லாத்தின் மீதுள்ள ஐரோப்பாவின் பயம்...

மைக்கல்: *தலைலர் றாஷித்! விடயத்தை பூதாகரமாக்க வேண்டாம். ஐரோப்பாவிலுள்ள பெரம்பாலான முஸ்லிம்கள் சுதந்திரமாகவே வாழ்கிறார்கள்; ஏன், இன்னும் சிலர் அவர்களுடைய சொந்த நாடுகளில் கூட பெறமுடியாத சலுகைகளையெல்லாம் பெருகின்றனர்.*

றாஷித்: *நண்பரே! நான் ஒன்றும் பூதாகரமாக கூறவில்லை அதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.*

மைக்கல்: *எந்த வகையில்.*

றாஷித்: *சுவிஸ்சர்லாந்தில் பள்ளிவாயல்களில் மிஃதனாக்கள் (கோபுரங்கள்) கட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டது அதுவும் ஜெனிவா ஒப்பந்தங்கள் இடம்பெறக்கூடிய ஒரு நாட்டில் வெறும் நான்கே மிஃதனாக்கள்(கோபுரங்கள்) 4% முஸ்லிம்கள் உள்ள நாட்டில் மிஃதனாக்கள் கட்டுவதால் சமூகத்திற்கு என்ன பாதிப்பு வரப்போகிறது?! வேறொன்றுமல்ல இஸ்லாத்தின் மீதுள்ள பயம்...*

மைக்கல்: *என்னைப் பொருத்தவரை அத்தடையை ஆதரிக்கமாட்டேன். என்றாலும், மிஃதனாக்கல் (கோபுரங்கள்) அவர்களுடைய நாட்டு சட்டதிட்டங்களுக்கு முரணானவை என்று நினைக்கிறார்கள் போலும்.*

றாஷித்: *தேவாலய கோபுரங்கள், யூத வணக்கஸ்தளங்கள் என எத்தனை வழிபாட்டுச்சின்னஙகள் உள்ளன. இவையனைத்தையும் விட்டு விட்டு ஏன் இதை மட்டும் தடை செய்கிறார்கள் என்பதை நினைத்துப்பார்க்கையில் அவர்கள் கொக்கரிக்கும் சமத்துவம், மதச்சார்பற்ற கொள்கை முதலியவற்றின் உண்மையான*

அர்த்தம் நன்றாக புரிகிறது. அதுமட்டுமா இஸ்லாத்தின் அடையாளச்சின்னங்கள் அனைத்திலுமல்லவா கை வைக்கிறார்கள். இஸ்லாத்தின் தூதரும் அதற்கு விதிவிலக்கல்ல. அன்மையில் டென்மார்க் போன்ற நாடுகளில் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக வரையப்பட்ட கேலிச்சித்திரங்களைப் பார்த்தால் இதை புரிந்து கொள்ளலாம்.

மைக்கல்: தலைவரே! அது கருத்துச்சுதந்திரம்; நம் நாட்டில் அதற்கு எந்தத்தடையுமில்லை. எத்தனையோ முறை இயேசு கிரிஸ்துவம் வேறு சில மதச்சின்னங்களும்

விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டன.

றாஷித்: அவ்வாறல்ல, தடையிருக்கிறது. கருத்துச்சுதந்திரத்திலோ, விஞ்ஞானஆய்விலோ அல்ல டென்மார்க் பத்திரிகைகள் இறைத்தூதர் கேலிச்சித்திரத்தை பிரசுரித்த வேலை அந்நோய் அண்டிய ஐரோப்பிய நாடுகளுக்கும் பறவியது. முஸ்லிம்கள் அனைவரையும் பாதித்த அச்செயலை மேற்கத்திய அரசுகள் சில ஆதரித்தன. கேட்டால் கருத்துச்சுதந்திரம் என்றார்கள். ஆனால், அதேநேரம் இவ்வசம்பாவிதத்திற்குப் பின்னனி யூதர்களே என்றமைப்பில் ஒரு கேலிச்சித்திரத்தை வெளியிட்டதற்காக ஒல்லாந்து முஸ்லிம் பெண்கள் சிலருக்கு அவ்வரசு 2500 யூரோவை அபராதமாக விதித்தது.

பிரான்ஸிய சிந்தனையாளர் GAROUDY ஐரோப்பாவில் நாஜிகளால் அழிக்கப்பட்ட யூதர்களின் எண்ணிக்கையில் சந்தேகப்பட்டார். இதற்காக, 1998 ஆம் ஆண்டு பிரான்ஸிய நீதிமன்றம் அவர் யூத இன அழிப்பில் சந்தேகப்படுவதாக குற்றம் சுமத்தியது.

பிரித்தானிய வரலாற்றாசிரியர் DAVID IRVING யூத இன அழிப்பு தொடர்பாக சோடிக்கப்பட்ட தகவல்களை மறுத்தார். அதற்காக அவரை மூன்று வருட கால சிறை தண்டனை அனுபவிக்குமாறு 2006 ஆம் ஆண்டு ஆஸ்திரிய நீதி மன்றம் உத்தரவிட்டது.

நாஜிகளால் அழிக்கப்பட்ட யூதர்கள் வெறும் இரண்டு லச்சத்திற்கும் மூன்று லச்சத்திற்கும் இடைப்பட்டவர்களே, என பகிரங்கமாக அறிவித்ததால் பிரித்தானிய கத்தோலிக்க கிரிஸ்தவ பாதரி Richard Williams க்கு 2009 ஆம் ஆண்டு ஜேர்மனிய நீதி மன்றம் பத்தாயிரம் யூரோவை அபராதமாக விதித்தது.

இவ்வாறு சுதந்திரத்திற்கு தடைவிதிக்கப்பட்டோர் பலர் உள்ளனர்.

மைக்கல்: வரலாற்றில் மிக நீண்ட காலமாக முஸிலிம்களுக்கும் கிறிஸ்கலர்களுக்கும் மத்தியில் பரஸ்பர பகைமை காணப்பட்டது. அதுமட்டுமன்றி அண்மைகாலமாகவும் இஸ்லாமிய கடும்போக்கு சிந்தனையால் இவ்வாறானதொரு நிலை காணப்பட்டது. இதனால் ஏனைய இந்து, பௌத்த மதங்களோடு ஒப்பிட முடியாதளவு ஒருவிதமான பயத்தை மக்கள் இஸ்லாத்தின் மீது கொண்டனர். இதற்குக்காரணமாக சில

முஸ்லிம்களின் நடவடிக்கையுமிருந்தது. என்ன நினைவிருக்கிறதா?

றாஷித்: ஹா.. சரியான முறையில் உண்மையை விளக்க முற்படுவோம்; இதற்கு ஒரு வகையில் சில இஸ்லாமிய குழுக்களும் தனி நபர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரம் இவ்விடயங்களின் யதார்த்த நிலையையும் கண்டறிய கடமைப்பட்டுள்ளோம். அச்சம்பவங்களைப் பயன்படுத்தி இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது எதிர்ப்பை உண்டாக்கும் சில திட்டங்களும் உள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது

மைக்கல்: திட்டங்களா?.. என்ன திட்டங்கள்?!

றாஷித்: ம்.. அவற்றில் சிலதைக்கூறுகிறேன்.

ஐரோப்பா சில நோக்கங்களுக்காக அரேபியர் இடப்பெயர்விக்கு கதவைத் திறந்துகொடுத்தது. அவற்றில் மிக முக்கிய நோக்கம்; குடும்பக்கட்டமைப்பு சிதைவால் சனத்தொகையில் ஏற்பட்ட வீக்கத்தை ஈடு செய்வதாகும். இஸ்லாமிய போதனைகளை கடைபிடித்து வந்த பழைய சந்ததியினரை மாற்ற முடியாவிடினும் மேற்கத்தய நாகரீகத்தில் பிறக்கக்கூடிய புதிய சந்ததியினரையாவது மேற்கத்திய கலாசாரத்திற்கேற்றாட்போல் மாற்றலாம் என என்னினர். இதனால் ஐம்பது வருடங்களின்பின்னர் மேற்குலகம் முழுவதும் ஒரே கலாச்சாரமாக காணப்படும் என்பதே அவர்களின் திட்டமாக இருந்தது.

ஆனால் அதற்கு மாற்றமாக, இஸ்லாமிய உலகில் ஆரம்பித்த அதன் எழுச்சி மேற்குலகுவரை பரவியதை அவர்கள் அவதானித்தனர். அவர்கள் வைத்த தடைக்கல் படிக்கல்லாக மாறியது. இஸ்லாமிய குடும்பத்தில் பிறக்கக்கூடிய குழந்தைகள் அதன் போதனைகளை தொடர்ந்தும் கடைபிடித்தே வந்தனர். இதுவே அவர்களின் இரண்டறக் கலப்புத்திட்டம் தோல்வியுறக் காரணமாக அமைந்தது.

அச்சந்த்தியினர் மேற்கத்திய நாகரீகத்திற்கு பெரும் அச்சுருத்தலாக மாறினர். இதனால் மேற்குலகு உண்மையான ஒரு சவாலை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியது.

அந்தடிப்படையில் இவ்வினவாத பிரச்சாரங்களுக்கெள்ளாம் பிரதான காரணி மேற்கத்திய தனித்துவம் இழந்துவிடுமோ என்ற அவர்களின் காழ்ப்புணர்வே. இதை இவ்வாறு விட்டு விட்டால் இஸ்லாத்தில் எஞ்சியுள்ள ஒழுங்கு முறைகளும் ஐரோப்பாவை ஊடுறுவி விடும், எனவே அதை முலையிலே கில்லியெரியும் நடவடிக்கையாக இஸ்லாமிய சின்னங்களை ஒவ்வோன்றாக கொச்சைப்படுத்த ஆரம்பிக்கிறார்கள். தற்போது நாகரீக மோதல் இஸ்லாத்திற்கெதிராக மாறிவிட்டது. இதையே அமெரிக்க சிந்தனையாளர் SAMUEL HANGLAN "நாகரீகமோதல்" எனக்குறிப்பிட்டார்.

மைக்கல்: உணவகத்தை வந்தடைந்துவிட்டோம். இது தொடர்பாக கலந்துரையாட பல சந்திப்புகள் தேவை.!

https://www.path-2-happiness.com/ta

பெரிஸ் உணவகத்தில் *FRUED* உடன் சில நிமிடங்கள்

பெரிஸ் உணவகத்தில் FRUED உடன் சில நிமிடங்கள்

நன்பர் இருவரும் பெரிஸ் நகரை வந்தடைந்ததும் பொருத்தமான உணவகமொன்றை தேடித்திரிந்தனர். இறுதியாக பெரிஸிலுள்ள வாலிபர் விடுதியொன்றை வந்தடையவே, அதில் தங்க தீர்மானித்தனர். களைப்பால் இரவு முழுவதும் நன்றாக உறங்கி காலையில் நகரைச்சுற்றிப்பார்க்க இருவருமாக வெளிக்கிளம்பினர். இவ்வாறு உலாவிக்கொண்டிருந்த நேரத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலை தென்படவே...

மைக்கல்: *றாஷித்! இந்த சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று தேனீர் அருந்தி சற்று இளைப்பாரலாமே.*

றாஷித்: *தாராளமாக, எனக்கும் சற்று ஓய்வு தேவை.*

மைக்கல்: *இந்த சிற்றுண்டிச்சாலைக்குத்தான் பிரபல மனோத்த்துவியலாளர் FRUED வந்து போவாராம். என்ன.. கேள்விப்பட்டிருக்கிறீர்களா?*

றாஷித்: *ஆம், மனோதத்துவவியலில் உலவியல் பகுப்பாய்வுத் துறையில் பெயர்பெற்றவர், பண்பாட்டு விழுமியங்கள் அவசியமில்லையெனவும் பல்லினச்செர்க்கை ஆகுமெனவும் வாதிட்டவர்.*

மைக்கல்: *அவர் எங்களுடைய மிகப்பெரும் அறிஞர். நீங்கள் இவ்வாறு கூறுவது பொருத்தமில்லை.*

றாஷித்: *darvin, kant, mark,durkhein, Sartre போலவே இவரும் நவீன மேற்கத்தய நாகரீகத்தை தோற்றுவிப்பதில் பெரும் பங்காற்றியவர் என நினைக்கிறேன். இவர்கள் அனைவரும் சமயம், பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றை இல்லாதொழிப்பதில் பெரும் பங்காற்றியவர்கள்.*

டார்வினுடைய பரிமானக்கோட்பாடு இரு அபாயகரமான சிந்தனைகளை தோற்றுவித்தது. முதற்கொள்கை: நிலையான தன்மையை மறுக்கும் கூர்ப்புக்கொள்கையை பரப்புதல். இரண்டாவது: மனிதனின் ஆன்மீகப்பகுதியை முற்றாக மறக்கடித்து லௌகீகத்திற்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குதல்; மனிதனின் மிலேச்சுத்தனமான உணர்வுகளுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரமளித்தல். மனிதன் இறைவனின் படைப்பு என்பதையும் கடவுள், மனிதன், பிரபஞ்சம், மீண்டு செல்லுமிடம் போன்றவை தொடரபான தத்துவார்த்த கோட்பாடுகளையும் முற்றாக நிராகரிப்பதை இக்கோட்பாடுகள் நோக்காகக்கொண்டன.

மனித சிந்தனைக்கான வழிகாட்டி அவனுடைய பண்பாடு அல்ல மாறாக இச்சையே; அதுவே அவனை நாளாந்தம் இயக்க வைக்கிறது, என்பதே FRUED இன் வாதமாகும். பண்பாட்டு விழுமியங்களை முற்றாகப்புறக்கனிக்கும் இக்கோட்பாடு நடைமுறைக்கும், அறிவியலுக்கும் முரணானது.

மைக்கல்: *மனித நாகரீகங்களின் கூறுகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் அவற்றில் சில ஒரேமாதிரியானவையே என நம்புகிறேன். இறைவன், மனிதன் பிரபஞ்சம் போன்ற கோட்பாடுகள் எல்லா நாகரீகங்களிலும் காணப்பட்டன ஆயினும் இவற்றின் ஒழுங்கு முறையில் ஒன்றுக்கொண்டு வித்தியாசப்படலாம்.*

அந்த வகையில் மறுமலர்ச்சிக்கும் பின்னராக ஐரோப்பிய நாகரீகத்தில் பிரபஞ்சக்கோட்பாடே மிகப்பிரதானமாக விளங்கியது அறிவியல் சிந்தனை மேலோங்கி மனிதன் இறைவனின் படைப்பு என்ற கொள்கை நிராகரிக்கப்பட்டது; சடவாதம் மேலோங்கி ஆண் மீகவாதம் புதைக்கப்பட்டது இக்கொள்கைக்கு அத்திவாரமிட்ட மிகப்பெரும் சிந்தனையாளர்களில் ஒருவராக டார்வின் திகழ்ந்தார்.

றாஷித்: *ஆம், அதை ஏற்கிறேன் என்றாலும் இது தொடர்பான மேலும் பல விடயங்களை அறியத்தருகிறேன்.*

முதலாவது: இக்கொள்கை மாற்றத்திக்கான பிரதான காரணி மேற்கத்திய சமூகத்தில் காணப்பட்ட ஆண்மீக அறிவியல் வெறுமையாக்கமே. அத்தோடு திருச்சபையிடம் காணப்பட்ட படைப்பினங்கள், வாழ்க்கை பற்றிய தவரான கண்ணோட்டம்.

இரண்டாவது: மேற்கத்திய முன்னேற்றத்திற்கான காரணம் இக்கோட்பாடுகளே, என்ற அவர்களுடைய தவறான நம்பிக்கை.

மூன்றாவது: இந்த சிந்தனையாளர்களின் கொள்கைகள் அறிவியல் எழுச்சியின் பின்னர் தோற்றம் பெற்றவை. அவைகள் தவறென தெரிந்தும் மேற்குலகில் அதிகமானோர் சரியென வாதிடுகின்றனர்.

நாகரீகங்களுக்கிடையிலான அடிப்படை ஒற்றுமைபற்றி குறிப்பிட்டீர்கள். எனவே மனித நடத்தைகள் பற்றிய FRUED இனுடைய கண்ணோட்டத்திற்கும் சுமார் எழுநூறு வருடங்கள் பழமைவாய்ந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கு இஸ்லாமிய அறிஞர் ஒருவருடைய கருத்திற்குமிடையிலான ஒரு வேடிக்கையான ஒப்பீட்டு முறை ஞாபகத்திற்கு வந்தது.

மைக்கல்: *இஸ்லாமிய கோட்பாடுகளுக்கும் ப்ரொட்டினுடைய கண்ணோட்டத்திற்குமிடையில் ஒருமைப்பாடா?! வேடிக்கையாக இருக்கிறதே...*

றாஷித்: *கோட்பாடு ரீதியான ஒருமைப்பாடு எனலாம். உளவியல் தொகுதியைப்பற்றி ப்ரொட் என்ன கூறியிருக்கிறார் எனத்தெரியுமா? தெரிந்திருந்தால் எனக்கும் தெளிவுபடுத்த எழிதாக இருக்கும்.*

மைக்கல்: *ஆம், நன்றாகத் தெரியும்; குருதிச்சுற்றோட்டத்தொகுதி, நரம்பியற்றொகுதி என மனிதனிடம் காணப்படுகின்ற உறிரியல் சாதனங்களைப் போன்று உளவியற்சாதனங்களும் உள்ளன என வாதிட்டார்.*

அவ்வுளவியற்றொகுதி இன்பம், ஆளுமை பேராளுமை(நாசிசஆளுமை) என்பவற்றால் ஆனது.

இன்பம் அடக்கமுடியாத ஆசைகள், கட்டுக்கடங்காத இச்சைகள் மற்றும் உணர்வுகளால் ஆனது; மனிதப்பிறப்புடன் சேர்ந்து வரக்கூடிய உளவியற்றொகுதியில் மிகப்பழமையான கூறாகும்.

பேராளுமை சமூக விலுமியங்களால் ஆனது. அதாவது: மனிதன் பிறரிடம் இருந்து பெற்றுக்கொள்பவற்றைக் குறிக்கும். ஒரு குழந்தை பெற்றோர், பள்ளி, சமூகம் ஆகியவற்றிலிருந்து பெறக்கூடிய குடும்ப, சமய சமூகம்சார் பண்பாட்டுவிழுமியங்களை இது உள்ளடக்கும். அக்குழந்தை வளரும் போது குடும்ப மற்றும் சமூக உருப்பினர்களால் . தாக்கத்துக்குள்ளாகும். FRUED இன் கருத்தின் பிரகாரம் இக்கூறு(பேராளுமை) அனைத்து விதமான பாலியல் உணர்வுகள், இச்சைகளைவிட்டும் தூரமானது எப்பொழுதும் பூரணத்துவத்தையே வலியுருத்தும்.

ஆளுமை இச்சைகளுக்கும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தக்கூடியது. இன்பம், பேராளுமை ஆகியவற்றை சமநிலைப்படுத்தக்கூடியது, என்றும் கூறலாம். ஒரு மனிதனின் நடைமுறை வாழ்க்கையில் எழக்கூடிய பிரச்சினைகளை தீர்க்க உதவுகிறது.

பேராளுமை ஒரு மனிதன் இன்பத்தில் மூழ்காமலிருக்க ஆளுமையை எச்சரிக்கிறது அதற்கு(ஆளுமை) புறம்பாக நின்று அதை அவதானிக்கக்கூடியது.

றாஷித்: பிரம்மாதமான விளக்கம் மைக்கல்! ப்ரொட்டே நேரில் வந்து விளங்கியதைப்போன்றிருந்தது..

நானும் சில விளக்கமளிக்கிறேன்; உளவியற்றொகுதியில் மிக கடினமான பணி ஆளுமை மேற்கொள்வதே என frued ஏற்றுக்கொள்கிறார். ஏனெனில் இரு முரண்பட்ட கூறுகளான பேராளுமையையும், இன்பத்தையும் ஒருங்கினைக்கிறது. மனிதனின் பாலியல் இச்சைகளையும் சமூக பண்பாட்டு விழுமியங்களையும் சமநிலைப்படுத்துகிறது. ஒன்றையொன்று மிகைக்குமானால் சிக்கல் உருவாகி ஆரோக்கியமற்ற நிலைக்கு இட்டுச்செல்லும்.

இதிலுள்ள அபாயம் என்னவென்றால்; ஆரோக்கியம் வேண்டுமெனின் ஆளுமையையே தேவைக்கேற்ப மாற்றவேண்டும். அதற்க்கு மாற்றமாக நம் வாழ்க்கையிலுள்ள சமூக பண்பாட்டு விழுமியங்களை தினிப்போமானால் என்ன நேரும்? இதுவே மேற்கத்திய சமூகத்திற்கு நிகழ்ந்தது. அதன் நாகரீகமும் அவ்வடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. எனவே குடும்பக்கட்டமைப்பு மனிதாபிமானம் தொலைந்து போனது... நாம் ஆரம்பித்த டார்வினின் கோற்பாட்டிற்கே திரும்பவும் வந்துவிட்டோம்.

மைக்கல்: FRUERD இன் கோட்பாடு பற்றிய உங்கள் விளக்கத்தின்படி, இச்சைகளும், ஆசைகளும் அடக்கப்பட்டு பண்பாட்டு விழும்மியக்கள், கொள்கைகளால் ஒரு நாகரீகம் எழுச்சி பெருமானால் அது அடக்கு முறை கொண்ட நாகரீகமாக இருக்கும்.

றாஷித்: ஆம், மேற்கத்திய நாகரீகம் இறையியல் கோட்பாட்டை நிராகரிக்கும்

https://www.path-2-happiness.com/ta

பண்பாட்டு விழுமியங்களால் உருவானது. அதே நேரம் இஸ்லாமிய பண்பாட்டின் அடிப்படை மூலாதாரம் மனித சிந்தனையின்றி இறைசட்டத்தால் உருவானது. சிந்தனையால் மாத்திரம் ஒரு நாகரீகம் கட்டியெழுப்பப்படுமானால், அது நெறிபிறழும் என்பதில் எவ்வித சந்த்தேகமுமில்லை. ஆனால் அதே சிந்தனை சமயத்தை அடிப்படையாகக்கொண்டு எழுச்சி பெருமானால் பண்பாடும் உண்னதமாக அமையும்.

மைக்கல்: ஆனால் றாஷித், நீங்கள் கூறிய அந்த இஸ்லாமிய அறிஞரின் கருத்தை குறிப்பிடவில்லையே. அவருடைய கூற்று FRUED இன் கருத்துடன் உடன்படுகிறதா அல்லது முரன்படுகிறதா?

றாஷித்: அவர் கூறியது சில கோட்பாடுகளில் உடண்படுகிறது. ஆனால் நேரம் போதாமையால் அதை அடுத்த உறையாடலில் பார்க்கலாம்.

https://www.path-2-happiness.com/ta

இருவழிகளுக்கு மத்தியில் மனிதஉள்ளம்

இருவழிகளுக்கு மத்தியில் மனிதஉள்ளம்

றாசித் மைக்கல் ஆகிய இருவரும் தங்கியிருந்த உணவுச்சாவடி அவர்களுக்கு மிக பிடித்தமானமானதாக இருந்ததோடு, மேலும் அவர்களை அங்கேயே தங்கியிருக்கத் தூண்டியது. அவற்றை விட மிக முக்கியமான ஒன்றுதான் அவர்களுடைய சம வயதை ஒத்த வாலிபர் கூட்டம் அங்கே காணப்பட்டது.

இருவரும் கேட்போர் கூடத்திலிருந்த ஒருவட்ட மேசையை சூழஅமர்ந்த வண்ணம் தங்களுக்குத் தேவையான குடிபாணங்களை வேண்டிகொண்டனர். பின்னர் மைக்கல் தனது உரையாடலை துவங்கினார்:

கடந்த எங்களுடைய உரையாடலில் அந்த இஸ்லாமிய அறிஞரின் கூற்று FRUEDஇனுடைய கூர்றுக்கு உடன்படுகிறதா அல்லது முரண்படுகிறதா என்பதில் நிறுத்தினோம்.

றாசித்: இதுவோர் உடண்படுவதோ அல்லது முரண்படுவதோ தொடர்பான பிரச்சினையல்ல. இஸ்லாம் ஓர் தெளிவான பரிபூரண ஒழுங்கமைப்பு. எனினும் அதை இங்கு நான் தெளிபடுத்த விரும்பவில்லை. இப்னுகையிம் என்ற அறிஞர் தனது நூலில் இதயம்,. ஆன்மா, .சிந்தனை பற்றி விளக்கியுள்ளார். எனினும் இஸ்லாமிய நாகரீகத்தின் அடிப்படை அம்சங்களுடண் தொடர்புபட்ட கோட்பாடுகள் பற்றி அவர் கூரியதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், இவ்வொழுங்கு முறை மேற்கத்திய சமூகத்தில் பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளது. எனவே, அதற்கும் ப்ரொட்டினுடைய கண்ணோட்டத்திற்கும் மத்தியிலுள்ள வேறுபாடுகளை தெளிபடுத்துவன் மூலம் எனது உரையை தொடரலாம் என நினைக்கிறேன்.

மைக்கல்: நேரத்தை சேமித்துக் கொள்வதற்காக உங்கள் உரையின் இறுதிப் பகுதியை மிகசுருக்கமாக கூருகிறேன். நீங்கள் கூறியதற்கு மாற்றமாக இருந்தால் தாராளமாக திருத்திக் கொள்ளலாம்.

றாஷித்: தயவு செய்து.

மைக்கல்: பரொட்டுடைய கண்ணோட்டத்திலிருந்து ஆளுமையின் பல வடிவங்களை அறிந்து கொள்ளலாம். அவற்றை பின்வருமாறு நோக்குவோமாயின்;

ஒரு மனிதனின் மிலேச்சத்தனமான ஆசைகளும், உணர்வுகளும் அவனுடைய ஆளுமையை விடமுற்றாக மேளோங்குமாயின் இயல்பை முற்றாக நாசப்படுத்தும். தன்னுடைய மிருகத்தனமான ஆசைகளையும், இச்சைகளையும் தீர்த்துக்கொள்வதை மாத்திரம் முழுமுச்சாகக் கொண்ட நாசிஸவாத ஆளுமை தோற்றம்பெரும்.

இயல்புகள் கோட்பாடுகள், மகிமைகள்(பேராளுமை)) என்பன ஆளுமையைவிட மேலோங்குமாயின் உணர்வுகளுக்கும், ஆசைகளுக்கும் கலங்கம் விளைவிக்கும் நடைமுறைக்கு ஒவ்வாத துரவரஆளுமை தோன்றும்.

ஒரு புறத்தால் உணர்வுகளையும் ஆசைகளையும் இன்னொரு புறத்தால்

வரையறைகளையும், கோட்பாடுகளையும் சரிநிகராக கொன்டுசெல்ல முடியுமாயின் ஆளுமை நிலையானதாகவும் சீரானதாகவும் அமையும்; எனவே, நிலைமைக்கு ஏற்ற விதத்தில் உணர்களை அடக்கவும் அவற்றை வெளிப்படுத்தவும் முடியுமாக இருக்கும்.

றாஷித்: *பிரமாதம்! சமூகரீதியான அடையாளப்படுத்தப்பட்ட மேற்கத்திய நாகரீகத்தின் கோட்பாடுகளுக்கும் இஸ்லாமிய ஒழுங்கு முறைக்கும் மத்தியிலுள்ள வேறுபாடுகளை இணங்கண்டு கொண்டோம். இவ்வேறுபாடுகள் பேராளுமை, இன்பம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களை முடிவுக்கு கொண்டுவந்து விடுகின்றன. எனவே, வாழ்க்கையில் மனிதனுடைய அனைத்து கட்டங்களையும் முழுமையாக ஆராய்ந்து மிக நுட்பமாண முறையில் நடுநிலை வகிப்பதனூடாவே இது சாத்தியப்படும். இதில் உரிமை மீறலுக்கான தடையும் உள்ளது.*

மைக்கல்: *இவ்வாறான உரிமைமீறலையும், அது எவ்வாறு மீறப்படும் என்பதையும் முதன்முதலாக உங்களிடமிருந்தே கேட்கிறேன். சரி, அதை விடுங்கள். உளவியல் சாதனக்கூறுகள் தொடர்பான கருத்தை ஏற்றுகொள்கிறீர்களென நம்புகிறேன்.*

றாசித்: இந்த உளவியல் சாதனக் கூறுகள் சம்பந்தமான கருத்தை இஸ்லாமிய அறிஞர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டுள்ளார்கள். இப்னுகையிம் என்ற அறிஞர் அவருடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை பாருங்கள்: (என்று கூறியவராக றாஷித் ஒரு புத்தகத்தை வெளியில் எடுத்து வாசிக்கலானார்) விடயங்கள் நான்கு வகைப்படும்: வெறுப்பான ஒன்றை நோக்காக்கொண்ட வெறுப்பான காரியம், விருப்பமான ஒன்றை நோக்காகக் கொண்ட வெறுப்பான காரியம், விருப்பமான ஒன்றை நோக்காகக்கொண்ட விருப்பமான காரியம், வெறுப்பான ஒன்றை நோக்காகக் கொண்ட விருப்பமான காரியம். விருப்பமான ஒன்றை நோக்காகக் கொண்ட விருப்பமான செயலை செய்ய இரு வழி முறைகளினாலான தூண்டுதல்களும், வெறுப்பான ஒன்றை நோக்காக கொண்ட வொறுப்பான காரியத்தை விடுவதற்காக இரு தூண்டுதல்களும் உள்ளன.

ஏணைய இரு அம்சங்களும் சோதனை நிரம்பியவை; அச்செயலை செய்வதற்கும், விடுவதற்கும் உள்ளத்தை தூண்டும்; ஆகையால் உள்ளம் அவ்விரண்டிலும் மிக நெருக்கமானதை தேர்ந்தெடுக்கும். சிந்தனையும், நம்பிக்கையும் அவ்விரண்டிலும் மிக பயனுள்ளதை தெரிவு செய்யும். ஆனால் உள்ளமோ அவையிரண்டிற்கும் மத்தியில் தடுமாறும். குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் இஸ்லாமிய அறிஞர்கள் கூறியிருப்பதாவது; சிந்தனை(பேராளுமை) மழுங்கடிக்கப்படும் போதெல்லாம் இச்சைகள்(இன்பம்) கட்டுப்பாடின்றி உயர்ந்து கொண்டே செல்லும்.

ஆன்மா, கேலிக்கை தொடர்பான FRUEDஇன் கருத்திற்கும் உள்ளம், ஆளுமை, நம்பிக்கை, சிந்தனை, பேராளுமை முதலியவற்றிட்கும் இடையில் தொடர்பிருப்பதை அவதானிக்கவில்லையா?

மைக்கல்: *அப்படியென்றால்.. நீங்கள் கூறியதும் ஒருவகையில் அதேபோன்றுதான் உள்ளது.*

றாசித்: அதற்கும் நான் கூறியதற்குமிடையில் சிறு வித்தியாசமுண்டு. அவ்வித்தியாசம் இப்னுகையும்முடைய, "அவையிரண்டும் சோதனைகள் நிரம்பியவை" என்ற கூற்றில் மறைந்திருக்கிறது. இச்சைகளை தீர்த்துகொள்வதனூடாக ஆளுமை(இப்னுல்கையிமிடத்தில் உள்ளம்) முழுமையடைகிறது என்று ப்ரொட் கருதுகின்ற அதேவேளை இஸ்லாம் அவற்றை அல்லாஹ்விடமிருந்து வரக்கூடிய சோதனையாகக் கருதுகிறது. மனோஇச்சைகளுக்கு முழுமையாக அடிபணிவது தவறாகும்; அதற்காக அவற்றை நம்பிக்கை சிந்தணை என்பவற்றால் அடக்கி துறவரவாழ்க்கை வாழவேண்டுமென்ற அவசியமுமில்லை.

நம்பிக்கை,கோட்பாடு ,சிந்தனை முதலியவற்றுக்கு முரணாகாத விதத்தில் மனித உணர்வுகளிலுள்ள உரிமைகளை பறிக்காது, மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இதுவே இஸ்லாத்தில் நாம் காணக்கூடிய நடுநிலைப் போக்காகும்.

மைக்கல்: அப்படியென்றால் உரிமைகள் மீறல் என்பதன் அர்த்தமென்ன?

றாசித்: அர்த்தம் என்னவென்றால்: பண்பாடுகள் கலாச்சாரம் முதலியவற்றிட்கென உரிமைகள் இருப்பதை போன்று மனித ஆசைகளுக்கும், உணர்வுகளுக்குமென உரிமைகள் உள்ளன. இவை இரண்டும் ஒன்றையொன்று மிதமிஞ்சுவதை இஸ்லாம் தடுத்துள்ளது. இதை மேலும் தெளிவுபடுத்துவதற்காக இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸை கூறுகிறேன்: ஒருமுறை நபி ஸல் அவர்களின் வீட்டிக்கு அவர்களுடைய வணக்கவழிபாடுகள் பற்றிகேட்க மூன்று நபர்கள் வந்தனர். அது பற்றி அவர்களிடம் அறிவிக்கப்பட்டபோது, அவர்களுடைய வணக்கவழிபாடுகளை தாங்களாகவே குறைத்து மதிப்பிட்டுவிட்டனர். மேலும் அவர்களை விட நபியவர்களுக்கு தனிச்சிறப்பு இருப்பாகவும், அவர்கள் அதிகமாக பாவங்கள் புரிந்துவிட்டதாகவும் எண்ணி அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை விட வணக்கவழிபாடுகள் அதிகமாக இருக்கவேண்டும் என எண்ணினர். அதில் ஒருவர் தான் வாழ்க்கை பூராகவும் இரவில் விழித்திருந்து வணக்கவழிபாடுகளின் ஈடுபடுவதாக கூறினார்; மற்றவர் நோன்பு நோற்க போவதாகக் கூறினார். மற்றவர் "நான் பெண்களை திருமணம் செய்யாமல் ஒதுங்கியிருக்க போகிறேன்" எனக்கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள் அவர்களிடம்: "நீங்கள் இவ்வாறு இவ்வாறு கூறினீர்கள், அல்லாவின் மீது ஆனையாக நிச்சயமாக நான் உங்களை விடவும் அல்லாவிற்கு பயப்படுபவனாகவும், இறையச்சம் கொண்டவனாகவும் இருக்கிறேன். என்றாலும் நோன்பு நோற்கிறேன்; அதை விடுகிறேன். மேலும் தொழுகிறேன்; உறங்குகிறேன்; பெண்களை திருமணம் செய்கிறேன். ஆகவே யார் என்வழிமுறையை புறக்கணிக்கிறாரோ அவர் என்னை சார்ந்தவரல்ல." எனக் கூறினார்கள். அவர்கள் விரும்பத்தக்க மார்க்க விடயங்களில் நன்மையை அதிகரிக்க நாடினார்கள். எனினும் அவை வேறொன்றின் உரிமையை பறிப்பதாக இருந்தன. அதேநேரம் இவை ஆன்மாவுக்கு உரித்தான உரிமையாக இருப்பினும் சரியே, ஒன்றையொன்று மிதமிஞ்சாமல் இருக்கவேண்டும். இதை மேலும் தெளிவாக நபி(ஸல்)அவர்களின் இன்னொரு ஹதீஸ் எடுத்துறைக்கிறது. "இறைவனுக்காக உன்மீது சில கடமைகள்(உரிமைகள்) உள்ளன; உனக்காக உன்மீது சில உரிமைகள் உள்ளன; உன்குடும்பத்திற்காக உன் மீது சில உரிமைகள்

உள்ளன. அவரவர் உரிமையை உரித்தாருக்குக் கொடு" இதைப்பற்றி மேலும் பல அல்குர்ஆன் வசனங்களும் வந்துள்ளன. {இன்னும் அல்லாஹ் கொடுத்ததில் இருந்து தர்மம் செய்து, மறுமை வீட்டை தேடிக்கொள்! இம்மையில் உன் பங்கை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு(தர்மம்) செய்தவாறு நீயும்செய்! பூமியில் நீ குழப்பத்தை தேடாதே! ஏனென்றால், குழப்பம் செய்வதை அல்லாஹ் நிச்சயமாக விரும்பமாட்டான்} [ஸூரா அல்கஸஸ்: வசனம் 77] {மேலும் (உலோபித்தனத்தை போன்று) உம்முடைய கையை உம் முகத்தில் கட்டப்பட்டதாக ஆக்கிகொள்ளாதீர்கள்! அன்றியும், (உம்மிடம் இருப்பதை செலவழித்து விட்டு) அதை ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர்! அதனால், நீர் நிந்திக்கப்பட்டவராக ஆகிவிடாதீர்} [ஸூரா அல்இஸ்ரா: வசனம் 29] நண்பரே! இஸ்லாம் துறவரத்தை தடை செய்திருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

இஸ்லாத்தில் ஒரு மனிதன் தன்னுடைய உள்ளத்தை திருப்திப்படுத்த வேண்டும். அவன் எவ்வித ஏற்றதாழ்வு மின்றி தன்னுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, மார்க்க கடைமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு ராஷித், மைக்கல் இருவரும் தங்களது உரையாடலில் ஆழமாக மூழ்கியிருந்த வேளை அவர்கள் அமர்ந்திருந்த மேசையை நோக்கி வாலிபரொருவர் நெருங்கி வந்து உரையாட ஆரம்பித்தார்:

உங்களோடு நானும் அமரலாமா?

மைக்கல், ராசித்: (மிக சந்தோஷமாக) தயவுசெய்து.

வாலிபர: உண்மையிலே உங்களுடைய உரையாடல் என்னை கவர்ந்தது. இதில் நானும் பங்குபற்றி எங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறேன்

மைக்கல்: அதில் எந்தப்பிரச்சினையுமில்லை.

றாசித்: உங்களை வரவேற்கிறோம்.. இவர் என்னுடைய நண்பர் மைக்கல், பிரித்தானியாவை சேர்ந்தவர், ஆசிரியராக பணிப்புரிகிறார். நான் றாஷித், எகிப்தை சேர்ந்தவன், எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் பணிபுரிகிறேன்.

வாலிபர்: உங்களுக்கு எனது வந்தணம். உங்களை சந்தித்தல் நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னையும் அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்: நான் ரஜீவ், இந்தியாவைச் சேர்ந்தவன், ஜேர்மனியில் பொறியியல் கற்கிறேன், இங்கு பெரிஸில் உள்ள எனது நன்பர்களை சந்திப்பதற்காக வந்தேன்

மைக்கல், றாசித்: (இருவருமாக சேர்ந்து) ரஜீவ்! உங்களைப்பற்றி தெறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு.

றாஷித்: இப்படித்தான் மேற்கத்திய ஆன்மீக அறிஞர்கள் சிலர் ஆன்மீகத்தை ஊனக்கண் கொண்டே நோக்குகின்றனர். ஆனால் இஸ்லாத்தில் ஆன்மீகமென்பது நன்மை, தீமை ஆகிய இரண்டையும் கொண்டது. ஆத்மாவால் மனிதஉள்ளத்தின் அடிப்படை தேவையை எவ்வித குறைபாடும் இன்றி நிறைவேற்றி, அதை

மிலேச்சத்தனமான இருளின் இருந்து பூரண பண்பாடுமிக்க ஓர் நிலைக்கு மாற்றியமைக்க முடியும்.

ரஜீவ்: உங்களுடைய வாதப்பிரதிவாதத்திலிந்து நான் சாராம்சமாக எடுத்துகொண்டது யாதெனில்: அடக்கிவைக்கப்பட்ட ஆசைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ எப்பொழுதும் அவற்றை தீர்த்துவைக்கூடியவற்றையே தேடும். ப்ரொய்டினுடைய கண்ணோட்டத்தில் இந்நிலை கோட்பாடு, கலாச்சாரம் முதலிவற்றால் அமையப்பெற்ற நாகரீகத்தை ஏமாற்றமிக்க ஒன்றாக கருதவேண்டிய நிலைக்கு இட்டுச்செல்லும்.

ஐரோப்பிய நாகரீகத்தின் பண்பாட்டு, கலாச்சாரங்கள் அனைத்தும் பிரபஞ்சக் கோட்பாட்டின் ஆதிக்கத்தின் விளைவால் ஏற்பட்டவை. அவை மனிதன் இப்பிரபஞ்சத்தின் நாயகன் என்ற எண்ணகருவின் அடிப்படையில் அவனுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. இவையனைத்தும் அந்நாகரீகத்தின் இறைசிந்தனையின் வீழ்ச்சியின் விளைவால் ஏற்பட்டவை. ஆனால், இஸ்லாமிய நாகரீகத்தை பொருத்தமட்டில் தலைவனுக்கெல்லாம் தலையாய தலைவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்ற கொள்கையில் அமையப்பெற்றது. எனினும் இக்கருத்து மனிதப் பிறவியை நசுக்கக்கூடிய பாதகமான ஒன்றல்ல.

றாஷித்: அதேபோன்று இக்கொள்கை மனித சமூகத்தின் பண்பாட்டு மூலாதாரம் சிந்தனையல்ல, வேதவாக்கு என்பதற்கான ஆதாரமாகும். ஏனெனில், சிந்தனை மாத்திரம் இருப்பின் அது நெறிபிறழ்விற்கு இட்டுச்செல்லும். ஆனால் வேதவாக்கினை அடிப்படையாக கொண்ட சிந்தனை மிகச் சிறந்த பண்பாட்டை கட்டியெழுப்பும்; அதுவே இன்றைய தேவையுமாகும்.

மைக்கல்: ரஜீவ் அவர்களே! நீங்கள் இருப்பது எங்களுடைய உரையாடலை மேலும் நிலைக்க வைக்கும் என கருதுகிறேன். எனவே நாளை இதேஇடத்தில் இதேநேரத்தில் எங்களுடைய புதிய விவாதத்தை ஆரம்பிக்கலாம் ன நினைக்கிறேன். உங்களுக்கு அது விருப்பமா?

ரஜீவ்: ஆம் முழுமையாக

றாஷித்: அதேநேரத்தில், பகல் போசனத்திற்காக எனது அழைப்பை ஏற்றுக் கொள்வீர்கள் என்றார் எனக்கும் மிக சந்தோசமாக இருக்கும். எங்களுடைய புதிய நண்பன் ரஜீவிற்கு வாழ்த்துக்கள். .

மைக்கல், றாஜீவ்: மிக்க சந்தோஷம்.

https://www.path-2-happiness.com/ta

நம்பிக்கையின் அவசியம்

நம்பிக்கையின் அவசியம்

நண்பர்கள் மூவரும் குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்து கொண்டனர் றாஷித் மைக்கல் இருவரும் உணவுப் பட்டியலைப் பார்த்துவிட்டு தங்களுக்குத் தேவையானதை வேண்டிக்கொண்டனர் ரஜீவ் உணவு ப்பட்டியலை நன்றாக அவதானிரத்து கொண்டே:

அதிகமான உணவகங்கள் சைய உணவுகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை. அப்படியிருக்க எப்படி எனக்கு விருப்பமானதை தேர்ந்தெடுப்பது?

மைக்கல்: அப்படியானால் நீங்கள் சைவ உண்ணியா?.

ரஜீவ்: ஆம், இந்திய குடிமக்களில் 40% வீதமானோர் சைவ உண்ணிகளே.

றாஷித்: ஏன் அவ்வாறு, மார்க்க காரணிகளா அல்லது சுகாதார காரணீகளா?

ரஜீவ்: நான் இந்து மதத்தை பின்பற்றிக் கொண்டிருக்கிறேன். அதில் மாட்டை உண்பது தடை செய்யப்பட்டுள்ளது. இந்துமதக் கோட்பாட்டில் சைவக்கோட்பாடு இந்தியாவில் மிகப்பரவலான ஒன்று. ஆனால், அக்கோட்பாடு படிப்படியாகக் குறைந்து கொன்டே வருகிறது. என்னை பொருத்த மட்டில் சுகாதார காரணிக்காக சைவ உணவையே விரும்புகிறேன்.

சிற்றூழியறை அழைத்தவராக றாஷித்: தயது செய்து, இவை எங்களுக்கு வேண்டியவை.

மைக்கல்: சரி ரஜீவ், எதற்காக உங்களுடைய மதத்தை விட்டீர்கள்.?

ரஜீவ்: ஏனெனில் ஜேர்மனில் நான் கற்கும் கல்வி இந்து மதம் தொடர்பான எனது கோட்பாடை விமர்சனத்துக்குள்ளாக்கி விட்டது நான் கிருஸ்தவ மதத்தை தழுவவுமில்லை. அதனால் நான் நாஸ்திக வாதத்திற்கு நெருக்கமானவன் எனலாம்.

மைக்கல்: நான் அதில் உங்களை விட மிக நெருக்கமானவன். என்றாலும், மனிதன் சில நேரங்களில் கடவுலோடு தொடர்புபட்டிருப்பது நல்லதென கருதுகிறேன். ஆனால், அத்தொடர்பு மனிதனை கட்டுப்படுத்தாமல் இருக்கவேண்டும்.

றாஷித்: எனவே இது சம்பந்தமான உரையாடினால் நல்லதென நினைக்கிறேன்.

மைக்கல்: எது சம்பந்தமாக?

றாஷித்: நாஸ்திகமும் மற்றும் மனித வாழ்க்கையில் கடவுளின் முக்கியத்துவமும்..

ரஜீவ்: மனிதனின் விஞ்ஞான முன்னேற்றம் அவன் அறிந்திராத பல இரகசியங்களை வெளிப்படுத்தியுள்ளது. இதுவரை விளங்காமல் இருந்தவற்றை இதற்குப்பிறகு விளங்கவேண்டிய தேவை அவனுக்கு இல்லை என கருதுகிறேன். அத்தோடு இப்பிரபஞ்சம் விஞ்ஞான கோட்பாட்டினால் அமையப்பெற்றது என நம்புகிறேன்.

இன்னொரு முறையில் கூறினால், இப்பிரபஞ்சம் தவிர்க்கமுடியாத சில நியதிகளுக்கு உட்பட்ட இயந்திரக்கருவியாகும். அதில் நிகழக்கூடிய அனைத்திற்கும் தவிர்க்க முடியாத காரணிகள் உள்ளன. பிரபஞ்சத்தை இயந்திரக் கோட்பாடுகள் அவற்றின் விதிமுறைகளுக்கேற்ப இயக்கும் காலமெல்லாம் அதை ஆளும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்ற சிந்தனைக்கு இடமில்லை.

ராஷித்: *விஞ்ஞானம் சூழ உள்ளவற்றை விளக்கும் மிகச்சிறந்த கருவி. எனினும் இங்கே எழுந்துள்ள பிரச்சினை அதுவல்ல. இதுபோன்ற பெரிய பிரச்சினைகளை இங்கு கலந்தாலோசிக்கவும் முடியாது. என்றாலும் ஆரம்பகால தொடக்கம் இருந்து வரக்கூடிய பல பரிமாணங்களைப் பெற்ற சிக்கல்களில் ஒன்றுதான்:*

விஞ்ஞானம் எங்களை சூழவுள்ள அனைத்தையும் விளக்குகின்றதா? நிச்சயமாக இல்லை. அது சாத்தியமற்ற ஒன்று. உதாரணமாக நாம் வானிலையை எடுத்துகொண்டால்; இன்றுவரை நாங்கள் கண்டுபிடித்தது வெறும் 5% வீதம் மட்டுமே. ஏனையவை நாங்கள் அறியாத இருள். தற்போது அவர்கள்(விஞ்ஞானிகள்) அறிந்திருக்கும் சாத்தியப்பாடுகள் இவ்வளவுதான் என்றால், அவர்கள் அறியாத விடயங்கள் எவ்வளவோ உள்ளன. ஆனால் அவர்கள் கண்டுபிடித்தவை 5% மாக இருப்பினும் நாங்கள் அவற்றை நம்புகிறோம்.

புலனுறுப்புகளுக்கு தென்படுபவற்றை மாத்திரம் அறியக்கூடிய மனிதனிடத்தில் இந்நிலைப்பாடு என்றால், மறைவானவற்றை அறியக்கூடிய இறைவனிடம் எங்களது நிலைப்பாடு என்ன?

இது எங்களை நாங்களாகவே கேள்வி கேற்கக் கூடிய நிலைக்குத் தள்ளுகிறது அறிவு எல்லைகள் அற்றதா என்பதை எவ்வளவுதான் ஆய்வுசெய்தாலும், அது வரையறுக்கபட்டது என்பதை அறிய கடமைப்பட்டுள்ளோம். எனவே மறைவானவற்றை அறிந்த ஒருவனுக்கு ஒன்றைபற்றி அறிய வேண்டிய அவசியம் இல்லை. விஞ்ஞானத்தால் விளக்கமுடியாத உடலியற்தொழிற்பாடுகள் பல இருகின்றன. அவ்வாறாயின் புலனுறுப்புக்களாலும், ஆய்வு மையங்களாலும் கண்டுபிடிக்க முடியாத தீர்க்கதரிசனமுடையவனை விஞ்ஞானத்தால் எவ்வாறு விளக்கமுடியும்?! .

அவ்வாறே, நாம் ஒன்றின் உருவாக்கத்தை அறிவதால் அதை உருவாக்கியவனை மறுக்கவோ அல்லது அவனது படைப்பாற்றலை குறைத்து மதிப்பிடவோ முடியாது. உதாரணமாக ஒருவர் தொலைக்காட்சி உபகரணத்தைப் பார்த்து பிரம்மித்துவிட்டார்; பின்னர் அதன் தொழிற்பாடுகளையும், உருவாக்கிய முறையையும் நன்கு அறிந்து கொண்டார். இதனால், அவர் அதை முதலில் உருவாக்கியவனை மறுக்கிறார் என்றோ அல்லது உருவாக்க அவன் மேற்கொண்ட முயற்சியை குறைத்து மதிப்பிடுகிறார் என்றோ அர்த்தமல்ல. இவ்வாறுதான் உயிரங்கிகள் தொடர்பாண ஆய்வில் அவற்றின் உயிரணுக்களின் உள்ள செல்களை பிளவுபடுத்தி நுண்ணிய மரபனுக்களை பரிசோதித்து அவற்றில் மறைந்திருக்கும் அதிசயங்களை காண்கிறோம். இதனால், அவற்றில் அற்புதங்கள் இல்லை என்றோ அல்லது அவற்றை உருவாக்கிய படைப்பாளன் இல்லை என்றோ ஆகிவிடுமா?! அவ்வாறல்ல,

ஒன்றை எவ்வித மூலக்காரணியும் இன்றி படைப்பதற்கோ அல்லது அதற்கான முறையை கண்டறிவதற்கோ வழிதெறியாது பிரம்மித்து போயிருக்கும் மனிதனின் நிலை இப்படைப்பினங்களுக்கு பின்னால் ஒரு சிருஷ்டிப்பாளன் இருக்கிறான் என்ற நம்பிக்கையை வலியுறுத்துகிறது.

இன்னொரு உதாரணம்: அமெரிக்காவின் உயிரியல் பேராசிரியர் சிசில் பேஸ் ஹாமான் குறிப்பிடுகையில்:

உணவு உடலை எவ்வாறு சென்றடைகின்றது (உடலின் ஒரு பகுதியாக மாறுகிறது) தொடர்பான திடுக்கிடச் செய்யும் தகவல் அல்லாஹ்வின் பக்கம் என்னை நெருங்கவைக்கிறது. அன்றைய தினம் உடலின் இரசாயன எதிர்விளைவுகளை பார்வையிடலானேன். அல்லாஹ் இருக்கிறான் என்பதை அது பொய்பிக்கிறதா? அப்படியென்றால் அவ்விரசாயனப் பதார்த்தங்களை மிகக் கட்சிதமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் மாற்றியமைக்கும் சக்தி எது?! உணவு மனித உடலினுல் சென்ற பின் முறையான பல கட்டங்களை கடந்து செல்கிறது. திகிழவைக்கும் இவ்வொழுங்குமுறை தூய மிகநுண்ணிய ஒருமைப்பாட்டினால் அமையப்பெற்றிருக்க வேண்டும். அவற்றை பார்த்த பிறகுதான், மனித வாழ்க்கைக்கென வடிவமைக்கப்பட்ட மிகச்சிறந்த விதிமுறைக்கேற்ப அல்லாஹ்வே அவற்றை செயற்படுத்துகிறான் என நம்பலானேன்." எனக்கூறினார்.

மைக்கல்: இக்கருத்தை டாவின்சியின் பரிணாம கோட்பாடும் உறுதிபடுத்துகிறது; உயிரனங்கள் அனைத்தும் இயற்கை தேர்மானக்கோட்பாட்டின் அடிப்படையில் பரிணாமம் அடைந்ததே ஒழிய படைப்பினங்களல்ல என்பதை உறுதிபடுத்துகிறது.

றாஷித்: இக்குறிப்பு சம்பந்தமாக மிக முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது. அதாவது; அறிவியல் வியாக்கியானம் எல்லா காலத்திலும் ஒரே மாதிரியாக உள்ளதா? விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஒன்றினைந்து பழைய கோட்பாடுகளை மீள்ப் பரிசீலனை செய்து, புதிய கோட்பாடுகளை உருவாக்கி உலகத்திற்கு அவற்றை தெரியப்படுத்துகின்றன அறிவியல் முன்னேற்றத்தின் மிக முக்கிய கருவிகளாக விளங்ககூடியவை அறிவியல் குவிப்பு மற்றும் எழுச்சிகளுக்கான அடையாளங்களே என்பதை விஞ்ஞான முன்னேற்றத்தை கண்டுவியப்பவர்களின் அதிகமானோர் மறந்துவிடுகின்றனர்.

டார்வினுடைய கொள்கையை பொருத்தமட்டில் அது ஓர் விஞ்ஞான உண்மையோ அல்லது கோட்பாடோ அல்ல, மாறாக இன்றைய நவீன அறிவியலோடு முரண்படுகிறது. இவ்வாறே கேம்ரிய வெடிப்பு கொள்கையில் கேம்ரிய யுகங்கள் என்று கூறப்படும் அவ்விரு காலப்பகுதியில் பெரிய விலங்குகள் திடீரென தோற்றம் பெற்றன என நம்பப்பட்டது. காலப்போக்கில் அக்கொள்கையும் மாற்றமடைந்தது.

ரஜீவ்: அப்படியென்றாள் எந்த சிரிஷ்டிப்பாளனும் இல்லாமல் இவ்வுலகம் திடீரென தானாக தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

றாஷித்: ஒரு நிகழ்வு திடீரென ஏற்படுவதற்கு எந்தளவு சாத்தியப்படும் என்பதை

விளக்க எனக்கு அனுமதிதாருங்கள்:

ஆயிறக்கான நெடுங்கனக்கு எழுத்துக்களை கொண்ட ஒரு பெரிய பெட்டி எங்களிடம் உள்ளது, என வைத்துக் கொள்ளுங்கள்; அவற்றில் *A* மற்றும் *AM* ஆகிய இரண்டையும் பெறுவதற்கான நிகழ்தகவு அதிமாக இருக்கும். ஆனால் அவ்வெழுத்துக்களால் நீண்ட கவிதையொன்றையோ அல்லது கதையொன்றையோ எழுதுவதென்பது சாத்தியமற்றது.

அனுச்செறிவால் அமிலோ அமிலத்தின் தசைகளிலும் ,புரதங்களிலும் உள்நுழையும் மிகமுக்கிய மூலப்பொருளின் ஒரு பகுதி உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஆனால் அதற்கு பல மில்லியன் ஆண்டுகள் தேவைபடுவதோடு முழு பிரபஞ்சமும் தாக்குபிடிக்க முடியாத ஒரு மூலப் பொருளும் தேவைப்படுகிறது. இச்சிறு அற்பமான பகுதியை உருவாக்கவே இவ்வளவு கடினமாக இருப்பின் இவ்வலகில் வாழும் அனைத்து உயிரனங்களும் திடீரென தானாக உருவாக எவ்வாறு சாத்தியப்படும்! கனவிலும் சாத்தியப்படாத ஒன்று.

இப்பிரபஞ்சம் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்க முடியாத அற்புதம் செறிந்த மிக நுண்ணிய ஒழுங்கமைப்பை கொண்டிருக்கிறது என்பதை இன்றைய அறிவியல் உறுதிபடுத்துகிறது. அதேநேரம் சூரிய, சந்திர கிரகணங்கள் நிகழ்வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எதிர்வு கூறக்கூடிய அளவு இன்றைய விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.

இப்பிரபஞ்ச நியதிகளை விதியாக்கி அவற்றை வலுவாக வடிவமைத்தது மட்டுமல்லாமல் எவ்வித மூலப்பொருளும்மின்றி அதை ஆரம்பத்தில் உருவாக்கியவன் யார்?! அவற்றுக்கிடையில் இவ்வொழுங்கமைப்பை சிருஷ்டித்தவன் யார்?! அவற்றை ஒவ்வொன்றாக செதுக்கி வடிவமைத்து அழகுபடுத்தியவன் யார்?! இவையனைத்தும் படைப்பாளனின்றி தானாக உருவானவையா?! அல்லது மனிதர்கள் தானாகவே அவர்களை படைத்து கொள்கிறார்களா?! முஸ்லிம்களுடைய வேதநூலான திருக்குர்ஆன் இவ்வாறு வினவுகிறது {அல்லது அவர்கள் எப்பொருளுமின்றி தானாக படைக்கப்பட்டு விட்டனரா அல்லது அவர்கள் (தாங்களாகவே) படைக்கின்றார்களா} [அத்தூர்: 35]

இப்பிரபஞ்சம் பயனிக்கும் நியதியானது அதை தீர்க்கமாக சிருஸ்டித்த இறைவனொருவன் இருக்கிறான் என்பதை காண்பிக்கிறது.

மைக்கல்: எனினும் அங்கே இன்னொரு கேள்வி எழுவதை காணலாம். அதாவது: மதம் ஏன் அவசியம்? ஏன் நாங்கள் கடவுளை நம்ப வேண்டும்? அதிகமானோர் கடவுள் ,மத நம்பிக்கையற்றவர்களாகத்தானே வாழ்கிறார்கள்?

றாஷித்: மனிதவியல், இறையியல் ஆய்வுகள் உறுதிபடுத்துவது யாதெனில்: மனித சமுதாயத்தின் எல்லா காலகட்டத்திலும் மதம் அவசியமான ஒன்றாக காணப்பட்டது. மனிதன் ஆதிகாலம் தொட்டே அவன் வணங்கக்கூடிய கடவுளை தேடுபவனாகவும் அவனிடம் மன்றாடுபவனாகவும் இருந்துவருகிறான் அத்தோடு

இப்பிரபஞ்சத்தை ஆளும் சர்வ வல்லமைமிக்கவன் அனைத்தையும் படைத்த நித்திய ஜீவன் ஒருவனே என நம்புகிறான்.

மனித இயல்பு சான்றுபகர்வது யாதெனில்: ஒருவருக்கு கஷ்டமோ,ஆபத்தோ,சுமையோ ஏற்படுகின்றவேளை அவனுடைய உயிரியல் தேவை அல்லாஹ்வை நம்புமாறு அவனைத் தூண்டுகிறது.

இந்நம்பிக்கை இல்லாத ஒருவன் மனோஇச்சைகளுக்கு அடிபணிந்த (இருதயமற்ற) மிருகமாக மாறுகிறான்.

ரஜீவ்: *பெரியார் றாஷித் அவர்களே! சற்று மன்னிக்கவும், பல்வேறுபட்ட மதங்களைக் கொண்ட நாட்டில் வாழ்ந்தேன்; பின்னர் ஐரோப்பாவிற்கு வந்து பல மதங்களை சார்ந்த நண்பர்களுடன் அறிமுகமானேன். (அல்லாஹ்) இறைவன் பற்றிய அவர்கள் ஒவ்வொருவடைய கருத்துக்களும் வித்தியாசப்படுகின்றன. அவற்றை எவ்வாறு நான் விளங்குவது? உண்மையான இறைவன் பெற்றிருக்கக்கூடிய பண்புகளை எவ்வாறு அறிந்துகொள்வது? அதேபோன்று.. சத்திய மார்க்கத்தை அறிந்து கொள்வது எப்படி.?*

றாஷித்: *ஆம் சிற்றூழியர் உணவு கொன்டுவந்து விட்டார். இது தொடர்பாக எங்களுடைய அடுத்த சந்திப்பில் கலந்துறையாடலாம். அத்தோடு "மதம் இல்லாத அறிவியல் ஊனமானது; அறிவியல் இல்லாத மதம் குருடானது" என்ற இயற்பியல் அறிஞர் அல்பிரட் ஐன்ஸ்டைனுடைய கூற்றுக்கு முதலில் உடன்படுவோம்.*

https://www.path-2-happiness.com/ta

பாதையின் கலங்கரை விளக்கங்கள்

பாதையின் கலங்கரை விளக்கங்கள்

கேட்போர் கூடத்திலுள்ள வட்ட மேசையொன்றில் (மைக்கல், ரஜீவ், ராஷித்) நண்பர்கள் மூவரும் அமர்ந்த வண்ணம் தங்களுக்கு விருப்பமான குடிபானத்தை வேண்டிக்கொண்டனர். பின்னர் ரஜீவ் உரையாட ஆரம்பித்தார்.

சென்ற எக்களுடைய சந்திப்பில் உண்மையான கடவுளுக்குறிய பண்புகள், மற்றும் சத்திய மார்க்கத்தை எவ்வாறு அடையாளம் காணலாம் சம்பந்தமாக உரையாட தீர்மானித்தோம்.

மைக்கல்: *நான் ஒரு நியாயமான கேள்வி எழுப்ப அனுமதி தாருங்கள். அதாவது: சடவாத அறிவியல் பல்வேறுபட்ட துறைகளில் பிரம்மிக்கதக்க அளவை எட்டியுள்ளது; இன்றைய வைத்தியதுறையை எடுத்துகொண்டால் இரு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தை விட பன்நூறுமடங்கு முன்னிலையில் உள்ளது. தகவல் தொழிநுட்ப சாதனங்கள் பாரிய முன்னேற்றத்தை கண்டுள்ளன. அவ்வாறே இரசாயனவியலினூடாக பல சடவாத நியமனங்களை அறிகிறோம். புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப துரிதகதையில் விஞ்ஞான கற்கைமுறை விருத்தியடைந்துள்ளன; உலகம் உருண்டை இல்லை என்று சொல்லக்கூடிய எவ்வித சடவாத விஞ்ஞானிகளையும் இன்று காணமுடியாதுள்ளது. அதேநேரம் சிந்தனைவாத அறிவியலோ அல்லாஹ் இருக்கிறான், மதங்களின் சரியானது, மனித வாழ்க்கைக்கு பொருத்தமான அமைப்பு, நீதம், இவையல்லாத இன்னோறன்ன கோட்பாடுகள் என ஆயிரம் வருடங்களாக பழைய புராணங்களையே பாடிக்கொண்டிருக்கிறது ஆகவே ஏன் விஞ்ஞானம் விருத்தியடைந்ததை போன்று மார்க்கமும் விருத்தியடையவில்லை?*

றாஷித்: *பல்லாயிர வருட காலம்தொட்டு இன்றுவரை மறைமுகமாகவோ, நேரடியாகவோ கருத்து மற்றும் கொள்கை மோதல்கள் இடம்பெற்றுகொண்டுதான் இருக்கின்றன. அதற்கான காரணம் மனித சிந்தனை சடவாத அறிவியல் அடைந்த முன்னேற்றத்தை சிந்தைவாத அறிவியலில் அடையவில்லை யென்பதுவே. ஏனெனில் மனிதனின் அடிப்படை உருவாக்கம் மாற்றமடையவில்லை. அவ்வாறே மனித சிந்தனையை இயக்கவைக்கும் மிகப் பெரிய சிக்கல்களும் மாற்றமடையவில்லை. மனித உருவாக்கத்தின் பூரன வியாக்கியானத்தை எப்பொழுதும் அவன் ஆய்வு செய்துகொன்டுதான் இருக்கிறான். அதனுடன் தொடர்புபட்ட மிகப் பெரும் உண்மைகளை (நாங்கள் ஏன் மனிதர்களாக படைக்கப்பட்டோம், இறைவனுக்கும் எங்களுக்கும் இடையிலான தொடர்புகள் என்ன) அறிந்து கொள்ள பல ஆய்வுகளை மேற்கொள்கிறான். முன்னய காலத்திலும் இதே நிலை தான் காணப்பட்டது. எனவே இதுபோன்ற சிக்கல்களில் சமகாலத்தவர்களிடம் இருந்து பயன்பெறுவதை போன்று முன்னோர்களிடம் இருந்தும் பயன்பெறலாம். மனிதன், பிரபஞ்சம், வாழ்க்கை தொடர்பாக தற்போது எழுந்த அதே கேள்விகளைப்பற்றித்தான் அக்காலத்திலும் விவாதிக்கப்பட்டன. மனிதன் சடவாத அறிவியல் உண்மைகளோடு உடன்படுவதை போல் சிந்தனைவாத கொள்கை, கோட்பாடுகளோடு தொடர்புபட்ட*

உண்மைகளை நம்புவதில்லை. இந்நிலை மனித இனம் அழியும் வரை தொடரும்.

மைக்கல்: அப்படியாயின், இதுபோன்ற விடயங்களில் உண்மையை எட்ட முடியாது எனலாம் .

றாஷித்: யார் அவ்வாறு கூறினார்? அவ்வாறாயின் அதை பற்றி விவாதிப்பதில் என்ன பயன்?! பிடிவாதங்களை விட்டு உண்மையை அடைவதில் முழுமூச்சாக ஈடுபடுவோமேயானால் சிந்தனை ரீதியாக உண்மைகளை எட்ட முடியும் என எண்ணுகிறேன். யார் தூய்மையான முறையில் யதார்த்ததை அடைவதற்கு அதன் பாதையில் செல்கிறாறோ, அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டுவான். நபிமார்கள், நல்லடியார்கள், சிந்தனைவாதிகள் வாழ்ந்த பல்வேறு பட்ட காலப்பகுதியில் இதுபோன்ற சிக்கல்கள் காணப்பட்டபோதிலும் அவர்களினுடைய சிந்தனை கோட்பாடுகள் முன்னேற்றமடைந்திருந்தன என்பதை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். முரண்பாடுகள், குழப்பங்கள் என்பன பண்டைய காலத்திலும் நவீனகாலத்திலும் சிந்தனையோடு தொடர்புபட்ட பிரச்சினைகளுடன் சேர்ந்துவரக்கூடியவை.

எனினும் இது சம்பந்தமாக இரு முக்கிய குறிப்புகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர அனுமதிதாருங்கள்.

முதலாவது: சடவாத அறிவியல் எய்தியுள்ள வளர்ச்சியானது கொள்கைகள், சிந்தனைகள் என்பவற்றின் வளர்ச்சியை வழியுறுத்தாது. (சடவாதத்தில் அடைந்த முன்னேற்றத்தை கொள்கையிலும் அடைய வேண்டிய அவசியமில்லை) ஏனெனில் அவ்விரண்டும் இருவேறுபட்ட அம்சங்கள். ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் சம அளவில் இருப்பினும் அவைகளின் கொள்கைகள், கோட்பாடுகள், மார்க்க சிந்தனைகள் முற்றிலும் வேறுபட்டவை. இதுவே மிகச் சிறந்த சான்று. ஒரு சமூகம் அதன் சடவாத அறிவியலில் அடைந்துள்ள விருத்தியை சிந்தனைவாத அறிவியலிலும் அடைந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

இரண்டாவது: மனிதர்களில் ஒரு பிரிவினர் ஒரு விடயத்தை ஏற்றுக்கொள்வதால் அது உண்மையாகவோ அல்லது மறுப்பதால் பொய்யாகவோ மாறிவிடாது. மனித சமூகத்தில் அதிகமானோர் வீழ்ந்திருப்பது அசத்தியத்திலே. மனித வர்க்கத்தில் பெரும்பாலானோர் தவறான கொள்கைகளிலும் பண்பாடற்ற நடவடிக்கைகளிலுமே ஒன்றுபட்டிருக்கின்றனர் என வரலாறும் சான்று பகர்கிறது.

ரஜீவ்: அதை நான் ஏற்றுகொள்கிறேன். எனினும், நாங்கள் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட கலாச்சார மட்டத்தில் உள்ளவர்கள். பல்லினக்கோட்பாடு மற்றும் கொள்கைகள் உடையவர்கள். அதனால் முதலில் உண்மையை வழிகாட்டக்கூடிய ஒரு அடிப்படையில் நாம் ஒன்றுபட வேண்டும்.

மைக்கல்: அறிவியல் அல்லது சிந்தனை ஆகிய இரு வழிகளால் மாத்திரமே சாத்தியப்படும் என கருதுகிறேன். இதில்... நாம் அனைவரும் உடன்படுகிறோமல்லவா?

றாஷித்: நானும் உங்களுடன் உடன்படுகிறேன். ஆனால், சிந்தனை என எதை

நாடுகிறீர்? ஏனெனில் நம் இவருடைய சிந்தனையும் முற்றிலும் வேறுபட்டவை. அவ்வாறே அறிவியலும், நடைமுறை அறிவியலையா?.

மைக்கல்: *நாம் அனைவரும் ஏற்றுகொள்ள கூடிய அறிவியல் சான்றுகளையே நாடினேன் அறிவியல் ரீதியாக உறுதிபடுத்தப்பட்ட உன்மையை ஏற்றுகொள்வதில் நான் உடன்படுகிறேன். எனினும் அவை இது வரைக்கும் நிரூபிக்கப்படாத நடைமுறை கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானவை. என்ன இவற்றை ஒப்புக்கொள்கிறீர்களா?.*

றாஷித்: *ஆம் அதில் உடண்படுகிறேன். அதேபோன்று அவ்விரண்டின் முக்கியத்தில் சற்றும் குறைந்திடாத இன்னொரு சான்றையும் குறிப்பிடுகிறேன். அதுதான் இயற்கைநிலை. அத்தோடு சிந்தனை, அறிவியல் தொடர்பான ஒரு குறிப்பொன்றை சுட்டிக்காட்டுகிறேன். அதாவது; சிந்தனையால் ஒருவிடயத்தை தவறாக விளங்குவதற்கும், விளங்க முடியாமல் போவதற்கும் பாரிய வித்தியாசமுண்டு.*

ரஜீவ்: *இயற்கைநிலை சான்று என எதை கூறுகிறீர்?*

றாஷித்: *ஆதி மனிதன் உட்பட முழு மனித வர்க்கத்தின் பிறப்போடு அமையப்பெற்ற உள்ளுனர்வாகும். உலகிலுள்ள விலங்குகள், தாவரங்கள், சடப்பொருட்கள் என அணைத்துவஸ்துக்களுக்கும் அவற்றிக்கே உரித்தான சிறப்பியல்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக தண்ணீர் கொதிப்பதற்கு 100.c அளவு வெப்பம் தேவைபடுகிறது. அதேநேரம் ஒரு மனிதன் உயிர் வாழ 34.- 42c அளவுகளுக்கிடையிலான வெப்பம் அவசியமாகும். இவ்வாறு ஒவ்வொரு வஸ்துக்களிலும் இயல்பாக அமையப்பெற்ற சில சிறப்பியல்புகள் உள்ளன.*

மைக்கல்: *மனிதன் மற்றும் ஏனைய விலங்கினங்களிடமுள்ள உனர்ச்சிகள், குணதிசயங்களை நாடுகிறீர்களா?*

றாஷித்: *உணர்ச்சிகள் குணாதிசயங்கள் என்பன மனிதன் மற்றும் விலங்குகளிடம் இயல்பிலே உள்ளவை; அவற்றின் வாழ்க்கையில் வழிகாட்ட கூடியவை. கொடிய விலங்குகளிடம் உள்ள வேட்டையாடும் குணத்தை யாராலும் மாற்ற முடியாது. சில மீண்களும், பறவையிணங்களும் அவற்றின் இடப்பெயர்வின் பின்னர் ஆரம்பித்த இடத்திற்கே மீண்டும் வருகின்றன.அவ்வாறே தாய்மை என்பது பெண்ணிற்குரியது. இவை ஒவ்வொன்றும் அவற்றிக் குரிய பண்புகளை வெளிப்படுத்துகின்றன.*

ஆனால் இயற்கை நிலை மனிதனிடம் மாத்திரம் இருக்கக்கூடிய ஓர் அடிப்படை அம்சம். (பித்ரா) இயற்கை நிலைக்கும் பண்புகளுக்கும் மத்திலுள்ள வித்தியாசங்களாவன: பண்புகள் சட ரீதியான காரியங்களுடன் தொடர்புபட்டவை, அதே நேரம் இயற்கைநிலை கல்வியில் ஆர்வம் கொள்ளல், உன்மையைத் தேடுதல், கண்டு பிடிப்புகளில் ஈடுபடல், மிகச்சிறந்தவற்றை விரும்புதல் போன்ற சிந்தனை சார் காரியங்களுடன் தொடர்புபட்டவை. மனிதன் எவ்வாறு சூழல், சமுக, தாக்கமின்றி தானாகவே தேடிச்சென்று அவற்றால் கவரப்படுகிறான்? அவனுடைய இயல்நிலை (பித்ரா) அம்சங்கள் ஏனைய மிலேச்சத்தனமான பண்புகளை போன்று விதைக்கப்

பட்டிருப்பினும் அவைகள் உளவியல் விடயங்களோடு தொடர்புபட்டவை. இவ்வியல்பு நிலையே நல்லவற்றை ஏற்கவும், தீயவற்றை தடுக்கவும் ஒரு மனிதனுக்கு வழிகாட்டுகின்றன. நறுமனத்தை விட்டு துர்நாற்றத்தை நோக்கி செல்லகூடிய அல்லது நல்ல தோற்றத்தை விட்டு மிகமோசமான தோற்றத்தை நோக்கி விரையும் ஒருவரிடம் நாம் சீரான இயல்புகளை நாம் காண முடியாது.

ரஜீவ்: என்றாலும் ஒரு விடயம் இயல்பானது அல்லது இயல்பற்றது என தீர்மானிக்க கூடிய இயல்நிலை அம்சங்களை வறையறுப்பது எப்படி?.

றாஷித்: மனிதனுடைய இயற்கைநிலை பல்வேறுபட்ட பண்புகளை உடையன, அவற்றில் மிக முக்கியமான சில.

– அனைவருக்கும் பொதுவானது மற்றும் பூரனமானது.

– நிலையானது, காலத்தால் மாறாதது.

– மனிதனுக்குள்ளே இருந்து உதிக்கக்கூடியது. கற்றல் ,கற்பித்தல்மூலமாக உட்புகுத்த முடியாதது. ஆயினும் கற்பதின் ஊடாக அதனை விருத்தியடையச் செய்யலாம்

– சில நிலைமைகளை தவிர சூழல் தாக்கத்திற்கு உள்ளாகாதது. மனிதனுடைய புலனுறுப்புக்கள் பாதிக்கப்படுவதால், இயற்கை நிலை அம்சங்களின் தூய தன்மை சில வேளை கலங்களாம். ஆனால் அவற்றின் அடிப்படை என்றும் நிலையானது.

மைக்கல்: இவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். என்றாலும் நீங்கள் கூறிய இறுதி குறிப்பில் எங்களுடைய தலைப்பில் (சத்தியத்தை அறிந்து கொள்வதில் வழிகாட்டும் சாதனமாக) இயற்கை நிலை அமையுமா என்பதில் எனக்கு சந்தேகம்.

ரஜீவ்: அப்படியென்றால் இது சம்பந்தமாக நாங்கள் உடண்பட்ட விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்கலாமே.. நாம் அனைவரும் ஏற்றுக்கொன்டால் உடன்படுவோம். அவ்வாறு இல்லையெனின் வேறோரு விடயத்தை ஆய்வு செய்வோம்.

றாஷித்: இவ்வழிகாட்டி சாதனங்களைப் பற்றி அறிந்து கொன்ட நாம் இன்னொரு விடயத்தையும் இங்கே குறிப்பிடுவது பொறுத்தமானது என நினைக்கிறேன். அதாவது இஸ்லாத்தைப் பற்றி அறியாத சிலர் (சத்தியத்திற்கான இவ்வூடக சாதனங்களில்) நாம் உடண்பட்டுள்ள விடயங்கள் இஸ்லாத்துடன் தொடர்புபடாது என நினைக்கலாம், அது தவறாகும் .

மைக்கல்: மார்க்கம் என்றால் பரிசுத்த வேத நூலில் உள்ளவற்றை நம்புவதும் அவற்றிக்கு முழுமையாக அடிபணிவதுமாகும் என நான் அறிந்த மட்டில் அதன் வாதப்பிரதிவாதங்களை ஏற்றுகொள்வதில்லை. இதன் காரனமாகத்தான் ஐரோப்பிய வரலாற்றில் அறிவியல் புரட்சிக்கு பின் பெரும் யுத்தங்கள் நிகழ்ந்தன. பரிசுத்த வேதாகமத்தை விட்டு முற்றிலும் விலகிய சிந்தனை, மறுமலர்ச்சி,கண்டுபிடிப்புகள் முதலியவற்றை திருச்சபை எதிரத்து வந்தது.

றாஷித்: ஒரு புறத்தில் நீங்கள் கூறுவது சரிதான். என்றாலும் அவ்விடயம்

இஸ்லாத்திற்கு பொருந்தாது. மார்க்கத்தைப்பற்றி நீங்கள் கூறியது சரி. என்றாலும் இஸ்லாம் அத்தோடு ஆரைய்ச்சிகளால் பெறப்பட்ட சிந்தனையை அல்லாஹ், திருக்குர்ஆன், திருத்தூதர் ,நபி ஸல் அவர்கள் ஆகியோரைக் கொண்ட நம்பிக்கைகுரிய வழிமுறையாகவும் மாற்றியுள்ளது. நீங்கள் கூறும் மார்க்கம் மற்றும் சிந்தனை கிடையிலான மோதலை இஸ்லாமிய வரலாற்றில் எங்குமே காணமுடியாது.

ரஜீவ்: *என்ன ஒரு ஆச்சிரியம்! உங்களுடைய வேதநூல் அறிவு, சிந்தனை, ஆராச்சி முதலியவற்றிட்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கிறதா?!*

மைக்கல்: *மண்டபம் மூடுவதற்கான நேரம் நெருங்கிவிட்டது என நினைக்கிறேன். உறையாடலை இத்தோடு நிறுத்திவிட்டு நாளை தொடருவோம்.*

ரஜீவ்: *நாளை எனக்கு வேலையிருக்கிறது. நாளை மறுதினம் சின் நதிக்கரையோரம் நான் செல்லவிருக்கும் சுற்றுலாவுக்கு நீங்களும் என்னோடு வந்தால் மிக்க சந்தோசமாக இருக்கும்*

மைக்கல், றாசித்: *நல்லது, அவ்வாறே*

https://www.path-2-happiness.com/ta

கடவுளை அறிந்துகொள்

கடவுளை அறிந்துகொள்

சீன் நதிக் கரையோரம் குறிப்பிட்ட தினத்தன்று தெளிவாத மாலைப்பொழுதில் நண்பவர்கள் மூவரும் சந்தித்து கொண்டனர். ரஜீவ் தனது நண்பவர்கள் இருவரையும் உல்லாசமாக நீராவிக்கப்பல் விடுவதற்கு அழைத்தார். நண்பவர்கள் மூவரும் நதிக்கரைகாட்சிகளையும், அதைச் சூழவுள்ள பசுந்தரைகளையும் கண்டுகளித்தனர். றாஷித் அடி வானத்தை பார்த்தவராக நண்பர்களுடன் உரையாட ஆரம்பித்தார்:

நதிகள், கடல்கள். தாவரங்கள், விலங்குகள், மலைகள், மனிதன் என இவ்வுலகில் நாம் கண்களால் பார்க்க்கூடிய மற்றும் பார்க்க முடியாத அனைத்தும் அவற்றை மிக நுட்பமாகவும் கட்சிதமாகவும் உருவாக்கிய ஒரு படைப்பாளன் இருக்கிறான் என்பதை சான்று பகர்கின்றன. என்ன.. நான் கூறுவதை ஏற்கிறீர்களா?

ரஜீவ்: *கடந்த அமர்விற்கு முன்னருள்ள அமர்வில், இவ்வுலகை படைத்த படைப்பாளன் இருக்கவேண்டும் என்ற விடயத்தில் நாம் ஒன்று பட்டோம். ஆனால் அதோடு தொடர்புபட்ட சில சிக்கல்களையும் நாம் கலந்தாலோசிப்பது நல்லது.*

மைக்கல்: *உன்மையான கடவுள் பெற்றிருக்க வேண்டிய பண்புகள் தொடர்பாக பொறியியலாளர் றஜீவ் எழுப்பிய கேள்விவிலிருந்து இன்றைய விவாதத்தை ஆரம்பிப்பது நல்லதென நினைக்கிறேனே.*

றாஷித்: *நாங்கள் வாழக்கூடிய இப்பிரபஞ்ச உருவாக்கத்திற்கும் நீங்கள் எழுப்பிய கேள்விக்கும் பலமான தொடர்புள்ளது. அல்லாஹ் ஒருவனே உண்மையான ஏக இறைவன் என்ற நம்பிக்கையின் அடிப்படை இப்பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் உருவாக்கம், அதில் உள்ள படைப்பினங்களின் நோக்கங்கள் என இப்பிரபஞ்சம் தொடர்பான சரியான கண்னோட்டத்தில் தங்கியுள்ளது.*

மைக்கல்: *இப்பிரபஞ்சத்தை படைத்த இறைவன் இருக்கிறான் என்பதை நாம் நம்புகிறோம். என்றாலும் அவ்விறைவன் தொடர்பான எண்ணக்கரு மதங்களுக்கேற்ப வேறுபடுகிறது. இவ்வேறுபட்ட கண்ணோட்டங்கள் மக்களை இது தொடர்பாக ஆய்வு செய்வதைவிட்டும் விரட்டி வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாவிடினும் ஒரு நாஸ்திக வாழ்க்கையை நோக்கி இட்டுசெல்கின்றன.*

றாஷித்: *நன்பரே! நீங்கள் கூறுவது உன்மைதான். எனினும் அவ்வாறு விரன்டோடுவது அவர்கள் வணங்குவதற்காக ஏதோவொன்று தேவையென்பதையும் உணர்த்தத் தவறவில்லை. அது மட்டுமன்றி அவர்களின் சிலர் தங்கள் மனோ இச்சையை கடவுளாக எடுத்துகொள்கின்றனர். இறைவன் தொடர்பான தவறான கண்ணோட்டத்திலிருந்து வேறுவழியின்றி விரண்டோடக்கூடிய நாஸ்திகர்கள் அல்லாஹ்வை இறைவனாக ஏற்றுகொள்வதைவிட்டும உண்மையான கடவுளுக்குரிய எந்த பண்புகளும் அற்ற சிலதை கடவுள்களாக எடுத்துக்கொள்கின்றனர்.*

ரஜீவ்: எங்களுடைய தலைப்பை நோக்கினால் ஒன்றைக் கூறலாம். அதாவது; கடவுள் என்பவன் அனைவராலும் விரும்பப்படக்கூடியவனாகவும் அச்சப்படக்கூடியனாகவும் இருப்பது அவசியமாகும். அதேநேரம் மனிதன் அவனுடைய (கடவுளுடைய) தேவையை உணர்பவனாகவும் இருக்கவேண்டும். எனினும் யதார்த்தத்தில் இப்பன்புகள் அதிகமானோரை ஒன்றுக்கும் மேற்பட்ட கடவுள்களை எடுத்துக்கொள்ளகூடிய நிலையை தோற்றுவிக்கின்றன.

றாஷித்: நீங்கள் கூறுவது மிக அருமையானது. சரியான விடயம்; ஆரம்பித்த இடத்திற்கே வருகிறுது. கடவுளின் அவசியத்தை ஏற்றுகொள்வதனூடாக இப்பிரபஞ்சத்தை நிர்ணயித்த, அதை மூலப் பொருளின்றி உருவாக்கிய ஓர் படைப்பாளன் இருக்கிறான் என்ற விடயத்தில் உடன்படுகிறோம். அப்படைப்பாளனையே இறைவன் என அழைக்கிறோம். அவன் எங்களையும், உலகிலுள்ள அனைத்தையும் படைத்தவன். உண்மையான அவ்விறைவனே வணக்கத்திற்கு தகுதியானவன். அவனை மாத்திரமே வணங்கவேண்டும். அதாவது; நீங்கள் கூறியதைப் போன்று அவனை தவிர வேறு யாறையும் பயப்படவோ, அன்புகொள்ளவோ, ஆதரவுவைக்கவோ கூடாது. இதிலிருந்து நாங்கள் உண்மையான கடவுளின் பண்புகளை அடையாளப்படுத்தலாம்.

ரஜீவ்: நீங்கள் கூறுவதை ஏற்றுக்கொன்டால் எங்களுக்கு இவ்வாறு கூறலாம்: அனைத்தையும் இரட்சிக்கும் அக்கடவுள் எவ்வாறு ஒருபடைப்பாளனாக இருக்கவேன்டுமோ அவ்வாறே நித்தியஜீவனாகவும் இருக்க வேண்டும்.

றாஷித்: நீங்கள் கூறுவது சரி, அப்படியாயின் அக்கடவுள் ஒரு படைப்பாக இருக்கமுடியாது என்ற இன்னொரு தோற்றத்தையும் அது கட்டாயபடுத்துகிறது. படைப்பாளன் ஒரு படைப்பினமாக இருக்கமுடியாது. அவ்வாறு இருப்பின், அவன் எங்களைப்போன்ற படைப்பினமே, எனவே அவனை வணங்கவோ வழிப்படவோ கூடாது; அதேபோன்று எந்தவோரு படைப்பினமும் படைப்பாளனாக முடியாது.

மைக்கல்: அப்படியானால் படைப்பாளன் என்பதன் பொருளை எப்படி நாம் அறிந்துகொள்வது?

றாஷித்: சுறுங்கக்கூறின்; படைப்பாளன் என்போன் வஸ்துக்களை முன்னூதாரணமின்றி உருவாக்கும் ஆற்றல் படைத்தவன்; அவற்றை பல நோக்கங்களுக்காக படைப்பவன்.

படைப்பினங்களை பொருத்தமட்டில் அவற்றிக்கு ஆரம்பமும் முடிவும் இருக்கவேண்டும். அவற்றின் சக்திகளும் ஆற்றல்களும் வரையறுக்கப்பட்டவை. பிறரின் உதவி அவைகளுக்கு எப்பொழுதும் தேவை.

ரஜீவ்: ஒரு படைப்பாளனாக இருந்தால் அவன் படைத்தவற்றிக்கு உரிமையானவனாகவும் இருக்க வேண்டும்.

வானங்களில், பூமியில் உள்ளவை அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது என்று நாம் கூறினால், அவை அனைத்தையும் அவன் நன்கு அறிந்திருப்பது அவசியமாகும்.

அவற்றில் ஏதேனும் ஒன்று அவனை விட்டும் மறையுமானால், அது தனித்துவமான ஒன்றாக மாறிவிடும். நாங்கள் படைப்பினங்களில் காணக்கூடிய அவனுடைய நுற்பங்களும் திறைமைகளும் அவன் பரிபூரணம் என்பதற்கான ஆதாரமாகும்.

றாஷித்: வானங்களிலும், பூமியிலும் உள்ளவை அவனுக்கே உரியன. எனவே அவற்றை நிறுவிகிப்பதும் அவனாகவே இருக்கவேண்டும். அவைகளை நன்கு அறிந்திருப்பதால், வஸ்துக்களின் நியதிகளையும், சட்டங்களையும் இயற்றும் பணி அவனுக்கே உரியது.

மைக்கல்: நானும் சில பொருட்களின் சொந்தகாரன்; எனக்கும் அதிகமான விடயங்களைபற்றி தெரியும், அதனால் நானும் கடவுளின் பண்பைப் பெற்றவனாகி விடுவேனா?... அது சரியான ஒன்றாக எனக்குத் தென்படவில்லை.

றாஷித்: நண்பரே நீங்கள் குறிப்பிட்ட விடயம் மிகமுக்கியமானது. இவ்வாறு ஒவ்வொறு பண்பாக ஆராய்வது அவற்றின் முக்கியத்துவங்களை நீட்டி கொண்டே செல்லும். எனவே அவற்றிக்கான பிரமானமாக ஒரு பொது விதிமுறையை கையாண்டு அதிலிருந்து ஒவ்வொரு பண்பாக எடுத்துநோக்கலாம். இஸ்லாமிய கண்ணோட்டத்தினாலான அப்பொது விதிமுறையை கூற எனக்கு அனுமதி தாருங்கள்.

மைக்கல், றஜீப் இருவருமாக: தயவு செய்து.

றாஷித்: சுறுங்க கூறின்:

முதலாவது: அல்லாஹ்வின் தனித்துவமான பண்புகளை; குறைபண்புகள், நிறைபண்புகள் என இரு வகையாக நோக்கலாம்

நிறைபண்புகளை பொருத்த மட்டில் அவற்றிலுள்ள நற்பண்புகளால் அவனை வர்ணிக்கலாம். அவற்றின் (நற்பண்புகளின்) எதிர்கருத்தை அறிவிக்க கூடிய பண்புகளை விட்டும் அவன் தூய்மை படுத்தப்பட வேண்டும் .

குறைபண்புகளை பொருத்தமட்டில் அவற்றிலுள்ள பண்புகளை விட்டும் அவனை தூய்மை படுத்தவேண்டும். அவற்றின் எதிர்கருத்தை அறிவிக்கூடிய பண்புகளால் அவனை வர்ணிக்கவேண்டும்.

நிறைபண்புகளிலுள்ள எதிர்மறை பண்புகளை விட்டும் அவனை தூய்மை படுத்துவது, அவற்றிலுள்ள நேர்மறை பண்புகளால் அவனை வர்ணிப்பதை கட்டாயபடுத்தும் அவ்வாறே குறைபண்புகளும்.

இரண்டாவது: படைப்பினங்கள் வெறுக்கக்கூடிய ஒரு பண்பை படைப்பாளனுக்கு சேர்க்கக் கூடாது. அதாவது; படைப்பினங்களை விட்டும் தூய்மை படுத்தப்படும் குறைமிக்க, இழிவான பண்புகளினால் இறைவன் எவ்வாறு வரணிக்கபடுவான்? எனவே, அவன் படைப்பினங்களை விட அவற்றைவிட்டு நீங்கியிருக்க தகுதி படைத்தவன்; அனைத்திலும் பூரணமாணவன்.

மூன்றாவது: படைப்பினத்திற்கும், படைப்பாளனுக்கும் மத்தியிலுள்ள பூரண இடைவேளை. அதாவது; படைப்பாளனைபோன்று எதுவுமில்லை. ஆயினும் அன்பு, இரக்கம், அதிகாரம் என இரண்டிக்கும் (படைப்பாளன்,படைப்பு) சேர்க்கப்படகூடிய பண்புகளை பொருத்தமட்டில் அவற்றிக்கிடையிலான அர்த்தம் வித்தியாசப்படும். ஏனெனில்; படைப்பினங்களின் பண்புகளோ குறைமிக்கவை. ஆனால் இறைவனுடைய பண்புகள் எதிர்மாற்றமானவை; பரிபூரமானவை.

மைக்கல்: நீங்கள் கூறுயதை உதாரணங்கள் கொண்டு விளக்கக்கூடாதா....

ரஜீவ்: நீங்கள் குறிபிட்ட புள்ளியை நடைமுறை உதாரணங்களோடு விளக்கினால் என்ன...

றாஷித்: நல்லது, முதற்குறிப்பு: பலவீனம் ஒரு குறைபண்பு என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட விடயம். அவ்வாறே பிரவற்றில் தங்கியிருப்பதும் ஒரு குறைபண்பாகும். உண்மையான இறைவன் இவ்வாறான பண்புகளை பெற்றிருக்கக்கூடாது; மாறாக இவற்றை விட்டும் தூய்மைபடுத்தப்பட வேண்டும். அதேநேரம் இவற்றிக்கு எதிர்மையான பலம், சக்தி, யாவரையும் விட்டு தேவையற்றல் போன்ற பண்புகளால் போற்றப்படவேண்டும். இதன் காரணமாகவே எங்கள் வேதநூல் அல்குர்ஆன் மூன்றே சொற்களால் ஈஸா(அலை), அவருடைய தாயார் ஆகிய இருவறையும் தெய்வீகத்தன்மையற்றவர்கள் என கூறுகிறது. {அவ்விருவரும் மணிதர்களைப் போலவே உணவு உட்கொன்டு வந்தனர்} [அல் மாயிதா: 75] குறைபண்புகளில் ஒன்றான பசியை உணர்பவன் உணவை தேடிசெல்வான். யார் உணவை உட்கொள்கிறாரோ, அவர் அதன்பால் தேவையுடையவராவார். அந்த அடிப்படையில் அவர்கள் இருவரும் கடவுளாக இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் அவசியமின்மை என்ற இறை பண்புகளை பெற்றவர்கள் அல்ல.

அவ்வாறே பிள்ளை பெற்றெடுத்தலும்; உண்மையான இறைவன் தேவையுடைய படைப்பினங்களுக்கு ஒப்பாவதை விட்டும் தூய்மையானவன். எனவே யார் பிள்ளையை (வாரிசு, உதவி அல்லது வேறு ஏதாவது தேவைக்காக) வேண்டுகிறாரோ, இவையனைத்தும் ஓர் உன்மையான இறைவனுக்கு கூடாத குறைபண்புகளாகும்.

இறண்டாவது குறிப்பு: அனைத்து புத்திஜீவிகளும் பலவீனம் என்ற பண்புடையவர்களாக இருப்பதை வெறுக்கின்றனர். எல்லோரிலும் மேலான கடவுள் அப்பண்பை விட்டும் மிகமிக தூய்மையானவன். அது மட்டுமன்றி அதற்கு நேர்மறை பண்பான பலம், வல்லமை போன்ற நிறைபண்புகளை அவன் பெற்றிருக்கவேண்டும். எனவே இயேசு கிறிஸ்து தனக்கு ஏற்படக் கூடிய ஆபத்திலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள முடியவில்லையெனின், (சிலரால் கடவுளாக ஏற்றுகொள்ளபட்ட) சிலைகளும், மிருகங்களும் அவற்றை அவைகளாலே பாதுகாத்துக் கொள்ள முடியவில்லையெனில், அவற்றை வணங்கூடிய பிறரையும் அவைகளால் பாதுகாக்க முடியாது. முடியாத ஒருவர் கடவுளாக இருக்க தகுயற்றவர்.

புத்திஜீவிகள் தங்களை அநியாயக்காரர்கள் என வர்ணிப்பதை விரும்பமாட்டார்கள். அதனடிப்படையில் உண்மையான இறைவனும் அநியாயம் இழைப்பதில்லை.

மாறாக நீதமானவன். இவ்வாறு ஒவ்வொரு குறைகளைவிட்டும் அவனை தூய்மை படுத்துவது அவற்றிக்கு நேர்மறையான நிறைகளை சேர்ப்பதற்கு சமன்.

இறுதியாக, மூன்றாவது குறிப்பு: மற்றுமொரு உதாரணத்தை நோக்கலாம்; அறிவு என்ற நற்பண்பிற்கு எதிர்மறைக் கருத்து அறியாமையாகும். இவற்றை நிறை பண்பாக நோக்குமிடத்து அவன் யாவற்றையும் அறிந்தவன், அறியாமையை விட்டும் தூய்மையானவன் என்றே குறிப்பிடவேண்டும். குறைபண்பாக நோக்குமிடத்து அவன் யாவற்றையும் அறியாதவன், அறிவை விட்டும் தூரமானவன் என்றே குறிப்பிடுவோம். ஆனால் ஏக இறைவன் அல்லாஹ் அறிவு என்ற பண்பை பரீபூரணமாக பெற்றிருப்பவன். அவன் யாவற்றையும் அறிந்தவன் அறியாமையை விட்டும் தூய்மையானவன்.

ஆனால் மனிதன் இப்பண்பை ஒப்பீட்டளவிலேயே பெற்றிருக்கிறான். சில விடயங்களை அறிந்திருக்கின்ற அதேநேரம் பல விடயங்களை அறியாமலும் இருக்கிறான். எனவே அவனுடைய பூரணத்துவம் ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்டது; இவ்வாறுதான் ஏனைய பண்புகளும். .

மைக்கல்: இருட்டி விட்டதால் சற்று குளிராகவுள்ளது. இன்றைக்கு இது போதும் என நினைக்கிறேன்.

https://www.path-2-happiness.com/ta

வானத்தின் பிரகாசம்
(தூதுத்துவத்தின் அவசியம்)

வானத்தின் பிரகாசம் (தூதுத்துவத்தின் அவசியம்)

வாலிபர்கள் தங்கியுள்ள அவ்வில்லத்தின் கேட்போர்கூடத்தை றாஷித் நுழைந்தபோது கூடத்தில் உயரமாக மாட்டிவைக்கப்படடிருந்த விளக்கை வட்டமேசை ஒன்றிலிருந்து உற்றுநோக்கியவராக மைக்கலை கண்டுகொண்டார். றாஷித் அவரை நோக்கி வந்தனம் தெரிவிக்கவே மைக்கல் விழித்து கொன்டார். உடனே கதிரையை அவர்பக்கம் இழுத்தவறாக:

நீங்கள் ஏதோ முக்கியமான ஒன்றில் ஈடுபட்டுக் கொன்டிருப்பதைபோன்று தோன்றுகிறது. நானும் பங்குபற்றலாமா.

மைக்கல்: *ஓ.. மண்ணிக்கவும், நீங்கள் இருப்பதை கவனிக்கவில்லை.*

அப்போ ரஜீவ் வரவில்லையா?

றாஷித்: *இன்னும் ஐந்து நிமிடங்கள் உள்ளன.*

அதோ! வருகிறார்.

ரஜீவ்: *நண்பவர்களே என்னுடைய வந்தனம், உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.*

றாஷித்: *நாங்களும் அவ்வாறே...*

மைக்கல்: *உண்மையிலே இவ்வாறு பயனுள்ள உரையாடல்கள் என்னை மகிழ்ச்சியூட்டுகின்றன. நீங்கள் இருவரும் வருவதற்கு முன்னர் முக்கியமான ஒரு விடயத்தை ஆழமாக சிந்தித்துக் கொன்டிருந்தேன். உங்கள் இருவருடனும் அதைப்பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கடந்த எங்களுடைய விவாதத்துடன் தொடர்புபட்ட ஒன்று. எங்களை படைத்த இறைவனை நாம் கட்டாயம் வணங்கவேண்டுமெனின் அவனை அறிந்து கொள்வதற்கான வழிமுறையை எங்களுக்கு காட்டவேண்டுமல்லவா? எனவே இவ்வாறு எங்களை விட்டுவிடுவது எந்த விதத்தில் நியாயம்?!*

ரஜீவ்: *உங்களிடம் வருவதற்கு முன்னர் நானும் இதைப் பற்றிதான் சிந்தித்துக்கொண்டிருந்தேன்.*

றாஷித்: *மிக அருமையான கேள்வி, அல்லாஹ் மனிதனை மிக அழகிய வடிவில் சிருஷ்டித்தான். பூமியிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளதோடு, வானத்திலுருந்தும் நலவுகளை இறக்கியருளுகிறான். இவ்வாறு பிரபஞ்சத்தை உருவாக்கி, அதில் மனிதனை படைத்து, இவ்வருட்கொடைகளை எவ்விதநோக்கமுமின்றி அவனுக்கு அருளியுள்ளான் என்றால் அது நியாயமற்ற ஒனறு.*

மைக்கல்: *பிரம்மாதம், சரியான புள்ளிக்கு வந்துவிட்டோம். அப்படியென்றால்*

https://www.path-2-happiness.com/ta

இப்பிரபஞ்சத்தையும், மனிதனையும் படைத்து அருட்கொடைகளை வழங்கியிருப்பதன் நோக்கம் என்ன?

ரஜீவ்: சென்ற விவாதத்தில் உண்மையான கடவுளின் பண்புகள் தொடர்பாக கலந்துரையாடியதற்கும், இதற்குமிடையில் ஒரு தொடர்பிருக்கிறது என நினைக்கிறேன். ஏனென்றால், இறைவன் என்பவன் படைபினங்களுக்கு முன்னரானவன். என்றாலும்.. எப்படி கூறுவதென்றுதான் தெரியவில்லை.

றாஷித்: ரஜீவ்! நீங்கள் கூறுவது சரி, நான் அதை ஒரு உதாரணத்தோடு தொடர்படுத்தி விளக்குகிறேன். எடுத்துக்காட்டாக: நீங்கள் ஒன்றை விரும்பினால் அதை அடைய ஆசைப்படுவிர்கள். அப்படித்தானே?

ரஜீவ்: ஆம்

றாஷித்: அப்படியென்றால், அதையடைய விடாமல் உங்களை தடுப்பது எது?

ரஜீவ்: தற்போது... எனக்கு தோன்றியிருக்கும் காரணம்: அதை அடைய சக்தி பெற்றிருக்கூடாதா.

றாஷித்: அப்படியென்றால் நீங்கள் சக்தி பெற்றால் அதை அடைவீர்கள். அதே விடயம் தான் இதற்கும்.

மைக்கல்: உங்கள் உதாரணம் மேலும் குழப்பமாக இருக்கிறது.

றாஷித்: நீங்கள் கூறுவது உண்மைதான். எனினும் பூரனமாக கூறிமுடிக்கிறேன். சென்ற எங்களுடைய உரையாடலின் போது இறைவனுக்கென அழகிய பண்புகள் இருக்கின்றன, என்ற விடயத்தில் உடண்பட்டோம். அவை அல்லாஹ்வும் அவனுடைய படைப்பினங்களும் விரும்பக்கூடிய பண்புகளாகும். படைப்பாளன் சர்வ வல்லமை படைத்தவன்; சர்வலோக மன்னன் முதலியன அவற்றில் சிலவாகும். இப்பண்புகளை விரும்புவது அவற்றை அமுல்படுத்துவதை கட்டாயபடுத்துகிறது.

அல்லாஹ் சர்வ வல்லமை படைத்தவன். இதனால் அவன் நாடியவற்றை தடுக்க யாராலும் முடியாது. அதே சமயம் படைப்பாளன் என்பதனாலேயே படைப்பினங்களை சிருஷ்டிக்கிறான்; படைப்பதை விரும்புகிறான். அருள்பாழிப்பவன் என்பதால் அருள் பொழியதை விரும்புகிறான். இரக்கமானவன் என்பதால் இரக்கம் காட்டுவதை விரும்புகிறான் அவ்வாறே அவன் ஆற்றல் படைத்தவன்; நினைத்ததை முடிப்பவன்; அவனை யாருலும் தடுக்கமுடியாது.

மைக்கல்: சரி, இது தொடர்பாக எங்களுடைய நிலைப்பாடு என்ன?!

றாஷித்: எங்களுடைய நிலைப்பாடு என்னவெனின்:நாம் அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்காகவும், அனைத்து குறைகளைவிட்டும் அவனை தூய்மைபடுத்துவதற்காகவும் எங்களை படைத்துள்ளான். இவ்வருட்கொடைகளை வழங்கியிருப்பது புசிப்பதற்காக மாத்திரமல்ல, மாறாக நன்றிசெலுத்துவதற்காகவுமே. ,அதற்காக நன்றி செலுத்துவதையும், போற்றுவதையும் அவன் விரும்புகிறான். எனவே

இவைகள் அவனை மாத்திரம் வணங்கவேண்டும் என்பதை வழியுறுத்துகின்றன. ஏனெனில் படைப்பவனும், பரிபாலிப்பவனும், வணக்கத்திற்கு தகுதியானவனும் அவன் ஒருவனே.

ரஜீவ்: நீங்கள் கூறியவற்றில் இரு முக்கிய அம்சங்கள் உள்ளன. அதில் முதலாவது: வணக்கம், நண்றிசெலுத்துதல், புகழ்தல் என அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக வணக்கஸ்தலத்திலேயே அமர்ந்திருக்க வேண்டுமா?

றாஷித்: இல்லை, இல்லை, நான் அதை நாடவில்லை. அல்லாஹ்வை வணங்குவது தொடர்பாக நீங்கள் எண்ணிய அர்த்தம் மிகக் குறுகியது. நான் பின்பற்றும் இஸ்லாம் இதை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அல்லாஹ்விற்கு வழிபடுதல் என்பது பூமியை பரிபாலித்தல், மனித நாகரீகத்தைக் கட்டியெழுப்புதல் என வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியது.

மைக்கல்: ஆனால் மார்க்கத்தை பின்பற்றாமலேயே இவற்றை (நாகரீகத்தை கட்டியெழுப்புதல், பூமியை பரிபாலித்தல்) புரிகிறோமே.

றாஷித்: இதனாலேயே அப்படியான நாகரீகத்தின் விளைவுகள் தடுமாற்றம், பீதி, சமூகப் பிளவு, பிறருக்கு அநியாயம் இழைத்தல் என மிக மோசமாக இருப்பதை காண்கிறோம். இந்நிலை மனித பரிமானத்தை தனிமைப்படுத்தி கண்டுபிடிப்புகளுக்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் மாத்திரம் முக்கியத்துவம் செலுத்த கூடிய நிலைக்கு இட்டுச்செல்லும். மனித மூலக்கூறுகளில் ஆன்மீகக்கூறு மிக முக்கியமான ஒன்றாகும். எனவே மனிதனுடைய நாகரீக செயற்பாடுகள் இறைவனுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவற்றின் அனைத்து பக்கங்களும் மனிதாபிமானதாக இருப்பதோடு, இப்பிரபஞ்ச நியதிகளுக்கு ஒத்துபோகக்கூடியதாக அமையும். ஏனெனில் மனிதனின் நலவு, கெடுதிகளை நன்கறிந்தவன் இறைவன் ஒருவனே.

மைக்கல்: அப்படியென்றால் பொறியியலாளர் ரஜீவ் அவருடைய வேளையை கச்சிதமாக புரிய வேதநூட்களை பின்பற்ற வேண்டுமா?... அது எப்படி?! எங்களுடைய வாழ்க்கை சீராக அமைய வேண்டுமென்பதற்காக அல்லாஹ் விரும்பியவற்றை எவ்வாறு கடைப்பிடிப்பது?.

றாசஷித்: இவ்வுலக நடவடிக்கைகள், அறிவியட் கலைகள் ஆகியவற்றிலும் மார்க்கம் தலையிடவேண்டும் எனக் கூறவில்லை. மாறாக ஒரு மனிதன் சமூகத்துடன் எவ்வாறு பழக வேண்டும், சமூகங்களுடனான தொடர்பு எவ்வாறு அமைய வேண்டும், மனிதனுக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் இடையிலான தொடர்புகள், மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன பற்றிய கோட்பாடுகளை இஸ்லாம் வகுத்துள்ளதைப் போன்று, மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து பண்பாட்டு ஒழுங்குமுறைகளையும் வழங்கியுள்ளது.

தெளிவுபடுத்துவதற்காக ஒரு உதாரணத்தை கூறுகிறேன்: அல்லாஹ் எங்களையும், பூமியையும், வானத்தையும், அதிலுள்ளவற்றையும் படைத்திருக்கிறான். மேகத்திலிருந்து

மழையை பொழியவைத்து பூமியில் எங்களுக்காக உணவுகளை முளைக்கச்செய்கிறான். அத்தோடு தீங்கிளைக்கும் தாவரங்களையும் முளைக்கசெய்கிறான். அது மட்டுமன்றி அவற்றில் பயன்தரக்கூடிய தாவரங்கள், மருந்து மூளிகைகள் முதலியவற்றை கண்டறிவதற்கான ஆற்றலையும் நுட்பத்தையும் நமக்கருளியுள்ளான். நமக்கும், பிறருக்கும் தீங்கிழைக்கக்கூடிய அனைத்தும் தடைசெய்யபட்டவை என்ற சட்டத்தையும் பிறப்பித்துள்ளான்.

இன்னொரு எடுத்துகாட்டு: நீதியை நிலைநாட்டல், மெருகூட்டலை வெறுத்தல் போன்றவற்றில் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டவர்கள். எனினும் அவற்றை ஆழச்சென்றுபார்போமாயின் பல வேறுபாடுகளை காணலாம். ஒவ்வொரு பிரிவினருக்கும் அவரவர் நலன்களை கருத்திற்கொண்டு செயற்படுவதனால் அவைகளின் நோக்கமும் வேறுபடும். ஆகவே மனித சமூகத்தை ஆளும் அதிகாரம் கொன்ட, அனைவரையும் பக்கசார்பின்றி சரிநிகராக நோக்கக்கூடிய ஒருவன் தேவை.

அல்லாஹ் பொருந்தக்கூடியவற்றை எவ்வாறு அறிந்துகொள்வது தொடர்பானவை அல்லாஹ்வின் பண்புகளான "அரசன்","அதிநுட்பமானவன்" என்பவற்றோடு தொடர்புபட்டவை. சென்ற உரையாடலில் அல்லாஹ் இப்பிரபஞ்சத்தை ஒரு நோக்கத்திற்காக படைத்துள்ளான் எனப் பார்த்தோம். எடுத்துக்காட்டாக: பல கட்டிடங்களை கட்டி, பல வேலையாட்களை உத்தியோகங்களில் அமர்த்தி, கருவிகளை உபயோகித்து உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்து, அவற்றை சந்தை படுத்தகூடிய நிறுவனம் எவ்வித நோக்கமோ நிறுவாகமோ இன்றி இயங்கிறது என்பதில் ஏதாவது அர்த்தம் உள்ளதா!!

மைக்கல்: நிச்சயமாக இல்லை.

றாஷித்: அப்படியென்றால், இப்பிரபஞ்சம், அதிலுள்ள படைப்பினங்கள் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன? எனவேதான் அல்லாஹ் மனிதசமுதாயத்தின் வழிகாட்டியாக வேதநூட்களையும் அவற்றையும், அவனையும்பற்றி தெளிவுபடுத்துவதற்காக தூதர்களையும் அனுப்பிவைத்தான்.

மனிதன் நன்மை, தீமை ஆகியவற்றை நோக்கி ஈர்க்கக்கூடிய இரு இயக்கங்களுக்கு மத்தியில் தள்ளாடுபவன். ஆகையால் அவனுக்கு ஓர் இறைவழிகாட்டி (தூதுவத்துவம்) அவசியமாகும். தூதுவத்துவம் மென்பது பூமியிலுள்ள அடியார்களுக்கு நன்மை, தீமைகளை தெளிவுபடுத்துவதற்காக அல்லாஹ்வால் அருளப்பட்ட பிரகாசமாகும்.

தூதுவத்துவம் தீங்கிளைக்கூடியவை, பயனுள்ளவை ஆகியவற்றுக்கிடையிலுள்ள பாகுபாட்டினை தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டதல்ல. ஏனெனில் அது ஐந்துதறிவு படைத்த மிருகங்களாலும் முடியுமான ஒன்று. எடுத்துகாட்டாக ஒரு கழுதையால் மன்னுக்கும், கோதுமைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை கண்டறிய முடியும். ஆனால் தூதுத்துவத்தின் நோக்கம் வேறுபட்டது. இம்மையிலும், மறுமையிலும் நன்மை, தீமைகளை ஈட்டிதரக்கூடிய செயல்களை வேறுபடுத்திக் காட்டுவதே அதன் நோக்கமாகும். தூதுவத்துவம் மாத்திரம் இல்லையெனில், ஒரு

மனிதனால் அவனுடைய வாழ்க்கையிலுள்ள நன்மை, தீமைகளை பிரித்தறியமுடியாது.

ரஜீவ்: சரி, இரண்டாவது விடயம்: மனிதர்கள் இறைவனை வழிப்படுவதில் ஒருவரையொருவர் வித்தியாசப்படுகின்றனர். ஆனால் அவனுடைய அருள்களை அனுபவிப்பதில் எவ்வாறு சமமாவார்கள்?!

றாஷித்: ஆம், அது அவர்களுக்கான சோதனையே ஒழிய (அவர்களுக்கு வழங்கப்படும்) கூலியில் அவர்கள் சமனாக மாட்டார்கள். கூலியின் அடிப்படை எங்களுக்கு வழிகாட்டகூடிய தூதர்களின் இறைச்செய்தியில் (ரிஸாலத்) தங்கியுள்ளது.

மைக்கல்: மூன்றாவது விடயம்: மனிதர்களில் அநியாயக்காரன், பொய்யன், ஏமாற்றுகாரன் என பல பிரிவினர் இருக்கின்றனர் அப்படியிருக்க (அல்லாஹ்வின்) அருட்கொடைகளை அனைவரும் எவ்வாறு அனுபவிப்பார்கள், சில குற்றவாளிகள் சமூகதண்டனையிலிருந்து தப்பிச்செல்லலாமே?!

றாஷித்: ஆம், இதுவும் ஓர் சோதனைக்காகத்தான். அவர்கள் இவ்வுலகில் தண்டனையிலிருந்து தப்பிச்செல்லலாம், ஆனால் கேள்விகள் கேட்கப்பட்டு கூலிவழங்கப்படும் நியாயத்தீர்ப்பு நாளில் இறைவனுடைய தண்டனையிலுந்து தப்பிக்கமுடியாது. அந்நாளில் மனிதனுடைய நல்ல,தீய செயல்களுக்கு கூலி வழங்கப்படும்; தீர்ப்பு மிக உறுதியாகவும், நேர்மையாகவும் இருக்கும்.

என்றாலும் மனித சமுதாயம் சிறந்த அடிப்படையையொட்டி நடக்க ஒரு மூலாதாரம் அவசியமாகும். இதில் அல்லாஹ்வின் தூதர்களுக்கு வழங்கப்பட்ட ரிஸாலத் (இறைசெய்தி)களின் பங்களிப்பு இன்றியமையாதது. அத்தூதர்கள் மனிதன் கடைப்பிடிக்கவேண்டிய அடிப்படைகளையும், அவற்றைமீறுவதால் ஏற்படும் விளைவுகளையும், மறுமையில் நமக்காக காத்துக்கொண்டிருக்கும் இன்பதுன்பங்களையும் (சுவர்க்க,நரகத்தையும்) நியாயத்தீர்ப்பு நாளில் நடைபெற விருக்கின்றவற்றையும் அறிவிப்பார்.

ரஜீவ்: தலைவர் றாஷித்! தூய மார்க்கத்தின் பண்புகள் தொடர்பாக ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்யவேண்டுமென கூறியது ஞாபகம் இருக்கிறதா?.

றாஷித்: ஆம், நன்றாக ஞாபகம் இருக்கிறது.

ரஜீவ்: ஆனால் அதை ஆரம்பிப்பதற்கு தற்போது நேரம்போதாது என நினைக்கிறேன்.

மைக்கல்: ஆம் ரஜீவ், இத்தலைப்பை எங்களுடைய அடுத்து உரையாடலில் பார்க்கலாம் .

https://www.path-2-happiness.com/ta

சத்திய மார்க்கத்தின் பண்புகள்

சத்திய மார்க்கத்தின் பண்புகள்

றாஷித் நண்பர்கள் இருவரையும் நூதனசாலை முன்னின்று எதிர்ப்பார்த்திருந்தார். அவர்கள் வந்தவுடன் அவர்களை வரவேற்று நூதனசாலையை சுற்றிப்பார்க்க அழைத்தார்.

இந்த நூதனசாலைக்கு உங்களை அழைத்தது ஏனென்றால், இன்றைய தலைப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர் மனித வரலாற்றின் ஒரு பகுதியை மீட்டிப்பார்ப்பதற்காகவே. எப்படி இந்த யோசனை?

மைக்கல்: *ராஷித்! இது என்ன புதுமை... இங்கே வந்தபின்னால் ஆலோசனைக்கேட்டீர்கள்... அதற்கு முன்னரல்லவா கேட்டிருக்கவேண்டும்.. பொதுவாக, எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ரஜீவ் நீங்கள்?*

ராஜிவ்: *எனக்கும்தான், எந்தப்பிரச்சினையும் இல்லை, ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் உரையாடலை ஆரம்பிக்கவேண்டுமென்றால், அவசரமாக சுற்றிப்பார்ப்பது நல்லது. ஏனன்றால் நூதனைசாலை மிக பிரம்மாண்டமானது, முழுமையாக சுற்றிப்பார்க்க நேரமில்லை.*

றாஷித்: *எனது தவறுக்காக வருந்துகிறேன். உங்கள் இருவருக்கும் ஒரு திகிலாக இருக்கும் என்றுதான் செய்தேன். ஆனாலும் அதில் தவறிழைத்துவிட்டேன்.*

மைக்கல்: *சரி அதை விடுங்கள். நாங்கள் தற்போது விரைவாக செயற்படவேண்டும். மண்டபம் 13KM சதுரப்பரப்பளவைக்கொண்டது. 1மில்லியனுக்கு மேற்பட்ட பகுதிகள் உள்ளன. அனைத்தையும் பார்க்க வேண்டுமல்லவா?*

றாஷித்: *இதை தரிசிப்பதனுடைய நோக்கம் அதை முழுமையாக ஆராயவேண்டுமென்பதல்ல. மாறாக எங்களுடைய உரையாடளுக்குத்தேவையான உயிரோட்டமுள்ள சில தகவல்களைத்திரட்டிக்கொள்வதே. எனவே எங்களுடைய முழுக்கவனமும் பண்டயநாகரீக சின்னங்கள் பற்றியதாகவே இருக்கவேண்டும். அவற்றில் பெரும்பாலானவை கீழ் தளங்களிலேயே இருக்கின்றன..வாருங்கள் அங்கே செல்லலாம்.....*

இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் நண்பர்கள் மூவரும் சுற்றிக்களைத்தவர்களாக நூதனசாலையைவிட்டு வெளியேறினர்.

றாஷித்: *அருகிலுள்ள சாப்பாட்டு விடுதிக்குச்சென்று சற்று இளைப்பாறிவிட்டு பகலுணவை உண்ணலாம்.*

அவர்கள் சாப்பாடு விடுதியைநோக்கி சென்று கொண்டிருந்தபோது றாஷித் தலைப்பைத்துவங்கி விட்டார்.

நாகரீகங்கள் தொடர்பாக நாங்கள் சேகரித்த தகவல்களுக்கும் , சமயத்திற்கும் இடையில் ஏதோவொரு வகையில் தொடர்பிருப்பதை அவதானித்தீர்களா?

இவை(வரலாற்று ரீதியாக) ஒரு மனிதனுக்கு சமயம் எந்தளவுக்கு முக்கியம் என்பதை எடுத்துக்காட்டக்கூடிய ஆதாரமல்லவா?

ரஜீவ்: :நீங்கள் கூறுவது மனிதவியலாலர்களால் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான், மனித வரலாறு தொடர்பான அவர்களுடைய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கோட்டைகளோ, கைத்தொழிற்சாலைகளோ,அறிவியலோ, தத்துவங்களோ இன்றி பல நாகரீகங்கள் இருக்கலாம். ஆனால் வணக்கஸ்தலங்கள் இன்றி எந்தவொரு நாகரீகமும் இல்லை.

மைக்கல்: யதார்த்தத்தில் எந்தவொரு புத்திஜீவியும் சமயம் தீங்கு விளைவிக்கக்கூடியது எனக்கூறமாட்டார், அதுமட்டுமன்றி அது மனித நாகரீகத்தின் அடிப்படைக்கூறுகளில் ஒன்றாகும். ஆனால் சிக்கல் எங்கு எனின், ஒவ்வொருவரும் தங்களுடைய மார்க்கம்தான் சரியென வாதிடுவதிலேயே தங்கியுள்ளது. எனவே ஒவ்வொருவரும் தங்களுடைய வாதாட்டத்தின்பால் மக்களை அழைக்கின்றனர். தங்களுடைய கொள்கைவாதிகளை பின்பற்றுமாறும், அவர்களுடைய தலைவர்களை மதிக்குமாறும் மக்களை வலியுறுத்துகின்றனர். .இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களுடைய மார்க்கம்தான் சத்தியத்திலுள்ளதென வாதிடுவதால், எது உண்மையான மதம்: யூதமதமா, கிரிஸ்த்தவமதமா, பௌத்தமதமா, அல்லது இஸ்லாமியமதமா...என்ற தடுமாற்றத்தில் மனிதன் தள்ளாடுகிறான்.இவற்றில் எது சரியென எவ்வாறு அறிந்து கொள்வது, அல்லது அவர்கள் அனைவரும் சத்தியத்தில் இருக்கிறார்களா?... ஹ்ம்ம்.....!தடுமாற்றமான ஒன்று, அவ்வாறு தானே?

ராஷித்: ஆம், தடுமாற்றம்தான். என்றாலும் இதிலிருந்து வெளியேற ஒருவழியிருக்கிறது. எடுத்துக்காட்டாக: தற்போது நாங்கள் பசியாக இருக்கிறோம் என்பதற்காக எந்த உணவாக இருப்பினும் அதையுண்டு பசியைப்போக்க விரும்புவோமா? நிச்சயமாக இல்லை. அவ்வாறே எங்களுடைய ஆத்மரீதியான உணர்ச்சியின் பசியைப்போக்கவும் பொருத்தமான சிறந்த உணவை தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

அனைவரும் சத்தியத்தில் இருக்கிறார்கள் என்றால் அது சாத்தியமற்ற ஒன்று. ஏனெனில் சத்தியம் தனித்துவமானது; பலதரப்படாதது. அவ்வாறே அணைத்தது மதங்களும் சமயங்களும் அல்லாஹ்விடத்திலிருந்து வந்திருக்கலாம் என்பதும் சாத்தியப்படாத ஒன்று. ஆகவே அவற்றில் எது உண்மை என்ற கேள்வி தொடர்ந்தும் எழுந்துகொண்டேயிருக்கும். ஆகையால் சத்தியமார்க்கத்தை தெளிவு படுத்தக்கூடிய அடையாளங்கள் நிச்சயமாக இருக்கவேண்டும். அவ்வடையாலங்கள் அனைத்தும் பொருந்தக்கூடிய மதம் உண்மையானது;. அவற்றில் ஒன்றேனும் குறையுமாக இருப்பின் அது போலியான மதமாகும் என்ற முடிவுக்கு வரலாம்.

ரஜீவ்: நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அல்லாஹ்வினால் அருளப்பட்ட மார்க்கமாக இருக்கவேண்டுமென்பதே அதன் முதல் அடையாளம் என எனக்குத்தோன்றுகின்றது. எனவே அதுவோர் பரலோக மார்க்கமாக இருக்கவேண்டுமா? உலகத்தில் பல மில்லியன் மக்கள் பின்பற்றக்கூடிய பௌத்தம், ஹிந்து, கம்பூஸியம், என இறைவனால் அருளப்படாத மார்க்கங்கள் பல உள்ளன.

ராஷித்: அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனெனில், எந்தவொரு மார்க்கத்தினதும் அடிப்படை ஏதோ ஒருவகையில் கடவுளை வணங்கவேண்டுமேன்பதே. அந்த வகையில் பிரபஞ்சத்தையும், மனிதனையும் படைத்து அவனுக்காக பூமியில் உள்ளவற்றை வசப்படுத்திக்கொடுத்த ஒருவனே உணமையான இறைவன் என்பதை நாம் எற்றுக்கொல்வோமானால், வணக்கத்துக்குரியவன் அவன் ஒருவனே என்பதையும் எற்றுக்கொள்வது அவசியமாகும். ஆகவே படைத்து பரிபாளிக்கக்கூடிய ஒருவன் இருக்க வேறொன்றை வணங்குவது எப்படி? அத்தோடு உண்மையான மார்க்கம் அந்த ஏக இறைவனையே வணங்கவேண்டுமென வலியுறுத்த வேண்டும். அவனுடைய பண்புகளை அவனுக்கே உரித்தாக்குவதோடு, அவனுடைய தூதர்களை சங்கைப்படுத்தவேண்டும்.

சென்ற எங்களுடைய சந்திப்பில் உண்மையான கடவுளின் பண்புகள், மனிதன் நேர்வழி அடைவதற்கான வழிகாட்டியின் அவசியம் என்பவற்றில் உடன் பட்டோம். அவ்வழிகாட்டியே மார்க்கமாகும்.

அதேபோன்று மனிதனுடைய செயல்களுக்காக கேள்விகணக்கு கேற்கப்பட்டு கூலி வழங்கப்படும் நாளொன்று அவசியம் என்பதில் உடன்பட்டோம். அந்நாளில் கேள்வி கணக்கு கேற்கும் அதிகாரத்தைக்கொண்டவன் அல்லாஹ் ஒருவனே எனின் அவ்விசாரணை அவன் இறக்கியருளிய மார்க்க அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்று. அந்தடிப்படையில் இதைத்தவிர மனிதன் கொண்டுவரக்கூடிய எந்த மார்க்கமாக இருப்பினும் அதுபோலியானதே என்பதில் ஐயமில்லை.

எனினும் ஒருவிடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: சமயங்களை பின்பற்றுபவர்களிடம் அவர்கள் பின்பற்றுவதற்கான மூலாதாரத்தைக்கேட்டால், அவர்களில் பெரும்பாலானோர் அவை தங்களுடைய மூதாதையர்களிடமிருந்து பெற்றுக்கொண்டவை என சில கட்டுக்கதைகளைக்கூறுவார்கள். எந்த இடத்தில் எழுதப்பட்டது, எந்தமொழியில் எழுதப்பட்டது, யாரால் எழுதப்பட்டது என ஒரு தகவலுமின்றி சில மரபு நூல்களை வழிப்படுவார்கள். அவையனைத்தும் அறிவியல்ரீதியாக உண்மைப்படுத்தப்படாத மரபுரீதியான தொடரந்துவரும் புரட்டுக்களே. இவற்றிலிருந்து நாம் தவிர்ந்துகொள்ளவேண்டும். இதிலிருந்து சத்தியமார்க்கத்தின் பண்புகளில் ஒன்றான அதன் மூலாதாரத்துடன் உறுதியாக தொடர்புபட்டிருத்தல் என்ற அம்சம் தெளிவாகிறது. அத்தோடு இறைவனிடமிருந்து வந்த மார்க்கத்தை எத்திவைக்கக்கூடிய தூதரின் ஆதாரங்களும் நம்பகத்தன்மையுடையனவாக இருக்க வேண்டும்.

ரஜீவ்: ம்ம்....பரவாயில்லை, அப்படியென்றால் சிந்தனை, அறிவு, இயற்கை, ஏக இறைவன், அவனுடைய பண்புகள், தூதுத்துவத்தின் அவசியம் என நாங்கள் உடன்பட்ட அனைத்தையும் அடிப்படையாகக்கொண்டு செயற்பட வேண்டும்.

மைக்கல்: இவற்றை நாம் ஏற்றுக்கொள்வோமாயின் மார்க்கம் அல்லாஹ்விடத்திலிருந்து இறக்கியருளப்பட்டதாக இருக்க வேண்டும். அவன் ஒருவனையே வணங்க வேண்டும்.

அத்தோடு மார்க்கம் அறிவைப்போற்றவேண்டும்; அதைப்புறக்கணிக்கக்கூடாது என்ற இன்னோர் பண்பையும் அத்தோடு இணைத்துக்கொள்வது அவசியமாகும். மார்க்கம் சீரிய சிந்தைக்கு உடன்பட்டதாக இருக்கவேண்டும். எனவே நேரான மார்க்கம் அல்லாஹ்வுடைய மார்க்கமென்றும் சீரான சிந்தனை அல்லாஹ்வுடைய படைப்பு என்றும் கூறுவோமாயின் அவ்விரண்டும்(மார்க்கம்,சிந்தனை) ஒன்றையொன்று முரணாக வாய்ப்பில்லை.

றாஷித்: ஆம், அவ்வாறுதான். அத்தோடு மேலும் இருவிடயங்களையும் நம்பவேண்டும்.

முதலாவது: முன் சென்றவற்றிலிருந்து நடைபெற சாத்தியமற்ற ஒரு விடயத்திற்கும் சிந்தனையால் கற்பனை செய்ய முடியாத ஒரு விடயத்திற்கும் மத்தியில் பாரிய வேறுபாடுகள் உள்ளன என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே மார்க்கத்திலும் சிந்தனைக்குப்படாத சில விசித்திரங்கள் உள்ளன. அவற்றை மறைமுகமான அம்சங்கள் எனலாம். உதாரணமாக தேவர்கள், ஷைத்தான்கள், நபி(ஸல்) அவர்களுக்கு வஹி அறிவிக்கப்பட்ட முறை, மறுமை நாள் பற்றிய விளக்கங்கள் முதலியவற்றை நம்புவதாகும். எனினும் இவை சிந்தனைக்கு அப்பாற்ப்பட்டவை.

எடுத்துக்காட்டாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரனை நோக்கி விண்கலம் அனுப்புவதையோ அல்லது பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒருவருடன் உரையாடுவதையோ மனிதன் கற்பனை செய்துகூட பார்த்திருக்க மாட்டன். என்றாலும் அவை சாத்தியப்படக்கூடியவை. ஆனால் ஒருவர் 1+1+1=1 எனக்கூறினால், அது எக்காலத்திலும் சாத்தியப்படாது என்பது உறுதி. எனவே இவ்விரு நிலைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் கண்டறிய வேண்டும்,

இரண்டாவது: மேற்குறிப்பிட்ட கூற்றுக்கிணங்க சில மார்க்க விளக்கங்கள் நம் சிந்தனைக்கு எட்டாமல் போகலாம். அவை சிந்தனைக்கு முரணாகாதவிடத்து அவற்றை முழுமையாக நம்புவது அவசியமாகும். எடுத்துக்காட்டாக நீங்கள் ஒருமனிதரை நூறுவீதம் உறுதியானவர் என நம்புகிறீர்கள்; அதை நிரூபிப்பதற்காக உங்களிடம் சில வெள்ளைக்கடதாசிகளில் கையொப்பமிடச்சொல்கிறார். உடனே எந்தக்கேள்வியுமின்றி நீங்கள் அவற்றில் கையொப்பமிடுவீர்கள். அதேநேரம் நீங்கள் அவர்மீது பூரண நம்பிக்கையற்றவராக இருப்பின் அக்கடதாசிகளில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கேள்விகளை எழுப்புவீர்கள். அதேபோன்றே அல்லாஹ்வின் மீதுள்ள சிந்தனைரீதியான உறுதி நம்பிக்கையாகும். மார்க்கவிளக்கங்கள் அந்நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகும்.

மைக்கல்: அவ்வாறாயின் சத்தியமார்க்கத்தின் இயல்புகளில் ஒன்று தான் முன்னுக்குப்பின் முரனாகாமல் இருத்தல். அதாவது ஒன்றை ஒருபுறத்தால் ஏவியும் இன்னொரு புறத்தால் தடுத்தும் அல்லது ஒன்றை ஒருபிரிவினருக்கு மாத்திரம் ஆகுமாக்கியும் மற்றைய பிரிவினருக்கு அதை ஹராமாக்கியும்(தடைசெய்தும்) இருக்கக்கூடாது.

ரஜீவ்: மார்க்கம் மனித வழிகாட்டி எனின், அல்லாஹ்வை வணங்குவதற்கான

நேர்வழி, அவனால் வேண்டப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டி, மனிதன் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை, மனிதன் என்கிருந்துவந்தான் இறுதியாக எங்கு செல்வான் என வாழ்க்கையில் எழக்கூடிய மிகப்பெரும்கேள்விகலுக்கான விடைகள், அமைதி, மனநிம்மதி முதலிய அனைத்தையும் அது உள்ளடக்கியிருக்க வேண்டும். அத்தோடு மனித இயல்போடு ஒத்துப்போகக்கூடியதாகவும் அமையவேண்டும்.

மைக்கல்: *மேற்றுமொரு மிக முக்கியமான ஒன்று: மார்க்கம் நல்லவற்றை ஏவக்கூடியதாகவும் தீயவற்றை தவிர்க்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். உரிமை மீறல், நல்லவற்றை நாசமாக்கல், பலம் வாய்ந்தவர்கள் பலவீனமானவர்களை அநியாயம் செய்தல் போன்ற படைப்பினம் தனக்குத்தானே அல்லது பிறவற்றிட்கு இழைக்கக்கூடிய அநியாயத்திலிருந்து விடுபட்ட ஒரு அருளாகவும் இருக்கவேண்டும்.*

றாஷித்: *ஓ...மார்க்கத்தின் இவ்வனைத்து பண்புகளும் முன்னுக்குப்பின் முரனாகாமல் இருக்கவேண்டும் என்ற நிபாந்தனையைக்கூற மறந்து விட்டோம்.*

மைக்கல்: *ராஷித்! உங்களுடைய மார்க்கத்தைப்பற்றி நான் மிக அரிதாகவே அறிந்து வைத்துள்ளேன். எனவே அதைப்பற்றி நீங்கள் மிகத்தெளிவாக கூற வேண்டும் என ஆசைப்படுகிறேன்.*

றாஷித்: *சரி அதை எங்களுடைய அடுத்த சந்திப்பில் பார்ப்போம்.*

https://www.path-2-happiness.com/ta

மகத்தான மனிதர்

மகத்தான மனிதர்

ராஷித் ஒரு புத்தகத்தை சுமந்தவராக தனது மடிக்கணனியுடன் நண்பர்கள் இருவரையும் நோக்கி வந்தார். அவ்விருவரிடமும் வந்தனம் தெரிவித்தவராக பதிலைக்கூட எதிர்ப்பார்க்காமல் விரைந்து கொண்டே:

நண்பர் மைக்கல்! நீங்கள் கேட்டதற்கான விளக்கத்தை இன்று தரப்போகிறேன். இஸ்லாத்தின் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களை நம்புதல் என்ற கருத்து முரண்பாடற்ற இஸ்லாத்தின் மிக முக்கியமான அம்சத்தை விளக்கப்போகிறேன். உங்களுக்காக மேற்கத்திய சிந்தனையாளர் ஒருவருடைய புத்தகத்தைக்கொண்டு வந்திருக்கிறேன்.முஹம்மத் (ஸல்) அவர்களைப்பற்றி அவர் என்ன குறிப்பிட்டுளார் என விவரிக்கிறேன், கேளுங்கள்.

மைக்கல்: *ராஷித் சற்றுப்பொறுங்கள் நான் கேட்டது கடவுள் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தைப்பற்றியே.*

றாஷித்: *ஆம், அது சரி. என்றாலும் சில காரணங்களுக்காக நீங்கள் கேட்டவற்றிற்கு அப்பால் செல்லவேண்டி இருக்கிறது அவற்றில் மிக முக்கியமானவை.*

இஸ்லாம் நபி (ஸல்) அவர்களுடைய தூதுத்துவத்தை அடிப்படையாகக்கொண்டதெனினும், அதன் இறைமை பற்றிய கண்ணோட்டம் புதிதாக உருவான ஒன்றல்ல. மாறாக ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் ஈசா (அலை), முஹம்மத் (ஸல்) அவர்கள் வரைக்குமுள்ள அனைத்து நபிமார்களும் போதித்த முழு மனித சமுதாயத்தினதும் அடிப்படை மார்க்கமாகும். ஆனால் இடைப்பட்ட காலத்தில் மனித சமுதாயம் அவ்வியற்கை மார்க்கத்தை விட்டும் நெறிபிறழ்ந்து விட்டது. எனவே அதை சீர்செய்து மனிதர்களை மீண்டும் அல்லாஹ் ஒருவனையே வணங்கவேண்டுமென வலியுறுத்தியது. இஸ்லாத்திலுள்ள இவ்வேகத்துவக்கொள்கை மனிதப்படைப்பின் ஆதி முதல் உலகம் அழியும் வரை நிலைத்திருக்கும். காலாகாலம் புது வடிவம் பெறும் ஒரு சுற்று... நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னரான மார்க்கமாகும்.

இரண்டாவது விடயம்: சென்ற கலந்துரையாடல்களில் நாங்கள் உடன்பட்ட அம்சங்கள் இப்புள்ளியை கடந்துசெல்ல போதுமானவை என நினைக்கிறேன்.

ரஜீவ்: *அதாவது... ஏற்கனவே நாங்கள் கலந்துரையாடிய உண்மையான கடவுளின் பண்புகள் இஸ்லாத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கூறுகிறீர்களா?*

றாஷித்: *ஆம், சரியாக சொன்னீர்.*

ரஜீவ்: *அப்படியென்றால், நீங்கள் சொல்லவந்த விடயத்திற்கு முன்னர் இறைமை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை சுருக்கமாக கூறுவது சிறந்தது.*

றாஷித்: *நல்லது.. .இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து படைப்பினங்களையும் படைத்தவன் ஒருவனே. அவன் தனித்துவமானவன், அவனைப்போன்று இப்பிரபஞ்சில் எதுவுமில்லை, இயற்கை நியதிகள் எனக்கூறக்கூடிய*

அனைத்து சட்டங்களையும் உருவாக்கியவன். அவனே.ஒவ்வொரு பொருட்களுக்கும் உரிய தனித்தனி நியதிகளையும், அளவு கோல்களையும் உருவாக்கியவன், அவன் யாவற்றையும் விட மேலானவன்.

அவனுடைய தனித்துவத்திலும்,பண்புகளிலும், செயற்பாடுகளிலும் அவனுக்கு ஒப்பான எதுவுமில்லை. அவன் பரிபூரணமானவன், எவ்வித குறைகளுமற்றவன், அவன் யாரையும் பெறவுமில்லை, எவராலும் பெறப்படவுமில்லை, அவனுடன் வணங்கப்படக்கூடிய அமைச்சர், ஆலோசகர் என எவருமில்லை, அவன் நிகரற்றவன்; உயிர்ப்பிப்பவன்; மரணிக்கச்செய்பவன், அவன் படைப்பினங்களில் தங்கியிருப்பவனல்ல.

ஆட்சி, அதிகாரம் என அனைத்திலும் நிகரற்ற இந்த ஏக இறைவனையே வணங்க வேண்டும். அவனுடைய அனுமதியின்றி அவனிடம் பரிந்துரைப்பவரோ நெருக்கத்தை எற்படுத்தக்கூடிய இடைத்தரகரோ எவருமில்லை. வணக்கத்துக்குரிய நாயன் அவன் மாத்திரமே.

மைக்கல்: நீங்கள் கொண்டுவந்த புத்தகம் எதைப்பற்றி?

றாஷித்: மனித வரலாற்றில் சாதனை படைத்தவர்களைப்பற்றி குறிப்பிடுகிறது; இந்தப்புத்தகம் அமெரிக்க விண்வெளி ஆய்வுமையத்தில் பணிபுரிபவரும், வானியல் மற்றும் கணிதவியல் அறிஞருமான வரலாற்றாசிரியர் கலாநிதி"மைக்கல் எச் ஹார்ட்"குரியது

மைக்கல்: வரலாற்று ஆய்வைப்பற்றி என்ன குறிப்பிட்டிருக்கிறார்?

றாஷித்: இவ்வரலாற்றாய்வு இவ்வுலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக கணிப்பிடப்படுகிறது. .கவனியுங்கள்... கலைக்கலஞ்சியங்கள்(encyclopedia) பல்லாயிரம் மில்லியன் மக்களில் வெறும் (20000)இருபாதாயிரம் பெயரைப்பற்றியே குறிப்பிடுகின்றன, அவர்களில் மிக முக்கியமான 100 பேரை சில அடிப்படை விதிகளுக்கமைய தெரிவு செய்திருக்கிறார். குறிப்பிட்ட நபர் எல்லோராலும் அறியப்பட்ட உண்மையான ஆளுமை மிக்கவராக இருத்தல் வேண்டும். மனித வரலாற்றில் அவருடைய தாக்கம், மோசமானதோ அல்லது நல்லதோ ஆனால் நீண்டதாகவும், ஆழமானதாகவும் இருத்தல் வேண்டும், என்பன அவ்வடிப்படைகளில் முக்கியமான சிலவாகும்.... எனவே எங்களுடைய தலைப்பிற்கு சிறந்தவொன்று எனக்கருதுகிறேன்.

றாஜீவ்: இந்த நூலாசிரியர் பார்வையில் மிகச்சிறந்த ஆளுமை எது?

றாஷித்: இந்நூலாசிரியர் அவர் தெரிவு செய்யத 100 பேரில் முதலிடத்தை முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கியுள்ளார். அதற்காக சில காரணங்களையும் தெளிவுபடுத்துகிறார்....

என்று கூறியவராக ராஷித் புத்தகத்தை திறந்து வாசிக்கலானார்.

((இதில் முதலிடத்தை முஹம்மதுக்கு வழங்கியுள்ளேன். இத்தெரிவிற்காக பலர்

ஆச்சரியப்படுவது நியாயம் தான். எனினும் உலக மற்றும் சமய பகுதிகளில் வரலாற்று ரீதியாக மிகப்பெரும் வெற்றிகண்ட மனிதர் முஹம்மத் அவர்களே.

அவர் இஸ்லாத்தின் பால் மக்களை அழைத்தார். மிகப்பெரிய சமயங்களில் ஒன்றாக மாறும் அளவு அதைப்பரப்பினார். மார்க்கத்தலைவராக மட்டுமல்லாது இராணுவ, அரசியல் தலைவராகவும் விளங்கினார். அவர் இறந்து 13 நூற்றாண்டுகளின் பின்னரும் அவருடைய தாக்கம் பலமானதாகவும் புதுப்பிக்கப்படக்கூடியதாகவும் இருக்கிறது)).

மேலும் கூறுகிறார் ((கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களைவிட இருமடங்கினராக இருந்த போதும் முஹம்மத் முதளிடத்தைப்பிடித்திருப்பது ஆச்சரியமாகத்தோன்றலாம். இயேசு கிறிஸ்து மூன்றாம் இடத்தையும், மோசஸ் (மூஸா (அலை)) 16 ஆம் இடத்தையும் பிடித்திருக்கின்ற அதேவேளை முஹம்மத் (ஸல்) அவர்கள் முதலிடத்தை பிடித்திருப்பது புதுமையாக இருக்கலாம்.

அதற்கு சில காரணங்கள் உள்ளன: கிறிஸ்தவ மதத்தில் இயேசு கிறிஸ்து அவர்களுடைய பங்களிப்பைவிட இஸ்லாமிய மதத்தில் அதைப்பரப்புவதிலும், வேரூண்டச்செய்வதிலும், மார்க்கசட்டதிட்டங்களை சீராக அமைப்பதிலும் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய பங்களிப்பு மகத்தானது. இயேசு கிறிஸ்து அவர்கள் கிறிஸ்தவ மதத்தின் பண்பாட்டு அடிப்படைகளில் பெரும்பங்காற்றியுள்ளபோதும், புனித பவுல் அவர்களே மார்க்க சட்டவாக்கங்களை சீரமைப்பதிலும் பைபிளில் (புதிய ஏற்பாட்டில் அதிகமானவற்றை எழுதுவதிலும் பெரும் பங்காற்றியுள்ளார்.

ஆனால் இஸ்லாத்தைப்பொருத்தமட்டில் அதன் சட்டவாக்க அடிப்படைகள், மார்க்கசட்டங்கள், மற்றும் மனித சமுதாயத்தின் இம்மை, மறுமை வாழ்க்கைக்கான சமூக பண்பாட்டு விழுமியங்கள், நடைமுறை அலுவல்கள் முதலியவற்றை கட்டியெழுப்புவதில் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய பங்களிப்பே மிக முக்கியமாகும். முஸ்லிம் சமுகத்தின் இம்மை, மறுமை வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் போதித்துள்ள அல்குர்ஆன் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒருவருக்கே இறக்கப்பட்டது)) என்ன.. இவர் கூறுவது ஆச்சரியமாக இருக்கிறதா?

ரஜீவ்: ம்...சற்று சந்திக்க வேண்டிய விடயமே, என்றாலும் நான் ஒன்றைக்கூற அனுமதியுங்கள், அதாவது: இந்த ஆசிரியர் (மைக்கல் எச் ஹார்ட்) ஒரு மனிதவியலாய்வு நிபுனர் அல்ல.

ராஷித்: ம்...அவர் ஒரு மனிதவியலாய்வு நிபுனர் இல்லாவிடிலும் அவர் கூறுவது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்று. ஒரு யூதனாக இருந்து கொண்டு நபி (ஸல்) அவர்கள் விடயத்தில் பாரபட்சம் காட்டுவார் என்றால் அதை எவராலும் நம்பமுடியாது. நீங்கள் மேலும் பல ஆதாரங்களை விரும்பினால் அவற்றையும் கூறுவேன்.

பின்னர் ராஷித் தனது மடிக்கணணியை இயக்கச்செய்து தனது நண்பரை நோக்கி:

நண்பரே இதோ பாருங்கள் (எனக்கூரியவராக அதிலுள்ளவற்றை வாசிக்கலானார்)

ப்ரான்சியக்கவிஞர் லமர்தைன் குறிப்பிடுகையில் ((முஹம்மத் (ஸல்) அவர்கள் அடைந்த உயர்ந்த அந்தஸ்தையும் மதிப்பையும் அடைந்தவர் யார்? அவர் இறைவனுக்கும் மனிதனுக்கும் மத்தியில் இடைத்தரகர்களை ஆக்கிக்கொள்ளல் போன்ற போலியான கோட்பாடுகளை தகர்த்தெறிந்தார்.))

ஜேர்மனிய கவிஞர் முதலாம் கொத் (GOETHE) குறிப்பிடுகையில் ((மனித இனத்தில் மிகச்சிறந்த உதாரணம் யாரெனத்தேடினேன் அரபுதேசத்தைச்சேர்ந்த முஹம்மத் (ஸல்) அவர்களை கண்டு கொண்டேன்.))

ரஷ்யாவைச்சேர்ந்த தத்துவமேதையும், இலக்கியவாதியுமான டோல்ஸ்டோய் கூறுகையில்: ((நான் முஹம்மத் நபியால் கவரப்பட்டவன்; இறுதி இறை செய்தியை வழங்குவதற்காகவும், இருதித்தூதராகவும் அல்லாஹ் அவரை தெரிவு செய்துள்ளான்.))

இஸ்லாத்திற்கான நோபல் பரிசு பெற்ற அயர்லாந்தைச்சேர்ந்த எழுத்தாளரும் சிறந்த சிந்தனையாளருமான ஜோர்ஜ் பெனர்ட் குறிப்பிடுகையில் ((இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் நபியின் சரித்திரத்தை நான் பலதடவை வாசித்தேன். இஸ்லாம் அறிஞரின் வழிமுறை என்று என்னும் அளவுக்கு நற்குனங்களால் நிரம்பியிருந்தது. முஹம்மத் ஓர் ஆச்சரியமான மனிதர் என எண்ணி அவரைப்பற்றி ஆய்வு செய்தேன்.மனிதாபிமானத்தை பாதுகாத்தவர் என்று போற்றப்படும் அளவு இயேசு கிரிஸ்துவைவிட மேலானவராகக்கண்டேன்)).

மைக்கல்: *நீங்கள் கூறிய அனைத்தும் முஹம்மதுடைய மகத்துவத்தைப்பற்றியாகும். அவர் ஒரு தூதர் என்பதற்கு என்ன ஆதாரம்?*

றாஷித்: *அருமை நண்பரே! சுவிஸ் நாட்டைச்சேர்ந்த தேய்வீகக்கோட்பாட்டாளர் கலாநிதி ஹென்ஸ் கொங் குறிப்பிடுவதையும் சற்று கேளுங்கள் ((முஹம்மத் ஒரு உண்மையான நபியாவார், அவர்வெற்றிக்கான பாதையை நோக்கி வழிநடத்தக்கூடிய ஒரு தளபதி என்பதை எம்மால் மறுக்க முடியாது))*

முஹம்மத் இறைதூதர் என்பதற்கு இவையல்லாத பல ஆதாரங்கள் உள்ளன.

மைக்கல்: *நீங்கள் கொண்டு வந்திருந்தால் அவற்றில் சிலதை சமர்ப்பிக்கலாம்.*

மடிக்கணினியில் பதியப்பட்டிருந்த சில பக்கங்களை ராஷித் புரட்டியவராக:

முஹம்மத (ஸல்) அவர்கள் ஓர் உண்மையான இறைத்தூதர் என்பதற்கு இறைவனால் அருளப்பட்ட வேதங்களில் பல ஆதாரங்கள் உள்ளன தவறாத் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது {உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழுப்பப்பன்னி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்.} [உபாகமம் 18 : அத்தியாயம் 18] பனூ இஸ்ரவேலர்களுடைய சகோதரர்கள் அரேபியர்கள். அவர்கள் (அரேபியர்களே) பனூ இஸ்மாயீல் என்றழைக்கப்படுவர். அவ்வாறே மோசஸ் (மூசா அலை), முஹம்மத் (ஸல்) ஆகிய இருவருக்குமிடையிலுள்ள பொருத்தப்பாடுகள் ஏனைய தூதர்களை விட மிக நெருக்கமானவை. ((என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்))

என்ற வசனத்தின் மூலம் அவர் ஒரு உம்மி (எழுதப்படிக்கத்தெரியாதவர்) என விளங்கிக்கொள்ளலாம்.

இன்ஜீல் வேதம் யோவான் 14 : அத்தியாயம் 15: இதில் குறிப்பிடப்பட்டுள்ள வர்க்யுலைட் (VARKULAIT) என்ற பதத்தின் அடிப்படையில் யூனானிய மொழியில் பெரிக்யூளைடஸ் (PERIQLYTOS) என்பதாகும். இச்சொல் புகழுக்குரியவர் அல்லது புகழப்பட்டவர் என்ற அர்த்தத்தை வழங்கும்.அரபியில் நபி (ஸல்) அவர்களுடைய (محمد) பெயரின் அர்த்தமும் புகழுக்குரியவர் என்பதே.

இது தவிர மறைவான விடயங்களை அறிவித்தல், ஒன்றின் ஆரம்பத்திலேயே அதன் முடிவுகளை அறிவித்தல், அவருடைய தூதுத்துவத்தின் அறிவியல் அற்புதம் என ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

மைக்கல்: எங்கே? எங்கேயுள்ளன? எங்களுக்கு காட்டுங்கள்.

றாஷித்: நபி முஹம்மதுக்கு வழங்கப்பட்ட மிகப்பெரும் அற்புதமான அல்குர்ஆனில் ஏராளமாக உள்ளன.

ரஜீவ்: அவ்வாறெனின் உங்களுடைய மார்க்கத்தையும், தூதரையும் பற்றியறிய முதலில் குர்ஆணைப்பற்றி அறியவேண்டும்.

றாஷித்: ஆம் , சரியாக சொன்னீர்... அடுத்த உரையாடல் அதைப்பற்றிதான்.

மைக்கல்: பிரிந்துசெல்லமுன் ஒருவிடயம்... உங்களுடைய அந்தப்புத்தகத்தை.. எங்கு பெற்றுக்கொள்ளலாம்?

றாஷித்: இது என்னிடம் நீண்ட நாட்களாகவுள்ளது; இதன் புதிய பதிப்பொன்றை விடுதிக்கு அருகாமையில் உள்ள நூலகத்தில் கண்டேன். அடுத்தமுறை வரும்போது அங்கே சென்றுவிட்டு வரலாம்.

இறுதி உரை

இறுதி உரை

நண்பர்கள் மூவரும் உடன்பட்டதற்கினங்க விடுதிவாயலில் சந்தித்து கொண்டனர். றாஷித் அவ்விருவரையிம் "நூறு பேர்" என்ற புத்தகம் இருக்கக்கூடிய வாசிகசாலைக்கு அழைத்துச்சென்றார். மைக்கல் நூல்களை வாசித்தவராக புத்தக இறாக்கையருகே நின்றுகொடிருந்தபோது தீடிரென ஏதோவொன்றை பார்த்தவராக றாஷிதை நோக்கி.

றாஷித்! இதோ இந்த தகவலை பாருங்கள். இஸ்ரேலிய நூலகமொன்றில் குர்ஆனின் பழமையான கையேடு கண்டுபிடிப்பு. இன்று இதைப்பற்றி உரையாடலாம்.

றாஷித்: இந்தக்கையேடு எப்படி இஸ்ரேலிய நூலகத்திற்கு வந்ததெனக் கேற்கிறீர்களா? இச்செய்தியை இனையதளத்தில் நேற்றே வாசித்துவிட்டேன். அந்தக்கையேடு கூட்டணிப்படை யுத்தத்தின்பின்னர் ஈராக்கிலிருந்து திருடப்பட்டது என சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

மைக்கல்: இல்லை இல்லை, நான் அதை நாடவில்லை. மாறாக குர்ஆனின் மூலப்பிரதி உங்கள் கைவசமே இருக்கிறது. இது குர்ஆனின் நம்பகத்தன்மையை எடுத்துகாட்டுகிறது. இச்செய்தி; அக்கையேடு சுமார் 1200 வருடங்களுக்கு முன், அதாவது மூலப்பிரதி தொகுக்கப்பட்டு 200 வருடங்களின் பின் எழுதப்பட்டது என தெரிவிக்கிறது. உன்மையில் திகிழான செய்திதான்.

றாஷித்: ஆரம்பமாக... இன்றுவரை கண்டுபிடிக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதிகளில் அது மிகப்பழமை வாய்ந்ததல்ல. ரஷ்யர்கள் மிகப்பழமையான அல்குர்ஆன் பிரிதி அவர்களுடைய அருட்காட்சியத்திலுள்ளாத கூறுகிறார்கள். ரஷ்ய ஆய்வாளர் யபிம் ரிழ்வான் அவர்களிடமுள்ள குர்ஆன் பிரதிகளாவன கி.பி 8ஆம் ,9ஆம் நூண்றாண்டுகளுக்குரியவை என உறுதிப்படுத்தியுள்ளார்.

அதே நேரத்தில் எகிப்தியர்கள் கெய்ரோவிலுள்ள அல்ஹுஸைன் அருங்காட்சியத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் பிரதியே மிகப்பழமையானது எனக்கூறுகின்றனர். உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் எழுதப்பட்ட குர்ஆன்களில் ஒன்றான அப்பிரதி சுமார் 1400 வருடங்கள் பழமைவாந்தது.

1972 ஆம் ஆன்டு ஸன்ஆ பல்கலைக்கழகம் புணர்நிர்மான பணியின் போது கண்டுடெடுக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதி இஸ்லாத்தின் முதல் கலீபா அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களுடைய காலத்திற்குரியது என யமனியர்கள் கூறுகிறார்கள்.

இவையனைத்தும் சரியாகஇருக்கலாம். ஏனென்றால் அல்குர்ஆன் பிரதிகள் எழுதப்பட்டு உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பட்டன.

இரண்டாவதாக... இன்று முஸ்களின் கையில் தவழக்கூடிய அல்குர்ஆன் நபியவர்களின் காலத்தில் எவ்வாறு இருந்ததோ அதேபோன்று எவ்வித திரிவுமின்றி காணப்படுகிறதென்பது கீழேத்தேயவாதிகளாலும் மார்க்க அறிஞர்களாலும்

ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். எனினும் வரலாறு ரீதியாக உறுதிபடுத்தப்படாத பரிசுத்தவேதாகமத்தை நம்பக்கூடியவர்கள் அல்குர்ஆன் இறைவனிடமிருந்து அருளப்பட்ட வேதநூல் என்பதை ஏற்கமறுக்கிறார்கள்.

ப்ரான்ஸை சேர்ந்த சமூகவியலாளரும் கீழேத்தயவாதியிமான என்ஸ் ரீனன் குறிப்பிடுகையில் ((குர்ஆனில் எவ்வித திரிபோ, மாற்றமோ, நிகழ்ந்திருக்க இடமில்லை.)) எனக்குறிப்பிட்டார்.

தற்போது நாங்கள் கொள்வனவு செய்வதற்காக வந்த நூலின் ஆசிரியர் மைக்கல் எச் ஹாட் குறிப்பிடுகையில்: ((வேதநூட்களில் முஹம்மதுக்கு வழங்கப்பட்ட அல்குர்ஆனை தவிர எந்தவொன்றும் பரிபூரண வடிவில் இல்லை.)) ஆனால் ஜேர்மனிய கவிஞர் கொத் சற்று அதையிம் தாண்டி குறிப்பிட்டுள்ளதாவது ((அல் குர்ஆனே நூட்களில் மிக உன்னதமான நூலாகும்; முஸ்லீம்கள் நம்புவதை போன்றே நானும் அதை நம்புகிறேன்" அவர் எழுவதை வயதை அடைந்தபோது முஹம்மத் நபி ஸல் அவர்களுக்கு அல்குர்ஆன் இரக்கியருளப்பட்ட கண்ணியமான இரவை பயபக்தியுடன் களிக்கப்போவாத பகிரங்கமாக அறிவித்தார்.

ரஜீவ்: ஆம், இன்று எங்களுடைய தலைப்பு இதுதான்: அல்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட இறைசெய்தியா?. இஸ்லாம் இறைவனால் அருளப்பட்ட மார்க்கமா?

றாஷித்: அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்டது மட்டுமல்ல; ஒரேயொரு சரியான மார்க்கமும் அதுவே.!

மைக்கல்: எங்களின் சப்தம் நூலக வாடிக்கையாளர்களுக்கு இடைஞ்சலளிக்கு மல்லவா வாருங்கள் சற்று ஓரமாக செல்வோம்.

ரஜீவ் (றாஷிதை நோக்கி): இருக்கலாம் , ஆனால் எப்படி நம்புவது?!

றாஷித்: நேரத்திற்கேற்ப சுருக்கிக் கொள்கிறேன்; அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை, முஹம்மதின் வார்த்தையன்று. மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட அல்லாஹ்வின் அறிவை பிரதிபழிக்கக்கூடிய அதன் அற்புத பக்கங்கள் சிலதை தெளிவுபடுத்துகிறேன்:.

மைக்கல்: நாங்கள் ஏற்றுகொள்ளக்கூடிய அறிவியல் மற்றும் சிந்தனை ரீதியாக விள்க்குங்கள்.

றாஷித்: தேவாலயங்களை பின்பற்றுபவர்கள் வேதநூட்களை பரிசுத்த வேதாகம் என்பர். பரிசுத்தமான, உன்மையான கடவுள் எவ்வாறு குறைகளைவிட்டும் முழுமையான முறையில் பரிசுத்தமாக இருக்க வேண்டுமோ, அவ்வாறே வேதநூட்களும் குறைகள், தவறுகளை விட்டும் தூய்மையாக இருக்க வேண்டும். வேதாகமம் அறிவியலை எதிர்த்ததன் விளைவால் அறிஞர்களுக்கும் திருச்சபைக்கும் மத்தியில் மூண்ட யுத்தத்தைபற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆயினும் இது சம்பந்தமாக குர்ஆனுடைய அறைகூவலை நோக்கவோம்.

சமகாலத்து இஸ்லாமிய அறிஞரான அப்துல் மஜீத் சந்தானி சிசு உருவாக்கத்தின் விந்தனுதொடக்கமுள்ள முதற் கட்டங்கள், இரு விந்தனுக்களின் சேர்க்கையினால் உருவாகும் மனிதப்படைப்பு, சிசு உருவாக்கம் தொடக்கம் குழந்தையாக வெளியாகும் கட்டங்கள் முதலியவற்றை விளக்கங்கூடிய திருமறை வசனங்கள் தொடர்பாக அமெரிக்காவின் நொரிஸ் வெஸ்டன் பல்கலைக்கழக பிரசவவியல் நோய்கள் தொடர்பான பேராசியர் ஸெம்ஸன் உடன் உரையாற்றினார். இதன்போது ஒரு மனிதப் பிறவி விந்தனுவாக இருக்கும்போது அதன் அனைத்து கட்டங்களும் நிர்னயிக்கபடுகின்றன என்பதை உறுதிபடுத்தினார். விஞ்ஞான உண்மை அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதாவது {எப்பொருளிருந்தும் அல்லாஹ் அவனை படைத்தான் (என்று சிந்தித்தானா) ஒரு துளி இந்திரியத்திளிருந்து அவனை படைத்தான். பின்னர், அவனுக்குரிய அனைத்தையிம் அவன் நிர்னயித்தான்} [ஸூரா அபஸ:வசனம் 17,19] இவ்விளக்கங்களை அப்பேராசியர் செவிமடுத்தபின் ஒரு மானாட்டில் இது தொடர்பாக அவருடைய கருத்தை இவ்வாறு தெரிவித்தார்: "நாங்கள் ஆய்வு செய்யக்கூடிய அனைத்தையும் அல்குர்ஆன் பல நூற்றான்டுகளுக்கு முன்னரே தெளிவுபடுத்தியுள்ளது. அல்குர்ஆன் இறைவனின் வார்த்தை என்பதற்கு இது வொரு சான்றாகும்.

சற்று பொருங்கள்! எனது மடிக் கணனியில் உள்ள மேலும் சில ஆதாரங்களை வாசித்து காட்டுகிறேன்: எட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட உலக அறிவியல் பெட்டகம் என வர்ணிக்கப்படும் (the human developing) என்ற நூலின் ஆசிரியர், பேராசியர் இச்மோர் ஒரு மாநாட்டில் கூறியதாவது: "குர்ஆனில் கூறப்பட்டுள்ள சிசு உருவாக்க முறைகள் தொடர்பான உண்மைகள் ஏழாம் நூறான்டு விஞ்ஞான முறைக்கு அப்பாற்பட்டவை.

முஹம்மத் எழுதப்படிக்கத் தெரியாத சாதாரன மனிதர். ஆகையால் இவற்றை விஞ்ஞான ஆய்வின் ஊடாக அறிநதிருக்க வாய்ப்பில்லை. எனவே இவை அனைத்தும் இறைவனிடமிருந்து அவர் பெற்ற வஹியாகும்." பேராசிரியர் இச்மோர் அதோடு நின்று விடவில்லை மாறாக அவரின் நூலின் ஒவ்வொரு பகுதியிலும் சிசு தொடர்பான அறிவியல் உண்மைகளை பேசக்கூடிய அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் வசனங்களை இனைத்துள்ளார்.

டோக்யோ:"குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை என ஏற்றுக்கொள்வதில் எந்த சங்கடமுமில்லை. அதிலுள்ள சிசு உருவாக்கம் தொடர்பாக கூறப்ட்டுள்ள விஞ்ஞான உண்மைகள் ஏழாம் நூற்றான்டின் அறிவியலுக்கு அப்பாற்பட்டவை." என்ன.. இது போதுமா?!

ரஜீவ்: *அல்குர்ஆனில் வேறு ஏதாவது துறைகள்பற்றியும் கூறப்பட்டுள்ளதா?*

றாஷித்: *ஆம், என்னிலடாங்காத துறைகள் பற்றி கூறப்பட்டுள்ளன. நவீன விஞ்ஞானத்தால் உறுதிப்படுத்தப்பட்ட சில வரலாற்று உன்மைகளையும் பற்றி கூறுகிறது. எடுத்துக்காட்டாக: மூஸா (அலை) பரோவா மன்னர் (பிர்அவ்ன்) ஆகியோருடைய சம்பவத்தை எடுத்துகொள்வோம். ப்ரோவா மன்னர் மூழ்கி*

இறந்ததாகவும் அவருடைய பிரேதம் பின்னால் வரக்கூடிய சந்ததியினருக்கு ஓர் அத்தாட்சியாக பாதுகாக்கப்படும் எனவும் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. {இன்றைய தினம் உன்னை உனது பிரேதத்துடன் பின்னால் வரக்கூடியவர்களுக்கு பாதுகாப்போம்} [யூனுஸ்:92] இதில் மூன்று விடயங்கள் உள்ளன.

01.பரோவா மூழ்கி இறந்தான்.

02. தண்ணீரில் உக்கிப்போகாமல் அவனது பிரேதத்தை பாதுகாத்தல்.

03.பின்னர் வரக்கூடிய சந்த்தியினருக்கு ஓர் அத்தாட்சியாக பாதுகாத்தல்.

இன்றைய விஞ்ஞானம் உறுதிபடுத்தியுள்ளது நபி ஸல் மரணித்து சுமாராக 1200 வருடங்களின் பின்னர் கி.பி.1898ஆண்டு பிர்அவ்னின் சடலம் (மம்மி) கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி.1981 ஆம் ஆண்டு பேராசிரியர் மொரீஸ் பொகே யினுடைய தலைமையிலான பிரான்ஸிய ஆய்வாளர்கள் குழு நவீன கருவிகளால் மேற்கொண்ட பரிசோதனையின் முடிவில் பிர்அவ்ன் நீரில் மூழ்கியே மரணமானான் எனத் தெரியவந்தது. இறுதியில் மொரீஸ் பொகே இஸ்லாத்தை ஏற்றதோடு மிக முக்கியத்துவம் வாய்ந்த அவருடைய நூலான "அல்குர்ஆன், தவ்ராத், இன்ஜீல், அறிவியல், நவீன விஞ்ஞான ஒழியில் பரிசுத்த வேதங்கள் ஓர் ஆய்வு" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

அது மட்டு மன்றி அல்குர்ஆனில் இது தவிர்ந்த பல துறைகளுடன் தொடர்புபட்ட அற்புதங்கள் மறைந்து காணப்படுகின்றன. [சூறா அற்றூம்: 1-3]முதல் வசனம் தொடக்கம் மூன்று வரையுள்ள வசனங்களை நோக்குவோம். இவற்றில் இரு அற்புதங்கள் பொதிந்துள்ளன. முதலாவது: பாரசீகர்களிடம் தோல்வியுற்ற ரோமர்கள் மீண்டும் அவர்களை சில (பில்உ) வருடங்களில் (அறபியில் பில்உ என்ற பதம் ஒன்றிட்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்டதை குறிக்கும்) வெற்றி கொள்ளல். அல்குர்ஆன் வாக்களித்த இவ்விடயம் ஏழு வருடங்களின் பின்னரே நிரூபனமானது. கி.பி.627 ம் ஆண்டு பாரசீகருக்கும் ரோமருக்கும் இடம் பெற்ற யுத்தத்தில் ரோமர்கள் வெற்றி பெற்றனர்.

இரண்டாவது அற்புதம்: அக்காலத்தில் எவ்வழியிலும் அறிந்திருக்க முடியாத புவியியல் உண்மையை பற்றி குறிப்பிட்டுள்ளது. அதாவது; யுத்தம் புவியின் மிக தாழ்ந்த பிரதேசத்திலே நடைபெற்றது. அரேபியில் "அத்னா" என்ற பதம் மிக நெருங்கிய, தாழ்ந்த என்ற இரு அர்த்தங்களை குறிக்கும். இவ்விரு அர்த்தங்களும் சரியான கருத்தையே தருகின்றன. முதல் அர்த்தத்தின் படி (மிக நெருக்கமான) யுத்தம் அரேபிய தீபகத்திற்கு மிக அன்மிய பிரேதசத்திலே நடைபெற்றது. இரண்டாம் (மிகத் தாழ்ந்த) அர்த்தத்தின் படி செயற்கை கோள்களால் மிக வரண்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்ட, கடல் மட்டத்திலிருந்து 400 மீற்றர் தாழ்வில் அமைந்துள்ள புவியின் மிக தாழ்ந்த பிரதேசத்திலே திகழ்ந்தது. செங்கடலை அன்டியுள்ள புவியின் மிக தாழ்ந்த பிரதேசத்தில் நிகழ்ந்ததாக வரலாறு சான்று பகர்கிறது.

மைக்கல்: *நாஷித்! இவை போதுமென நினைக்கிறேன்.*

ரஜீவ்: *ஆனால் நான் மேலும் அறிய ஆவலாக உள்ளேன். புவியியல், வானியல் போன்ற வேறு துறைகளையும் பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதா?*

றாஷித்: *ஆம், வாணியல் மாத்திரமல்ல பிரபஞ்சம், மனித உருவாக்கம், வேதியல், ,தாவரவியல், விலங்கியல், ,உடலியல், ஒளியியல், வரலாறு, கணிதவியல் என அறிவியல் துறைகளுடன் இலக்கண, இலக்கிய துறைகள் பற்றியும் அல்குர்ஆன் உரையாற்றுகிறது.*

மைக்கல்: *நாங்கள் பேச வேண்டிய தலைப்புகள் ஏற்றமானதாக உள்ளன. என்றாலும் எங்கள் நண்பர் ரஜீவை விட்டும் பிரிவதை நினைத்தால் சற்று கவலையாகயுள்ளது. ரஜீவ் நாளை நாம் புறப்படவுள்ளோம்.*

றஜீவ்: *நீங்கள் பிரிந்து செல்வதால், மிக கவலையாகவுள்ளது. உங்களை சந்தித்தில் மகிழ்ச்சியாகயுள்ளது அத்தோடு உங்களுடைய உரையாடலும் அதிகம் பிரயோசனமளித்தன. எங்கள் தொடர்புகளை இனையத்தள பக்கம் ஊடாக மேற்கொள்ளலாம் .*

றாஷித்: *நல்ல யோசனை. சரி ஓர் நல்ல நினைவிற்காக இப்பொருத்தமான நேரத்தில் விழா ஒன்றை ஏற்பாடு செய்தால் என்ன?.*

மைக்கல், ரஜீவ்: *ஆம், நல்ல யோசனை...*

அழகிய நன்றிக்கடன்

அழகிய நன்றிக்கடன்

றாஷித், மைக்கல் இருவரும் லண்டனை நோக்கி புறப்படவிருந்த புகையிரதத்தில் ஏறி அமர்ந்து கொண்டனர். புகையிரதம் காற்றை கிழித்து கொண்டு சிட்டென பறந்துசென்றது. மைக்கல் றாஷிதை நோக்கி:

நீங்கள் உரையாற்றும் போது அதிகமாக ஒரு விட.த்தை பற்றி குறிப்பிடுவீரகள். அதுதான்: "மனிதன் படைக்கப்பட்ட நோக்கம்" மனிதன் அல்லாஹ்வை வணங்குவதற்காக படைக்கப்பட்டுள்ளான் எனக் கூறினீர்கள். என்னை போன்ற பல பேருக்கு சில நேரங்களில் எழக்கூடிய கேள்விதான்; இவ்வுலகி/ல் மனிதன் எதற்காக உள்ளான்? ஏன் இந்த சோகம்? இப்பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்குமிடையில் ஏன் இந்த மோதல்? ஹ்ம்... இவை முக்கியமான கேள்விதானே?

றாஷித்: *ஆம் மிக முக்கியமான கேள்விதான். இவை மேற்கத்திய கலாச்சாரத்தோடு தொடர்புபட்டவை என நினைக்கிறேன். அதாவது மேற்கத்திய சட வாத கலாச்சாரத்தின் அடிப்படை கட்டமைப்புகளுடான மோதல்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் அவை கடவுள்களுக்கிடையிலான மோதல், மனிதர்களுக்கிடையிலான மோதல், மனிதனுக்கும் இயற்கைக்குமிடையிலான மோதல், ஆத்ம சக்திக்கும் தீய சக்திக்குமிடையிலான மோதல் என கிரேக்க, உரோம நாகரீக சிந்தனையாள் உருவானவை. மேற்கத்திய நாகரீகத்தில் பரவலாக காணப்படும் சட வாத விளைவாலான ஆன்மீக வெறுமையாக்கத்தையும் குறிப்பிடலாம்.*

மைக்கல்: *மனிதன் வாழத்தகுந்த, இதற்கு மாற்றீடான வழிமுறையொன்றை நீங்கள் வைதிருப்பது போன்று பேசுகிறீர்கள்.*

றாஷித்: *விடயம் என்னவெனில்; இஸ்லாத்தை பொறுத்தமட்டில் ஒரு முஸ்லிம் சரியான முறையில் ஈமான் கொள்வானேயானால் இவ்வாறான தடு மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டிய அவசியமில்லை. இஸ்லாத்திடனூடாக அவன் எங்கிருந்து வந்தான், எங்கு மீளுவான், இவ்வுலக யதார்த்த நிலை, இவ்வுலக வாழ்க்கையின் நோக்கம், அவன் எதற்காக இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டான் என அனைத்து கேள்விகளுக்கான விடைகளையும் அறிந்து கொள்கிறான்.*

மைக்கல்: *என்னிடம் இருந்த கேள்விகள் போதாததற்கு மேலும் பல சந்தேகங்களை எழுப்பிவிட்டீர்கள். இந்த கேள்வி தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம் என்ன?.*

றாஷித்: *ஒரு முஸ்லிம் எப்பொழுதும் இப்பிரபஞ்சம் மற்றும் அத்தோடு தொடர்புபட்டவைகளோடும் ஒத்துபோகக் கூடியவன். இவையனைத்தும் அல்லாஹ்வை முழுமையாக வழிபடுவதிலும் அவனை துதி செய்வதிலும் தங்கியுள்ளன. "இப்பிரபஞ்சத்தில் அல்லாஹ்வை துதிப்பவன் யார்" என்ற வசனம் அல் குர்ஆனில் பல இடங்களிள் வந்துள்ளது. அதேபோன்று "தஸ்பீஹ்" தூய்மைபடுத்தல் என்ற சொல் முப்பதுக்கும் மேற்பட்ட தடவைகளும், இக்கருத்தை அறிவிக்கக் கூடிய இது*

அல்லாத வேறு சொற்கள் பல தடவைகளும் இடம் பெற்றுள்ளன. எனவே ஒரு சிறந்த முஸ்லிம் அல்லாஹ்வை தூய்மைப்படுத்தக்கூடிய இப்பிரபஞ்சத்தின் ஒரு அங்கமாவான். எனவே அவன் இப்பிரபஞ்சத்தோடு ஒத்துப்போகக் கூடியவன்.

அதன் இயல்பிட்கேற்ப இசைபவன்; அதை உற்ற தோழனாக நோக்குபவன். இப்பிரபஞ்சத்தில் உள்ளவை மனிதனுக்காக வசப்படுத்திகொடுக்கப்பட்டுள்ளன என அல்குர்ஆனில் இருபதுக்கும் மேற்பட்ட தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மைக்கல்: இதன் பின்னனியில் என்னவிருக்கிறது? இதனால் என்ன ஏற்படப்போகிறது?

றாஷித்: ஒரு மனிதனுடைய வாழ்க்கை சுபீட்சமானதாக அமையவேண்டுமெனின் சரணடைதல், அடிபனிதல், வழிப்படுதல், பரிசுத்தமடைதல், மன நிம்மதி ஆகிய ஐந்து அம்சங்களும் தேவை. இவற்றினூடாக அவன் முழு பிரபஞ்சத்தையும் உள்வாங்கும் வணக்கவழிபாடு என்ற குடையின் கீழ் வருகிறான். இவை ஐந்தும் இஸ்லாத்தை குறிக்கும் பதங்களாகும்.

மைக்கல்: இதை மேலும் தெளிவாகக் கூற முடியுமா?

றாஷித்: மனிதன் மற்றும் பிரபஞ்சத்திற்கிடையிலான இத்தொடர்பை அவன் தனதாக்கியுள்ளான்; மன அமைதி அடைகிறான். இதனால் அவனுடைய வாழ்க்கை ஒருமுகப்படுத்தபட்டதாக அமைகிறது. உணர்வு ரீதியிலான ஒருமைபாட்டிலிருந்து நடத்தைசார் ஒருமைப்பாட்டை நோக்கி நகர அவனால் முடியுமாகும். ஆன்மா, சிந்தனை, உடல் என மனிதத்தின் அனைத்து பகுதிகளையும் கவனத்திற்கொன்டு வாழ்க்கையை நடுநிலையாக கொன்டுசெல்லக்கூடிய ஆற்றல் உருவாகும்.

அல்லாஹ் இவ்வுலகிலுள்ள அனைத்தையும் எங்களுக்காகவே படைத்துள்ளான் என்பதை ஒரு முஸ்லிம் நன்கு அறிவான். {அவன் எத்தகையவன் என்றால், பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகவே படைத்துள்ளான். பின்னர், அவன் வானத்தை படைக்க கருதிய போது அவைகளை ஏழு வானங்களாக ஒழுங்கு படுத்தினான். மேலும் அவன் ஒவ்வொரு பொருளையும் நன்கு அறிந்தவன்} [அல் பகரா :வசனம் 29] {இன்னும் வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தும் தன்னிடமிருந்து உங்களுக்காக அவன் வசப்பட்டுத்திக் கொடுத்துள்ளான். நிச்சயமாக, இதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன} [அல் ஜாசியா :வசனம்13] அவற்றை எவ்வித தொடர்புமின்றி அவன் வீனாக ப்படைக்கவில்லை என்பதையும் அவன் நன்கு அறிவான். எனவே மனிதனுக்கும் அவனுக்குமிடையில் உள்ள தொடர்பை ஏற்படுத்தக்கூடிய பகுத்தறிவை அல்லாஹ் அருளியிருக்கிறான். ஏனெனில் அல்லாஹ் திருமறையில் {நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான். அவன் எத்தகையவன் என்றால் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களின் படைத்தான். பின்னர் அவன் அர்ஷின் மீது அமர்ந்து கொண்டான். அவனே இரவால் பகலை மூடுகிறான். அது தீவிரமாக அதன்பின் தொடர்கிறது. இன்னும் சூரியனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்கு வயப்பட்டதாக படைத்தாலும், கட்டளையும் அவனுக்கு உரியதெனக் தெரிந்துகொள்ளுங்கள்! அகிலத்தாரின்

இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவம் உடையவனாக ஆகிவிட்டான்.} [அல்அஃராப்: வசனம் 54] எனக்குறிப்பிட்டுள்ளான். {எத்தகைய கேள்வி கணக்குமின்றி மனிதன் வீணாக விடப்படுவான் என்று (மனிதன்) எண்ணிக்கொன்டு இருக்கிறானா?}. [அல்கியாமா: வசனம் 36] எனவே ஒரு முஸ்லிம் சிந்தனையுடன் செயற்படவேண்டும். பிரபஞ்ச நியதியை ப்பேண மார்க்கத்தில் அவசியமானவற்றை அவன் ஆராய வேண்டும்.

இஸ்லாம் மனித வாழ்க்கைக்கான பூரண வழிகாட்டியை காட்டித்தருகிறது. ஒரு முஸ்லிமுக்கு அவசியமான ஆண்மீகம், வணக்கவழிபாடு முதலியவற்றை ஒழுங்கமைப்பதைப் போன்றே விவாகம், விவாகரத்து, விற்பனை, கொள்வனவு போன்ற அன்றாட வாழ்க்கையோடு தொடர்புபட்ட அம்சங்களையும் அவனுக்காக ஒழுங்கமைத்துள்ளது. அவ்வாறே அவனுடைய வழக்கத்தோடு தொடர்புபட்ட உண்னல், பருகல், ஆடையணிதல், உறையுள், சுத்தம் முதலியவற்றில் பேணப்படவேண்டிய ஒழுங்கு விதிமுறைகளையும், சமுக, தேசிய, பிறசமுகங்கிடையிலான அவனது தொடர்புகள் என வாழ்க்கையின் அனைத்து கட்ட நடவடிக்கைகளையும் அவனுக்காக ஒழுங்கமைத்துள்ளது. எனவே இஸ்லாம் மனித வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய. பரிபூரண ஒழுங்கமைப்பு.

ஒரு முஸ்லிமின் உணர்வுகளை கவனத்திற்கொள்கிறது; அவனுக்கென்று சில சட்டங்களை கடமையாக்கி சமநிலையால் நின்று நோக்கக்கூடிய தன்மையை உருவாக்குகிறது. பிரபஞ்சம் மற்றும் ஆன்மா பற்றிய கண்னோட்டங்களை அறிய அவனைத் தூண்டுகிறது; பூமியை பரிபாலிக்குமாறு ஏவுகிறது. இவையனைத்தும் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு அவனை வழிப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாடும் அல்லாஹ் தஆலா காட்டித்தந்த வழிமுறையில் அமையுமாயின் அதுவே அவனை வணங்குவதாகும்.

மைக்கல்: ம்ம்.. ஆனால் நீங்கள் கூறுவது ஒரு கடும் போக்குவாதமாகத் தென்படுகிறதே. சமயம் வாழ்க்கையை ஆக்கிரமிக்கிறது என வெளிப்படையாகவே சொல்லலாம்.

றாஷித்: ஒவ்வொரு பொருளுக்கும் அதனுடைய தொடர்புகளை மேற்கொள்வதற்கென ஒழுங்குமுறை காணப்படுகிறது. அத்தொடர்புகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிலைப்பாடுகளும், பயன்களும் உள்ளன. எனவே அத்தொடர்புகளை சீரான முறையில் பேனிக்கொள்வதனூடாக அதன் பிரயோசனத்தை அடையலாம். இதைத்தான் அல்லாஹ் அல்குர்ஆனில் "மீஸான்" என வர்ணிக்கிறான். {இன்னும் வானத்தை அவன் உயர்த்தி தராசை(நீதியை)யும் வைத்தான். நீங்கள் தராசில்(நிறுப்பதில்) வரம்பு மீறாதிருப்பதற்காக; அன்றியும், நீங்கள் எடையை நீதியுடன் நிறுங்கள்; தராசில்(அளவையில்) குறைத்தும் விடாதீர்கள்.} [அர்ரஹ்மான்:வசனங்கள் 7-9] நீதி மற்றும் நடுநிளை வகித்தல் என்ற அர்த்தங்களை குறிக்கும் மீஸான் ஒவ்வொரு வஸ்துக்களிலும் உண்டு. இப்பிரபஞ்சமும் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவையிலேயே நிலைகொன்டுள்ளது.. இறைவனால் அருளப்பட்ட மார்க்கமும் அவ்வாறுதான்.

ஒருவருடைய தனிமனித மற்றும் சமூக நடத்தைகள், பண்பாடுகள் முதலியன வரம்பு மீறாமல் சமநிலையில் கையாள உதவும் அளவை இஸ்லாத்தில் மிக முக்கிய அம்சமாகும்.

ஒரு மனிதன் தன்னை பற்றி சுய கண்ணோட்டத்தில் நடு நிலை வகிப்பதிலேயே பிறர் பற்றிய கண்ணோட்டமும் தங்கியுள்ளது. இவ்வாறான நடுநிலையே நல்லடியார்களின் பிராத்தனையில் காணப்படுமென அல்லாஹ் அல் குர்ஆனில் வர்ணிக்கிறான். {எங்கள் இரட்சகனே இம்மையிலும் மறுமையிலும் நல்லதை தந்தருள்வாயாக! இன்னும் நரக வேதனையில் இருந்தும் எங்களை பாதுகாப்பாயாக என்று கூறுவோறும் அவர்களின் இருக்கின்றனர்} [அல்பகரா :வசனம் 20] அதேகருத்தில் வேறு பல வசனங்களும் உள்ளன. {இன்னும் அல்லாஹ் உனக்கு கொடுத்ததிலிருந்து மறுமை வீட்டை தேடிக்கொள்! மேலும், இம்மையில் உன் பங்கை மறந்துவிடாதே! அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்ததிலுருந்து நீயும் உபகாரம் செய்! பூமியில் குழப்பத்தை தேடாதே! குழப்பம் செய்வோரை நிச்சயமாக அல்லாஹ் விரும்பமாட்டான்} [அல்கஸஸ் :வசனம் 77] {இன்னும் அவர்கள் எத்தகையோர் எனில், செலவு செய்தால் வீண்விரயம் செய்யமாட்டார்கள். சுருக்கிக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் செய்வது அவ்விரண்டு நிலைகளுக்கும் மத்தியில் இருக்கும்} [அல்புர்கான்: வசனம் 67] {மேலும் உலோபியைப் போன்று செலவு செய்யாது, உம்முடைய கையை உம்முடைய கழுத்தில் கட்டப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்! அன்றியும் உம்மிடம் இருப்பதை செலவழித்துவிட்டு அக்கையை ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர்கள்! அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராக ஆகியும் விடாதீர்கள்} [அல் இஸ்ரா: வசனம் 29]

மைக்கல்: அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள இறையச்சமானது அவனுக்கு சந்தோசம், அமைதி, சாந்தி முதலியவற்றை ஈட்டித் தருவதற்கு பதிலாக அழிவு, நாசம், கொடுமை போன்றவற்றை பிரதிபலிப்பாக ஏற்படுத்தும் வகையில் (மனிதன் தன் இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கக் கூடிய) பண்பாட்டு நெறி பிறழ்வைக் காண்கிறேன். அது எனக்கு வியப்பை ஊட்டுகிறது. இந்நிலையை இஸ்லாம் எவ்வாறு நோக்குகிறது?

றாஷித்: இவை மனிதன் தன்னைப் பற்றிய பூரண அறிவின்றி தன்னைத்தானே வழிநடத்த முனைந்ததன் விளைவால் ஏற்பட்டவை. மனித வாழ்வின் அனைத்து இரகசியங்களையும் அவனை உருவாக்கியவனே நன்கு அறிந்தவன்; அவனே மனிதனை வெற்றிகரமான முறையில் வழிநடாத்த முடியுமானவன். எனவே மனிதனின் இம்மடத்தனமான செயற்பாடுகளை தடுப்பதற்கான ஒரேவழி அவனை உருவாக்கிய இறைவனின் சட்டங்களுக்கு கட்டுப்படுவதே. அவனால் இன்று வரைக்கும் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள், துன்பங்கள், அட்டூழியங்கள் என அனைத்திலிருந்தும் மீள்வதற்கு அதைத்தவிர வேறு வழியில்லை.

மைக்கல்: அதாவது; இஸ்லாத்தை வழிப்படுவதில் வெற்றி இருக்கிறது. அவ்வாறில்லையெனில் முழு சமுதாயமும் துன்பத்தில் வாழ வேண்டியேற்படும். அப்படித்தானே?!

றாஷித்: ஆம் அதில் எந்த சந்தேகமும் இல்லை. தனி மனித, சமூகமட்டத்தில் ஒரு மனிதனால் ஏற்படக்கூடிய தீங்குகளை அவனாகவே உணர்கின்றவரை தடுக்கமுடியாது. இவ்வுலகில் அவன் நாடியதை செய்யலாம், அதற்காக அவனை தண்டிக்கும் அதிகாரம் படைத்தவர் எவருமில்லை என அவன் எண்ணினால் அவனால் ஏற்படும் அநியாயங்களைத் தடுக்க முடியாது. அது தனி மனிதனாக அல்லது குடும்பமாக அல்லது சமூகமாக இருந்தாலும் சரியே. எங்கள் அனைவருடைய சோதனையும் எங்களை படைத்து பரிபாலிக்கக் கூடிய இறைவனுக்கு கட்டுப்பட்டு நடக்கிறோமா என்பதை பற்றித்தான்.

இவ்வுலகிலுள்ள அனைவரும் இச்சோதனையை எதிர்கொள்கிறோம். சிந்தனையால் ,உணர்வுகளால், நடத்தையால் நாம் அனைவரும் சோதிக்கப்படுகிறோம். ஓர் அடியானாக ஏக இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுகிறோமா அல்லது மாறுசெய்கிறோமா?

நானென்றால் எனது இறைவனுக்கு முழுமையாக கட்டுப்பட்டு, அவன் காட்டிய வழியை முழுமையாக பின்பற்றுவேன் என ஏற்றுக்கொள்கிறேன். எனவே அல்லாஹ்வுக்கு அடிபனியாதவர்களை விட்டும் நான் தூரமானவன். இதுவே மிகச் சிறந்த வழிமுறை.

மைக்கல்: ஆம், புகையிரதம் நாம் இறங்க வேண்டிய நிலையத்தை வந்தடைந்து விட்டது; வாருங்கள் விரைந்து செல்வோம .

https://www.path-2-happiness.com/ta

இறை வேதம்

இறை வேதம்

நண்பர்கள் மூவரும் குறிப்பிட்ட தினத்தன்று சந்தித்துகொன்டனர். மைக்கல் அன்றைய தலைப்பை வினவிய பின்னர் உரையாட ஆரம்பித்தார்.

இன்று கிழேத்திய வாத ஆய்வுநிபுனர் ஒருவருடைய புத்தகத்தைப்படித்தோம். அதில் இஸ்லாம் மார்க்கத்தை பற்றி சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை உங்களோடு பரிமாறிக கொள்ளலாம் என நினைக்கிறேன் .

ரஜீவ்: ஆம், மிக முக்கியமான விடயமாகத்தான் இருக்க வேண்டும்.

றாஷித்: அவற்றை ஒவ்வொன்றாகக் கூறினால் கலந்துரையாட எழிதாக இருக்குமென நினைக்கிறேன் .

மைக்கல்: நல்லது, இது தொடர்பாக புத்தகத்தில் இல்லாத வேறு கேள்விகள் ராஜீவுக்கு தோன்றினால், தாராளமாகக் கேட்கலாம்.

றாஷித்: தயவு செய்து.

மைக்கல்: இஸ்லாமிய மார்க்கம் ரோம சட்டத்திலிருந்து பெறப்பட்டது. அவையிரண்டிக்கும் இடையில் சில அம்சங்கள் ஒத்து போகின்றன என அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

றாஷித்: நானும் ஒன்றைக் கூறுகிறேன்: உங்களுடைய இந்தக் கூற்றுப் பழமையானது. இன்றைய கீழைத்தேய வாதிகளில் அதிகமானோர் இக்கருத்தில் இல்லை. இஸ்லாமிய மார்க்க மற்றும் சட்டத்துறையில் நிபுனத்துவம் பெற்ற ரஷ்யாவை சேர்ந்த மிகப்பெரும் கிழைத்தேயவாதியான லியோனிட் சுகேஸின் அவ்களை சந்தித்தேன் அவரிடம் இது பற்றி வினவிய போது "இஸ்லாமிய மார்க்கம் உரோம சட்டவொழுங்கு முறையில் இருந்து எடுக்கபட்டது என கூறகூடிய மேற்கத்திய ஆய்வாளர்கள் எவருமில்லை. இக்கருத்து பத்தொன்பதாம் நூற்றான்டில் வாழ்ந்த மேற்கத்திய ஆய்வாளர்கள் சிலரிடம் காணப்பட்ட ஒன்றாகும். ஆனால் இன்றைய மேற்கத்திய சட்ட ஒழுங்கு முறை, கோட்பாடு, ,இஸ்லாமிய மார்க்கம், உரோமசட்டவொழுங்கு முறையின் தாக்கத்துக்குள்ளாகாத ஒரு தனித்துவமான சட்ட வாக்க முறையாகும் என்பதை ஏக மனதோடு ஏற்று கொள்கிறேன்.

இரண்டாவது: இஸ்லாமிய மார்க்க மூலாதாரம் ஏனைய மார்க்கங்களை விட்டும் வேறு பட்ட ஒன்று. நான் மீண்டும் மீண்டும் உங்களுக்கு கூறக்கூடிய ஒன்றுதான் இஸ்லாம் ஓர் பரிபூரண ஒழுங்கமைப்பாகும். அதுமட்டு மன்றி படைப்பினங்கள் இறைவனின் அடிமைகள் என்ற அடிப்படையில் அவனுக்கு முற்று முழுதாக வழிப்பட்டு அவை படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதோடு தொடர்புபட்டதாகும். எனவேதான் இஸ்லாமிய வேத மூலாதாரமாக இறைவனால் வஹி அறிவிக்கப்பட்ட அல்குர்ஆன் மற்றும் சுன்னா திகழ்கின்றன. இஸ்லாத்தின் தூதர் நபி ஸல் அவர்கள் எழுத வாசிக்க தெரியாத (உம்மி) படிப்பறிவற்ற

பாமரராக இருந்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்நிலையில் இருக்க கூடிய ஒருவர் முன்னறிவற்ற ஒரு அன்னிய உரோம மூலாதாரத்தை ஆய்வுசெய்வதற்கான வாய்ப்பு கடுகளவேனும் இல்லை.

இதைத்தான் கீழைத்தேய வாதியான டேவிட்டி சான்டிலானா கூறுகையில்: "கீழைத்தேய, மேற்கத்திய (இஸ்லாமிய, உரோம) மதங்களுக்கிடையிலான ஒத்துபோகக் கூடிய சில அடிப்படைகளை கண்டறிய முற்பட்டோம். ஆனால் இஸ்லாம் எங்களுடைய சட்டங்களுக்கும், ஒழுங்குகளுக்கும் எவ்விதத்திலும் பொருந்தாத மிக உறுதியான அடிப்படைகளைக் கொண்ட ஒரு மார்க்கமாகும். ஏனெனில் அது எங்களுடைய சிந்தனைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட வழிமுறை..." என தெரிவித்தார்.

ஆனால் சில மார்க்க ஒழுங்குமுறைகளிலுள்ள ஒருமைப்பாடுகள் ஒரே மாதிரியான சூழலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஒரேமாதிரியாக இருப்பதன் விளைவால் ஏற்பட்டவை. எடுத்துக் காட்டாக: ((ஒன்றை விவாதிப்பதன் ஆதாரம் கொண்டு வர வேண்டும். அதை மறுப்பவன் சத்தியம் செய்யவேண்டும்)) என நபி(ஸல்) அவர்களின் கூற்றை எடுத்துக் கொள்ளலாம் .

மைக்கல்: எனினும் யூத, கிறிஸ்தவ மதங்கள் இஸ்லாத்திற்கு முன்னரே இறக்கியருளப்பட்டவை என்பதால் இஸ்லாம் அவற்றிலிருந்து சட்டவாக்கங்களை பெற்றிருப்பதற்கான வாய்புகள் அதிகமாக உள்ளன. என்ன... அப்படித்தானே?

றாஷித்: இவ்விடயத்தில் நிபுனத்துவம் பெற்ற ஜெர்மனியைச் சேர்ந்த பிரபல்யமான மேற்கத்திய . சிந்தனையாளர் ஜோசப் ஸ்செக்த் இனுடைய கூற்றை இச்சந்தர்ப்பத்தில் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்: ((இஸ்லாம் ஒரு மத சட்ட வாக்கம் என்று கூறப்படும் அளவு தனித்துவமான தன்மையுடையது. புவியியல், வரலாற்று ரீதியாக இஸ்லாமிய மார்க்கத்திற்கு மிக நெருக்கமானவை என கூறப்படும் ஏனைய இரு மார்க்கங்களும் (யூதமதம் ,கிறிஸ்தவமதம்) இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. ஏனெனில் இஸ்லாம் அமைப்பில் அவ்விரண்டையும் விட பல்வகைமைத் தன்மைக் கொண்டது. ஒரே கண்ணோட்டத்தில் நோக்கப்படுவதை விட்டும் மிகத் தூரமானது.)) எனக் குறிப்பிட்டார்.

அதுமட்டு மன்றி நீங்கள் கூறியதற்கு முற்றிலும் புறம்பாக; ((மத்திய தரைக் கடலை அன்டியுள்ள பிரதேசத்தில் இஸ்லாமிய சட்ட முறைமை ஏனைய சட்ட வாக்கத்திலும் தாக்கம் செலுத்தியது. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த ஏனைய சமயத்தவர்களான யூத, கிறிஸ்தவர்களுடைய கோட்பாடுகளில் இஸ்லாமிய சமயத் தாக்கம் இன்றியமையாத ஒன்றாகக் கானப்பட்டது. கீழைத்தய கிறிஸ்தவ திருச்சபை பிரிவினரான நெஸ்டர்கள், ஜெகோபியன்ஸ் ஆகியோர் இஸ்லாமிய கோட்பாட்டின் சட்ட வாக்கத்திலிருந்து பல மேற்கோள்களை பெற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. இம்மேற்கோள்கள் ஒரு இஸ்லாமிய நீதிபதியின் கண்ணோட்டத்திற்குட்பட்டவை என நினைக்கும் அளவு இஸ்லாத்துடன் தொடர்புபட்ட அம்சங்களாக காணப்பட்டன.)) என தெரிவித்தார்.

ரஜீவ்: *அவ்வாறாயின் இஸ்லாத்திற்கும் ஏனைய மதங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களைப் பற்றி பேசலாமே.*

றாஷித்: *ஒப்புநோக்க குறிப்பிட்ட ஓர் மதத்தை தெரிவு செய்யாததால் வித்தியாசங்களை கூறுவது கடினம். என்றாலும் இஸ்லாத்தின் சில பண்புகளை குறிப்பிட்டு அவற்றை ஏனைய மதங்களோடு ஒப்பிட்டு நோக்க முடியும்.*

ராஜிவ்: *ஆம், பரவாயில்லை.*

றாஷித்: *இஸ்லாமிய மதக்கோட்பாடுகளின் மிக முக்கியமானவை:*

முதலாவது: தெய்வீகக் கோட்பாடு; இதில் பிரதானமாக இரு விடயங்கள் நோக்கப்படும். அவை; அல்குர்ஆன் மற்றும் சுன்னா (நபியவர்களின் சொல், செயல், அங்கிகாரம்). இதில் மனிதனுடைய பங்களிப்பு யாதெனில், அவற்றிலிருந்து பெறப்பட்ட சட்டங்களை அன்றாட வாழ்க்கையில் அமுல்படுத்துவதாகும். மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதே இதன்பிரதான நோக்கமாகும்.

இரண்டாவது: உறுதியானது மற்றும் நெகிழக்கூடிய தன்மைகளுக்கு மத்தியில் ஒன்று சேர்த்தல்; மார்க்கத்தில் உள்ள உறுதியான தன்மைகளை பொறுத்த மட்டில் அவற்றின் அடிப்படைகள் எந்நிலையிலும் மாறாதவை. நெகிழக்கூடிய பண்புகள் காலத்திற்கும், நிலைமைக்கும் ஏற்ற விதத்தில் மாற்றமடைபவை.

மூன்றாவது: காலத்தால், இடத்தால், மனிதனால், தீர்ப்பால் நிலையானது; எக்காலத்திலும் பொருந்தக் கூடிய மார்க்கம் என்பதை குறிக்கும். இடத்தால் என்பதன் அர்த்தம்; இஸ்லாம் சர்வ வியாபகமானது என்பதைக் குறிக்கும். மனிதனால் என்றால் முழுமனித சமூதாயத்திற்கும் பொதுவானது தீர்ப்பால் நிலையானது என்றால்; மனிதனுடைய பிறப்பு தொடக்கம் அவன் இறக்கும் வரையிலான அனைத்து கட்டங்களையும் உள்ளடக்கியது.

நான்காவது: நடை முறை சார்ந்த மார்க்க சட்டங்களை கணித்து அவற்றை நடைமுறைப் படுத்துவதில் மக்களின் நிலைபாட்டை கவனித்தல். அதாவது; இஸ்லாம் ஒருவருடைய உடல், ஆன்மா, ,சிந்தனை, தனிமனித, ,சமூகம் என அனைத்து பக்கங்களையும் உள்வாங்கக்கூடியது. அவற்றை (சட்டங்களை) அமுல்படுத்துவதிலுள்ள தனிமனித மற்றும் சமூக ஆற்றலை கவனத்திட் கொள்ளக் கூடியது.

ஐந்தாவது: நடுநிலைத் தன்மை; இஸ்லாமிய சட்டங்களை கடைபிடிப்பதில் அல்லது பின்பற்றுவதில் எவ்வித வரம்பு மீறலோ அல்லது குறைபாடோ அற்ற நடு நிலைப் போக்கை இது குறிக்கும். இந்நிலை ஒரு விடயம் வலுப்பெறுவதற்கும் நிலைத்திருப்பதற்கும் காரணமாகும். எடுத்துக் காட்டாக; இஸ்லாத்தில் தனி உடமையை பொருத்தமட்டில் கம்யூனிசத்தை போன்று முற்றுமுழுதாக மட்டுப்படுத்தப் பட்டதாகவோ அல்லது முதலாளித்துவத்தை போன்று எவ்வித வறையறையுமின்றி கட்டவிழ்த்துவிடப் பட்டதாகவோ அல்லாமல் நடுநிலைத்

தன்மையை கொண்டதாக காணப்படுகிறது. இஸ்லாம் கோழைத்தனத்திற்கும் அடக்குமுறைக்கும் இடையிளான வீரத்தை ஆதறிக்கிறது. அவ்வாறே செலவீனமானது கஞ்சதனத்திற்கும் ஊதாரித்தனத்திற்கும் இடைப்பட்டதாக அமைய வேண்டுமென வழியுறுத்துகிறது.

இம்மை மறுமை கூலிகளுக்கிடையிலான ஒருங்கினைப்பு: இவ்வுலக நியதிகளுக்கு மாற்றம் செய்தால் வழங்கப்படும் தண்டனைகளில் மனித சட்டங்களுடன் இஸ்லாமிய சட்ட விதிமுறை உடண்படுகின்றன. அதேநேரம் (மனிதனால் இயற்றப்பட்ட) நேர்மறைச் சட்டங்களில் இருந்து தப்பிச்செல்லும் குற்றவாளிகள் மறுமையில் தண்டிக்கபடுவதாக இஸ்லாம் வாக்குறுதியளிக்கிறது. எனவே இம்மை மறுமையுடைய கூலிகளை தன்னகத்தே வகிக்கிறது.

இஸ்லாம் நலன்களின் கவனம் செலுத்துவது மட்டுமின்றி அறிவியலையும் ஆதரிக்கிறது.

மைக்கல்: றாஷித்! நீங்கள் எப்பொழுதும் உங்கள் மார்க்கமே சிறந்தது என கூறுகிறீர்.

றாஷித்: நண்பரே! இது ஒரு மதவெறியோ சமயப் பிடிவாதமோ அல்ல. அப்படியென்றால் ஜேர்மனிய மிகப்பெரும் கவிஞர் கொத்: ((இஸ்லாமிய போதனைகளுடன் ஒப்பிடும் போது மேற்கத்திய சமய வழிமுறைகளோ மிக சொற்பமானவை. ஐரோப்பிய சமூகமான நாம் முஹம்மத் அடைந்த இலக்கை அடைய வில்லை. அதை எவராலும் அடைய முடியாது.)) எனக் குறிப்பிட்டுள்ளாரே. .இதற்கென்ன சொல்கிறீர்? இதை கூறுவதற்கு அவர் என்ன முஸ்லிமா?!.

ரஜீவ்: இறுதியாகக்கூரிய சிறப்பம்சத்தைப்பற்றி சரியான விளக்கம் தேவை!

றாஷித்: இஸ்லாம் அறிவியலுடன் உடண்பட்டது; இதற்கு சிறந்த உதாரனமாக இஸ்லாத்தின் மிருக அறுப்புமுறையை எடுத்துக் கொள்ளலாம்; அது குறிப்பிட்ட சில விலங்குகளாலும், நிபந்தனைகளாலும் வரையறுக்கப்பட்டது. அதைப்பற்றி ஆராய்வேம்.

இஸ்லாமிய அறுப்பு முறைப்படி ஒரு பிராணியின் கழுத்தை ஒரேயடியாக துண்டித்துவிடாமல் முதலில் அதன் நாளம் அறுக்கபடவேண்டும். இவ்வழிமுறையில் அறுக்கப்படும் பிராணி தசைகளை ஏதுவான முறையில் அசைப்பதால் போதுமான இரத்தம் உடலை விட்டும் வெளியேறும். ஆனால் இஸ்லாமிய முறை அல்லாத (அல்லாஹ்வின் பெயர் சொல்லாமல் அறுத்தல், வாயு போன்றவற்றை செலுத்திகொல்லுதல், தோட்டாக்களால் சுட்டுக்கொல்லுதல் போன்ற) வழிமுறைகளால் அறுக்கப்படும் பிராணியால் அதன் உடற்தசைகளை அசைக்க முடியாது போகிறது. இதனால் உடலை விட்டும் இரத்தம் வெளியேறாமல் அவ்வாறே தங்கி விடுகிறது. அவ்வாறு தேங்கி நிற்கக்கூடிய இரத்தத்தில் பல கிருமிகள் வளர்ச்சியடைந்து, அம்மாமிசத்தை மனிதன் சாப்பிடும்போது மனித உடலில் பல்வேறுபட்ட பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமன்றி இவ்வழிமுறை

அப்பிராணியை மிக துன்புறுத்தகூடியது..

அது ஒருபுறம் இருக்க; ஒரு பிராணியை அறுப்பதற்கு ஏன் அல்லாஹ்வின் பெயரை கூற வேண்டும் என்ற ஒரு கேள்வி எழலாம். ஆம், அது என்னவென்றால் இஸ்லாத்தில் ஒவ்வொரு அம்சமும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதோடு தொடர்புபட்டுடிருக்கிறது வாழ்க்கையிலுள்ள மிகப்பெரும் கேள்விகளான அல்லாஹ், பிரபஞ்சம், மனிதன் மீண்டும் செல்லுமிடம், என்பன போன்ற அனைத்து விடயங்களும் பூரண அமைப்பில் மார்க்கத்துடண் தொடர்புபட்டவை. மனிதன் ஒரு படைப்பினமாக இறைவனின் அனுமதியின்றி இன்னொறு படைப்பினத்தின் உயிரை பறிக்கவோ அல்லது அவ்விடயத்தில் எல்லை மீறி செல்லவோ தகுதியற்றவன். எனவே அறுக்கும்போது அல்லாஹ்வின் பெயரை குறிப்பிடுவது அவனுடைய அனுமதியில் அறுப்பதை போன்றாகும். ஒரு முஸ்லிமைபொருத்த மட்டில் அவன் முற்றுமுழுதாக அல்லாஹ்வை வழிப்படுவதை நோக்காக கொண்டிருப்பதால், அல்லாஹ்வின் அனுமதியின்றி எக்காரியத்தையும் புரிய அவனுக்கு ஆகுமாகாது.

மைக்கல்:ஆம், நீங்கள் கூறுவதை நான் ஏற்கிறேன். இஸ்லாத்தைப் பற்றி முழுமையாக அறிய பல ஆய்வுகளை மேறகொள்ள வேண்டியிருக்கிறது.

நாகரீக நிஜங்கள்

நாகரீக நிஜங்கள்

ரஜீவ்: தான் எடுத்த புகைப்படங்களை நண்பர்களிடம் காண்பிப்பதற்காக சந்திப்பொன்றை மேற்கொண்டார். நண்பர்களை நோக்கி:

நான் இப்புகைபடங்களை துருக்கியிலுள்ள எனது நண்பர் ஒருவரை சந்திக்க சென்றிருந்த வேளை எடுத்தேன். பூர்வீகம்மிக்க அந்நாட்டிலுள்ள நாகரீக சின்னங்களை கண்டு நான் வியந்துவிட்டேன் அங்குள்ள இஸ்லாமிய நாகரீக சின்னங்கள் தொடர்பாக அவர்வழங்கிய தகவல்கள் என்னை திகிழடையசெய்தன இது தொடர்பாக இந்தியாவில் நான் கண்ட சில காட்சிகளை அவரோடு பகிர்ந்து கொன்டேன்.

மைக்கல்: *ஆனால் என்னிமுள்ள தகவல்கள் இஸ்லாமிய நாகரீகத்தின் வேறுவிதமான தோற்றத்தை பிரதிபலிக்கின்றன.*

றாஷித்: *முதலில் நாகரீகமென்றால் என்னவென்று வரையறுத்து விட்டு, பின்னர் தேவை ஏற்படின் இஸ்லாமிய நாகரீகத்தை பற்றிப்பார்ப்போம் .*

மைக்கல்: *ம்.. இதற்கு நாம் அனைவரும் உடன்படுகிறோம். என்ன... சரிதானே?*

றாஷித்: *அதற்கென்ன முதலில் வறையறுப்போம். அதில் நாம் அனைவரும் உடன்பட்டால் தொடர்ந்து செல்வோம்.*

மைக்கல்: *நாகரீகமென்பது குறிப்பிட்ட காலத்தில் ஒரு சமூகம் அடைந்த முன்னேற்றம், கண்டுபிடிப்புகள் என சிந்தனை மற்றும் பொருளியல் ரீதியான மனித நடவடிக்கைகள்.*

ரஜீவ்: *மைக்கல் கூறியவற்றோடு மேலும் சில விளக்கங்களை சேர்த்து கொள்கிறேன்: நாகரீகமென்பது மனிதனுடைய கலாச்சார மட்டத்தை உயர்த்த துனை நிற்கும் ஓர் சமூக ஒழுங்கமைப்பாகும். ஒரு கலாச்சாரம் பொருளாதார வளங்கள், அரசியல் ஒழுங்கு, ஒழுக்க மரபுகள், மற்றும் அறிவியற் கலைகளின் தொடர்ச்சி ஆகிய நாண்கு கூறுகளால் தோற்றுவிக்கபடக்கூடிய ஒன்று.*

ஒரு நாகரீகம் அறிவியல் ஆராய்ச்சி, உருவாக்ககலை முதலியவற்றுக்கு முதலிடம் வழங்ககூடியது. அதன் தொழிநுட்ப கண்டுபிடிப்புகள், சமூக்கல்வி முதலின அந்நாகரீகத்தின் அறிவியலை பிரதிபலிக்கின்றன. அதேவேளை கட்டிடக்கலை, சிற்பக்கலை, மற்றும் ஏனைய கலைகளையளும் அந்நாகரீகத்தின் கலைப்படைப்பை பிரதிபலிக்கின்றன. எனவே எந்த ஒரு நாகரீத்தினதும் முக்கிய கூறுகளாக அறிவியல் மற்றும் கலையம்சங்கள் மிளிர்வதைக்கானலாம் .

றாஷித்: *நண்பர் மைக்கலுடைய. கூற்றை சற்று ஆராயலாம் என நினைக்கிறேன். அவர் கூறியதை போன்று நாகரீகம் மனித நடவடிக்கைகளின் விளைவால் உருவானது என எடுத்து கொள்வோமாயின், மனிதக் கூறுகளின் அனைத்து*

பக்கங்களையும் ஒன்று விடாமல் நோக்குவது அவசியம். அவ்வாறு இல்லையெனில் அதை நாகரீகமென்றே கூற முடியாது. இது முதல் விடயம்.

இரண்டாவது: ஒரு சமுகம் தோற்றம் பெற்ற கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக்கினங்க அதன் நாகரீகமும் வேறுபடும். எனவே அச்சமூக பண்பாடு மனித இயல்பிற்கும் ,சூழலுக்கும் ஒத்துபோகக்கூடியதா அல்லது வேறுபட்டதா என்பதை அடிப்படையாக வைத்தே அந்நாகரீகம் முறையானதா அல்லது முறைகேடானதா என்பதை தீர்மானிக்கலாம். அந்தடிப்படையில் பல்வேறுபட்ட நாகரீகங்கள் குறிப்பாக தற்காலத்தில் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கும் மேற்கத்திய நாகரீகம் முதலியவற்றுக்கிடையிலான பரந்த வித்தியாசத்தை கண்டு கொள்ளலாம். அவற்றில் எது முறையானது முறையற்றது எனவும் அறிந்து கொள்ளலாம்.

மைக்கல்: தலைவர் ராஷித்! இஸ்லாமிய நாகரீகத்தின் இருள் சூழ்ந்த பக்கங்களை பற்றி கலந்துரையாடலாமா? என்ன... தூர விலகிச் செல்வதைப்போன்று தென்படுகிறது.

ரஜீவ்: நீங்கள் கூறுவதை பார்த்தால், றாஷித் இஸ்லாமிய நாகரீகத்தின் சிறப்பம்சங்களையும், ஏனைய நாகரீகங்களிடமிருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் விளக்கினால் நன்றாக இருக்கும்.

றாஷித்: நல்லது இஸ்லாமிய நாகரீகம் மனிதன்,பிரபஞ்சம்,வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தங்கியுள்ளது. அதன் சிறப்பம்சங்களில் சிலவற்றையும், அவற்றுடன் தொடர்புபட்ட இன்றைய மேற்கத்திய நாகரீகத்திலுள்ள சில அம்சங்களையும் கூறுகிறேன்.

இஸ்லாமிய நாகரீகத்தை பிரதிபலிக்ககூடிய அம்சங்களில் ஒன்றான:

மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை பார்க்கலாம்; இதில் மனிதன் ஒரு படைப்பினமாகவும், பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், அவனுடைய வழிகாட்டலில் தெரிவுச்சுதந்திரம் உடையவனாகவும் சித்தரிக்கபடுகிறான். இவ்வழிகாட்டலின் அடிப்படையில் நற்செயலை புரியுமாறு ஏவப்படுகிறான். இம்மை, மறுமைக்கான அவனுடைய செயற்பாதுகள்பற்றி வினவப்படுவான்.

ஆனால் இன்றைய மேற்கத்திய கண்ணோட்டத்தில் மனிதன் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகவும், ஏனைய விலங்குகளை போன்று அவனும் மனோஇச்சைகளுக்கும், ஆசைகளுக்கும் முதலிடம் வழங்குபவனாகவும், எல்லைகளற்ற சுதந்திரமுடையவனாகவும் சித்தறிக்கபடுகிறான். மேற்கத்திய நாகரீகம் அவனை எவ்வித நோக்கமுமற்ற வீனான படைப்பாக நோக்குகிறது. அதனடிப்படையில் அவன் செய்யும் செயலுக்காக இவ்வுலகிலேயன்றி வேறெங்கும் விசாரிக்கபடமாட்டான். அவனுடைய நோக்கங்களும் இவ்வற்ப உலகையே அடிப்படையாக கொண்டிருக்கும்.

இஸ்லாமிய நாகரீகத்தை பிரதிபலிக்கும் மற்றுமொரு காரணி: பிரபஞ்சம்பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்; இதில் பிரபஞ்சம் மனிதனுக்காக வசப்படுத்தி கொடுக்கப்பட்ட, அவனை போன்ற ஒரு படைப்பினமாக சித்தரிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் மனிதன் இப்பிரபஞ்சத்துடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமெனின் அல்லாஹ் காட்டிய வழியில் அதோடு பரிபூரண அமைப்பில் உறவாடுவான்.

ஆனால் பிரபஞ்சம் தொடர்பான மேற்கத்திய நாகரீகத்தை எடுத்துக்கொண்டால்; மனிதனுக்கும், பிரபஞ்சத்திற்கும் மத்தியில் ஒற்றுமைக்கு மாற்றமாக வேற்றுமையே காணப்படுகிறது. இதனால் மோசமான மோதல் உருவாகின்ற நிலையை காணலாம்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வாழ்க்கை மனிதனையும், பிரபஞ்சத்தையும் படைத்த இறைவனுக்கே உரித்தான ஒன்று. இவ்வுலகில் நாம் காணக்கூடிய வாழ்க்கை யதார்தத்தின் ஒரு பகுதியே. மரணித்தின் பின்னரான மற்றுமொரு உண்மையான வாழ்க்கையுண்டு. அனைத்தையும் பிரதிபலிக்கும் அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை அடையும் வன்னம் இவ்வுலக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு ஏவப்பட்டுள்ளான். இவ்வுலகம் மறுமைக்கான விளைச்சல் நிலமாகும். எனவே இவ்வுலகில் அவன் மேற்கொள்ளும் காரியங்களுக்காக மறுமையில் விசாரிக்கப்பட்டு கூலி வழங்கபடுவான்.

ஆனால் மேற்கத்திய நாகரீகக்கண்ணோட்டத்தில் வாழ்க்கையென்பது இவ்வுலகில் மட்டுமே. எனவே இதைத் தவிர வேறு வாய்ப்பு மனிதனுக்கு இல்லை என்ற தொனிப்பொருளே நிலவுகிறது.

எனவே இவற்றிலிருந்து இஸ்லாம் மற்றும் மேற்கத்திய நாகரீகங்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவை என்பதை அறிந்து கொள்ளலாம்.

மைக்கல்: தலைவர் றாஷித்! உங்களுடைய கூற்றில் இரு முக்கிய விடயங்களை அவதானித்தேன். அவைகளாவன:

01. மேற்கத்திய நாகரீகத்தின் மிக முக்கியமான பகுதியான யூத மற்றும் கிறிஸ்தவ மதங்களை பற்றி குறிப்பிட மறந்து விட்டீர்கள். எடுத்துகாட்டாக மேற்கத்திய நாகரீக கண்ணோட்டம் மறுமையையோ இவ்வுலகில் புரியும் காரியங்களுக்காக விசாரிக்கப்பட்டு கூலிகொடுக்கபடுவதையோ நம்புவதில்லை என குறிப்பிட்டீர்கள். அது முற்றிலும் பிழை. ஏனெனில் மேற்குறிப்பிட்ட மதங்கள் சில வித்தியாசங்கள் இருப்பினும் மறுமையை நம்புகின்றன.

02. இஸ்லாமிய நாகரீக அடிப்படை கட்டமைப்புகளை மேற்கத்திய நாகரீகத்துடன் ஒப்பீடு செய்து குறிப்பிட்டீர்கள். ஆனால் நண்பர் ரஜீவ் உங்களிடம் வேண்டிக்கொன்டதற்கினங்க இஸ்லாமிய நாகரீகத்தின் சிறப்பம்சங்களை பற்றி ஏதும் கூறவில்லை.

றாஷித்: நீங்கள் கூறிய முதற்குறிப்பை மறுக்கிறேன். ஏனெனில் ஒரு நாகரீகத்தின் அடிப்படை கட்டமைப்புகளுக்கும் அதன் மூலக்கூறுகளுக்கு மிடையில் பல வித்தியாசங்கள் உள்ளன. மேற்கத்திய நாகரீகத்தில் யூத, கிறிஸ்தவ மதங்களிடையே தாக்கங்கள் இருக்கின்றன. எனினும் பொதுவாக அவ்விரு மதங்களின அடிப்படையில்தான் எழுச்சிபெற்றது என கூறமுடியாது. அதற்கு முற்றிலும் மாற்றமாக, சமயங்களுக்கு

புறம்பான, திருச்சபையின் அதிகாரத்தை முற்றிலும் எதிர்க்க்கூடிய மதச்சாற்பற்ற கொள்கையில் உருவானது என உறுதியாகக் கூறலாம். இதை நீங்கள் இருவரும் ஏற்றுகொள்வீர்கள் என நினைக்கிறேன்..

நீங்கள் கூரிய இரண்டாவது விடயத்தில் நான் உடன்படுகிறேன். என்றாலும் மேலும் ஒன்றை கூறிகொள்ள விரும்புவது யாதெனில்; நான் ஏலவே குறிப்பிட்ட அடிப்படை கட்டமைப்புகள் இஸ்லாமிய நாகரீக சிறப்பம்சங்களின் சாரங்கள் எனலாம். அவையாவன.

– மனிதனின் தொழிற்பாடுகள், கட்டமைப்புகளை கவனித்தல், அவனுடைய மனிதாபிமான ஆசைகளை நிறைவேற்றல், பிரபஞ்ச நியதிக்கு ஏற்புடையவனாக மாற்றுதல், ,அவன் படைக்கபட்ட நோக்கத்தை நிறைவேற்றல் முதலியவற்றை நோக்காகக் கொள்வதே இஸ்லாமிய நாதரீகத்தின் மிக பிரதானமான தொழிற்பாடாகும்.

– சமயத்திற்கும் உலகத்திற்குமிடையிலான, சமயத்திற்கும் சிந்தனைக்கும் இடையிலான பிணைப்புகள்; அதனடிப்படையில் எழுச்சிபெற்ற நாகரீகம்.

– அறிவியல் மூலாதாரங்களுக்கிடையிலான ஒற்றுமை.

– ஏனைய கலாச்சார மற்றும் நாகரீகங்களுடனான திறந்தமனப்பான்மை: இஸ்லாமிய நாகரீக அடிப்படைகளுக்கு உடன்படக்கூடி.ய அம்சங்கள் எந்த நாகரீக மட்டத்தில் இருந்தாலும் சரி அவற்றை ஏற்கும் மனப்பாங்கையும், ஏனைய நாகரீகங்களுக்கு தேவையான அம்சங்கள் இஸ்லாமிய நாகரீகத்தில் இருப்பினும் அவற்றை அவர்கள் எவ்வித தடையுமின்றி பெற்றுகொள்ளும் தாராள தன்மையை குறிக்கும்.

றாஷித்: *பெரியார் றாஷித்! மன்னிக்கவும், மைக்கல் இஸ்லாமிய நாகரீகத்தின் மற்றைய பக்கம் பற்றிய தகவல்கள் அவரிடம் இருப்பதாக கூறினார். அவர் கூறுவதையும் சற்று கேட்கலாம்.*

மைக்கல்: *அதில் மிகமுக்கியமான விடயம்; இஸ்லாமிய நாகரீகத்தின் சாம்ராஜ்ஜீயம் வால்முனையில் உருவானது. கடும்போக்கு வாதத்துடன் பின்னிபிணைந்தது.*

றாசஷித்: நண்பரே! வாலால் ஒரு நாகரீகத்தை கட்டியெழுப்ப முடியாது. ஏனெனில் ஒரு நாகரீகத்தின் இன்றியமையாதவொன்றான ஸ்தீரனதன்மை போர் முறைக்கு முற்றிலும் புறம்பானது. ஒரு சமூகம் இராணுவ ரீதியாக வெற்றியடைந்தால், அது நாகரீக, கலாச்சார, அறிவியல் ரீதியாக வெற்றியடைய வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள் மங்கோலியர்கள், ,தாத்தாரிகளுடைய வரலாற்றை அவதானித்தால்.. உங்களுக்கே புரியும் அவர்களிடம் இராணுவ பலம் இருந்ததை போன்று நாகரீகபலம் இருக்கவில்லை.

என்றாலும் இஸ்லாம் (ஜிஹாத்) புனிதப் போரினால் பரவியது என்ற என்னக்கருவை நீங்கள் நாடியிருக்கலாம். ஆயினும் இஸ்லாமிய படையணி சென்றிராத தூரத்தை இஸ்லாமிய நாகரீகம் எட்டியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இது தொடர்பாக அதிகமான தகவல்கள் உள்ளன. எனினும் அவற்றில் சிலவற்றை கூறுகிறேன்: "இன்றைய இஸ்லாமிய உலகு" என்ற புத்தக ஆசிரியர் ஸ்றொட்டர்

லொத்ரொப் குறிப்பிடுகையில்: ((அரேபியர்கள் அழிவையும், நாசத்தையும் விரும்பும் காட்டுமிராண்டிகளாக ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக குணத்தாலும், நடத்தையாலும் போற்றப்படகூடியவர்களாகவும், அறிவியலை நேசிப்பவர்களாகவும் இருந்தார்கள். இதனால் சீரான நாகரீகத்தை உருவாக்க அவர்களால் முடிந்தது. போர்களில் அவர்கள் வெற்றி கண்ட பிரதேசங்களில் திருமண உறவுகளால் ஏனைய இனத்தவர்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தார்கள். இதனால் அரேபிய நாகரீகமெனும் புது நாகரீகம் எழுச்சிபெற்றது.))

ப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரானுவ தளபதி அல்கவ்ன்ட் ஹென்றி டி கெஸ்ட்ரீஸ் குறிப்பிடுகையில் ((இஸ்லாம் வாள்முனையில் பரவி.ய மார்க்கம் என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை என்ற கருத்துக் கணிப்பீட்டை நம்புகிறோம். முஹம்மத் நபி(ஸல்) அவர்களுடைய மார்க்கம் அடக்குமுறையால் பரவியிருக்குமாயின், முஸ்லீம்கள் வெற்றிப் பாதையில் சென்றிருக்க மாட்டார்கள்; அல்குர்ஆன் அனைத்திடங்கனிலும் சிறகடித்துப் பறந்திருக்காது.))

மனித வரலாற்றில் இஸ்லாமிய நாகரீகத்தின் தார்ப்பறியத்தை பற்றி அறிந்து கொள்ள ப்ரான்ஸிய வரலாற்று ஆசிரியர் " Gustave lebon" கூறிய வார்த்தையொன்றே போதும்:.

((வரலாற்றில் அரேபியர்களைப் போன்று செல்வாக்குமிக்க எந்தவோர் சமூகத்தையும் நாம் காணவில்லை. அவர்களுடன் உறவாடிய அனைத்து சமூகங்களும் எல்லாக்காலத்திலும் அவர்களுடைய நாகரீகத்தை அங்கீகரித்தே இருக்கின்றனர்.))

இறுதியாக உங்கள் இருவருக்குமாக: நாகரீகம் என்ற பெயரில் அழிவுகளால் சின்னாபின்னமாகியிருக்கும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக இஸ்லாமிய நாகரீகம் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

https://www.path-2-happiness.com/ta

மனித சமுதாயத்தில் முஸ்லீம்களின் ஒளிக்கீற்றுகள்

மனித சமுதாயத்தில் முஸ்லீம்களின் ஒளிக்கீற்றுகள்

நண்பர்கள் மூவரும் வநதனங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்த பின்னர், மைக்கல் பேச்சை துவங்க ஆவலாக இருப்பதை றாஷிதும் ராஜீவும் அவதானித்தனர். உடனே றாஷித் மைக்கலை நோக்கி பரிகாசமாக.

ஹா.. என்ன மைக்கல் இன்று ஒரு அம்பை தயார் செய்து வைத்திருக்கிறீகள்போல் தெரிகிறது. பாதுபாப்புக்காக ஒரு திரையை போட்டுகொள்ள முயற்சிக்கிறேன்.

மைக்கல்: இல்லை இல்லை, சற்று பொருங்கள். இந்த தடவை நீங்கள் திரைக்கு பின்னாலிருந்தே எவ்வித பயமுமின்றி எதிகொள்ளலாம் உண்மையிலே சென்ற கலந்துரையாடல் என்னை ஒரு கலாச்சார ஆய்வை நோக்கியும், மனித முன்னேற்றத்தில் முஸ்லீம்களின் பங்களிப்பை பற்றியும் அறிந்துகொள்ள தூண்டியது "ஆயிரத்தோர் கண்டுபிடிப்புகளும், இரகசிய நூல்களும்" என்ற 13 நிமிடங்களை கொண்ட திரைபடத்தை பெற்றுகொன்டேன். பார்ப்பதற்கு மிகவும் சுவாரஷ்யமாக இருந்தது. மனிதனின் விஞ்ஞான முன்னேற்றத்தில் இஸ்லாமிய நாகரீகத்தின் பங்களிப்பை படம்பிடித்து காட்டுகிறது அது மட்டுமன்றி இத்திரைபடம் இருபதுக்கும் மேற்பட்ட உலகலாவிய ரீதியிலான பரிசில்களை பெற்றது.

கல்வி சுற்றுலாவொன்றில் ஒரு நூலகத்தை பார்வையிட வந்த சிறார்களுக்கு நூலக பொருப்பாளர் வழிகாட்டுவதை போன்ற ஒரு திரைப்படம். நூலக பொருப்பாளரின் உதவியுடன் இருள் சூழ்ந்த பகுதியைபற்றி .cirebon kingsley -என்ற கதைபுத்தகத்தை கண்டெடுக்கின்றனர். அதில் ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு வரையுள்ள அறிவியல் புரட்சி காலத்தில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர் அல்ஜஸெரியைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

றாஷித்: திரைபடத்தின் சுருக்கமென்ன? எதைநோக்காக கொன்டிருக்கிறது?.

மைக்கல்: ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட புராதன காரனி இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட அறிவியல், கலாச்சார முன்னேற்றமே என்பதை அத்திரைக்கதை நிருபிக்கிறது. அத்தோடு இதுவொரு மறக்கடிக்கப் பட்ட வரலாற்று உன்மை என்பதையும் உணர்த்துகிறது

ரஜிவ்: மைக்கல் நீங்கள் சொல்வதைக் கேட்டால், அதைபற்றி மேலும் அறிந்து கொள்ள ஆசையாக உள்ளது..

மைக்கல்: இது தொடர்பாக பல தகவல்கள் உள்ளன அவற்றில் சிலதை கூறுகிறேன்: இரசாயன வியலாளரும், பொறியியலாளரும் வரலாற்றில் மிகப்பெரும் விஞ்ஞானியுமான அல் ஜஸெரி blephantautech என அழைக்கபடும் மிகப்பெரும் கடிகாரத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர். அது மட்டுமன்றி நாம் அன்றாடம் பயன்படுத்தக் கூடிய வீட்டு உபகரணங்களில் அதிகாமானபற்றை கண்டுபிடித்தவர் அவரே. மேலும் அவரால் கண்டுபிடிக்கபட்ட இலத்திரணியல் கருவிகள், நீர்வழி விவசாய உலகில் எவ்வாறு புரட்சியை ஏற்படுத்தலாம்

என்பதை தெளிவு படுத்துகிறது. .ஸ்பைனை சேர்ந்த வைத்தியர் ஸஹ்ராவி நூற்றுக்கணக்கான அறிவியல் கருவிகளை உலகிக்கு அறிமுகப்படுத்தினார். அக்கருவிகள் இன்றளவும் நவீன வைத்திய சாலைகளில் பயண்படுத்தபட்டு வருகின்றன. இவ்வாறே ஹஸன் இப்னு ஹைஸம் கண் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதை கண்டுபிடித்தார். படப்பிடிப்பு, புகைப்படம் முதலிய வற்றூடாக அவர் கண்டுபிடித்த அடிப்படைகளை பற்றி அறிந்துகொள்ள நாம் இன்று பார்க்கூடிய திரைப்படங்கள் சிறந்த உதாரணமாகும்.

ரஜீவ்: நண்பர் மைக்கல் பெருமதியான தகவல்களை தந்தீர்கள். என்றாலும் இவ்விடயத்தில் நீங்கள் மட்டுமல்ல நானும் பல ஆய்வுகளை மேற்கொன்டேன். *sigrid hunke* என்ற ஜேர்மனிய பெண்ணெழுத்தாளர் ஒருவருடைய மேற்கில் உதிக்கும் சூரியன் என்ற புத்தகத்தை படித்தேன்.

மைக்கல்:அதில் புதிதாக என்ன இருந்தது.

ரஜீவ்: ம்ம்.. நான் எதிர்பார்க்காத பல விடயங்களை அறிந்து கொண்டேன். உங்களுக்கொன்று தெரியிமா ஐரோப்பிய மோழிகளில் உள்ள அதிகமான சொற்கள் அரபு மொழியில் இருந்து மருவி வந்தவை.

மைக்கல்:ஆ.. அப்படியா?! ஆச்சரியமாக இருக்கிறதே. நீங்கள் கூறுவது உண்மையா?.

ரஜீவ்: ஆம் உண்மைதான், நான் பரிகசிக்கவில்லை. உதாரணமாக *Coffee* என்ற ஆங்கில பதத்தை எடுத்து கொள்ளுங்கள். இச்சொல்லுற்பட இப்பதத்தை குறிக்கும் ஏனைய ஐரோப்பிய மொழிகளின் சொற்களும் "கஹ்வா" (قهوة)என்ற அரபு பதத்திலிந்து எடுக்க பட்டவை. அவ்வாறே ஆங்கிலத்தின் *Rice* என்ற சொல் அரபுமொழியில் உர்ஸ் أرز என்ற பதத்திலிந்தும் *SOFA* என்ற சொல் ஸூப்பா என்ற பதத்திலிந்து எடுக்க பட்டவை. இதுமட்டுமன்றி "அல்கொஹோல்" அறிவியல் தொடர்பான சொற்களில் அதிகமானவை அரபு மொழியில்லிருந்து மறுவிவந்தவையே.

எனக்கு தெரியாத எத்தனையோ உண்மைகளை அப்புத்தகம் அறியப் படுத்துகிறது. நூலாசிரியர் மிகச்சுருக்கமாக குறிப்பிடுவது யாதென்றால் ((ஐரோப்பா அரேபியர்களையும் அவர்களுடைய நாகரீகத்தையிம் பின்பற்றுகிறது. ஐரோப்பியர்களும் ஏனைய கண்டங்களில் இருப்போரும் அரேபியர்களுக்கு செய்யவேன்டிய கைமாறு என்னிடங்காதவை. இதை ஐரோப்பா எப்பொழுதும் ஏற்றிருக்க வேண்டும். ஆனால் பிடிவாதமும், கொள்கை பிளவுகளும், திரையிட்டு எங்கள் கண்களை குருடாக்கிவிட்டன.))

ராஷித்:நீங்கள் இவ்வளவு காலமும் அறியாத உண்மைகளைப் பற்றி அறிந்து கொள்ள நானும் ஆவலாக உள்ளேன்.

ரஜீவ்: அவற்றில் இன்னும் சில வற்றை கூறுகிறேன்; குருதிச்சுற்றோட்டம் தொடர்பாக கலனின் தவறான கருத்துகளை முதலில் சுட்டிகாட்டி அதை சரியான

வடிவில் அறிமுகபடுத்தியவர் யார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அவர் ஸ்பைனை சேர்ந்த சொர்விடஸ்ஸோ, இங்கிலாந்தை சேர்ந்த ஹார்வியொ அல்ல மாறாக கி.பி.13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரேபியர். அவர்தான் மனித வரலாற்றில் வைத்திய துறை இவ்வளவு முன்னேர காரனமாக இருந்த இப்னு நபீஸ் ஆவார். செர்விடஸ் ,ஹார்வி ஆகியோருக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் "கண்களே ஒளிர்கதிர்களை விம்பங்களில் செலுத்தி அதை பார்க்க செய்கின்றன" என்ற இக்லிட் ,தொளமி போன்றோருடைய இக்கருத்தை தவறென சுட்டிக்காட்டி சரியானதை உலகிட்கு அறிமுகப்படுத்தியவர் இப்னு கைசம் என்ற அரபு முஸ்லிம் விஞ்ஞானி என்பதை நான் அறிந்திருக்கவில்லை. இப்னு கைசம் விம்பங்களை பார்க்கசெய்வதற்கான ஒளிக்கதிர்கள் கண்களில் இல்லை. ,மாறாக (பொருட்கள்).

விம்பங்களில் பிரதிபலிக்க செய்கின்றன என்ற விஞ்ஞான உண்மையை உலகுக்கு அறிமுக ப்படுத்தியவர். அவ்வாறே புவி தன்னைதானே சுற்றிகொண்டு சூரியனையிம் சுற்றிவருகிறது என்ற விஞ்ஞான உண்மையை முதன் முதலில் உலகிக்கு அறிமுகப்படுத்தியவர் கொபர் நிகஸ் அல்ல மாறாக அல் பூருனி என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. வரலாற்றில் இதுவரைகாலமும் தோன்றிய வைத்தியர்களில் மிகப்பெரும் வைத்தியர் அர்ராஸி என்ற முஸ்லிம் அரேபியரென கீழைத்தேயம் கூறுகிறது. தட்டம்மை பெரிய்யம்மை தொடர்பாக அவர் எழுதிய கட்டுரை குடல்நோய் சம்பந்தமான உண்மைகளை உலகுக்கு அரிமுகபடுத்திய முதல் வைத்தியக் குறிப்பாகும். மருத்துவ பகுப்பாய்வில் தனித்துவமான இடத்தையும் பெற்றுகொண்டது. கி.பி.1866 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஆங்கில மொழியில் மாத்திரம் நாற்பது பதிப்புகள் வெளியாகி ஐரோப்பாவில் பிரபல்யம்மடைந்தது. ஐரோப்பா அறியாமை இருளில் மூழ்கி இருந்த காலத்தில் அரேபியர் நவீன கண்டுபிடிப்புகளில் நன்றாக முன்னேறி, மயக்க மறுந்தேற்றி சிகிச்சை செய்யும் முறையையும் அறிந்திருந்தனர் என வரலாறு சான்று பகர்கிறது. இவ்வறு பல உரையாடல்கள் உள்ளன. அனைத்தையும் ஒரு உரையாடலில் கூறவிட முடியாது .

றாஷித்: வரலாற்று உண்மைகளை சரியாக அறியாதவர்கள் மற்றும் அறிவியல் பரிசோதனைகளில் முஸ்லீம்களின் மற்றும் அரேபியர்களின் பங்களிப்பை மறுப்பவர்கள் முன்வைக்கும் வாதங்களுக்கு நீங்கள் தக்க பதிலடி கொடுத்தீர்கள். பரிசோதனை முறையை (experimental method) உலகுக்கு அறிமுக ப்படுத்தியவர்கள் முஸ்லீம்களே. இது தொடர்பாக மேற்கத்திய அறிஞர்கள் சிலரின் வார்த்தைகளைக் கூறுகிறேன் :

ப்ரான்ஸிய கீழைத்தேயவாதி claude gahen குறிப்பிடுகையில் ((இஸ்லாமிய அறிஞர்கள் கருத்து கலத்தில் யூனானியர்களை விட பலம் குன்றியவர்களாக இருப்பினும் பரிசோதனை கலத்தில் முஸ்லீம்களே பலம் வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். அறிவியலில் பரிசோதனையின் முக்கியத்துவத்தை விஞ்ஞான முன்னேற்றம் தெழிவு படுத்துகிறது அரேபியர் அடைந்த இவ்வறிவியல் முன்னேற்றம் தொடர்ந்திருப்தற்கான காரணம் அவர்கள் அன்றாட வாழ்வில் அவற்றை அமுல்படுத்தியதே.)) விஞ்ஞான முன்னேற்றம் எவ்வாறு தொடந்தியங்கும் என்பது தொடர்பாண சிறந்த விளக்கத்தை

மிகப்பெரும் அறிஞரான அற்றாஸி விளக்கிகிருந்தார். மத்திய கால அறிஞர்களில் பெரும்பாளானோர் அதை விசித்திரமாகவே நோக்குகின்றனர். இத்தாலிய ஆய்வாளர் – laura vichea vaglevi– சில வினாக்களை தொடுக்கிறார் ((பரீசோதனை வழிமுறை அவசியமென பேகன் கூறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே அரேபியர்கள் அதில் ஈடுபாடு காட்டினர். இரசாயனம், அபிவிருத்தி ,வானியல் ,கிரேக்க அறிவியல் பரவலாக்கம் ,வைத்திய துறை வலுவாக்கம் ,இயற்பியல் விதிகளின் கண்டுபிடிப்பு முதலியன அரேபியர்களின் முதுமொழியல்லவா.)) அமெரிக்க வரலாற்றாசிரியரும் தத்துவஞானியுமான பட்டுரன்ட் குறிப்பிடுகையில் ((இரசாயன முறையில் அரேபியர் மேற்கொண்ட பரீசோதனை வழிமுறை, இன்றைய நவீன சிந்தனை கருவிகளில் மிக முக்கிய மானதொன்றாகும். ஜாபிர் இப்னு கைஸான் இத்துரையை உலகிக்கு அறிமுக படுத்தி ஐந்து நூற்றாண்டுகளுக்கு பின்னரே rogal bagon அதை ஐரோப்பாவிற்கு அறிமுகப்படுத்தினார். எனினும் ரொகர் பேகனே ஐரோப்பாவை ஒளிமயபடுத்திய பிரகாசமாக திகழ்ந்தார். அவர் அவ்வொளியை கீழைத்தேய முஸ்லீம்களிடமே பெற்றுகொண்டார் என்பதை மறுக்கமுடியாது.))

இவையனைத்தும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமிய நாகரீகம் வழங்கிய கண்டுபிடிப்புக்களில் ஒரு பகுதியே.

மைக்கல்: *ஆம்.. இவைகள் மறுக்க முடியாத சாதனைகள். எனினும் இஸ்லாமிய நாகரீகம் யூனானி போன்ற முன்னைய நாகரீகங்களிடமிருந்தும் சிலதை பெற்றுகொண்டது என்பதையும் மறந்து விட முடியாது.*

றாஷித்: *நண்பரே! அது அறிவியல் முன்னேற்றத்தின் இயல்பே. நாகரீக சுழற்சிகள் என்றழைக்கபடும் மனித சாதனைகளுக்கிடையிலான தொடர்புச்சங்கிலி என்றும் கூறலாம். இதை பிரான்ஸிய கீழைத்தேயவாத ஆல்டோ மிலேயினுடைய கூற்று வலுப்படுத்துகிறது. ((அரேபியர்களின் அறிவியல் பண்டைய நாகரீகங்களையும் நவயுகத்தையும் இனைக்கும் தொடர்புசங்கிலியாகும். அதை நாம் பெற்றிருக்க வில்லையெனின் இவை இரண்டுக்கும் மத்தியில் வெறுமையானதாகவே இருந்திருக்கும் நவ நாகரீகத்தையிம் அடைந்திருக்க மாட்டோம்))*

Har fard பல்கலைக்கழக அறிவியல் வரலாற்றுப்பிரிவு பேராசிரியரும் ":நவீன விஞ்ஞானத்தின் உதயம், .இஸ்லாம் ,சீனம் ,மேற்கத்தயம்" என்ற நூலாசிரியரு மான டொபி ஹெவினின் கருத்து கனிப்பீட்டின் படி ((அறபு, இஸ்லாமிய நாகரீகத்தில் செறிந்து காணப்பட்ட தத்துவார்த்த மற்றும் அறிவியல் பொக்கிஷங்கள் மத்திய கால ஐரோப்பியர்கள் மேற்கொண்ட மொழிபெயர்ப்பு நடவடிக்கையினால் மேற்கத்தியத்தை வந்தடைந்தன. மேற்கத்தய சிந்தனை விரிவாக்கத்தில் அதற்கென பாரிய பங்களிப்புண்டு.)) என்கிறார்.

அது ஒரு புரம் மிருக்க இன்னொன்றையிம் கூறுகிறேன் கேளுங்கள்: வேறெந்த நாகரீகமும் பெற்றிராத சிறப்பியல்புகளை இஸ்லாமிய நாகரீகம் பெற்றிருக்கிறது

இஸ்லாமிய அறிவியற்கலையை தூண்டும் உந்து சக்தியாக இஸ்லாம் காணப்பட்டதே இம்முன்னேற்றத்திட்கான முக்கிய காரணியாகும்.

. அதுவே இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய நாகரீக அறிவியல் முன்னேற்றத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பு. அது மட்டுமன்றி இஸ்லாம் அறிவியலை தூண்டும் ஒரு பிரதான உந்து சக்தியாகவும் இருந்தது.

ம்.. இந்தநாகரீகத்தை சேர்ந்தவன் என்றடிப்படையில் எனக்கும் பெறுமையாக இருக்கிறது

https://www.path-2-happiness.com/ta

மனிதன் நிராகரிக்கப்பட்டால் ...

மனிதன் நிராகரிக்கப்பட்டால் ...

ரஜீவும் ,றாஷிதும் மைக்கலை முந்தி கொன்டு கேட்போர் கூடத்திற்கு சென்று உரையாட ஆரம்பித்தனர்.

றஜீவ்: எனக்கு ஒரு விடயத்தை பற்றி பேசவும், அது தொடர்பான இஸ்லாமிய கண்ணேட்டத்தை அறியவும் ஆவலாகவுள்ளேன். ஏனென்றால் அவை இரண்டிற்குமிடையில் நெருங்கிய தொடர்புள்ளன.

றாஷித்: (புன்முறுவலோடு) தயவுசெய்து .

றஜீவ்: இந்தியாவில் ஹர்ஜன் என்ற (பிரம்மனின் மக்கள் அழைக்கப்படும்) கீழ்சாதிப்பிரிவினர் வசிக்கின்றனர். இந்தியாவில் வரலாற்று புகழ்மிக்க தலைவர் மகாத்மா காந்தியே அவர்களுக்கு அப்பெயரை சூட்டினார் கி.பி.1949 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் கீழ்சாதியினர் என்ற வார்த்தை பிரயோகிக்கப்படுவதை சட்ட ரீதியாத தடுத்துநிருந்தாலும் இந்தியாவில் இன்னும் சில இடங்களில் சாதிபிரிவினைவாதம் இருந்து கொன்டுதான் இருக்கிறது.

றசஷீத்: அதில் என்ன பிரச்சினை?

ரஜீவ்: ஒரு பிரச்சினையுமில்லை, ஆனால் அவ்வார்த்தை மணித உரிமை மீறலை பிரதிபலிக்கிறது என்பதை நினைத்தால் சோகமாக இருக்கிறது.

அந்த நேரத்தில் மைக்கல் நன்பர் இருவரிடமும் வந்தனத்தை தெரிவித்தவராக வந்து சேர்ந்தார்.

றாஷித்: ஆ.. மைக்கல் வாருங்கள் சொற்ப நேரத்திற்கு முன்னரே றஜீப் ஒரு விடயத்தை பேச ஆரம்பித்தார். அவர் உரையாற்றும் போது அதை உங்களுக்கும் அறிந்து கொல்ளலாம். ரஜீவ் தயவு செய்து.

ரஜீவ்: இந்து வேதத்திலுள்ள சாதிபிரிவினை பற்றி கூறிகொன்டிருந்தேன். அதில் அதியுயர் சாதியாக பிரம்மர்கள் கருதபடுகின்றனர். இந்துக்களின் கோட்பாட்டின் அடிப்படையில் அவர்கள் பிரம்மனின் வாயினால் அல்லது நெற்றியினால் படைக்கபட்டவர்கள். சோதிடர்கள், நீதிபதிகள் மதகுருமார்கள், ஆசான்கள் என சமுகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்துடையவர்களாக காணப்பட்டனர். இவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ளவர்களாக சத்திரியர்கள் காணப்பட்டனர். அவர்களின் கோட்பாட்டின் படி அவர்கள் இறைவனின் மார்பினால் படைக்கப்பட்டவர்கள். மந்திரி சபையினராகவும், போர்வீரர்களாகவும் திகழ்ந்தனர்.. இவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள வைசியர்கள் பிரம்மனின் தொடையினால் படைக்க பட்டவர்கள், வியாபாரம் ,விவசாயம் ,வணக்கஸ்தலங்களில் பணிபுரிவோர் போன்ற சமுக சேவையில் ஈடுபடுபவர்கள் இவர்களை அடுத்துள்ள சமுக கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் சூத்திரர்கள் பிராமனின் இரு பாதங்களிலிருந்து படைக்கபட்டவர்கள் சமுகத்தில் கீழ் சாதியினர் என அழைக்கபட்டவர்கள் மேற்குறிபிட்ட உயர்சாதியினர் மூவருக்கும்

பணிவிடை செய்வதே இவர்களின் தொழிலாகும் சமூகத்தில் மிக கேவலமான தொழில்களை புரிபவர்கள்.

றாஷித்:ம் நீங்கள் எதை நாடுகிறீர்கள் என புரிகிறது.

ரஜீவ்: மன்னிக்கவும் அதன் பிறகு எனக்கு தெரியாது.

மைக்கல்:இது என்ன அநியாயம் இப்பிரிவினைவாதம் இன்றும் உள்ளது.

ரஜீவ்: ஆம் கீழ்சாதி ,உயர்சாதி என்ற பிரிவினைவாதம் இந்தியாவில் குறிப்பாக கிராமபுரங்களில் இன்றும் தொடர்ந்திருக்கிறது சமுதாயத்தில் மனிதர்களாகவே கணக்கெடுக்கப்படுவதில்லை கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்து மத சட்டங்கள் சூத்திறர்களை முற்றுமுழுவதாக இழிவாகவே கருதுதின எந்தளவுக்கெனில் சூத்திர வம்சத்தை சேர்ந்த ஒருவனுக்கு யார் இந்து மத அனுஸ்டானங்களை கற்றுகொடுக்கிறாரோ அவரும் அவர்களுடன் நரகில் நுளைவார் என நம்பபட்டது அவர்கள் கிராம புறங்களின் ஒதுக்கு புறங்களிலேயே வசிக்கவேண்டும் உடைந்த பாத்திரங்களையோ பாவிக்க வேண்டும் கழுதை ,நாய் முதலியவற்றை தவிர வேறொன்றையிம் அவர்கள் உடமையாக்கிகொள்ள முடியாது இறந்தவர்களின் ஆடையை மட்டுமே அணியவேண்டும் எப்பொழுதும் பாதணியற்றவர்களாகவே செல்ல வேண்டும் அவர்களின் பெண்கள் இரும்பு ஆபரணத்தையே அணிய வேண்டும் தங்கம் வெள்ளி தடை செய்யபட்டவை சூத்திரர்கள் சூத்திரர்களையே திருமனம் செய்யவேண்டும் என்றெல்லாம் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அது மட்டு மன்றி அவர்களின் யாராவதொருவர் மத அனுஸ்டானங்களின் தலையிடவோ அல்லது அதை பற்றி பேசினாலோ கொதிக்கும் என்னையை அவர் முகத்தில் ஊற்றப்படும் எனவும் அச்சட்டதில் குறிப்பிடபட்டுள்ளது அதையிம் தாண்டி கிராம புரங்களில் காணப்படும் சோக நிலை என்னவென்றால் சூத்திரர்கள் காலை ஆறு மனிக்கு முன்னரும் மாலை ஆறு மனிக்கு பின்னரும் வீட்டை விட்டு வெளியேற முடியாது தடையெய்யபட்டுள்ளனர் ஏனெனில் அவர்களின் நிழல் அந்நேரங்களில் மிகவும் நீள மாவதாக என்னுகின்றனர் பிரம்மர்கள் அவர்களின் நிழல் படுவதை அழுக்காக கருதுவதால் குளித்து அவ்வழுக்கிழுருந்து சுத்தமாகும் வரை எந்த உணவும் உண்ண மாட்டார்கள் எந்தவொரு பானத்தையிம் அருந்தமாட்டார்கள் .

மைக்கல்:என்னால் நம்பவே முடியவில்லை இக்காலத்தில் அவ்வாறு இருக்கிறதா இந்திய சனத்தொகையில் அவர்கள் எத்தனை வீதம் .

ரஜீவ்: முழு இந்திய சனத்தொகையில் 45 வீமானவர்கள் கீழ்சாதியினர் சூத்திரர்கள் இந்துக்களின் அவர்கள் 80 வீதமானவர்களாகவும் ஏனைய மூன்று சாதியினர் வெறுமனே 11 வீதம் சதவீதத்திணர்களாக திகழ்கின்றனர்.

ராஷீத்: சென்ற நூற்றாண்டு நாற்பது காலப்குதியில் கீழ் சாதியினர் என்ற வார்த்தை பிரயோகத்தை இந்திய அரசாங்கம் தடைசெய்தது என்று கூறினீர்கள் அவ்வாறாயின் அவர்களை இவ்வாறு வழிநடாத்துவதையும் சட்ட ரீதியாக தடை செய்திருக்க வேண்டும் .

ரஜீவ்: ஆம் நீங்கள் கூறியது சரி ஆனால் பிரச்சினை தூயசாதி தீண்டத்தகாத சாதி என்ற பிரிவினைவாத கொள்கையில்தான் மறைந்திருக்கிறது ஏனெனில் இக்கோட்பாடு இந்து மத அடிப்படை கொள்கைகளில் ஒன்றாக கருதப்படுகிறது இந்து அல்லாதவர்களையிம் உயர்சாதிபிரிவினர்களண பிரம்மர்கள் ,சத்திரியர்கள் ஆகியோர்களையிம் தீண்டத்தகாதவர்களாக கருதுகின்றனர்.

ராஷித்:இப்பிரிவினைவாதம் மனிதாபிமானத்திற்கு முற்றிலும் எதிரானவொன்று ஆனால் இதற்கும் இஸ்லாமிய கண்ணோட்டத்திற்கும் இடையில் என்ன தொடர்பிருக்கிறது.

ரஜீவ்: கீழ் சாதியினர் பெரும்பாலானோர் குறிப்பாக நான் ஏலவெ கூறிய தடைச்சட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் இநிதியாவில் எத்தனையோ மதங்கள் இருக்க இஸ்லாத்தை நோக்கிசென்றார்கள் கிரிஸ்தவ மதத்தை சேர்ந்த ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அதை கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்கான எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்ட போதும் ஏன் இஸ்லாத்தை நோக்கி விரைந்தார்கள்.

ராஷித்:ரஜீவ் சிலவேளை அவர்கள் இஸ்லாத்தில் ஒரு மனிதனுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்தை கண்டிருப்பார்கள் இஸ்லாத்தின் உன்மை தண்மை ஒரு மனிதன் என்றடிப்படையில் அவனுக்கு அதில் வழங்கப்பட்ட உரிமைகள் சிரியவர் பெரியவர் பணக்காரர் ஏழை என்ற பாகுபாடின்றி ஒரு மனிதனுக்கு வழங்கபட்டிருக்கும் சுதந்திரங்கள் முதலியவற்றை அறிந்திருப்பாராயின் நிச்சயமாக இஸ்லாத்தில் நுழைய வாய்ப்பிறுக்கிறது முஸ்லீம்களுடன் சேர்ந்து வாழ்வதனூடாக இவற்றை அறிந்து கொள்ளலாம்.

மைக்கல்:இஸ்லாத்தில் மனித உரிமைகளை பற்றி எங்களுக்கு விளக்கபடுத்த பார்க்கிறீர்கள் உரிமைகளும சுதந்திரங்களும் மதங்களால் வழங்கபடவில்லை மாறாக மேற்கத்தய சிந்தனையாளர்களாலும், தத்துவநானிகளின் வழிகாட்டல்களாலும் அநியாயத்திற்கெதிறான நீண்ட நாள் போராட்டத்தின் விளைவால் மக்கள் தாங்களாகவே பெற்றுகொன்டனர் இந்த உண்மைகள் எல்லாம் இஸலாத்தில் எங்கே இருக்கிறது இஸ்லாத்தைவிட்டும் மதம் மாறும் உரிமை இருக்கிறதா இஸ்லாத்தில் கொள்கை சுதந்திரம் எங்கே இருக்கிறது கருத்து சுதந்திரம் எங்கே இருக்கிறது பெண்ணுரிமை எங்கே பேணப்டுகிறது மார்க்கத்தில் உள்ள உங்களின் உறுதியான நம்பிக்கையை மறைக்க முடியாது.

ராஷித்:நண்பரே மனித உரிமைக்கு முன்னுதாரணம் மேற்கத்தயமே என்ற தொனியிலல்லவா பேசுகிறீர்கள் நீங்கள் கூறுவது உண்மையாக இருந்தால் எத்தனையோ சிந்தனையாளர்களும் வரலாற்றாசிரியர்களும் எழுத்தாளர்களும் தங்களின் கருத்தை தொரிவித்தால் சட்டத்தால் தண்டிக்கபடுவார்களே அதற்கென்ன கூறுகிறீர்கள் இது மட்டுமென்ன ஆய்வு சுதந்திரமா ,கருத்து சுதந்திரம் முதலியவற்றுக்கு எதிரானதில்லையா ,பிரித்தானியாவின் குடியடிரசு கட்சியில் அல்லது ஜெர்மனியின் நாசிச கட்சியில் ஒருவர் தன்னுடைய சுதந்திரங்களை பெற்றுகொள்ள முடியுமா ஏன் நான் ஒரு முஸ்லீமாக இருந்து கொன்டே

என்னுடைய மதம் அனுமதியளித்திருக்க இங்கிலாந்தில் சட்டரீதியாக இரண்டாம் திருமணம் செய்ய முடியுமா அரசாங்கம் என்னுடைய தனிப்பட்ட உரிமைகளில் தலையிடுகிறது.

மைக்கல்: இந்த சுதந்திரம் உரிமைகளெல்லாம் அடிப்படையில் மனித உரிமைகளுக்கு முரணானவை, நாம் அனைவரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டிய அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. உங்கள் இரண்டாம் திருமணம் பற்றி விபரம் கொள்கை சுதந்திரத்திற்கு அப்பாற்பட்டது மனித உணர்வுகளுக்கு முரணானது நீங்கள் வாழக்கூடிய சமுகமுமோ ,சட்டமோ அதை அனுமதிக்காது அது மட்டுமன்றி அதிலே தணிநபர் உரிமை மீறபடுகின்றன ஆனால் அதே நேரம் நீங்கள் பெண்களோடு உரவாட நாடினால் திருமனமல்லாத முறையில் அதை நிறைவெற்றலாம் .

ராஷித்:ம் பிரமாதம் அப்படியென்றால் நான் அநியாயம் உரிமை மீறல் என நினைப்பதை நீங்கள் நியாயம் என்கிறீர்கள் இந்து உயர்குலத்தவர்கள் எங்கள் அனைவரையிம் கீழ்த்தரமாகவே கருதுகின்றனர் என ரஜீவ் கூறினார் அவர்கள் அதை பிறர் உன்மைகளுக்கும் ,சுதந்திரத்துக்கும் எதிராணது என நினைக்கிறீர்களா நிச்சயமாக இல்லை.

ரஜீவ்: அவர்கள் இந்து உ.யர்குலத்தினர் செய்வது சரியா.

ராஷித்: பொதுவாக நோக்கினால் அப்படித்தான் தோன்றும் ஆனால் நான் நாடியது அதுவல்ல மாறாக சுதந்திரம் மற்றும் உரிமைகளை அவற்றை அறிமுகபடுத்திய கலாச்சார ஒழுங்கு முறையை விட்டோ அல்லது அவற்றை அமுல்படுத்தும் பொதுச்சட்ட முறையினை விட்டோ பிரித்து விட முடியாது எனவே இவ்வுரிமைகள் சுதந்திரத்தை பற்றி நாம் அறிய நாடினால் அவை அமைக்கபட்டுள்ள கொள்கைகள் கோட்பாடுகளையோ ஆராயவேண்டும்,அ வற்றின்பயன்பாடுகளையல்ல இந்தடிப்படையில் நாம் உடன்படுவோமாயின் இஸ்லாமிய கண்ணோட்டதிற்கும் மேற்கத்தய கோட்பாட்டிற்கும் தெளிவான வேறுபாடு இருப்பதை காணலாம் இவ்வேறுபாடுகள் மனிதன் பிரபஞ்சம் ,வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்திணூடாக மனிதன் என்றால் யார்? உரிமைகள் என்றால் என்ன? சுதந்திரம் என்பதன் அர்த்தம் என்ன? முதலியன மனித கண்ணோட்ட வித்தியாசத்தின் விளைவால் ஏற்பட்டவை இதே விடயம் தான் எனக்கும் எனது நண்பர் மைக்கலுக்கும் இடையில் மார்க்கம் சகோதரத்துவம் ,சமத்துவம் முதலியவற்றுக்கான வியாக்கியானம் வழங்குவதில் ஏற்பட்டது ஏனெனில் இவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம் மேற்கத்தய சிந்நணையை விட்டும் வேறுபட்டது.

இஸ்லாத்திலுள்ள மனித உரிமைகளை பற்றிய கருத்தை நோக்கினால் ஒரு சமுகம் பின்பற்ற வேண்டிய அத்தியவசியமானவை என கண்டு கொள்ளலாம் இஸ்லாம் அதன் சட்ட ஒழுங்கு முறையோடு சேர்ந்த நற்குணம் மற்றும் நலன் போன்றவற்றை அடிப்படையாக வைத்தே உரிமைகளை வரையறுத்துள்ளது அது மட்டு மன்றி இஸ்லாத்திலுள்ள உரிமைகள் மனிதனோடு சுருக்கி கொள்ளபடாமல்

மிருகங்களையும் உள்ளடக்கியுள்ளது.

மைக்கல்: உங்களுடைய மார்க்கத்தில் விலங்குகளுக்கென உரிமையும் உண்டு என்பதை நான் நினைத்து கூட பாரக்கவில்லை.

ராஷித்: விலங்குகளால் தீங்கு ஏற்படுமென பயந்தாலே தவிர வெறுமனே பொழுது போக்கிற்காகவும் கேளிக்கைகளுக்காகவும் அவற்றை கொள்வதை இஸலாம் தடை செய்துள்ளது அவற்றில் சிலவற்றை உணவுக்காக இல்லாமல் வீணாக அறுக்கப்படுவதை இஸலாம் தடைசெய்துள்ளது அவ்வாறு அறுக்கும் போது ஒரு முஸ்லிம் இஸ்லாம் காட்டிதந்த வழிமுறையில் இறைவனின் அனுமதியுடன் அவன் பெயர் கூறி அறுக்க வேண்டுமென கட்டாயபடுத்தியுள்ளது இறை வழிகாட்டலின்றி ஒருவர் இன்னொருவருக்காக ஒரு விலங்கை அறுக்கும் போது காணமுடியாத, அவ்விலங்கின் உள்ளுணர்வுகளுடன் தொடர்புபட்ட ஒழுங்கு முறைகளை இஸ்லாமிய அறுப்பு முறையில் காணலாம் குறிப்பிட்ட விலங்கின் முன்னால் கத்தியை தீட்டகூடாது அதற்கு முன்னால் வேறொன்றை அறுக்க கூடாது என்பன சிறந்த உதாரணங்களாகும் ஒரு விலங்கிற்கு இவ்வளவு உரிமையை வழங்கும் மாரக்கம் மனிதன் விடயத்தில் குறைசெய்து விடுமென நினைக்கிறீர்களா.

ரஜீவ்: ஹ்ம் அடுத்த சந்திப்பில் இது தொடர்பான மேலதிக விளக்கங்களை அறிய ஆவலாக உள்ளேன்.

https://www.path-2-happiness.com/ta

இஸ்லாத்தில் மணித உரிமைகள்

இஸ்லாத்தில் மணித உரிமைகள்

ராஷித்: கணணியை திறந்து தகவல் பறிமாற்ற பகுதிக்கு சென்று அதில் மைக்கல் அனுப்பியிருந்த குருந்தகவலை பெற்றுகொன்டார், அடுத்த சந்திப்பிற்கு உங்களை தயார் செய்து கொள்ளுங்கள் நாங்கள் கலந்துரையாட வேண்டிய முக்கியமான விடயங்கள் உள்ளன. அவை பிறருடன் பலகும் முறை, அடக்கு முறை, சிந்தனை சுதந்திரம் என்பனவும் ,உங்களை மீண்டும் சந்திக்கிறேன் எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ராஷித் நண்பர்கள் இருவரையிம் தகவல் பரிமாற்ற பகுதியில் பெற்றுகொன்டார் அவர்களுக்கு வந்தனத்தை தெரிவித்தவராக.

நன்பர் மைக்கல் நீங்கள் கூறீயதை போன்று மனித உரிமைகள் தொடர்பான அம்சங்கள் என்னிலடங்காதவை எனவே அவற்றை விலக்குவதற்காக முழுமையான ஒரு அடிப்படையை வகுத்துகொள்வது அவசியம் .

மைக்கல்: *நான் அனுப்பிய குறுந்தகவலில் குறிப்பிட்டதை போன்று சில உதாரணங்களை கூறி விளக்கினாலும் பரவாயில்லை நடைமுறைக்கேற்றதாக இருக்கும்.*

ராஷித்: *ம் நிச்சயமாக அதில் எந்த ஆட்சேபனையிம் இல்லை.*

ரஜீவ்: *கடந்த எங்களுடைய சந்திப்பில் உரிமைகளையிம் கடமைகளையிம் மீளாய்வு செய்ய வேன்டுமெனின் அவை அமையப் பெற்றுள்ள கொள்கைகள் கோட்பாடுகளையே ஆராய வேண்டுமென குறிப்பிட்டிர்கள்.*

ராஷித்: *ஆம் சரி மனித உரிமைகள் சுதந்திரம் என்பன அவை தோன்றிய சிந்தனை பின்புலத்தையிம் அவை வளர்ச்சி கண்ட சமுக பொதுகலாச்சார கட்டமைப்பை அடிப்படையாக கொன்டது அந்தடிப்படையில் நண்பர் மைக்கலிடம் ஒரு கேள்வி. மேற்குலகு கூற கூடிய மணித உரிமைகள் சுதந்திரம் முதலியன தோற்றம் பெற்ற சிந்தனை பின்புலம் மற்றும் மேற்கத்தய கலாச்சார கட்டமைப்பு முதலியவற்றை எங்களுக்கு சற்று விளக்க முடியிமா.*

மைக்கல்: *ஆம் அவற்றை பின்வருமாறு நோக்கலாம்..*

01.சுதந்திரம்,உரிமைகளை தீர்மானிப்பது சிந்தனையே புரட்டஸ்தாந்து கொள்கை லிபரல் வாதத்தில் செல்வாக்கு செலுத்தியிருப்பதை போன்று மதக் கோட்பாடுகளை இச்சிந்தனை உள்வாங்கியிருந்தாலும், அவற்றை ஏற்பதா மறுப்பதா என முடிவெடுப்பது சிந்தனை மட்டும் தான்.

02.உரிமைகளும், சுதந்திரமும் அமையப்பெற்றுள்ள கொள்கை மதச்சார்பற்றது.

03.சமுகம் பின்பற்ற வேண்டிய மிக பிரதான கோட்பாடுகள் சுதந்திரமும், சமத்துவமும் இவையிரண்டும் இன்றியமையாத முன்மாதிரியாகும் .

04.தனிமனித வாழ்க்கை சீராகவும், செழிப்பாகவும் அமைய சமூக நலன் பாதிக்காத விதத்தில் தனிமனித நலன்களில் கவனம் செலுத்தப் பட வேண்டும் .

ராஷித்:*நன்றாக தெளிவுபடுத்தினீர்கள் நன்றி அப்படியென்றால் மேற்கத்தய அடிப்படை மூலாதாரம் வணக்கஸ்தளத்தை விட்டும் பிரிந்தபின்னர் சிந்தனை நடைமுறையை நோக்கி திரும்பியதே, அதே போன்று சுதந்திரம் உரிமைகள் அமையப்பெற்றுள்ள கொள்கை மதச்சார்பற்றது என்று தான் அர்த்தம்.*

இன்னொரு முறையில் கூறினால் சுதந்திரம் சமத்துவம் என்பன மேற்கத்தய கலாச்சார கட்டமைப்பின் உச்சியிளிருக்கும் பிரதான அம்சமாகும் அவையிரண்டையிம் பாதுகாப்பதற்காக உரிமைகளையிம் ,கலாச்சாரத்தையிம் இலக்க நேரிடலாம் என்று கூறுவது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

உரிமைகள் சுதந்திரம் என்பன இஸ்லாமிய கட்டமைப்பிலிருந்து மேற்கத்தியத்திற்கு முற்றிலும் வேறுபட்டவை.

ரஜீவ்: *ஆம் இஸ்லாத்தின் மனித உரிமைகளை தெளிவுபடுத்தும் சிந்தனை கட்டமைப்பை எங்களுக்கு மேற்கத்தய வியாக்கியானத்தோடு ஒப்பீடுசெய்து பார்க்கலாமே.*

ராஷித்:*இஸ்லாத்தில் மற்றும் இஸ்லாமிய சமூகத்திலுள்ள ஒழுங்கமைப்பு முற்றிலும் வேறுபட்டது.*

01.இஸ்லாத்தை பொருத்தமட்டில் சுதந்திரம் உரிமைகளை தீர்மானிக்கும் அடிப்படை வேதவெளிப்பாடாகும். அத்தோடு மனித சிந்தனை மற்றும் நடைமுறைகளிலும் கவனம் செலுத்த தவறவில்லை.

02.இஸ்லாமிய சமூகம் அமைய பெற்றுள்ள கொள்கை இவ்வுலகத்தோடு ஒத்துப்போகும் மார்க்க கொள்கையாகும்.

03.இஸ்லாத்தை பொறுத்தமட்டில் இஸ்லாமிய சமூகத்தின் கலாச்சார பிரமிட்டின் உச்சியில் காணப்படும் மிகப்பிரதான அம்சங்கள் அல்லாஹ்வை வழிப்படுதலும் நீதமாக நடந்துகொள்வதுமாகும் இவையிரண்டிற்கும் ஏனைய சமூக்கலாச்சாரங்களும் ஒத்துபோவது அவசியமாகும்.

04.இஸ்லாத்தில் தனிநபர் சமூகம் ஆகிய இரண்டும் ஒன்றை யோன்று எல்லைமீறிச் செல்லாதவன்னம் பரஸ்பர நலன்பேணக்கூடிய விதத்தில் அமைய பெற்றிருத்தல் வேண்டும்.

ரஜிவ்:*சில உரிமைகளின் சரியான தெளிவின்மை காரணமாக அவை தொடர்பான இவ்விரு (மேற்கத்தய, இஸ்லாமிய) கண்ணோட்டங்களையும் கைவிட வேண்டிய நிலையேற்படலாம்.*

மைக்கல்:*இஸ்லாமிய மற்றும் மேற்கத்தய கண்ணோட்டத்தில் ஒப்பு நோக்கி கொள்கை சுதந்திரம் என்றால் என்ன வென்று முதலில் வரையறுத்து கொள்ளலாம்.*

ராஷித்:மதச் சுதந்திரம் அல்லது கொள்கை சுதந்திரம் ஒப்பிட்டு நோக்க பொருத்தமான துறையே, ஆயினும் மதம் மற்றும் கலாச்சார பிரமிட்டுகிடையிலான அதன்தொடர்பு (இஸ்லாமிய, மேற்கத்தய) அமைப்புகளில் வேறுபட்டவை.

மேற்குலகில் எந்தவொரு நபரும் தான் விரும்பும் மதத்தை பின்பற்றவும் அல்லது மத நம்பிக்கையற்ற நாஸ்திகராக இருக்கவும் உரிமையுண்டு மதச்சுதந்திரம், தனிநபர் உரிமை என்றடிப்படையில் யாரும் இதில் தலையிடமுடியாது.

ஆனால் அதேநேரத்தில் மேற்குலகிலுள்ள முஸ்லிம் தான் விரும்பியவற்றை கடைபிடிக்க முடியுமா என பரீசீலணை செய்து பார்த்தால் தான் விரும்பிய கொள்கையை கடைபிடிக்க அவனால் முடியவில்லை மார்க்கத்தை தன் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க மேற்குலகம் அனுமதியளிப்பதில்லை எடுத்துகாட்டாக ஒரு முஸ்லிம் இஸ்லாமிய முறைப்படி அறுப்புமுறையை மேற்கொள்ளவோ, இரண்டாம் திருமனம் செய்துகொள்ளவோ, அல்லது ஒரு இஸ்லாமிய பெண் மார்க்கம் விதியாக்கியுள்ள ஆடையை அணியவோ பெரும்பாலான மேற்குலக நாடுகளின் முடியாதுள்ளது இவற்றை முஸ்லீம்கள் மார்க்கத்தின் ஒரு பகுதியாகவே கருதுகின்றனர் இதற்கென்ன விளக்கம் கூறுகிறீர்கள்.

மைக்கல்:ஏனென்றால் அவை மனித உணர்வுகளுக்கும் கொள்கை சுதந்திரத்திலுள்ள அவனுடைய உரிமைகளுக்கும் அப்பாற்பட்டவை அதே போன்று பெரும்பாலானோர் வாழ்க்கை அலுவல்கள் சமயத்தைவிட்டும் விலகியிருக்க வேண்டுமென்றே விரும்புவர் அத்தகைய தனிநபர் ஒழுங்கு முறைக்கும் ,சமூக வாழ்விற்கும், அவற்றில் அச்சுறுத்தல் உள்ளது.

அதே நேரத்தில் அந்த முஸ்லிமுக்கு திருமண முறையல்லாமல் அவர்கள் விரும்பும்பட்சத்தில் வேறு பெண்களுடன் சட்டரீதியாக உறவாட முடியிம் .

ராஷித்:என்றாலும் இந்த சட்டரீதியாக ஆகுமாக்கபட்ட நடவடிக்கை அவன் பின்பற்றும் மார்க்கத்திற்கு முரணாகவல்லவா இருக்கிறது!.

நீங்கள் ஒரு முஸ்லிமுக்குரிய இக்கட்டுபாடுகளை உரிமைமீறலாக கருதமாட்டீர்கள் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன் ஏனெனில் இந்த கட்டுபாடுகளுக்கும், மார்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை மாறாக நீங்கள் மனிதனாக நினைக்கும் மதச்சார்பற்ற சடவாத செயற்பாடுகளை சுட்டிகாட்ட கூடியன என்பதை நன்கு அறிவீர்கள் .

இதனால் சமய கண்ணோட்டம் வாழ்க்கையும், ,சமயத்தையும் இரு கூறுகலாக பிரித்துநோக்கும் மேற்கத்திய மதச் சாற்பற்ற கொள்கையுடன் இசைவானதாக தோற்றம் பெற்றது. எனவே இவ்வடிப்படையில் சமயத்திற்கும் ,சமூகவொழுங்கிற்கும் எவ்வித தொடர்புமில்லை. ஆனால் நீங்கள் ஏற்கனவே கூறியதைப் போன்று வாழ்க்கை நடைமுறை மார்க்கத்தைவிட்டும் பிரிந்திருக்க வேண்டுமென்ற உள்ளுனர்வு தனி மனிதனுடைய உள்ளத்தில் மறைந்து காணப்படுகிறது.

ரஜீவ்: இப்போது நான் இஸ்லாமிய கண்ணோட்டத்தின் போக்கை புறிந்து

கொள்கிறேன்.

றாஷித்: இஸ்லாமிய பார்வையில் கொள்கை சுதந்திரம் முழு சமுதாயத்தினரையும் கவனத்திற்கொன்டு அல்லாஹ்வை மாத்திரம் வழிப்படவேண்டுமென்பதை உத்தரவாத மளித்தலாகும். அந்த அடிப்படையில் அல்லாஹ்வின் அதிகாரத்தை ஏற்றுகொள்கின்ற ஒவ்வொருவரையும் இஸ்லாமிய சமூகம் அதன் குடையின் கீழ் ஏற்றுகொன்டு அதை புறக்கணிக்கின்ற ஒவ்வொருவரையிம் ஒதுக்கின்றது. இறைவனால் அருளப்பட்ட மார்கங்கள் அல்லாஹ்வை வழிப்படவேண்டு மென்ற குடையின் கீழ் உட்படுகின்றன. இதனடிப்படையில் யூத ,கிறிஸ்தவ மதங்களையும் இஸ்லாமிய சமூகம் உள்வாங்கி முழு சுதந்திரத்தையும் வழங்கியுள்ளது. அதே நேரம் இவையல்லாத நாஸ்தீக கொள்கையோ சிலைவணக்க வழிபாடுகளையோ இஸ்லாமிய சமூகம் உள்வாங்கவில்லை.

எனினும் அவ்விரு(கிறிஸ்தவ,யூத)மதங்களின் அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டுமென்ற அடிப்படைகொள்கையில் ஏற்பட்ட நெறிபிரல்வால் கருத்துச்சுதந்திரம் என்ற வட்டத்தை சுறுகியதாக காணப்பட்டது. இதனால் அவர்களால் சமய கொள்கையை பரப்பமுடியாத நிலையிலுள்ளனர். அவ்வாறு பரப்புவது அல்லது நெறிபிறள்ந்த கருத்துகளை தெரிவிப்பது சமூக கலாச்சார கட்டமைப்பிற்கும் சமூக ஒழுங்கிற்கும் பங்கம் விளைவிக்கும்.

மைக்கல்: இஸ்லாம் மாற்று மதங்களுக்கு செல்வதை தடுத்துள்ளது. அதைபற்றி என்ன கூறுகிறீர்கள்.

றாஷித்: இப்பிரச்சினை நான் கூறிய அம்சத்துடன் தொடர்புபடுகின்றது. இஸ்லாத்தை விட்டும் மதம் மாறுபவர் தொடர்பான சட்டம் இஸ்லாமிய கண்ணோட்ட அடிப்படையிலான கொள்கை சுதந்திரத்துடன் தொடர்புபட்டது இஸ்லாத்திற்கு ஆரம்பமாக நுழையாதவர்களை இஸ்லாம் தண்டிப்பதில்லை அவர்களை நுளையுமாறும் வற்புறுத்தவில்லை. இஸ்லாத்தில் எத்தைய நிர்பந்தமும் இல்லை ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாக தெளிவாகிவிட்டது. ஆகவே எவர் தாகூத்தை ((ஷைத்தானை) நிராகரித்து விட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவர் திட்டமாக அறுந்து போகாத பலமான கயிற்றை பற்றிபிடித்து கொண்டார். மேலும் அல்லாஹ் செவியேற்கிறவன் நன்கறிகிறவன் [அல் பகரா வசனம் 256] நபியே நீர் கூறுவீராக (உங்கள் இரட்சகனிடமிருந்து வந்திருக்கும் இவ்வேதமானது சத்தியமானதாகும் ஆகவே எவன்நாடுகிறாரோ அவர் இதை விசுவாசித்து கொள்ளட்டும் இன்னும் எவர் நாடுகிறாரோ அவர் (இதை)நிராகரித்து விடட்டும்) [அல்ஹக்ப் வசனம் 29] [அல் காபிரூன் வசனம் 6] உங்களுக்கு உங்கள் மார்க்கம் எனக்கு என்னுடைய மார்க்கம் அதே நேரம் இஸ்லாத்திலிருந்து மதம் மாறி செல்வதை தடுக்கிறது அவ்வாறு செல்பவர்களை வண்மையாக கண்டிக்கிறது.

இஸ்லாத்திலிருந்து மதம்மாறுவது ஒரு சமூகம் நிலைத்திருக்க முடியிமான உன்னதமான அடித்தளத்தை குறை கண்டதாக கருதப்படும் அல்லது அம்மார்க்கத்தின் பரிபூரன தன்மையில் குறைகண்டாதகவோ அல்லது மனிதனுக்கு

அது அவசியமில்லை என்பதாகவே கருதப்படும் எனவே இவ்வாறு கருதுவது அம்மார்க்கம் சரியென நம்பி அதன் அவசியத்தை வழியுறுத்த கூடிய ஒரு சமூகத்திடம் ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்றல்ல.

மேற்குலகில் சுதந்திரம் பெயரில் மார்க்கத்தை விட்டு வெளியேறினால் போதும் உடனே அதற்கெதிராக எதிர்ப்பலைகள் எழுந்துவிடும்.

மைக்கல்: *ஆம் றாசித் உங்களுடைய இவ்விளக்கத்திற்கு நன்றி இப்படியான கலந்துரையாடல்கள் எனக்கு மகிழ்ச்சி யூட்டுகின்றன இதைதொடர ஆசைபடுகிறேன்.*

https://www.path-2-happiness.com/ta

தயவு செய்து ஒரு நிமிடம்

தயவு செய்து ஒரு நிமிடம்

மைக்கல: *10 நிமிடங்கள் தான் உள்ளன றாஷிதை இன்னும் கானவில்லை ..ஆச்சரியமாவுள்ளது.*

றஜீப: *ஆம் வேறோரு நாளை குறிக்க நேரிடலாம்.*

சற்று நேரத்திற்கு பின்னர் றாஷித் தகவல் பரிபாற்ற பகுதியில் தோன்றினார் நண்பர்கள் இருவரும் வந்தனத்தை தெரிவித்தவராக

தாமத்திற்கு வருந்துகிறேன் மன்னிக்கவும் மிக முக்கியமான வேளையில் ஈடு பட்டு கொன்டிருந்தேன் அதை இடையில் விட்டுவருவது பொருத்தமில்லை..

மைக்கல: *ஃ தலைவர் றாசித் தயவு செய்து இதைகூறுகிறேன் இது இஸ்லாமிய மற்றும் அரபுசமூகத்திடம் மிக பரவலாக இருக்ககூடிய ஒன்று நேரத்திற்கு உங்களிடம் எந்த பெறுமதியிம் இல்லை நான் ஏதாவது தப்பாக பேசியிருந்தால் மன்னிக்கவும்.*

ராஷித்: *ஃபெரும்பாலும் நீங்கள் கூறுவது சரி நாங்களாகவே தேடிக்கொன்ட வினை எங்களை பற்றி தப்பபிப்பிராத்தை பிறருக்கு வழங்கிவிட்டோம் என்றாலும் இத்தவரான போக்குகளை இஸ்லாத்துடன் இனைத்துகூறியதை நிறுத்தி கொள்வது நல்லது.*

மைக்கல: *ஃஇவை இஸ்லாத்திலிருந்து வராமல் எங்கிருந்து வந்தன இப்படியான வேலைகளை செய்பவர்களின் பெரும்பாலானோர் நீங்களே.*

றாசித: *ஃ சூழலும் கலாச்சாரமும் உங்களுடைய சமுகத்திற்கும் எங்களுடைய சமுகத்திற்கும் இடையிலுள்ள மிக முக்கிய வேறுபாடுகளாகும் சூழலை பொருத்த மட்டில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இஸ்லாம் பொறுப்பல்ல.*

றஜீப்ஃ *அது எப்படி?.*

றாசித்: *ஃஆம் அது சரி என்றாலும் உன்மையிலே சமகாலத்து முஸ்லீம்கள் பொடுபோக்காகவோ அல்லது போதிய மார்க்க அறிவின்மையினாலோ இஸ்லாமிய போதனைகளை சரிவர கடைபிடிக்கவில்லை இவ்வாறு ஒரு மனிதனிடம் கொள்கை மற்றும் சமய தாக்கம் குறைவடைய சூழல் தாக்கம் அதிகதிக்கிறது.*

மைக்கல: ˙ *ஃநாங்கள் பேசிக்கொன்டிருக்கும் விடயத்தில் சூழல் தாக்கம் எவ்விதம்.*

றாசித்: ˙*ஃஅதை தெளிவு படுத்துகிறேன் உதாரணமாக நீங்கள் உங்கள் நாடுகளில் பழங்காலத்திலுருந்து விரைப்பான குளிரில் வாழ்கிறீர்கள் இச்சூழ்நிலை அக்குளிரிந்து பாதுகாத்து கொள்ள உங்களை கோடை காலத்தில் உணவுகளை சேமித்து வைக்கவும் பொருட்களை சேகரிக்கவும் நிர்பந்திக்கிறது இவ்வாறு தான நீங்கள் சிந்தித்து செயற்படுவதற்கு முன்னரே சூழல் உங்களை காலத்திற்கு கேற்ப செயற்பாடுகளாக உங்களை நிர்பந்திக்கிறது.*

ஆனால் எங்களுடைய நாடுகள் சராசரி தட்ப வெப்பபகுதியில் அமைந்திருப்பதனால் வருடத்தின் பெரும்பாளான காலப்பகுதியில் சீரான காலநிலையே கொன்டிருக்கின்றன வினைச்லும் விரைவாக மிக கணிசமாகவும் கிடைக்கின்றன இதனால் வாழ்க்கை தொடர்ந்தியங்க அதிகமாக கஷ்டப்படவேண்டிய தேவையில்லை இதன் தாக்கம் பிரதேசவாதம் மக்கள் மத்தியில் வெப்ப நிலைக்கு உகர்ந்தாப்போல் ஒரு விதமான சோம்பல் தன்மையை உருவாக்கி விட்டிருக்கிறது சூழல் காரணிகளை கவனித்திற்கொண்டு நுட்பமாக செயற்படவில்லை யெனின் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கும் என்பதை அவர்கள் உணரமாட்டார்கள்.

றஜீப்ஃ: சூழலில் மனிதனுக்கு பலமான தாக்கம் இருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை அத்தாக்கை எதிர்கொள்ள பலமான எதிர்தாக்கம் தேவை எனவே ஏன் இஸ்லாம் இப்பாதகமான சூழல்தாக்கத்தை ஏற்படுத்தவில்லை இது தொடர்பாக இஸ்லாம் கவனம் செலுத்தவில்லை அல்லது மாற்றியமைக்க முடியவில்லையா.

றாசித்: இஸ்லாத்தினால் அதைமாற்றியமைக்க முடியவில்லையென்பதற்கு பல காரனீகள் உள்ளன அதை பற்றி உரையாட நேரம் போதாது என்றாலும் இஸ்லாம் அதை வாழ்க்கையில் கடைபிடிப்பவர்களை நெரிபடுத்துகிறது என்று கூறலாம் எந்த நேரத்தில் இருந்தலும் சரி அதை பற்றிபிடிக்கும் சமுகத்தாரின் வாழ்க்கையை அறநெறிபடுத்தியது அதற்கு பல மூன்று உதாரணங்கள் தருகிறேன்.

மைக்கல்:அவற்றில் சிலதை கூற முடியிமா.

றாசித்: ஆம் பல இருக்கின்றன அவற்றில் சில .

அம்மார் இப்னு கூறுவதாவது உமர் இப்னு தக்காப் அவர்கள் தனது தந்தயை நோக்கி உங்களுடைய நிலத்தை உழுது பயிரிடுவதிலுருந்து உங்களை தடுத்துத்து எது ன வினவினார் அதற்கு என்னுடைய தந்தை நானுமோ வயது முதிர்ந்தவன் மரணித்து விடுமேன்- என கூறினார் அதற்கு உமர் றழி அவர்கள்அதை உழுது பயிடுமாறு உங்களுக்கு உறுதியளிக்கிறேன் என கூறினார் பின்னர் உமர் கத்தாப் ரழி அவர்கள் எனது தந்தையுடன் சேர்ந்து பயிரிடுவதை கண்டேன் என தெரிவித்தார் நபித்தோழர் அப்துல்லா இப்னு மஸ்ஊத் ரழி தெரிவிக்கையில் ஒரு மனிதன் உலக மற்றும் மறமை செயற்பாடுகளில் ஈடுபடாமல் வெறுமையாக இருப்பதை நான் இருக்கிறேன் என நவின்றார் அப்துர் ரஹ்மான் இப்னு இமாம் அபில் ஹாதிம் தனது தந்தையை பற்றி குறிப்பிடுகையில் அவர் சாப்பிடும் போதும் ,நடக்கும் போதும் ,தேவையை நிறைவேற்றி செல்லும்போதும் வேறு ஏதும் தேவைக்காக வீட்டினுள் நுழையிம் போதும் அவரிடமிருந்து புதிய விடயங்களை கற்றுகொள்வேன் என கூறினார்.

றஜீப்ஃ: ஆனால் எக்காலத்திலும் கடைபிடிக்கும் வகையில் நேரத்தின் முக்கியத்துவத்தை பற்றி இஸ்லாத்தில் குறிப்பிடபட்டுள்ளதா.

றாசித்: ஆம் அல்குர் ஆனிலும் ,சுன்னாவிலும் நேரத்தின் முக்கியத்துவத்தை

பற்றி மிக தெழிவாக பலவிடுத்தம் குறிப்பிடபட்டுள்ளது அவற்றை குர்ஆன் ,சுன்னா,மற்றும் நபித்தோழர் ,தாபிஈன்கள் வரலாற்றை புரட்டிபார்பவறுக்கு தெரியிம் அனைத்து நிலைமைகளிலும் இஸ்லாம் எந்தளவு நேரத்தில் கவனம் செலுத்தியுள்ளது அல்லாஹ் தனது திருமறையில் நேரத்தின் மீது பல விடுத்தம் சத்தியம் செய்திருக்கிறான் அவை சிறந்த எடுத்துகாட்டாகும்.

நாங்கள் வருடங்களை கணக்கிட்டு அறிந்துகொள்வதற்காக சூரியனையிம் சந்திரனையிம் படைத்திருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும் இஸ்லாமிய வணக்கங்கள் அனைத்தும் ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை நேரத்துடன் பின்னிபிரிந்தவை ன்ற அடிப்படையில் அவையனைத்திலும் நேரமுகாமைத்துவம் பேணபடுகிறது அது மட்டுமன்றி அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட நேரத்தில் அமைந்திருக்கிறது அவை யெற்று கொள்வதற்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும் இதிலிருந்து இஸ்லாம் நேர முகாமைத்துவத்தை எந்தளவு வழியுறுத்துகிறது என்பதை அறிந்து கொள்ளலாம் இதற்கு உதாரணம் அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிடும் போது இஸ்லாத்தின் தூன்களில் ஒன்றான தொழுகை இரவு பகலென குரிப்பிட்ட நேர அட்டவனையை அடிப்படையாக கொண்டது அவ்வாறெ இஸ்லாத்தின் ஐனைய கடைமைகளும் நோண்பு வருடத்தில் ஒரு முறை குறிப்பிட்ட கால வரையறையை கொன்டது இதனால் ஒரு முஸ்லிம் நாளாந்தம் குறிப்பிட்ட காலவரைக கேட்பாற் போல் தன்னை ஒழுங்குபடுத்தி கொள்கிறான் அவ்வாறே சமுக பொருளாதார ஒழுங்கு முறைகளில் ஒன்றான ஸகாத்தும் நுட்பமான கால வரையரையையிம் அளவையிம் கொன்டது அவ்வாறே ஹஜ்ஜூம்.

நேரத்தின் முக்கியத்துவத்தை எடுத்த காட்டகூடிய சான்றுகள் நபியவர்களின் சுன்னாவும் ஏராகமாகவுள்ளன வாக்குறிதியளிக்கப்பட்ட கால வறையறை கடைபிடிக்குமாறு நபி ஸல் ஏவியுள்ளார்கள் முஸ்லீம்கள் நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்கள் என நபியவர்களின் கூற்றுக்குள் உள்ளடங்கும் ஓர் ஒன்றுகூடலுக்கான நேரங்குறிப்பிட்ட தினத்தின் அல்லது தவனையில் அனைவரும் பிரசன்னமானது நிபந்தனையாகும் அதற்கு மாறுசெய்கிறாரோ அவர் நிபந்தனையை மீறியவராக கருதபடுவார் வாக்குறிதிக்கு மாறு செய்வது நயவஞ்சகர்களின் பண்புகளாகும் என நபியவர்கள் கூறினார்கள் நயவஞ்கனிந் அடையாளம் மூன்று பேசினால் பொய் பேசுவான் ,வாக்களித்தால் மாறுசெய்வான் நம்பினால் துரோகம் செய்வான் குறிப்பிட்ட தவனையில் சமுகமளிக்காதவரையே வாக்குறியளித்தால் மாறுசெய்வான் என நபியவர்கள் கூறினார்கள் .

மைக்கல்: என்றாலும் நேரத்தின் முக்கியத்துவம் என்ற அம்சம் அனைத்து கலாச்சார நாகரீகங்களிலும் இருக்ககூடிய பொதுவான ஒன்று இதுலி இஸ்லாம் புதிதாக எதை சேர்த்தது.

றாசித்: நேரத்தை ஒழுங்குபடுத்தி பயன்பெற வேண்டு மென்ற அம்சத்தில் இஸலாம் மூன்று பரிமாணங்களை அமைத்துள்ளது முதலாவது நேரம் என்பது கால அளவை மனிதன் உடமையாக்கி கொள்வதில் மிகபெறுமதியான நேரமாகும் அதுவே அவனுடைய வாழ்க்கையாகும் அதை முறிபடுத்தவோ ,பிற்படுத்தவோ

அல்லது அதிகரிக்க செய்யவோ அவனால் முடியாது சென்றால் திரும்பி வராது இதனாலே இஸ்லாம தம்மால் இயன்றளவு நேரத்தை பயந்படுத்துமாறு தூண்டுகிறது இவ்வுலவாழ்க்கையில் மட்டுமல்லாது மறுமை வாழ்க்கையுடனும் அதை இனைத்துள்ளது ஒரு முஸ்லிம் மிக்கடினமான நிலையிலும் அதை பயன்படுத்துமாறு ஏவியுள்ளது உங்களுடைய கையில் மறக்கன்று ஒன்று இறுக்கையில் மறுமை நாள் நெருங்கி அதைநட்டும் வரை நிகழவில்லையெனில் அதை அவர் நட்டிவிடட்டும் என நபி ஸல் கூறினார்கள்.

இரம்டாவது பரிமாணம்ஃநேரம் நிர்பந்தமானது இஸ்லாம் நேரத்தை பயன்படுத்துமாறு ஒரு முஸ்லீமுக்கு அவனுடைய தெரிவில் விடவில்லை மாறாக அவனை கட்டாயபடுத்தியுள்ளது அவனுடைய நேரம் ஆயுள் அவனுக்கு சொந்தமானதல்ல மாறாக அல்லாஹ்வை திருப்தியுறச்செய்யும் வழிகளில் பயன்படுத்துவதற்காக அவனால் வழங்கபட்ட நன்கொடையாகும் இதனடிப்படையில் நேரத்தை மனிதன் நற்செயல்களை இலாபமீட்டுவதற்கான ஒரு மூலதனமாக இஸ்லாம் ஆக்கியுள்ளது மறுமை நாளில் நான்கு விடயங்களை பற்றி கேட்கபடும் வரை ஒரு அடியானின் கால் நகராது அதில் ஒன்று அவன் கழித்த அழனுடைய வாழ்நாள் பற்றியதாகும் மனிதர்களில் அதிகமானோர் இரண்டு அருட்கொடைகளை விட்டும் பராமுகமாகவுள்னர் அவை ஆரோக்கியமும் ஓய்வுநேரமும்மாகும் .ஐந்து விடயங்கள் உங்களை வந்து அடையமுன் ஐந்து விடயங்களை பயன்படுத்தி கொள்ளுங்கள் மரணித்திற்குமுன் இங்களுடைய வாவ்க்கையிம் நோய் வருவதற்கு முன் உங்களுடைய ஆரோக்கியமும் வேலையில் ஈடுபடுவதற்கு முன் ஓய்வு வயோதிபத்திற்கு முன்னராண வாழிபம் ஏழ்மைக்கு முன்னராண செல்வந்தம் என அல்லாஹ்வின் தூதர் நபி ஸல் அவர்கள் கூறினார்கள் மூலதனம் அதிகரிக்க அதை பற்றிய கணக்குவழக்குகளும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை .அல்லாஹ் மறுமையில் அந்நரகத்தில் அவர்கள் எங்கள் இரட்சகனே இதிலிருந்து எங்களை வேளியேற்றிவிடு நாங்கள் செய்து கொன்டிருந்தல்லாத நற்செயலையே செய்வோம் என்று பெரும் சப்தமிடுவார்கள் அதற்கு அல்லாஹ் நல்லுனர்ச்சி பெறுவதற்கு போதுமான நீண்ட காலம் வரை நாம் அதில் உங்களை விட்டுவைக்கவில்லையா மேலும் இது பற்றி உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவர் உங்களிடம் வந்தே இருந்தார் ஆதலால் நரக வேதணையை நீங்கள் சுவைத்து கொன்டிருங்கள் அந்யாயகாரர்களுக்கு எந்த உதவியாளருமில்லை என்று கூறுவான் எண குறிப்பிடபட்டுள்ளது. [பாதிர் வசனம் 37] அல் ஹஸன் அல் பஸறி குறிப்பிடுகையில் ஆதமின் மகனே நீ வெறுமனே நாட்கள்தான் ஒவ்வொரு நாள் குறைய குறைய நீயிம் குறைந்து கொன்டே செல்கிறாய் எணக் கூறினார் இங்கு நீயிம் குறைந்து கொண்டே செல்கிறாய் என்பதன் அர்த்தம் மனித வாழ்நாளின் மனித்தியாலங்களையிம் ,நிமிடங்களையிம் ,நொடிகளையிம் குறிக்கும் எனவே நேரம்மென்பது வாழ்க்கையாகும்.

மூன்றாம் பரிமாணம்: நேரம் இன்னொருவரால் ஆக்கிரமிக்க முடியாத ஒவ்வொரு மனிதனுக்குமான உடமையாகும். ஒரு முஸ்லிமை பொறுத்த

மட்டில் அவ்வருட்கொடை(நேரம்) யைப்பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவான் என்ற பயம் அவ்வருட்கொடையை தனக்கும் , சமூகத்திற்கும் பயனளிக்கும்

விதமாக செலவளிக்க அவனைத் தூண்டும்,

மைக்கல: ஃஇதுவென்ன புதுமையான மார்க்கம் மனிதன் அன்றாட வாழ்க்கை அனைத்திலும் தலையிடுவது அவனுடைய தணிப்பட்ட வாழ்க்கையில் அவனுக்கென்று ஒரு தெரிவையும் விட வில்லை.

றாசித்: ஃஇல்லை அவ்வாறில்லை பிற ஒழுங்கு முறைகளுடன் மோதாதவன்னம் மனித்தெரிவுகளுக்கென பல இடங்களை வழங்கியுள்ளது இதை நான் ஏற்கனவே உங்களுக்கு தெளிவுபடுத்திய மனிதன் பிரபஞ்சம் ,வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அறிந்து கொள்ளலாம்.

இஸ்லாம் நேரத்தின் பெருமதியை நிர்வாக அல்லது பொருளாதார ரீதியிலான பௌதீகபயன்களோடு மாத்திரமின்றி பல்வேறுபட்ட கோணங்களிலும் நோக்குகிறது இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒரு மனிதன் இவ்வுலக பௌதீக துறைகளில் தன்னை ஈடுபடுத்தி கொள்வதாக இருக்க வேண்டுமென்பதற்கு முன்பாக ஒரு முஸ்லிம் அதனடிப்படையில் அல்லாஹ்வுடைய தன்டனையை பயப்படுபவனாகவும் கூலியை எதிர்பார்ப்பவனாகவும் இருக்க வேண்டும் அவனுடைய அனைத்து செயற்பாடுகளையும் அல்லாஹ் அவதானிப்பதாக உணர வேண்டும் எனவே இஸ்லாத்தில் நேரத்தை பயன்படுத்தல் என்ற அம்சம் வெறுமனே சடரீதியான நோக்கங்களோடு மாத்திரம் சுருக்கி கொள்ளபடாமல் மறுமையில் கேள்விக்கு கேட்கப்பட்டு அதற்கு கூலி வழங்க படும் என்றே பயத்திலான ஆன்மீக நோக்கத்தையிம் கொன்டது.

ரஜீவ்: முஸ்லீம்களின் நடத்தை சம்பந்தமான ஒரு விடயம் இருக்கிறது அதை எங்களுடைய அடுத்த சந்திப்பில் கலந்தரையாடலாம் என நினைக்கிறேன் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

https://www.path-2-happiness.com/ta

மன்னிக்கவும்

மன்னிக்கவும்

நண்பர்கள் மூவராலும் இனங்கப்பட்ட நேரத்திர்கு முன்னரே ராஷித் ரஜீவையும் மைக்கலையிம் எதிர்பார்தவராக முழுதயார் நிளையில் இருந்தார் சிறிது நேரத்தின் பின் இருவறும் வந்தடைந்தனர் நண்பர்கள் தங்களுக்கிடையே வந்தனங்களை பறிமாறி கொண்டதும் றாஸித்.

நடந்த உரையாடலின் போது முஸ்லீம்களின் நடத்தை தொடர்பான ஒருவிடயத்தை பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள்.

ரஜீவ்: ஆம் பிறரோடு நடந்து கொள்ளும் விதத்தில் நீங்கள் நேரம் தவறுபவர்களாக மட்டுமன்றி வேறு சில நடத்தைகளிலும் மோசமானவர்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ராஷித்:அது எப்படி நான் ஏதாவது உங்களுடன் முறைகேடாக நடந்து கொன்டுடிருக்கிறேனா.

ரஜிவ்: இல்லை இல்லை மன்னிக்கவும் நான் தனிநபரை நாடவில்லை மாறாக பொதுவாக நடைபெறக்கூடிய ஒன்றை கூறினேன் நான் ஒரு தடவை உணவகம் ஒன்றிட்கு சென்றேன் அங்கே பதாகைகளில் நாய்களும், அரேபியர்களும் நுழைவது தடை என பொறிக்கப்பட்டிருந்தது அது என்னை அசொகரியத்திற்கு உள்ளாக்கவே உனவக அதிகாரியிடம் சென்று வினவினேன் அவர் வழமையைபோன்று தணது நடவடிக்கைகளில் கர்வத்துடன் தோற்றமளித்தார் எனினும் அதற்கான பதாகைகளில் பொறிக்கபட்டிருந்ததற்கான காரணங்களை முன்வைத்தார் அவருடைய உணவகத்திற்கு அமைச்சர்கள் மந்திரிகள் பெரும் தனவந்தர்கள் வழைமையாக வருவதாகவும் அன்மையில் சில அரேபிய வாலிபர்கள் உணவகத்தில் முறைகேடாக நடந்து கொன்டதாகவும் கூறினார்.

உணவகத்திற்கு வந்த வாலிபர்கள் சிலர் பணிபுரிவோருக்கு இடைஞ்சல் தரும் விதத்தில் மேசையை அங்கும் இங்குமாக அசைத்து பெரும் சப்தத்தை ஏற்படுத்தினர்.

இன்னொரு முறை கைகலப்பு ஏற்பட உரத்த சப்தத்தில் ஒருவரையொருவர் வாய்வார்த்தையால் ஏசியுள்ளனர்.

அவர்களில் சிலர் பிறரை வெறுப்பூட்டும் விதத்தில் சாப்பாட்டு தட்டில் கைவிரலை விட்டு பிசைந்து சாப்பிட்டுள்ளனர்.

இன்னும் சிலர் அதன் தட்டில்- பின்புறமாக கூர்மையான பொருட்களால் கிருக்கியுள்ளனர்.

இவ்வாறான மோசமான செயற்பாடுகளால் அவருடைய மிகப்பெரும் வாடிக்கையாளர்களை இழக்க நேரிட்டதாகவும் அரேபியர்கள் இதன்பிறகு நுளையாமலிருப்பதற்காக ஒரு முடிவுகட்டவேண்டுமென தீர்மானித்துதிருப்பதாக இப்பதாகையை மாட்டியதாகவும் கூறினார்.

றாஷித்: நீங்கள் கூறுவது பெரும்பாலும் சரியே நான் ஏழவே கூறியதை போன்று எங்களுடைய நடவடிக்கைகளினால் எங்களை பற்றி மோசமான கண்ணோட்டத்தை பிறருக்கு வழங்கிவிட்டோம் என்றாலும் நான் மீண்டும் ஒரு விடுத்தம் கூறுவது யாதெனில் இவ்வாறான மோசமான நடவடிக்கையை இஸ்லாத்துடன் இனைத்து கூறுவது தவறாகும் .

மைக்கல்: ம் நீங்கள் இதையிம் சூழல் தாக்கத்தின் விளைவால் என்பீர்கள் போலும்.

ராஷித்: நிச்சயமாக அந்த வாளிபர்கள் வளர்ந்த தவறான வளர்ப்பு முறையுடன் சூலழ் தாக்கமும் காரணமென்பதை மறந்து விட முடியாது.

மைக்கல்: தவறான வளர்ப்பு முறையென்பது சரி இதில் சூழல் தாக்கம் எங்கிருக்கிறது என்பதுதான் எனக்கு விளங்க வில்லை.

ராஷித்: அதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன் நீங்கள் புவியின் மிக்குளிரான பிரதேசத்தில் வாழ்கின்றீர்கள் குளிர் நீண்ட காலம் தொடர்ச்சியாக இருப்பதனால் மழைபொழியிம் வீதம் ,குளிர்காற்று ,பணிக்கட்டி ,மழைமுதலியன அதிகமாக ஏற்படுகின்றன இக்கால நிலையை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகும் அவற்றை மேற்கொள்கிந்ற போது உரிய முறையில் திட்டமிட்டு முறையாக மிக நுனுக்கமாக மேற்கொள்ள வேண்டும் உதாரணமாக வீடுகளை அமைக்கின்ற போது அதன் கூறைகளையிம் ,ஜன்னல்களையிம் குளிர்காற்று நீர் புகாதவாறு மிகப்பலமானதாகவும் இறுக்கமானதாகவும் இருக்க வேண்டும் எனவே இவை அனைத்தும் திட்டமிட்டு மிக நுணுக்கமாக மேறகொள்ளபடவேண்டும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவை.

அதே நேரம் எங்களுடைய நாட்டில் இவ்வாறான இக்கட்டான நிலைகள் ஏற்படுவதில்லை அங்குள்ள ஒருவன் தான் உயிரவாழ்வதற்காக இவ்வாறு திட்டமிட்டு செயற்பாடுகளை சிரப்பாக மேற்கொள்ள வேண்டுமென்ற தேவையை உணரமாட்டாகள் எனவே இவ்வாறு அவன் சூழ்நிலை தாக்கத்திற்கு உள்ளாகின்ர போது அத்தாக்கம் அவனுடைய வாழ்க்கை முறையின் ஒரு அங்கமாக மாற்றமடைகிறது அதே நேரம் எங்களுடைய பிரதேசம் வரண்ட பாளைவன சூழலாக இருப்பதால் உணர்வுகளும் அதற்கேற்றாட்போல் அமைந்திருக்கும்.

ரஜிவ்:ஆகவே ஒரு மனிதனுடைய நடத்தையில் எவ்வித திருத்தங்களையிம் மேற்கொள்ளாது சூழல் தாக்கத்திற்கு அடிபனிபவனாக அப்படியே விட்டுவிடுவதா.

ராஷித்:அப்படியல்ல மாறாக நாங்கள் கானக்கூடிய இத்தோற்றப்பாடுகளுக்கான உண்மையான காரணத்தை கண்டறியவேண்டுமென்பதற்காகவே கூறினேன்.

ரஜிவ்:மேற்கத்தய சமூகத்திற்கும் இஸ்லாமிய சமூகத்திற்கும் மிடையில் காலநிலை சூழல் மாற்றம்மிருக்குமெனின் அவர்கள் பின்பற்ற கூடிய மார்க்த்திலும் மாற்றம் இருக்கும் எனவே ஏனே தோற்றபாடுகளுக்கெல்லாம் இஸ்லாமும் ஒரு காரணம்

என கூறமுடியாது.

ராஷித் நான் ஏற்கனவே உங்களுக்கு தெளிவு படுத்தியதை போன்று இஸ்லாம் ஒரு முஸ்லீமுடைய வாழ்க்கை முழுவதையிம் அல்லாஹ்வை வழிப்படவேண்டுமென்ற அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமென வழியுறுத்துகிறது அது மட்டுமன்றி பிறருடன் நடந்து கொள்ளும் பண்பாடு முறை முஸ்லீம்கள் ஊடாகவே அந்துலேசியா வந்தடைந்தது என்ற விடயம் பலபேருக்கு தெறியாது அவ்வறிவை அந்தலூசியா சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் முஸ்லீம்களிடமிருந்து ப்ரான்ஸ் ,இத்தாலி ,பிரித்தானியா போன்ற நாடுகள் பெற்றுகொன்டு அதற்கு பல புது வடிவங்களை கொடுத்து தற்போதைய நிலைக்கு கொன்டு வந்துள்ளனர்.

மைக்கல்:இலக்காரமாக சிரித்தவராக முஸ்லீம்கள் ஆகிய நீங்கள் உங்கள் பிடிவாதத்தை எல்லா நல்ல காரியங்களையிம் உங்களுடைய மார்க்கத்திற்கு உரித்தாக்கி நினைக்கிறீர்கள் அது தொடர்பான ஓர் ஆய்வு தேவையென எனக்கு தெரியிம் என்றாலும் நீங்கள் கூறிய இவ்விதிமுறைகள் இஸ்லாத்தில் உள்ளனவா என்பதை தெழிவுபடுத்த வேண்டும்.

ராஷித்:இஸ்லாம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் அனைத்து கட்டங்களையிம் செம்மைபடுத்தியுள்ளது பிறருடன் நடந்து கொள்ளும் முறை தொடர்பான விதிமுறைகள் குர்ஆனிலும் சுன்னாவிலும் ஏராளமாகவுள்ளன.

மைக்கல்:நண்பரே இது நீங்கள் வழமையாக கூறக்கூடியது இதை நம்ப வேண்டுமெனின் உதாரணங்களை கூற வேண்டுமல்லவா.

றாசித்: ஃம்ம் இதை உதாரணங்கள் கொன்டு தெழிவு படுத்துகிறேன் நபி ஸல் அவர்கள் அவர்களுடைய மனைவிமார்களுடன் குழந்தைகளுடனும் எவ்வாறு நடந்து கொன்டார்கள் என்பதை பார்ப்போம்.

ஒரு மனிதன் தணது மனைவிக்காக வாகனத்தின் கதவை திறந்து கொடுத்தால் அவரை இரக்க தன்மையிம் ,அன்பையிம் காட்டுகிறது என்போம் ஆனால் நபி ஸல் அவர்கள் தன் மனைவி ஒட்டகத்தில் ஏறுவதற்காக பூமியில் அமர்ந்து தனது கையை வைத்து தனது காலின் உதவியுடன் ஒட்டகத்தில் ஏறுமாறு வேண்டிகொன்டார்கள்.

நபி ஸல் அவர்கள் தனது மனைவி குழந்தைகள் ,பணியாட்கள் என அனைவருடனும் மென்மையாகவும் மிகக்கனிவாகவும் நடந்து கொன்டார்கள் ஒரு முறை நபியவர்கள் முஸ்லீம்களுக்காக தொழுது இமாமத் செய்யும்போது அவர் சுஜூதில் இருந்த நிலையில் அவருடைய பேரபிள்ளைகளில் ஒருவர் முதுகில் ஏறிகொன்டார் அவர் முதுகில் இருந்து இறங்கும்வரை நபியவர்கள் அசையவே இல்லை .

இஸ்லாம் மிக மென்மையாகவும் ,பணிவாபவும் நடந்து கொள்ள வேண்டுமென வழியுறுத்தியுள்ளது நபி ஸல் அவர்கள் தோழர்களுடன் மகத்தான நபியாகவும் ,இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைவராகவும் இருந்ததோடு மிக பனிவுள்ளவராகவும் இருந்தார் அவருக்கு பல பனியாட்களும் இருந்தும் அவருடைய துணிகளை அவராகவே

துவைப்பார் அவர்கள் பணியாட்களால் முடியாதவற்றை செய்யசொல்லி ஏவ மாட்டார் அப்படி ஏவினாலும் அவர்களுடன் சேர்ந்து அதற்காக உதவிசெய்வார் முஸ்லீம் அல்லாதவர்களுடன் மனிதநேயத்துடன் நடந்து கொண்டார் ஒரு முறை ஒரு யூதருடைய பிரேதம் அவரை கடந்து செல்லவே அதற்காக அவர் எழுந்து நின்றார் இதைகண்ட தோழர்கள் ஆச்சரிய முற்றனர் இறந்தவருக்காக வழங்கப்படும் மரியாதையில் மனிதர்களுக்கு மத்தியில் எவ்வித வித்தியாசமுமில்லை என்பதை அவர்களுக்கு தெழிவு படுத்தினார்.

ஒரு மனிதன் பாதையில் நடக்கும்போது கடைபிடிக்க வேண்டிய பண்பாடுகளை இஸ்லாம் காட்டிதந்துள்ளது பெருமைக்காக தலையை அளவுக்கு அதிகமாக நிமிர்த்தி நடப்பதையிம் மக்கள் இழிவானவன் என நினைக்கும் அளவு தலையை பனித்து வெட்கப்பட்டு நடப்பதையிம் தடைசெய்துள்ளது அல்குர்ஆன் இவ்வாறு நடப்பதற்கென ஒழுங்கு விதிமுறைகளை வறையறுத்துள்ளது அன்றியிம் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பி கொள்ளாதே மேலும் பூமியில் கர்வமாக நடக்காதே ,நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமை காரர் ,கர்வங்கொண்டோர் ஒவ்வொருவரையிம் நேசிக்கமாட்டான் மேலும் உன்நடையில் மத்திய தரத்தை கடைபிடிப்பீராக உன் சப்தத்தை தாழ்த்திகொள்வீராக ஏனென்றால் நிச்சயமாக சப்தங்களிலெல்லாம் மிக வெறுக்கத்தக்கது கழுதைகளின் சப்தமே [லுக்மான் வசனம் 18-19]

ரஜிவ்: நான் மீண்டும் அவ்வுணவக அதிகாரியை சந்தித்தால் அந்த அரெபிய வாழிபர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது பற்றி தெளிவான கண்ணோட்டத்தை என்னால் வழங்க முடியிமா.

ராஷித்:அது தொடர்பாக இஸ்லாமிய ஒழுங்கு விழுமியங்கள் சிலவற்றை கூறுகிறேன்.

ஒருவருக்கொருவர் அன்பை ஏற்படுத்தும் விதமாக சமூகத்திற்கு மத்தியில் இஸ்லாத்தின் கானிக்கையை பரப்புமாறு ஏவியுள்ளது ஸலாத்துக்கு பதிலளிப்பதை கடமையாக்கியுள்ள அதே நேரம் ஒருவர் உண்ணும் போது அல்லது உறங்க தயாராகும் போது அவரிடம் ஸலாம் சொல்லுவதை தடுத்துள்ளது மக்கள் உறங்கும் போது சப்தத்தை தாழ்த்தி கொள்ளுமாறும் ஏவியுள்ளது.

அவசியமின்றி உறக்க சப்தமிடுவதை குர்ஆன் வெறுத்துள்ளது உன் சப்தத்தை தாழ்த்தி கொள்வீராக ஏனெனில் சப்தங்களில் மிக வெறுக்க தக்கது கழுதையின் சப்தமே [லுக்மான்-வசனம் 1] தனது நண்பரை வீட்டுக்கு வெளியே இருந்து கூவி அழைப்பவரை சிந்தணையற்றவர் என வர்ணித்துள்ளது நபி ஸல் அவர்கள் ஒரு போதும் இன்னொருவரை விட சப்தத்தை உயர்த்தி பேசியதில்லை.

வீட்டில் ,வீட்டிற்கு வெளியே ,சாப்பிடும் இடத்தில் அமரும் இடத்தில் என அனைத்திலும் இஸ்லாம் சுத்தத்தை வழியுறுத்தியுள்ளது சாப்பிடுவதற்கான பருகுவதற்கான சில ஒழுங்கு விழுமியங்களை வரையறுத்துள்ளது கரண்டி முள்கரண்டி,கின்னங்கள் என சாப்பிட்ட உபகரணங்கள் அறிமுகமாவற்கு முன்னரே மூன்றுக்கு மேற்பட்ட விரல்களை பாவித்து சாப்பிடுவதையிம் சாப்பாட்டிதட்டில்

கையை விட்டு அலைவதையிம் நபியவர்கள் வெறுத்துள்ளார்கள் சாப்பாட்டு தட்டில் மிக நெருக்கமான பகுதியில் இருந்து சாப்பிடுமாறும் வயிறுபுடைக்க சாப்பிடுவதையிம் தடுள்ளார்கள் சாப்பிடுவதை சமூக அங்கத்தவர்களுக்கு மத்தியில் பரஸ்பரத்தை ஏற்படுத்தும் ஒரு பகுதியாக ஆக்கியுள்ளார்கள் சாப்பிடும் போது கூச்சம் ஏற்படாமல் விருந்தினர்களுடன் அமர்ந்து சாப்பிடுவதை விரும்பியுள்ளார்கள் அவருடைய மனைவியருக்கு அவருடைய கையால் உணவு ஊட்டி இருக்கிறார்கள் ஒரு நபர் தன் மனைவியின் வாயில் வைக்கும் ஒரு பிடி உணவு கவளம் மிகசிறந்த அண்பளிப்பாகும் என கூறினார்கள் அவருடைய மனைவி ஆயிஷா ரழி அவர்கள் பருகிய பாத்திரத்தின் அதே பகுதியில் அவரும் பருகுவார் இஸ்லாம் சாப்பிடமுன் அல்லாஹ்வின் பெயரை மொழிய வேண்டுமேனவும் சாப்பிட்டு முடிந்த பின் அவனை புகழ வேம்டுமெனவும் ஏவியுள்ளது.

மைக்கல்: *நாசித் தயவு செய்து உங்களுடைய மார்கத்திற்கு உங்களுடைய நடவடிக்கைகளுக்கும் மத்தியில் மிக பெரிய வித்தியாசம் இருக்கிறது உங்களைவிட நாங்களே உங்கள் மார்க்க போதனைக்கு நெருக்கமானவர்கள்.*

ராஷித்: *அதை நினைத்தால் எனக்கு கவலையாகவே உள்ளது நீங்கள் கூறுவது சரிதான்.*

https://www.path-2-happiness.com/ta

குர்ஆனின் நற்குணம்

குர்ஆனின் நற்குணம்

ரஜிவ் நன்பர்களான மைக்கல் றாசித் இருவரையிம் நோக்கி.

சென்ற கலந்துரையாடலில் சில முஸ்லீம்களுடைய நடத்தைகள் பற்றி கலந்துரையாடிய போது இஸ்லாமிய பண்பாடுகள் ,ஒழுக்கங்கள் சம்பந்தமாகவும் பேச வேண்டியேற்பட்டது அதை பற்றி கலந்துரையாடினால்.

மைக்கல்: ஆம் நல்லது நான் சில முஸ்லீம்களின் உன்னத பண்பாடுகளைகண்டு வியந்திருக்கிறேன் அதேநேரம் அவர்களின் நடத்தைகள் அதற்கு மாற்றமாகவும் உள்ளன.

ராஷித்: அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன ஒன்று நடத்தைகள் தொடர்பான உங்களுடைய பார்வை இரண்டு குறிப்பிட்ட நடத்தை ஒழுங்கு தொடர்பான அவ்ரகளுடைய உன்மையான நிலைப்பாடு ஒரு மனிதனுடை. குணங்களில் மரபுரீதியான காரணீகளின் தாக்கங்களோடு அவனது சூழல் மற்றும் வளர்ப்புமுறையின் தாக்கங்களும் செல்வாக்கு செலுகத்த்துகின்றன இதை நபி ஸல் அவர்கள் சுட்டிகாட்டினார்கள் அறிவியல் ஆராச்சிகளும் உன்மை படுத்தியுள்ளன.

ரஜிவ்: அதை சற்று தெளிவாகக் கூறமுடியிமா.

ராஷித்: நபி ஸல் அவர்களுடைய இரண்டு ஹதீஸ்கள் ஊடாக அதை விளக்கி கூறலாம் ஒரு முறை நபி ஸல் அவர்கள் தனது தோழர்களில் ஒருவரை பார்த்து —உங்களிடம் அல்லாஹ்வும் அவனது தூதரும் விரும்ப கூடிய இரண்டு பண்புகள் உள்ளன சகிப்புதன்மையிம் பொருமையிம் மாகும் என கூறினார் அதற்கு அந்நபித்தோழர் அல்லாஹ்வின் தூதரே அவையிரண்டும் நாணாக பெற்றுகொன்டவையா அல்லது அல்லாஹ்வால் எனக்கு நிர்பந்திக்க பட்டவையா என வினவினார் அதற்கு நபியவர்கள் அல்லாஹ்வால் உனக்கு நிர்பந்திக்க பட்டவை என தெரிவித்தார்கள் இந்த ஹதீஸில் இருந்து குறிப்பிட்ட நபித்தோழர் அவ்விரு குணங்களையிம் மறபனுரீதியாக அனந்தரமாக பெற்றுகொன்டுள்ளனர் என்பது உறுதி மற்றுமொரு ஹதீஸில் நபி ஸல் அவர்கள் —அறிவு கற்பதனால் ஏற்படும் சகிப்புதன்மை பொறுமையினால் ஏற்படும் சகிப்புதன்மை பொறுமையினால் ஏற்படும் எவரொருவர் நன்மையை அது அவருக்கு வழங்கபடும் எனக்கூறினார்கள் மேற்குறிப்பிட்ட நபித்தோழரிடம் மரபுவழியாக காணப்பட்ட சகிப்புதன்மை பெறமுடியிமான ஒன்றென நபியவர்கள் உறுதிபடுத்தியுள்ளார்கள் எனவே சிறந்த வளர்ப்பு முறையினூடாக பெற்றுகொள்ள முடியிமென்பது உறுதி.

மைக்கல்: இதற்கொரு ஆழமான தத்துவ தேவை பொதுவான கண்ணோட்டத்தில் மனிதனிடம் இயல்பிலே உள்ள பண்புகள் அவற்றை விரும்புவதற்கும் சிலவற்றை வெறுப்பதற்கும் தூண்டகின்றன தனிநபர்களிடையே இவற்றுல் வித்தியாசம் இருப்பினும் சில பன்புகள் குணங்கள் எல்லா காலத்திற்கும் சிறந்தவையாகவும் அவற்றுள் சில மோசமானதாகவும் கருதப்படுகின்றன உண்மை , அமானிதம்

,நீதம் ,உடன்படிக்கையை நிறைவேற்றல் முதலிய பண்புகள் எல்லாகாலத்திற்கும் சிறந்தவை பொய்,அநியாயம் ,ஏமாற்று பேர்வழி மோசடிபோன்றன மோசமானவை அவ்வாறே சகிப்புதன்மை திறந்த மனப்பானமை வசீகரம் ,இரக்கம் ,சமத்துவம் ,அரவனைப்பு முதலியன சிறந்த பண்புகளாகும்.

இவற்றில் இஸ்லாம் முரண்படுகிறது என்று கூறமுடியுமா அல்லது இவையல்லாத தனித்தவமான மிகச்சிறந்த பண்பாட்டு ஒழுங்கு முறையினை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது எனக் கூறமுடியிமா?.

ராஷித்: ம் நீங்கள் கூறுவது சரியே அத்தோடு இன்றுமொன்றை கூறுகிறேன் நீங்கள் குறிப்பிட்ட பண்பாட்டு ஒழுங்குமுறை வேறுபாடு இஸ்லாத்தில் மட்டுமல்ல அனைத்து மதங்களிலும் சமூக ஒழுங்குமுறைகளிலும் உள்ளது ஏனெனில் அவற்றிலுள்ள பண்பாடுகளில் நல்லது கெட்டதுகளை தீர்மானிக்கவும் அளவுகோல் நன்மை தீமைகளை கண்டறியும் கல்விச் சாதனம் முதலிய ஒன்றுகொன்று வேறுபட்டவை வேறுபாடுகளுக்கான காரணம் பிரபஞ்சம் மற்றும் மணிதன் படைக்கபட்ட நோக்கம் தொடர்பான கண்ணோட்டதிலுள்ள வித்தியாசமாகும்.

உதாரணமாக பண்பாடுகள் கோட்பாடுகள் பெரும்பாலானவை சுயநலத்தை அடிப்படையாக கொண்டன ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்திலும் தோமஸ் ஹொப்ஸ் எக்பினோஸா போன்றோர் தனியுடைமை முறையை மிக சிறந்தது என பல வழிகளிலும் வழியுறுத்தினர் அல்லது மேற்கத்தியர்கள் பின்பற்ற கூடிய ப்ரொட் இவனுடைய கண்ணோட்டம் சுய திருப்தி முறைமையினை அடிப்படையாக கொன்டதே அவ்வாறே பிறர் நலன் அர்பனிப்பு முதலியனவும் சுயநலத்தை அடிப்படையாக கொண்ட கண்ணோட்டத்திலிருந்து பெறப்பட்டதாகும்.

இதற்கு புறம்பான முற்றுமுழுதாக சமூக நலத்தை அடிப்படையாக்கொன்ட பண்பாட்டு விழுமியங்கள் தனிநபர் நலனில் போதிய கவனம் செலுத்தாது வெறுமனே சமூக நலன்களை வழியுறுத்தும்

மைக்கல்: இவற்றிக்கு முற்றிலும் வித்தியாசமான பண்பாட்டு விழுமிய முறையை இஸ்லாம் உடைமையாக்கியுள்ளதெனில் அதன் அடிப்படையையும் சிறப்பம்சங்களையும் கூற முடியிமா?

ராஷித்: நான் ஏழவே கூறியது போன்று இஸ்லாம் மனிதனின் அனைத்து கட்ட நடவடிக்கைகளிலும் உள்வாங்கும் வாழ்க்கை அறநெறி பிறபஞ்சத்தின் இயல்பு அதில் மனிதனின் அந்தஸ்து அவன் படைக்க பட்ட நோக்கம் முதலியவற்றை தெளிவுபடுத்தும் கொள்கைகை சார் என்னகருவை தெளிவு படுத்தும் ஒழுங்கு முறையை மட்டுமன்றி அவ்வொழுங்கு முறையினால் தோற்றம் பெற்ற விதி முறைகளையிம் பண்பாட்டு விழுமியம் அதன் ஊற்றுகள் அமையப்பெற்றுள்ள அடிப்படைகள் மற்றும் அதனால் பெறப்பட்ட அதிகாரங்கள் அரசியல் ஒழுங்கு முறைகள் அதன் தோற்றம் மற்றும பண்புகள் சமூக்கட்டமைப்பு அதண் அடிப்படை பொருளாதார கட்டமைப்பு அதன் தத்துவம் ஒழுங்கு முறை முதலியன மற்றும் சர்வதேச ஒழுங்குமுறை அதனுடனான தொடர்புகள் என மனித வாழ்க்கையில்

அனைத்து கட்டங்களையும் பிரதிபழிக்கும் என்ன கருவையும் உள்ளடக்கிய ஒழுங்கு முரையாகவும் இஸ்லாம் திகழ்கிறது.

இங்கிலாந்தில் கிறிஸ்தவ தேவாளையமொன்றில் மிக நீண்ட நாள் பணியாற்றி.ய பாதிரியான H.M.Dr Durrani இதைபற்றி குறிப்பிடுகையில்..

இஸ்லாம் சட்டம் விதிமுறை ,பண்பாடு என அனைத்தையும் கொண்டது மனிதன் மீது விதிக்கப்பட்டுள்ள மதச்சட்டங்களின் பண்பாட்டு ரீதியான இலக்குண்டு இஸ்லாம் மனிதனை ஆத்மா மற்றும் பண்பாட்டு ரீதியாக சீறைப்பதையும் அவனுடைய சிந்தனையை தூய்மையாக்கி சூல உள்ளவர்களுடனான கடைமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அவனை தயார படுத்துவதையும் நோக்காக கொண்டது கிறிஸ்தவ மதத்தைபோன்று மர்மமான இரகசியங்களையும் உயிரோட்டமற்ற அடிப்படைகளையும் ஒரு மனிதனுக்கு நம்பச் சொல்லி பனிக்காத கோட்பாடு மற்றும் நடை முறைரீதியான ஒரே ஒரு மார்க்கம்.ஆகவே இஸ்லாமிய வாழ்க்கை பக்கங்களான ஆன்மீகம் மற்றும் சடவாதம் ஆகிய இரண்டையும் சமநிலையில் நோக்குவதோடு அவை ஒவ்வொன்றிட்கும் பொருத்தமான நிலைபாட்டையும் வழிவகுத்துள்ளது மனித நடத்தையின் அனைத்து பக்கங்களையும் உள்வாங்கும் ஓர் அடிப்படையில் அதன் தத்துவம் அமையப்பெற்றுள்ளது.

ரஜிவ்:இல்லாமிய பண்பாட்டு ஒழுங்குமுறையிள் அடிப்படையைபற்றி பார்த்தோம் அந்த அடிப்படையில் அதன் விஷேட தன்மைகளையும் பற்றி குறிப்பிடுவது சாலபொறுத்தமென நினைக்கிறேன்.

ராஷித்:அவற்றை சுருக்கமாக குறிப்பிடலாம்.

கொள்கைக்கூறு:இதில் மனிதன் ஒரு படைப்பினமாவான்; இறைவன் அவனை முழுமையாக அறிந்தவன்; அவனை வெறுமையாக விட்டுவிடாமல் வழிநடத்துவதற்காக காலத்திற்கு காலம் இறைத்தூதர்களை அனுப்பிவைத்தான். மனிதன் மரணத்தின் பின் எழுப்பப்பட்டு இவ்வுலகில் அவன் மேற்கொண்ட நன்மை, தீமைகள் விசாரிக்கப்பட்டு கூலிவழங்கப்படுவான். இது.... இன்றைய மேற்குலகில் காணப்படும் மதச்சார்பற்ற பண்பாடுகளுக்கு முரணானது.

மாறாத்தன்மை: இஸ்லாமிய பண்பாடுகள் மனிதன், வாழ்க்கை, பிரபஞ்சம் பற்றிய உறுதியான கோட்பாடுகளால் எழுப்பப்பட்டவை.; வாழ்க்கையில் எந்தவொரு கட்டத்திலும் மாறாதவை. எனவே, உண்மை, அமானிதம், பொறுமை என்பன எப்போதும் சிறந்த பண்புகளாகவும், பொய், புறம், குறை கூறித்திரிதல் என்பன எப்போதும் தீய பண்புகளாகவும், அரிதானவை எப்போதும் அறிதாகவுமே காணப்படும். மனித வாழ்க்கைமுறை மாறினாலும் இவை காலத்தால் மாறாதவை.

நடைமுறைக்கேற்ற முன்மாதிரி: இஸ்லாமிய நெறிமுறைகளைப்பற்றி சரிவர அறியாதவர்கள் அவற்றை சிறந்த முன்மாதிரிஎன்பார்கள். அனால் அதுமட்டுமல்ல, அவை மனித இயல்பிற்கு ஒத்துப்போகும் நடைமுறை முன்மாதிரியும்கூட. ஒவ்வொரு மனிதனும் உன்னத படைப்பு என்றடிப்படையில் அவனுடைய வாழ்க்கை தடங்கலின்றி செல்ல முற்றுமுழுதாக துணைபோகும் நெரிமுறைகளாகும். இஸ்லாமிய கோட்பாடு

யூதர்கள் நேசிக்கும் சடவாதத்தையும், கிறிஸ்தவர்கள் பெரிதாக நினைக்கும் ஆன்மீகத்தையும் ஒருங்கிணைக்கவல்லது. இதைப்பற்றி இந்திய எழுத்தாளர் *Raderik Pegg* குறிப்பிடுகையில்:

((இஸ்லாமிய அரநெறிப்போதனைகள் சிறந்த முன்மாதிரிகளைக்கொண்டன; அதனூடாக ஒருவர் இறைவனை அறிந்து இறைபக்தனாக மாறலாம். அதே நேரம் அன்றாட வாழ்க்கையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளலாம்.))

இன்றியமையாதது: இவ்வுலகில் மனிதன் ஒரு பிரதிநிதி. ஆகவே அவனுக்கென பொறுப்பும் , நடவடிக்கைகளை நிருவகிக்கும் சுதந்திரமும் உள்ளன. இதனடிப்படையில் தனிநபர் பொறுப்புக்களில் பண்பாடுகளைக்கடைப்பிடித்தல் ஒரு முக்கிய அம்சமாகும்.

பொறுப்பு :ஒருவர் தன கடமையை உணரும்வரை அவர் சிறந்த குணமுடையவராகமாட்டார்.இங்கு பொறுப்பு என்பதின் அர்த்தம்; மனிதன் தான் புரியும் செயல்களுக்கான கூலியை எவ்வாறிருப்பினும் அதை அனைவர் முன்னிலையிலும் ஏற்கத்தயாராக இருக்கிறேன் என ஏற்றுக்கொள்வதாகும்.

பொறுப்புக்களுக்கென சில வரையறைகள் உள்ளன. இஸ்லாத்தின் தனி மனித பொறுப்புக்கள் அவனுடைய தனிப்பட்ட தீர்மானம் அல்லது நடவடிக்கையோடு வரையறுக்கப்பட்டுள்ளன. தீர்மானத்தில் ஒன்றிட்கு மேற்பட்ட நபர் பங்குகொள்வார்களாயின் அதை கூட்டு அல்லது சமூகப்பொறுப்பு என்போம். அதே நேரம் சமூகம் மற்றும் தனிநபார்களுக்கிடையிலான பரஸ்பர பொறுப்பும் உண்டு. சுருங்கக்கூறின் ஒருவர் இன்னொருவருடைய தனிப்பட்ட தீர்மானம் அல்லது நடவடிக்கையில் தலையிட மாட்டார்.

சமூக ஒழுங்கு முறைக்கு ஏற்ற பண்பாடுகளை கடைப்பிடிப்பதனூடாக சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளல்; மனிதன் என்ற அடிப்படையில் அவனுடைய தனிப்பட்ட உணர்வுகளை சீர்செய்பவன் அவனே. பண்பாடுகளை கடைபிடிப்பதனூடாகவே பூரண அமைப்பில் சுய கட்டுப்பாட்டை அவனால் எற்படுத்திக்கொள்ள முடியும். மனிதனுடைய எண்ணத்தை சீர்செய்வதனூடாக இஸ்லாம் இக்கட்டுப்பாட்டு முறையை விருத்தியடையச்செய்ய பாடுபடுகிறது. மனிதன் தவறிலிருந்து பாதுகாக்கப்பட்டவன் அல்ல அவனால் நிகழக்கூடிய தவறுகளால் சூழ உள்ளவர்களும் பாதிக்கப்படலாம். எனவே இஸ்லாம் அவனுடைய மனசாட்சியையும் வெறுமையாக விட்டுவிடவில்லை.பண்பாட்டு விழுமியங்களை கடைப்பிடிக்குமாறு அவனை வலியுறுத்துகிறது அவற்றை மீறும் பட்சத்தில் சமூகரீதியான சில தண்டனைகளையும் விதித்துள்ளது.

ராஜீவ்: உண்மையிலேயே மிகச்சிறந்த ஒழுங்கு முறைதான்.

https://www.path-2-happiness.com/ta

இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் மனித சமுதாயத்தின் இன்றியமையாத ஒன்று

இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் மனித சமுதாயத்தின் இன்றியமையாத ஒன்று

நண்பர்கள் மூவரும் உரையாடலை ஆரம்பித்த வேலை ராஜீவ், மைக்கல் இருவரும் ராஷிதுடைய சத்தத்தை மீறி வேறு சப்தங்கள் கேற்பதை உணர்ந்தனர். அவர்கள் இருவரும் ராஷிதிடம் அதைப்பற்றி வினவியபோது அவர் அவர்களிடம்தான் முக்கியமான செய்தி கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அதுமுடியும்வரை சற்று பொறுமையாக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். சிறிது நேரத்தின்பின் ராஷித்: மன்னிக்கவும், இந்த நாட்களில் பரவக்கூடிய செய்திகளை அவசியம் நான் கேற்கவேண்டுமென்பதால் நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். என்னுடைய நாட்டில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று தெரியுமா?

ராஜீவ்: ஆம், தொடராக புரட்சிகள் வெடித்தவண்ணம் உள்ளன.

மைக்கல்: எனக்குத்தெரிந்தவரையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மேலோங்கி நாட்டின் ஒழுங்கை இஸ்லாமிய ஆட்சி முறைக்கு மாற்ற முயல்வதாக தெரிகிறது. இதுமிக ஆபாத்தானவொன்று.

ராஷித்: இதில் எந்த வகையில் ஆபாத்து இருக்கிறது.

மைக்கல்: மனித சமூகம் சமய சாம்ராஜ்ஜியத்தினால் மிகக்கசப்பான அனுபாவத்தை கண்டுவிட்டது, மத்திய காலப்பகுதியிலேயே முடிவடைந்து தோல்வியும் கண்டுவிட்டது.

ராஷித்: சமய சாம்ராஜ்ஜியத்தினூடாக நீங்கள் எதை நாடுகிரீகள்?

மைக்கல்: இறைவனிடமிருந்து தமக்கு வேதவாக்கு இறங்குவதாகக்கூரிக்கொண்டு மதகுருமார்கள் ஆளக்கூடிய சாம்ராஜ்ஜியம்தானே அது. அதில் மிக ஆபாத்தான விடயம் அவர்கள் கடவுளின் வார்த்தையால் பேசுபவர்கள் எனக்கூறிக்கொண்டு புனிதத்தன்மையையும், பரிசுத்ததன்மையையும் தங்களோடு சேர்த்துக்கொள்வார்கள்,இதனால் அவர்களுக்கு முரணாக செயற்படுவது இறைவனுக்கு முரணாக செயற்படுவதற்குச்சமனாகும். என விவாதிப்பார்கள். அவர்களை கேள்வி கணக்கு கேற்கயாருமில்லை. இது என்ன அநியாயம்.

ராஷித்: கலாச்சார பிறழ்வு இஸ்லாமிய ஆட்சி முறை பற்றிய பிழையான கண்ணோட்டத்தை உருவாக்கிவிட்டிருப்பதை நினைத்தால் எனக்கு கவலையாகவுள்ளது. நீங்கள் கூறிய *theocracy* பற்றிய விடயம் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றே சமைய அடிப்படையிலான *theocracy* ஆட்சி முறையால் மத்தியகால ஐரோப்பா திருச்சபையின் வாயிலாக பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்தது ஆனால் இஸ்லாம் இவ்வாறானதொரு நிலைப்பாட்டை அங்கீகரிக்கவில்லை. இஸ்லாமிய மத குருமார்களுக்கு சுயமாக தீர்ப்பு வழங்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. மனிதன் என்ற அடிப்படையில் யார் தவறிழைத்தாலும் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவர். தேவை ஏற்படின் மரணதண்டனையும் வழங்கப்படும். இங்கே

மிகத் துலாம்பரமான வேறுபாடு யாதெனில்: இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் மூலாதாரம் இஸ்லாம் மார்க்கமே. அதை அமுல்படுத்தும் நபருக்கு எவ்வித புனித தன்மையோ பரிசுத்தமா கிடையாது. ஆட்சி அதிகாரத்தை இறைவன் தனக்கு பொறுப்புச்சாட்டியிருப்பதாக வாதாடும் எந்தவொரு ஆட்சியாளரும் இஸ்லாத்தில் கிடையாது ஆனால் அவ்வதிகாரத்தை அவன் மக்கள் சம்மதத்துடன் பெற்றிருப்பது அவசியமாகும்.

இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் ஐரோப்பாவில் காணப்பட்ட சமய சாம்ராஜ்ஜியத்திற்கு முற்றிலும் மாற்றமான ஒரு வெற்றிகரமான முன்னேற்றப்பாதையை கடந்து சென்ற எழில் மிக்க ஆட்சிமுறையாகவே காணப்பட்டது.

ரஜிவ்: ம்..சரி இஸ்லாமிய ஆட்சிமுறைக்கும் ஏனைய சமய ஆட்சி முறைக்குமிடையிலான வித்தியாசத்தை அறிந்து கொண்டோம். எனவே, இஸ்லாமிய ஆட்சி முறைக்கும் சமய சார்பாற்ற ஆட்சி முறைமைக்குமிடையிலான வேறுபாடுகளைப்பற்றி கூற முடியுமா?

ராஷித்: ம்ம்...பாரிய வித்தியாசங்கள் உள்ளன...ஏனெனில் மனிதன், வாழ்க்கை, பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய என்னக்கருவிற்கும் இடையில் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உள்ளன. இஸ்லாமிய ஆட்சிமுறை வாழ்க்கையுடன் ஒருங்கிணையும் மார்க்கம் என்ற இஸ்லாமிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும்; ஒரு முஸ்லிம் வாழக்கூடிய பூரண நெறிமுறையை பிரதிபலிக்கும் ,தனிமனிதன் சமூகம், அரசாங்கம் என அனைவரின் பங்களிப்பையும் கவனத்திற்க்கொள்ளும்.

அதை அறிந்து கொள்வதற்கு முன்னர் அல்லாஹ்வின் ஆட்சியதிகாரத்தில் எங்களுடைய அந்தஸ்த்து என்னவென்பதைப்பற்றி அறிய கடமைப்பட்டுள்ளோம். எங்களைப்படைத்த இறைவன் அல்லாஹ் ஒருவனே என நாம் நம்புவோமானால் அவன் பொருந்தக்கூடிய செயல்களைச்செய்வதைத்தவிர வேறெந்த ஒன்றும் எங்களுக்கில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த வானங்கள் பூமி அனைத்தும் அவன் ஒருவனின் ஆட்சிக்குற்பட்டவையே என நம்புவோமாயின் அவ்வாட்சியில் அவனுடைய நாட்டமின்றி எதுவும் நடைபெற முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லாஹ் ஒருவனே எங்களைப்பரிபாளித்து உணவளிப்பவன் என நம்புவோமாயின் நாம் அவனுடைய அடிமைகளே தவிர வேறில்லை....உலகத்திலுள்ள அனைத்திற்கும் தீர்ப்பளிக்கும் தீர்ப்பாளன் அல்லாஹ் ஒருவனேயானால் அவனுக்கு முற்றுமுழுதாக வழிப்படுவதைத்தவிர வேறு எவ்வித அந்தஸ்த்தும் எங்களுக்கு இவ்வுலகத்தில் கிடையாது.

மைக்கல்: என்றாலும் எச்சரிக்கைகளும், வெறுமனே வாய்மொழிகளும் நிறைந்த ஒரு பயிற்சியை எவ்வாறு நாம் துணிந்து மேற்கொள்ள முடியும். ஒரு மனிதன் அவன் எவ்வாறு வாழவேண்டும், அவனுக்கு ஈடேற்றம் அளிக்கக்கூடியவை எவை மற்றும் அவனுடைய வாழ்கையை நெறிப்படுத்த உகந்த வழிமுறை முதலியவற்றை அவனால் சுயமாகவே தீர்மானிக்க முடியுமே தன்னைப்பற்றி தானாகவே அறிந்து கொண்டு பயிற்சி பெறுவதில் தடையேதுமில்லையே.

ராஷித்: *சிக்கலின் யதார்த்தம் மனிதன் ஆட்சயாளனாக இருக்கத்தகுதியானவனா? என்பதில் உள்ளது. எந்தவொரு பொருளாக இருப்பினும் அதைப்பற்றி முன் அறிமுகமில்லாதவர் அதை இயக்க முன் பயிற்சிபெறவேண்டுமென்பது நாம் அனைவரும் அறிந்ததே. வாகனத்தை வழிநடத்த தெரியாதவன் அதை ஓட்ட முயல்வது மடத்தனமான காரியம் என்பதை அறிவோம். முறையான வழிகாட்டலின்றி சிறிய ஒரு கருவியை கூட அவனால் இயக்க முடியாது எனின், சிக்கல்களும் இன்னல்களும் பல கோணங்களில் நிறைந்த அவனுடைய வாழ்க்கையை எவ்வாறு அவன் வழிநடத்திச்செல்வான்....தன்னைப்பற்றிக்கூட முழுமையாக அறியாதவிடத்து எவ்வித வழிகாட்டலுமின்றி பிறரை எவ்வாறு அவன் அறிந்து கொள்வான்.*

அடுத்த சிக்கல்: மனிதர்கள் அனைவரையும் ஓரே சமநிலையில் நின்று நோக்கக்கூடிய ஒருவனால் மாத்திரமே நீதியை நிலைநாட்டமுடியும். தனிமனித அல்லது குடும்ப அல்லது குறிப்பிட்ட வர்க்க அல்லது பிரதேச அல்லது குறிப்பிட்ட சமூக நலனைப்பேனக்கூடிய ஒருவனால் மக்கள் அனைவருக்குமான நீதியைப்பெற்றுக்கொடுக்க முடியாது. எனவே பூமியில் இவ்வழிமுறையின்றி நீதியை நிலைநாட்ட முடியாது.

ஒரு மனிதனால் சுய நலத்திலிருந்து ஒருபோதும் நீங்கியிருக்க முடியாது. இது ஒவ்வொரு மனிதனிலும் குடிகொண்டுள்ள பலவீனமாகும். அரசியற்தலைவர்கள், பிராமணர்கள், பாப்பரசர்கள் இயக்கவாதிகள், அந்தஸ்த்து மற்றும் பணம் படைத்தவர்கள் என எடுத்துக்கொண்டால் இவர்கள் அனைவரும் அவர்களுக்கென தனிப்பட்ட உரிமைகளை கட்டாயமாக்கிக்கொண்டவர். இவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் ஏனையவர்களைவிட பிரத்தியோகமாக சில உரிமைகளை இவர்களுக்கு வழங்கின.பொதுமக்களை இச்சட்டங்களை இயல்பாகவே அமையப்பெற்றன என நம்பவைப்பதற்காக அவர்கள் பல வழிகளிலும் அவற்றைத்தினித்தனர். இப்படிப்பட்டவர்களுடைய அதிகாரத்தில் சமவுடமைகொண்ட சமூகத்தையோ அல்லது நீதியான ஆட்சியையோ எதிர்பார்க்கமுடியுமா?

எத்தனையோ வல்லரசு நாடுகள் அவற்றை விட பலம்குன்றிய நாடுகளை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன. அவற்றின் எந்தவொரு சட்டமாவது இவர்களால் மனித இனத்திற்கான சட்டத்தை இயற்றி நீதியை நிலைநாட்ட முடியுமென எதிர்பார்க்கமுடியுமா?

ராஜீவ்: *என்றாலும் தலைவர் ராஷித் வேறுமார்க்கங்களை பின்பற்றக்கூடிய சிறு பான்மை இனத்தவர்கள் உங்களுடைய இஸ்லாமிய நாட்டில் இருந்தால் என்ன செய்வீர்கள்? உதாரனமாக எங்களுடைய இந்தியாவில் நூற்றுக்கும்மேற்பட்ட மதங்களை வழிப்படும் சிறுபான்மை இனத்தவர்கள் உள்ளனர். அதேநேரம் அதுவோர் இஸ்லாமிய நாடாக இருப்பின் இஸ்லாத்தை பின்பற்றுமாறு அவர்களை வற்புறுத்துவீர்கள்.*

ராஷித்: *நல்லவேளை இடை நீங்கள் ஞாபகப்படுத்தினீர்கள். இதுதொடர்பான மூன்று குறிப்புக்கள் உள்ளன அவற்றை தெளிவு படுத்துகிறேன்.*

முதலாவது: முஸ்லிம் அல்லாதவர் இஸ்லாமிய நாட்டில் வாழ்வதை நீங்கள்

https://www.path-2-happiness.com/ta

ஆட்சேபிப்பதை நினைத்தால் எனக்கு மிக ஆச்சரியமாகவுள்ளது....அதே நேரம் மதச்சார்பற்ற கொள்கையுடைய நாட்டில் வாழ்கின்ற ஒரு முஸ்லிமை அவனுடைய சமயத்திற்கும், கொள்கைக்கும் முரணான விதிமுறைகளை பின்பற்றுமாறு வட்புறுத்துகிறீர்கள்.

இரண்டாவது: ஒரு நாடு இஸ்லாமிய மயப்படுவதென்பது முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தை கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்ற அர்த்தமல்ல. சமயம் தனிமனித கொள்கையோடு அமையப்பெற்றிருக்க வேண்டுமென்ற மதச்சார்பற்ற சிந்தனையால் தோற்றம் பெற்ற முரண்பாடாகும்.ஆனால் இஸ்லாத்தைப்பொருத்தமட்டில் அத்தோடு சுருக்கிக்கொள்ளப்பட்ட ஒன்றல்ல....இஸ்லாம் முஸ்லிமின் அடையாலச்சின்னமாகும். சட்ட, நாகரிக மூலக்கூறாகும். நீங்கள் கூறுவதைப்போன்று பல சமயங்கள், மதங்களைப்பின்பற்றக்கூடிய சமூகத்தில் லிபரல் வாதம் அல்லது சோசளிசவாதத்தை எவ்வாறு அமுல்படுத்தமுடியுமோ அவ்வாறே அவர்கள் அல்லாதவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாமலேயே அதன் சட்டங்களையும், நாகரீகக்கூறுகளையும் கடைப்பிடிக்கலாம்.

மூன்றாவது: ஒரு நாடு இஸ்லாமிய மயப்படுத்தப்படுவதென்பது ஏனைய சிறுபான்மையினத்தவர்களுடைய உரிமைகளை நசுக்குதல் அல்லது அவர்களுடைய மதசட்டங்களில் தலையிடுதல் என்ற அர்த்தமல்ல. இஸ்லாம் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கிறது. அவர்களுடைய தனிப்பட்டவிடயங்கள் அவர்களுடைய மார்க்க சட்டங்களை வழிப்படுவதில் எவ்வித தடையும் இல்லை.

மைக்கல்: ஆனால் நாங்கள் இஸ்லாம் தோன்றி எத்தனையோ நூற்றாண்டுக்கு பிற்பட்ட காலத்தில் இருக்கிறோம். இவ்வாறான நிலையில் இஸ்லாம் ஆட்சிமுறையை அமுல்படுத்துவதென்பது பிற்போக்கு நடவைடிக்கையாகவே கருதப்படும். நீங்கள் எங்களுடைய கருத்துக்கள் சிந்தனைகளை மழுங்கடித்து தற்கால வாழ்க்கைக்கும், நடைமுறைக்கும் ஒவ்வாத நிலைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டுமென விரும்புகறீர்கள்.

உதாரணமாக நீங்கள் வட்டி தடுக்கப்படவேண்டுமென வலியுருத்துகிரீகள் ஆனால் இன்றைய உலக நாடுகளின் அத்தியாவசியமான பொருளாதார கட்டமைப்பாக அது திகழ்கிறது.

ராஷித்: நண்பரே நீங்கள் கூறிய உதாரணம் யதார்த்தமற்றது சர்வதேச ஒழுங்குமுறையால் வரையறுக்கப்பட்ட கண்ணோட்டத்தினடிப்படையிலானது. இன்று நாங்கள் பின்பற்றக்கூடிய சர்வதேச ஒழுங்கமைப்பு வட்டியுடனான பொருளாதார முறையை சமூகத்தில் திணித்ததன் விளைவால் எழுந்துள்ள எத்தனையோ பாதகமான தாக்கங்களை விட்டும் பராமுகமாகவுள்ளது

இஸ்லாம் வட்டியை தடை செய்துள்ளது...உண்மைதான் ஆனால் வட்டி இன்றியமையாத பொருளாதார கட்டமைப்பு என நீங்கள் கூறியது தவறு.

உலகிலுள்ள முதலீட்டாளர்களும், ஏகாதிபத்தியர்கலுமே வட்டியை வலியுறுத்துகின்றனர் ; உலகத்திற்கு அவசியமென மக்களை நம்பவைக்கின்றனர். உண்மையில்...

வட்டி முதலாளித்துவ கொள்கைக்கு மாத்திரமே அவசியமானது. மேற்கத்திய முதலாளித்துவவாதிகள், ஒரு சிறுகுழுவினரிடம் சொத்துக்குவிப்பு காணப்படுவதால் பிற்கால சந்ததியினர் பெரும்பொருளாதார சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடலாமென விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த நூற்றாண்டு முப்பதுகளில் எழுந்த உலகப்பொருளாதார பிரச்சினைகளை பார்த்தால்... இதை அறிந்துகொள்ளலாம்.

முதலாளித்துவம் தோன்றுவதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இஸ்லாம் வட்டியையும், பதுக்களையும் தடை செய்துவிட்டது. இதுவோர் அற்புதம். நண்பரே... இஸ்லாமிய ஆட்சிமுறை இஸ்லாத்திற்கு மட்டுமல்ல முழு மனிதசமுதாயத்திற்கும் இன்றியமையாதது..

https://www.path-2-happiness.com/ta

நிரந்தர பிரியாவிடை

நிரந்தர பிரியாவிடை

மைக்கல் உறையாடல் (தகவல் பரிமாற்ற) அரையை நுழைந்தவுடனே வந்தனத்தை தெரிவித்தார். றாஷித் அதற்கு பதிலளிக்க, றாஷித் இருவறையும் நோக்கி

சற்று பொருங்கள் ....உங்கள் இருவருக்கு பரபரப்பான ஒரு காட்சியை காட்டுகிறேன்.. LIVORNO கலகத்தைச்சேர்ந்த உதைப்பந்தாட்ட வீர்ர் MAURICNA வின் இத்தாலியின் PESCAVA கலகத்திற்கெதிரான போட்டியில் விளையாடிக்கொண்டிருந்த வேளை இதயம் செயலிழந்து மைதானத்திலேயே உயிரிழந்த காட்சியை பார்த்தீர்களா? பார்வையாளர்களுக்கு இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியளித்தது,

மைக்கல்: *ஆனால் ...FA கிண்ணப்போட்டியில் TOTTENHAN கழகத்திற்கு எதிராக விளையாடிய BOTTON அணியின் விளையாட்டு வீர்ர் MWAMBA வுக்கு நிகழ்ந்ததை நினைத்து ஆச்சரியப்படுகிறேன். அவர் மைதானத்தில் இதயம் செயலிழந்து விழவே அனைவரும் அவரை இறந்து விட்டதாக நினைத்தார்கள். ஆனால் அதிஷ்டவசமாக 78 நிமிடங்களின் பின் அவருடைய இதையம் செயற்பட ஆரம்பித்தது. அவர் உயிர் பிழைத்துவிட்டார். வைத்தியர்கள் இதை 78 நிமிட கால மரணம் என்றார்கள். வைத்தியர் TOBIN இதைப்பற்றி குறிப்பிடுகையில்; ((இது நம்பமுடியாத விடயம் MWAMBA இந்த நிழைக்கு திரும்புவார் என நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை)) என வியந்தார், MWAMBA மரணித்து மீண்டும் ஒரு முறை உயிர்பிழைத்துள்ளார்.*

ராஷித்: *மனிதர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரேயொரு உண்மை மரணம் மட்டும்தான் என்றாலும் மரணத்தின் பின் என்ன? அது முடிவா? அல்லது பெரும்பாலானோர் நம்புவதைப்போன்று அது மறுமை வாழ்க்கைக்கான ஆரம்பமா?*

ரஜிவ்: *இறுதி நாள்பற்றிய நம்பிக்கை மனித இனம் தோன்றிய காலம் தொட்டே இருந்து வரும் அடிப்படைக்கொள்கையாகும் எகிப்தியர்கள், மாயா கோத்திரத்தினர், ரோமர்கள், மொசப்பதேமியா என பண்டய நாகரீகங்களிலும் இக்கொள்கை காணப்பட்டதற்கான வரலாற்றுச்சாதனங்கள் உள்ளன பரலோக மதங்களில் மட்டுமன்றி மனிதனால் உருவாக்கப்பட்ட வேதங்களாகிய பிரம்மா, பௌத்தம்,கண்யூச்சியா, ஸொராஸ்திரியம் ஸேபியாஃ கோள்களை வணங்குபவர்கள் ஃ என முதலியவற்றிலும் அதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.*

றாஷித்: *ஆம், நீங்கள் கூறுவது சரி... இஸ்லாத்தின் தூதரும் ஏனைய நபிமார்களும், தூதர்களும் இக்கொள்கையை நம்புமாறு வலியுறுத்தினார்கள் ஈமானிய நிபந்தனைகளில் ஒரு நிபந்தனையாகும் இக்கொள்கையை நம்பவில்லையெனின் இஸ்லாத்தின் ஏனைய அம்சங்களை நம்பினாலும் ஈமானாக கருதபட மாட்டாது.*

மைக்கல்:*என்றாலும் இக்கொள்கையின் தாக்கம் மனிதர்களுக்கிடையில் வித்தியாசபடுவதை அவதானிக்கிறேன் அவர்களில் சொற்பமானவர்களே அனைத்து நிலமைகளிலும் நம்புகிறார்கள்.*

ராஷித்:ஆம் கொள்கை மட்டத்தில் அதை நம்பினாலும் நடைமுறையிலே சிலரிடம் காணப்படுகிறது உதாரணமாக யுத்தகாலத்தில் விமான தாக்குதலின் போது மக்கள் பாதைகளில் நடமாடுவதை தவிர்த்து கொள்ளுமாறு எச்சரிக்கை ஒளி எழுப்பபடுவதாக நினைத்து கொள்ளுங்கள் அதன் பின்னர் பாதையில் நடமாடுபவர்கள் பைத்தியம் என்று கூட நினைக்கலாம் உலகிலுள்ள இச்சிறு ஆபத்திலுருந்து இந்தளவு முன்னெச்சரிக்கையாக இருப்போமானால் இதை விட மிக தூரமான உறுதியாக நிகலும் என அனைவரும் நம்பகூடிய இறைத்தூதர்களால் எச்சரிக்கப்பட்ட ஆபத்திலுருந்து எந்தளவு முனேனெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மைக்கல்:மனிதர்கள் அவ்வாறு பராமுகமாக இருப்பதற்கான காரணம் எச்சரிக்கை ஒளி மூலம் அறிவிக்கபடும் அபாயத்தை பிற நாடுகளில் அல்லது வேறு சந்தர்ப்பத்தில் கண்ணூடாக காண்கிறார்கள் அதனூடாக முன் அனுபவத்தை பெறுகிறார்கள் ஆனால் மறுமை நாள் விடயத்தில் எங்களுக்கும் அதற்கும் மத்தியில் மரணம் ஒரு திரையாக உள்ளது எங்களில் ஒருவரும் அதை கண்டதில்லை இதுவே இவ்விரு நிலைகளுக்கு மிடையிலுள்ள வித்தியாசமாகும் .

ராஷித்:ஆம் அது சரி என்றாலும் மனிதன் வெறுமனே புலன்களை மாத்திரமின்றி சிந்தனையையிம் பயன்படுத்தி உண்மைகளை அறிந்து கொள்ள கடைமைபட்டுள்ளான் மக்களிடம் இது தொடர்பான நம்பிக்கை வலுவிழந்து காணப்படுவதற்கான காரணம் அவர்கள் சரியான முறையில் சிந்தனையை பயன்படுத்தாதே ஒரு விட. யத்தை அவர்கள் சிந்தனை ரீதியாக ஆய்வு கண்கொண்டு பார்ப்பார்களாயின் அவர்களுடைய கண்களுக்கு புலப்படுபவற்றை விட புலப்படாதவைகளே அதிகமாக நம்புவார்கள்.

அதேபோன்று இன்னும் சில விடயங்களை பற்றி ஆராய்வது ஒருவரை அழிவிற்கு இட்டு செல்லும் ஏனெனில் வாழ்க்கையின் ஒரு முறை தான் அவற்றை கடக்க முடியிம் ஒருவர் உயர்ந்த கட்டிடத்திலுருந்து எந்த பாதிப்புமின்றி தான் குதிக்க போவதாக இன்னொருவரிடம் சவால் விடுகிறார் அதற்கு மற்றவர் அவறை நோக்கி முயன்று பார் என கூறினால், அதை அவர் பயிற்சி

பெறுவாறாயின் அதுவே அவரின் முதலும் இறுதியிமான முயற்சியாக இருக்கும் எனவே இவ்வாறான விடயங்களை சுய அனுபவித்துனூடாக சரியா அல்லது தவறா என பரீசீலிக்க வேண்டிய அவசியமில்லை மாறாக சிந்தனை மற்றும் முன்னைய சம்பவங்களை ஆராய்வதனூடாக இதனால் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ளலாம் .

ரஜிவ்: இக்கொள்கை (மறுமைநாளயை) உறுதியாக நம்ப வேண்டுமாயின் அறிவியல் ஆராய்ச்சி மூலமாகவும் சிந்தனை ரீதியான ஆதாரங்கள் மூலமாகவும் அதை சரி காண்பேம் .

ராஷித்: அதில் எந்த தடையிமில்லை ஆனாலும் ஒன்றை கூறிக்கொள்கிறேன் உறுதியாக நிகழுமென்பதற்கான மிகப் பெரும் ஆதாரம் அதை பற்றி எங்களிடம் அறிவித்தவனே அவன் வேறுயாருமில்லை அல்லாஹ் ஒருவன் மட்டுமே அவனே

எங்களிடம் இறை தூதர் ஊடாக எங்களிடம் அறிவித்தான் நம்புமாறும் ஏவினான் ,எங்களுடைய நளவு ,கெடுகதிகளை பற்றி எங்களிலும் நன்கு அறிந்தவன்.

அது ஒருபுரம்மிறுக்க சிந்தனை ரீதியான ஆதாரங்களை கேட்டீர்கள் அவை நிறையவே உள்ளன.

முதல் ஆதாரம் ,ஒன்றை புதிதாக உருவாக்கல் அதை மீண்டும் உருவாக்க முடியுமென்பதற்கான ஆதாரமாகும் அதாவது அல்லாஹ்வே எங்களை எவ்வித மூலப்பொருளுமின்றி படைத்தவன் மரணித்தின் பின் எங்களை மீண்டும் உருவாக்க சக்தி மிக்கவன் என நாம் ஏற்று கொன்டால் இரன்டாம் முறையாக உயிர்பிப்பதற்கான சாத்தியம் முதல் முறையைவிட ஒப்பீட்டளவில் மிக பலமாக உள்ளது என்ற முடிவுக்கு வரலாம் .

இரண்டாவது ஆதாரம் : பொருள்களின் நிலை மாறா தன்மை இதற்கு மனிதர்கள் அனைவரோடும் தொடர்புபட்ட ஒரு உதாரனத்தை அல்குர்ஆன் போதிக்கிறது அதுதான் பச்சை மரங்களிலுருந்து நெருப்பை வெளிபடுத்தலாகும் எனவே ஒன்றின் எதிர்மறை பொருளிருந்து அதை உருவாக்க கூடிய படைப்பினங்கள் மூலக்கூறுகள் அனைத்தும் அவனை வழிப்படும் ஒருவனால் உக்கிபோன என்புகளை உயிர்பிக்க முடியும் என்ற முடிவுகளுக்கு வரலாம்.

மூன்றாவது: மரணம் .வாழ்க்கை பின்பு மரணம் வாழ்க்கை யென்ற படைப்பினங்களின் சுழற்சிமுறை ,திடமான விதையிலிருந்து பூத்து குழுங்கும் செழிப்பான உயிருள்ள மரங்கள் வெளியாகின்றன. பின்னர் அம்மரங்கள் திடமான வளராத விதைகளை வழங்குகின்றன அவ்வாறே வளரும் உயிருள்ள பறவைகள் இறந்த முட்டையை வெளியாக்குகின்றன பின்னர் அவ்விரந்த முட்டையிலிருந்து அசையும் உயிருள்ள பறவைகள் வெளியாகின்றன எனவே இறந்த திடமான ஒன்று என நாம் நினைக்க கூடிய ஒன்றில் வாழ்க்கை மறைந்து காணப்படுகிறது.இவ்வாறு தான் மனிதனும் ஏனைய விலங்குகளும்.

நான்காவது:மனிதன் ,விழங்குகள் ,தாவரங்கள் வாழ்க்கையில் வெளிப்படையாக நாம் காண கூடிய மரணித்து உயிர்பிக்கும் முறை சாதாரன மனித உடல் 260,000,000.000,000,000 செல்களால் ஆனது இவை ஒவ்வொன்றும் மிக வேகமாக குறைந்து சமீபாட்டு தொகுதியினூடாக உனவை பெற்று அதேவேகத்தில் உருவாகின்றன எனவே மனித உடல் ஓடும் நதியை போன்று தொடாராகவே தானாகவே மாறக்கூடியது இவ்வாறு உடலில் எந்த ஒரு பழைய செல்லும் எஞ்சியிருக்காத வகையில் எங்களுடைய உடல் தொடர்ச்சியாக மாறும் திட்டதிற்குட்பட்டது இத்திட்டம் குழந்தை ,வாலிப பருவங்களில் மிக துரிதமாக செயற்பட்டு வயோதிப வயதை அடைந்ததும் மெதுவாக தொழிற்படுகிறது இம்மாற்றம் அன்னளவாக பத்து வருடங்களுக்கு கொருமுறை நிகழ்கிறது.

இதிலிருந்து தோற்ற அமைப்பில் மனித உடல் மாற கூடியது என்ற முடிவுக்கு வரலாம் ஆனால் மனிதனுடைய அறிவு பழக்க வழக்கம் ,பேனுதல் ,நம்பிக்கை சிந்தனை போன்ற உள்ளார்ந்த அம்சங்கள் மாற்றம் அடைவதில்லை மனிதன்

அவனுடைய உடல் அழிவதால் அழிபவனாக இருந்தால் குறைந்த பட்சம் அவனுடைய செல்களையாவது அழிக்கவேண்டும் வாழ்க்கை(உயிர்) உடலை விட்டும் வேறுபட்ட ஒன்று என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம் தொடர்ச்சியாக செல்கள் இறந்து உடல் அழிந்தாலும் அவனுடைய வாழ்வு நிலைத்திருக்கும் .

ஐந்து: பிரபஞ்சத்தின் பகுதிகள் மனிதன் மேற்கொள்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளையிம் பதியவைக்கிறது என்பதை நவீன விஞ்ஞானம் குறிப்பிடுகிறது மறுமையின் மிக பிரதான நோக்கம் உலகில் செய்த நன்மை தீமைகளுக்கு கூலி வழங்குவதாகும் பதியப்படும் அம்சங்களில் மணிதனுடைய சொல் செயல் என்னம் அனைத்தும் உள்ளடங்கும் இவைகள் எங்கும் சென்று விடாது அவற்றை மனிதன் இறந்த பின்பும் மீட்டியெடுக்கலாம் என்ற உன்மையை அறிவியல் சான்றிதழ் ஊர்ஜிதம் செய்கின்றன.

எங்கள் உள்ளத்தில் தோண்றும் என்னங்களும் ,சிந்தனைகளும் ,தூக்கத்தில் கனவாக உருவாகும் சிலவேளை நாம் சுய நினைவிழந்திருக்கும் நிலையில் எங்களை அறியாமல் அவை நினைவிற்கு வருகின்றன அவற்றை நாம் உனருகிறோம் சிந்தனை ,நினைவுகள் என்பன நாம் உணரகூடியவைகள் மட்டுமல்ல எம்மால் உணரமுடியாத சில புதிர்களுமாகும் இதிலிருந்து எங்களால் நினைத்தாலும் அவற்றை அழிக்க முடியாது என்று உறுதியான முடிவுக்கு வரலாம் அறிவியலும் இதை உன்மை படுத்துகிறது .

அதேபோன்று நாம் செவிமடுக்கும் ஒலி அலைவடிவில் காற்றில் அங்கும்மிங்குமாக உலாவுகின்றன அழியாத நிலாயிலுள்ள இவ்வொலி அலைகளை பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் செவிமடுக்க வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானம் நம்புகிறது ஆய்வாளர்கள் அதை பரிசோதனை மூலம் இன்று வரை உறுதிபடுத்தவில்லை ஆயினும் மனிதனால் எழுப்பப்படும் ஒவ்வொரு ஒலியிம் பதியப்படும் என்பதை உறுதிபடுத்தியுள்ளனர்.

செயற்பாடுகளை எடுத்துகொண்டால் இரவிலோ அல்லது வெளிச்சத்திலோ நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடுகளும் இடங்களில் உருவமைப்பில் சேமிக்க படுகின்றன என்பதை நவீன விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது உலகிலுள்ள உயிருள்ள உயிரற்ற பொருட்கள் என அனைத்திலிருந்தும் அவை அசைகின்ற போதும் அசையாமல் திடமாக இருக்கின்ற போதும் வெப்ப கதிர்கள் வெளியாகின்றன இக்கதிர்களை படம்பிடிப்பதற்காக மிக நுன்னிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ஆயினும் அக்கருவிகளால் அகிகதிர்களை ஒரு நிகழ்வின் பின்னர் சிறிது நேரம் வரையே படம் பிடித்து காட்டமுடியிம் எப்படியோ எங்களுடைய செயல்கள் எங்களை அறியாமலே பதியபடுகின்றன மறுமை நாள் நிகழும் என்பதற்கு இதுவொரு அறிவு பூர்வமான ஆதாரமாகும்.

மைக்கல்: ம்... அது நிகழுமென உறுதியாக நாம் நம்பினால் இஸ்லாத்தில் அதைபற்றி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுக்குங்கள்.

ராஷித்: மறுமைநாளை பற்றி இஸ்லாத்தின் குறிப்புகள் ஏனைய மதங்களை

விட்டும் அதிகளவில் வேறுபட்டவை என்றாலும் அதை சுறுக்கமாக சொல்கிறேன்.

01.மறுமை நாளில் அல்லாஹ் இவ்வுலகம் மற்றும் அதிலுள்ள அனைத்து உயிரினங்களையிம் அழிப்பான்.

02.பின்பு அவற்றை உயிர்பித்து அவன் முன் ஒன்று திரட்டுவான் அதுவே" யவ்முல் ஹஷ்ர்" ஒன்றுதிரட்டப்படும் நாளாகும் .

03.பின்பு மனிதர்கள் அனைவரும் தாங்கள் புரிந்த அனைத்து செயற்பாடுகளும் எவ்வித கூட்டலோ குறைத்தலோயின்றி இறை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த படுவர்.

04.அல்லாஹ் ஒவ்வொருவருடைய நற்செயலையிம் தீச்செயல்களையிம் நிறுப்பான் எவருடைய நனைமையின எடை கூடுகிறதோ அவர்களை அவன் மன்னிப்பான் எவருடைய தீமையின் எடை கூடுகிறதோ அவர்களை அவன் தண்டிப்பான் .

05.அவன் மன்னிப்பவர்களை சுவர்கத்திலும் ,தண்டிப்பவர்களை நரகத்தில் நுழைவிப்பான்.

ரஜிவ்: *உன்மையாகவோ பயங்கரமான ஒன்று.*

https://www.path-2-happiness.com/ta

இஸ்லாமும் பயங்கரவாதமும்

இஸ்லாமும் பயங்கரவாதமும்

குறிப்பிட்ட தினத்தில் நண்பர்கள் மூவரும் உரையாடல் பகுதி (தகவல் பரிமாற்ற அறை)யினூடாக சந்தித்து கொண்டனர் மைக்கல் வந்தனத்தை தெரிவித்தவராக நண்பர்களை நோக்கி.

மைக்கல்: *கடந்த எங்களுடைய ஒன்று கூடலில் பெரியார் றாஷித் குறிப்பிட்ட சில அம்சங்கள் இஸ்லாம் பற்றிய கண்ணோட்டதிற்கு முற்றிலும் முரணானவை அவர்களுடைய மார்க்கத்தின் உன்னதமான பக்கங்களை மாத்திரம் எங்களுக்கு காண்பித்துவிட்டு மீதமான இருள் சூழ்ந்த பகுதிகளை விட்டுவிட்டார் அதாவது பயங்கரவாதமென்றால் அது இஸ்லாம் என கூறும் அளவு இன்றும் நாம் கண்ணூடாக கண்டுகொண்டிருக்கிறோம்.*

ரஜிவ்: *இவ்விடயத்தில் உங்களுடன் ஓரளவு உடன்படுகிறேன் ஆயினும் பயங்கரவாதம் மதத்தையோ அல்லது இனத்தையோ சார்ந்ததல்ல எனக்குத் தெரிந்த மட்டில் நான் வசிக்கும் இந்தியாவில் எவ்வளவோ படு மோசமான நிகழ்வுகள் அரங்கேறிவுள்ளன ஆனால் பல்வேறுபட்ட காரணங்களை அடிப்படையாக கொண்டவை அவற்றில் எதை நோக்காக கொண்டவை என நாம் ஆராய்வது நல்லது.*

மைக்கல்: *நான் ஏற்கனவே இதை கூறினேன் இஸ்லாத்தில் பயங்கரவாதம் மறைந்திருக்கிறது அது வாலால் பரப்பபட்டது என்ன றாசித் இதை மறுக்கிறீர்களா .*

ராஷித்: *ஆம் உறுதியாக மறுக்கிறேன் ஆதாரங்களும் மறுக்கின்றன.*

மைக்கல்:*எந்த ஆதாரங்கள்.*

ராஷித்: *சமய ஆதாரங்கள் வரலாற்று உண்மைகள் நடைமுறை சம்பவங்கள் என அனைத்தும் மறுக்கின்றன முதலில் ஊடங்களும் அவை சார்ந்த வெளியிடக்கூடிய பொய்யான பிரச்சாரங்களை உங்கள் சிந்தனையை விட்டும் அகற்றுங்கள்.*

ரஜிவ்: *நாங்கள் சுதந்திரமான சமூகம் எங்கள் சிந்தனையை யாராலும் கட்டுபடுத்த முடியாது.*

ரஷித்: *ம் சரி நங்கள் தெரிவுச் சுதந்திரம் உடையவர்கள் அனால் இருதியில் ஊடகதுறையை ஆள்பவர்கள் முன்வைப்பதே நாம் தேர்ந்தெடுக்கிறோம் அரசியல் வாதிகளும் இன்றைய சீர்த்திருத்த வாதிகளும் அதற்கு எங்களை நிர்பந்திக்கின்றனர் இன்றுவரைக்கும் இஸ்லாத்தையும் பயங்கர வாதத்தையும் தொடர்பு படுத்தி மேற்கத்தய அரசியல் வாதிகள சிந்தனையாளர்கள் மட்டத்தில் வாக்குவாதங்கள் அரங்கேற்றி கொன்டுதான் உள்ளன மேற்கத்தய நாகரீகத்தை காட்டிகொடுப்பதாக கூறிக்கொன்டு பயங்கரவாத்துக்கெதிரான போர் என்ற பெயரில் மீண்டும் ஒரு சிலுவை யுத்ததிற்கு அழைப்பு விடுக்கிறது.*

மைக்கல்: *நான் மீண்டும் ஒரு தடவை கூறுகிறேன் உண்மையை கண்டறிவதே*

எங்களுடைய நோக்கம்.

ராஷித்: மேற்கத்தயம் நினைப்பதை போன்று இஸ்லாம் தீவிரவாதத்தை தூன்டகூடியதாகவும் கிறிஸ்தவம் சமாதானத்தை போதிக்கும் மதமாக இருக்குமானால் நண்பரே வால் என்ற பதம் குர்ஆனில் எத்தனை தடவை பைபிளில் எத்தனை முறை கூறப்பட்டுள்ளது என தெரியிமா.

மைக்கல்: சரியாக தெரியாது ஆனால் பைபிளிலும் பார்க்க குர்ஆனில் அதிகமான தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என உறுதியாக நம்புகிறேன்.

ராஷித்: உங்கள் இருவருக்கும் ஓர் திடுக்குடும் தகவல் அல்குர்ஆனில் 114 அத்தியாயங்களும் 62360 வசனங்களும் 77439 சொற்களும் உள்ளன ஆனால் ஒரு தடவையெனும் "வாள்" என்ற பதமோ அல்லது ஒத்தபதமோ அல்குர்ஆனில் குறிப்பிட படவில்லை வாள் என்ற பதத்திற்கு அரபுமொழியில் அன்னளவாக 60 சொற்கள் உள்ளன அதே நேரம் பரிசுத்த வேதாகமத்தில் 200 க்கும் மேற்பட்ட தடவைகள் கூறபட்டுள்ளன .

மைக்கல்: ஓஹ்ஹ்... உண்மையில் ஆச்சரியமாக இருக்கிறது இதையா நீங்கள் சமய ஆதாரங்கள் என்கிறீர்கள்.

ராஷித்: சம. ஆதாரங்களில் இது வெறும் ஒரேயொரு ஆதாரமே மேலதிகமாக கூறலாம் ஆனால் ஏனைய உண்மைகளை பற்றி அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும்.

ரஜிவ்: அந்த உண்மைகள் என்ன.

ராஷித்: அவற்றில் மிக முக்கிய வரலாற்று உண்மையை நண்பர் றாசித் நிச்சயம் நீங்கள் அறிந்து இருப்பீர்கள் முஸ்லீம்கள் உலகம் பூராகவும் பறந்து வாழ்கிறார்கள் குறிப்பாக இஸ்லாமிய படை சென்றிராத தெற்காசிய,கிழக்காசிய நாடுகள் அதேபோன்று ஆபிரிக்க கண்டத்தின் பெரும்பாலான பகுதிகள் முஸ்லீம்கள் செறிந்து வாழும் பகுதிகளாகும் .

இஸ்லாமிய வரலாற்றில் எந்த ஒரு நிலையிலும் முஸ்லீம்கள் இஸ்லாத்தை ஏற்குமாறு ஏனையவர்கள வர்புறுத்தியதாக எந்த தகவலும் இல்லையென நேர்மையான வரலாற்றாசிர்யர்கள் குறிப்பிடுகின்றனர்.

மைக்கல்: ஆனால் சில வரலாற்றாசிரியர்களோ நீங்கள் கூறியதற்கு மாற்றமாக கூறுகிறார்கள் இவ்வாதாட்டத்தை எவ்வாறு நியாய படுத்துவீர்கள் .

ராஷித்: நண்பரே ஏராளமான சான்றுகள் உள்ளன.

முதலாவது: முஸ்லீம்கள் வெற்றி கொண்ட பிரதேசங்களில் வாழ்ந்த ஏனைய சமூகத்தினர் இஸ்லாமிய ஆட்சியிலும் ஏன் இன்னும் கூட அவர்களின் மார்க்கத்திலேயே இருக்கின்றனர் எகிப்து ,பலஸ்தீனம் ,லெபனான் ,கிரீஸ்-கிரேக்கம் — இந்தியா போன்ற நாடுகள் இதற்கு எடுத்துகாட்டாகும் ஆனால் அதே நேரம் கிறிஸ்தவ

இரானுவத்தினர் கட்டுபாட்டில் இருந்த ஜெரூஸலம் ,அநிதுலூசியா ,பிலிப்பைன போன்ற நாடுகளை எடுத்து கொண்டால் மேற்கூறியதற்கு முற்றிலும் மாறாக இனப்படுகொலைகள அரங்கேறின கிறிஸ்தவ மதத்தை ஏற்றுகொள்ளுமாறு அப்பிரதேச வாழ் மக்களை வற்புறுத்தினர் அதற்கு உடன் படாதவர்களை கட்டாய இடப்பெயர்ச்சி செய்தனர்.

இரண்டாவது: இஸ்லாமியர்கள் வெற்றி கொண்ட நாடுகளை விட்டு இஸ்லாமிய இரானுவ படை சென்றதும் அங்கே முஸ்லீம்கள் கொடூரமாக நடந்து கொண்டார்கள் என்பதற்கோ அல்லது அச்சமூகம் இஸ்லாத்தை வெறுத்தார்கள் என்பதற்கோ எவ்வித தோற்றப்பாடும் கிடையாது ஆனால் முன்னால் சோவியத் ரஷ்யாவில் வாழ்ந்த முஸ்லீம்கள் கம்யூனிச ஆட்சியில் இஸ்லாத்தை சுதந்திரமாக பின்பற்ற முடியாமல் மறைத்தார்கள் இக்கொடூரமான ஆட்சிமுறை நீங்கி இஸ்லாத்தை சரிவர பின்பற்ற முடியுமான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஏங்கித் தவித்தார்கள் .

மூன்றாவது: இஸ்லாமிய நாடுகளுடன் போர் செய்து பெரும்பாலான பிரதேசங்களை கைப்பற்றிய தாத்தாரியர்கள் துருக்கியர்கள் போன்றோர் முஸ்லீம்களின் நடத்தையை கண்டு இஸ்லாத்தை ஏற்று அதை காப்பவர்களாக மாறிய வரலாறும் உண்டு.

மைக்கல்: இஸ்லாம் வாளால் பரப்பபடவில்லை என்பதை ஏற்று கொள்கிறேன் அதேபோனேறு வரலாற்றை ஒரு புரம் விட்டு விடுங்கள் தற்போதைய நிலைமையை பார்த்தால் பயங்கரவாதமெனின் அது இஸ்லாம் தான் என்று உலகமே கூறுமளவு மாறிவிட்டது என்ன இதை ஏற்று கொள்கிறீர்களா.

ராஷித்:முதலில் பயங்கரவாதம் என்றால் என்னவென்று வரையறை செய்து கொள்வேம்.பிறகு இவ்வுலகில் பயங்கரவாதிகள் எனப்பார்ப்போம்.

ரஜிவ்: உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு மத்தியில் பயங்கரவாதத்தை பற்றி பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன என்றாலும் பொதுவான அமைப்பில் வரம்பு மீறிய தரப்பினர் தனிநபராகவோ அல்லது குழுவாகவோ அல்லது அரசாகவோ அல்லது பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக அப்பாவிகளை ஏதோ ஒரு விதத்தில் அச்சுறுத்தல் எனலாம்.

ராஷித்: இவ்வறையறை ஓரளவு ஏற்றுகொள்ளப்பட்டதாக இருப்பினும் சில குறைபாடுகளும் உள்ளன பரவாயில்லை அத்தோடு வரம்புமீறிய தரப்பினர் தனிநபராகவோ அல்லது குழுவினராகவோ அல்லது அரசாகவோ இருந்தாலும் சரி என்ற வசனத்தையிம் இனைத்து கொள்வோம்.

மைக்கல்: ம் அதில் எந்த பிரச்சினையிம் இல்லை சரி உலகலாவரீதியாக அரங்கேறிய பயங்கரவாத நிகழ்வுகளை பார்ப்போம் 2001ம் ஆன்டு செப்டம்பர் 11ல் நடைபெற்ற நிவ்யோர்க் உலக வர்த்தக மைய இரட்டை கோபுர தாக்குதல் இந்துநேசியாவின் பாலியல் மேற்கத்தய உல்லாச பிரயாணிகளுக்கெதிராக நடைபெற்ற தொடர் குண்டு தாக்குதல் ,யூதர்களுக்கு எதிராக பலஸ்தீனர்கள் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் இவையனைத்தும் முஸ்லீம்களால் மேற்கொள்ளபட்ட

பயங்கரவாத நடவடிக்கைகளே.

றாசித்: நண்பரே சற்று பொருங்கள் பலஸ்தீனர்கள் மேற்கொள்கின்ற தாக்குதல்கள் ஆக்கிரமிப்பு படைக்கெதிராக தற்பாதுகாப்பு நடவடிக்கைகளே அதற்கென வரலாற்றில் பயங்கரமான கருப்புபக்கங்களும் உள்ளன ஒரு பூமியை ஆக்கிரமித்து அதிலுள்ளவர்களை விரட்டி அவர்கள் பல வழிகளிலும் துன்புறுத்த படுவதை கண்டுகொள்ளாமல் இருக்க முடியுமா இதோ இந்த வன்முறைக்கு என்ன கூறுகிறீர்கள்.

1947.12.31 இல் அஷ்ஷெக் நகரில் அரேங்கேரிய படுகொலைகள் இதில் 600 அப்பாவி பொதுமக்கள் தங்களது வீட்டிலேயே அநியாயமாக கொள்ளபட்டார்கள்.

1948.04.10இல் தீர் யாஸின் கிராமத்தில் நடைபெற்ற படு கொலைகள் இதில் ஊர்வாசிகளில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பழி.கினர்.

1948.7.11 இல் நடைபெற்ற அல்லத் இனச்சுத்திகரிப்பு பள்ளியில் கூடியிருந்த 426 அப்பாவி பொதுமக்கள் மிக்கொடூரமாக மாய்ந்தார்கள் ஒரு வரையிம் அந்த யூதர்கள் விட்டுவைக்கவில்லை .

1965.ஒக்கோட்பர்களில் அரங்கேறி கப்ர்காஸிம் படுகொலை இதில் குழந்தைகள் சிறுவர்கள் என 94 பொதுமக்கள் கொல்ல பட்டனர்.

1982.9.18 இல் நடைபெற்ற சப்ரா,ஷாட்டிலா,படுகொலைகள் லெபனான் கிறிஸ்தவ போராளிகள் உதவியுடன் உலகபயங்கரவாதி ஏரியல் ஷெரோனால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 72 மனித்தியாலங்கள் இத்தொடர்தாக்குதளில் பெண்கள் ,குழந்தைகள் ,வயோதிபர்கள் என 3500 பலஸ்தீனர்களும் ,லெபனானியர்களும் கொல்லபட்டார்கள் முஸ்லீமாக பிறந்தது அவர்கள் செய்த குற்றமா.

1994.4.25 இல் அறங்கேறிய இப்ராஹிமிய்யா பள்ளிவாசல் படுகொலை சில குழுக்களின் உதவியுடன் இஸ்ரேலியபடை மேற்கொன்ட இத்தாக்குதலில் 29 பேர் தொழுதுகொன்டிருக்கும் நிலையில் உயிரிளந்தார்கள் 50 பேர் பள்ளிவாசலுக்கு வெளியில் கொல்லப்பட்டார்கள் 350 தொழுகையாளிகள் படுகாயமடைந்தார்கள்.

இன்றுமொன்றை கூறுகிறேன் நன்றாகக் கவனியிங்கள் 1995 ஆம் ஆண்டு ஒல்ஹோமாவில் நடைபெற்ற fedarel கட்டிட குண்டுவெடிப்பு இதில் 168 பேர் கொல்லப்பட்டனர் 500 பேர் காயமுற்றனர் 2011 ஜூலைகளில் அரங்கேறிய otaya தீவு மற்றும் ஒஸ்லோ படுகொலைகள் இதில் 92 பேர் மான்டனர் 90 பேர் காய முற்றனர் இவ்விருதாக்குதல்களும் கிறிஸ்தவ தீவிரவாதிகளால் வேன்டுமென்ற மேற்கொள்ளப்பட்டனர்.

தீவிரமாதம் மதம் அல்லது நாகரீகம் சார்ந்த என்ற கண்னோட்டத்தில் ஆராய் வோண்டுமானால் நவீன காலத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் கவனத்திற்கொள்ள வேண்டுமல்லவா.

எக்காலத்தில் இஸ்லாமிய அரசு மேற்கத்திய அரசை தாக்கியதாக வரலாற்றில்

எங்குமே குறிப்பிடவில்லை ஆனால் அதற்கு மாற்றமாக நிகழ்ந்திருக்கிறது.

அமெரிக்காவில் வாழ்ந்த சுமார் 10 மில்லியன் சனத்தொகைகொண்ட செவ்விந்தியர்கள் 2இலட்சம் வேண்டுமென்பதற்காக மேற்கத்தய நாகரீக விரும்பிகளால் இனச்சுத் திகரிப்புக்குள்ளாக்கப்பட்டார்கள் அது மட்டு மன்றி அவர்களுடைய அமெரிக்கா கண்டனும் பரிக்கப்பட்டது.

மேற்குலகு இருபெரும் உலகமகாயுத்தங்களை தோற்றுவித்து —குறிப்பாக- ஐரோப்பிய நாடுகள் இரண்டாக பிரிந்து —முதலாம் உலக மகா யுத்தம் அதில் முதல் அணியினரில் பழியானவர்களின் என்னிக்கை 20 மில்லியனை தாண்டியது அதே என்னிக்கையிலானோர் காயம்மடைந்தனர் சிலர் ஊனமுற்றனர் இரண்டாம் அனியில் 55 மில்லியன் பேர் வரை பலியாகினர் காயமடைந்தவர் 55 மில்லியனையிம் ஊனமுற்றவர்களின் என்னிக்கை 3 மில்லியனையும் அடைந்தது பலியானவர்களில் பெரும்பாலானோர் காலநித்துவ வாதிகள் சிவில் சமூகமாக இருந்தனர் போர் புரிந்தோர் தங்களின் எதிரியை முறியடிப்பதற்காக சிவில் சமூகத்தையே இலக்காக கொண்டனர்.

அப்பாவி மக்களை துன்புறுத்துவது குற்றமெனின் மேற்சொன்ன அதே அப்பாவிகளை கொல்வது தாக்குதலுக்கான சூத்திரதாரிகளின் பிரதான நோக்காகவும் இருந்தது இவற்றையெல்லாம் குறிப்பாக பலஸ்தீனர்களுக்காக கட்டவிழ்த்து விடப்பட்ட சியோனிஷ அடாவடித்தனங்களுக்கு துனைநிற்றல் மற்றும் ஈராக்கின் தொடர்முற்றுகையால் என அனைத்தையிம் மேற்குலகும் ,அமெரிக்காவும் தற்பாதுகாப்பு நடவடிக்கை என உளறுகின்றன.

ரஜிவ்: ம்.... எனவே பயங்கரவாதம் மதம்சார்ந்ததோ அல்லது நாகரீகம் சார்ந்ததோ அல்ல என்ற முடிவுக்கு வரலாம்.

ராஷித்: ஆம் மதஞ்சார்ந்ததல்ல ஆனால் மோதல் படைவலுப்படுத்தல் எதிர்ப்புநடவடிக்கைகளில் ஈடுபடல் முதலியவற்றை நோக்காக கொண்ட மேற்கத்தய நாகரீகங்களின் அனுமானங்களை பற்றி ஆராய கடமைபட்டுள்ளோம் ஏனெனில் கிரேக்க உரோம நாகரீகங்கள் முழுமூச்சாக கொண்ட அதே சிந்தனையை இன்றைய மேற்கத்தய நாகரீகம் உள்வாங்கியுள்ளது ஐரோப்பா உட்பட உலகம் முழுவதையிம் ஆற்கொன்டுள்ள பயங்கரவாத நடவடிக்கையின் தோற்றங்களை கிறிஸ்தவமத போதனைகளால் தடுக்கமுடியாதுள்ளனய.

மைக்கல்: அடுத்த உரையாடலில் சந்திப்போம்.

https://www.path-2-happiness.com/ta

இஸ்லாத்தின் எதிர்காலம்

இஸ்லாத்தின் எதிர்காலம்

வழமைக்கு மாற்றமாக ரஜீவ் சற்றுதாமதமாகவே, அவர் இணையத்திற்கு வந்தவுடன் மைக்கல் அவரைநோக்கி

வருக ரஜீவ் வருக! நீங்கள் நேரத்திற்கு சமுகமளிக்கவேண்டும்...தாமதிக்கும் பழக்கம் உங்களிடம் வரக்கூடாதெென எதிர்ப்பார்க்கிறேன் .

ரஜீவ்: நன்பர்களே மன்னிக்கவும் , அப்படியொன்றுமில்லை , நான் உங்களிடம் முன்வைப்பதற்காக ஓர் ஆய்வின் இறுதிக்கட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

மைக்கல்: பிரம்மாதம், அப்போ உறையாடல் சுவாரஸ்யமாக இருக்கும்.... ஆய்வாஃ ..எதைப்பற்றி.ஃ

றஜிவ்: உண்மையில்..... சொல்லப்போனால்...இஸ்லாம் தொடர்பான எங்களுடைய உறையாடலே இந்த ஆய்விக்கான காரணமெனலாம். எனவே இந்த மார்க்கம் உலகம் முழுவதும் எவ்வாறு பரவுகிறது ..எனது ஆய்வு அதைப்பற்றிதான்

மைக்கல்: அந்த ...அதே விடயம்தான் என்னையும் ஓர் ஆய்வு செய்யத்தூண்டியது. அது இருக்கட்டும், ஆய்வில் பெற்ற தகவல்களென்ன ?தலைவர் றாஷித்! நீங்கள் எங்களுடனா ?

றாஷித்: ஆமாம், உங்களோடுதான்...

றஜிவ்: நான்பெற்றுக்கொண்ட தகவல்கள் அனைத்தும் இஸ்லாம் உலகம் பூராக மிக வேகமாகப்பரவி வரும் மார்க்கம் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. உலகத்தில் 4200 க்கும் மேறபட்ட கொள்கைகளும், மதங்களும் உள்ளன ஆனால் அவற்றில் இஸ்லாமே மிக வேகமாக பரவி வருமவதாக புள்ளிவிபரவியல்கள் அறிவிக்கின்றன. உலக முஸ்லிம்களின் வளர்ச்சியை கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகையில், முஸ்லிம்கள் வருடாந்தம் 6.4 % விகித்த்திலும் கிறிஸ்தவர்கள் ஒரேயொரு விகித்த்திலும் வளர்ச்சியடைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

எனது ஆய்வில் ஐரோப்பிய நாடுகளான ஸ்பெய்ன், பிரித்தாணியா, ப்ரான்ஸ் முதலியவற்றில் இஸ்லாம் இரண்டாவது பிரதான சமயமாகத்திகழ்கின்றது.

ஜேர்மனிய நாளாந்தப்பத்திரிகையான DIE WELT செய்தி வெளியிடுகையில், ஜேர்மனியில் இஸ்லாம் மிக வேகமாகப்பரவி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸிய உள்விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பிரான்ஸல் ஏழு மில்லியன் முஸ்லிம்கள், 2300 பள்ளிவாசல்கள் இருப்பதாகவும் வருடாந்தம் 3600 க்கும் அதிகமானோர் இஸ்லாத்தில் நுழைவதாகவும், 2025 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் பிரான்ஸ் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினராக வகிப்பார்கள் என எதிர்பாக்கப்படுவதாகவும், உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி

2050 ஆம் ஆண்டில் ஐரோப்பிய சனத்தொகையில் 20 சத வீதமானவர்களாக முஸ்லிம்கள் திகழ்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வேறு சில புள்ளி விபரவியல்களின் படி 2040 ஆம் ஆண்டில் முஸ்லிம்களே ஐரோப்பிய பெரும்பான்மைச் சமூகமாகத்திகழ்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்கெடுப்புக்களின் பிரகாரம் பத்து வருடங்களின்பின் ஒல்லாந்து நாட்டுமக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் முஸ்லீம்களாக திகழ்வார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவீடன் குடிமக்களுக்கு மத்தியில் இஸ்லாம் அதிர்ச்சியூட்டும் விதத்தில் பரவிவருவதாக மற்றுமொரு ஆய்வு குறிப்பிடுகிறது. இஸ்லாமியர்களின் இத்தொடர் அதிகரிப்பினால் சுவீடனில் தற்போது 120,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் குடியிருப்பதாக உத்தியோகப்பூர்வ கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகிறது.

முஸ்லிம்களின் இப்பரவலாக்கத்தால் அதிகமான பள்ளிகள் கட்டப்படுவதாக நம்பப்படுகிறது.. ஐரோப்பாவில் இருபத்தி ஐந்தாயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாயல்கள் இருப்பதாகவும், அவற்றிட்கு பெரும்பாலான முஸ்லிம்கள் வருகை தருவதாகவும் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேநேரம் கிறிஸ்தவ தேவாலயங்களை பார்ப்போமானால், அதற்கு மாற்றமாக , வருகை தருபவர்களின் எண்ணிக்கை சரளமாகக்குறைந்து வருகின்றமை ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளன. Bank Dresden மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் கடந்த வருடங்களாக ஜெர்மனியில் (கிறிஸ்தவ)தேவாலயங்களுக்கு வருகைதருபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும், Diocese of Essen இல் மாத்திரம் 350 தேவாலயங்களில் 96இல் மதஅனுஷ்டாணங்கள் நடைபெருவதில்லை எனவும், அதனால் அவைகள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

எந்தளவுக்கெனின் ஐரோப்பிய தேவாலயமொன்றில் வருகைதருபவர்கள் குழுக்கள் முறையில் தெரிவுசெய்யப்பட்டு வாகனங்கள் பரிசாக வழங்கப்படுகின்றன. மதஅனுஷ்டாணங்களில் ஈடுபடுவதற்காக மக்கள் தேவாலயங்களுக்கு வரவேண்டுமென்பதற்காக இதை செய்கிறார்கள்!!.

மைக்கல்: முஸ்லிம்களை ஐரோப்பாவைவிட்டே வெளியேற்றவேண்டுமென பிடிவாதமாக இருக்கும் சில வலதுசாரிக்கட்சிகளின் இஸ்லாத்தைக்கொச்சைப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் அவதாணிக்கும்போதே... அதை அறிந்துகொள்ளலாம். அதுசரி... இந்த மார்க்கம் இவ்வளவு வேகமாகப்பரவுவதற்கான காரணம் என்ன?.. என்ன ராஷித் வழமைக்கு மாற்றமாக மௌனமாக இருக்கிறீர்?

ராஷித்: உண்மையிலே .. இதைக்கேட்கும்போது மிக அருமையாகவுள்ளது. அதனால், மௌனமாக இருந்து விட்டேன். இஸ்லாம் மிக வேகமாகப்பரவுவதற்கு அதன் தனித்துவக்காரணி, நடைமுறைக்காரணி, மேற்கத்திய சமூகக்காரணி என பல காரணிகள் உள்ளன. என்றாலும், மனித இனம் படைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை நிலைத்திருக்கக்கூடிய வேர்கள் ஆழப்பதிந்த ஒரு மார்க்கத்தில் இவ்வாறு காணப்படுவது... ஆச்சரியமான ஒன்றல்ல.

மைக்கல்: *ஆனால், தலைவர் றாஷித்! இஸ்லாம் தோன்றி 1400 வருடங்களேயாகின்றன. அதே நேரம் யூத, கிறிஸ்தவ மதங்கள் அதற்கு முன்னரே தோன்றிய பரலோக மதங்கள். என்ன... அப்படித்தானே?!*

றாஷித்: *என்றாலும்... இது தொடர்பாக சரியான விளக்கத்தைப்பெற கடமைப்பட்டுள்ளோம். அதாவது; இறைவனிடமிருந்து அருளப்பட்ட மார்க்கம் ஒன்றே; பலவன்று. ஏனெனில் அது ஏக இறைவன் அல்லாஹ்விடமிருந்து மாத்திரம் அருளப்பட்டது. என்றாலும் காலத்திற்கும் , சமூகத்திற்கும் ஏற்ப சில அனுஷ்டாணங்களில் வித்தியாசப்படலாம். இறைதூதர்களுக்கிடையிலான காலப்பிரிவு மிக நீண்டதாக இருந்ததால், மக்கள் மார்க்கத்தைவிட்டு விலகி நெறிபிறல்வில் சென்றிருக்க வாய்ப்புள்ளது. எனவே அதை அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக காலத்துக்குக்காலம் இறைத்தூதர்களை அனுப்பவேண்டிய தேவையேற்பட்டது. இதைத்தான் இஸ்லாத்தின் இறுதித்தூதர் இவ்வாறு சுட்டிக்காட்டினார் : ((நபிமார்கள் சகோதரர்களாவர்; அவர்களுடைய மார்க்கமும் ஒன்றாகும். ஆயினும், சமூகங்கள் வேறுபட்டவை.)) அதாவது; காலமும், அனுஷ்டானங்களும் வேறுபட்டவை. இறுதியாக இம்மார்க்கம் எவ்வித திரிபுகளுக்கும், கையாடல்களுக்கும் உட்படாது அதன் தூய வடிவில் அல்லாஹ்வின் இறுதித்தூதர் வாயிலாக மனித சமுதாயத்தை வந்தடைந்தது. எனவே மனித இயல்பிற்கு முழுமையாக உடன்படும், இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட இம்மார்க்கம் மறுமைநாள்வரை நிலைத்திருக்கும். இதனால் சர்வ வியாபகமடைவதைக்காண்கிறோம்.*

ரஜீவ்: *என்னைப்பொறுத்தவரை... இதுவொரு புதுவிடயம். சரி , தலைவர் றாஷித்! இஸ்லாம் பரவுவதற்கான காரணிகளைக்கூருவதாக சொன்னீர்கள்...*

றாஷித்: *ஆம், இஸ்லாத்தின் தனித்துவமான சில காரணிகள் உள்ளன. அதாவது; இஸ்லாம் அமைப்பில் விசாலமான, கருத்தில் ஆழமான, கலக்கங்களோ புதிர்களோ அற்ற மிகத்தெளிவான ஓர் மார்க்கம்*

மனித இயல்போடு துணைபோகக்கூடிய., அவனது அனைத்து தேவைகளையும் கவனத்திற்கொண்டு, செயற்படும் நடைமுறைக்கேற்ற மார்க்கம்; நிற , மொழி, இன வேறுபாடுகளைக்களைத்து மனித சமுதாயத்தை அடிப்படையில் சமத்துவப்படுத்துகிறது; அனைத்து விதமமான சமூக சீர்கேடுகளையும் முற்றாக தடைசெய்கிறது.

இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் ஒருங்கே இணைக்கவல்ல, நடைமுறைக்கேற்ற மார்க்கம் இஸ்லாம் ஒன்றே.

மனிதசமூகம் ஏற்கும் வகையில் தர்க்க ரீதியாகவும், சிந்தை ரீதியாகவும் ஆதாரங்களை முன்வைத்து சிந்தனைக்கு மதிப்பளிக்கிறது.

அறிவியல் எழுச்சியை புறக்கணிக்காது, அதை வலியுறுத்தக்கூடிய மார்க்கம் இஸ்லாம்; இற்றய நவீன அறிவியல் நிரூபிக்கக்கூடிய விஞ்ஞான உண்மைகளை சுமார் 1400 வருடங்களுக்கு முன்னரே தனது மூல நூலான அல்குர்ஆனில் அகப்பதித்துக்கொண்டது.

இடம் மற்றும் கால மாற்றத்தினால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும், முன்னேற்றத்திற்குமேடற்ப இசைவாக்கமடையும் வல்லமை இஸ்லாத்திற்கு உண்டு என்பதை அது திடப்படுத்தியுள்ளது.

உண்மையான சுதந்திரத்தைப்பெற்றுக்கொடுத்த மார்க்கம் இஸ்லாம்; மனிதன் அவனுடைய இறைவனுக்கு மாத்திரம் அடிபணிய வேண்டுமே ஒழிய இன்னொரு படைப்பினத்தினத்திற்கல்ல என வலியுறுத்துகிறது.

வேறு கலாச்சாரங்களும் அதன் போதனைகளை எடுத்துநடக்க அனுமதி வழங்கியிருக்கும் தாராள தன்மைக்கொண்ட மார்க்கம்.

மைக்கல்: மேற்கத்தய சமூகத்தின் இந்நிலைக்கான காரணத்தை கூறுகிறேன்.

சமூக பிரிவினை வாதம் ,வேறுபட்ட தத்துவார்த்த சித்தாங்கள் அறிவியல் மற்றும் திருச்சபைகளுக்கிடையிலான முரண்பாடு என கடந்த பல நூற்றாண்டுகளாக மேற்கத்தய சமூகம் முகம் கொடுத்து வந்த பிரச்சினைகளால் அச்சமூகம் சிந்தனை ரீதியான குழப்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது இந்நிலை அச்சமூத்தை தடுமாற்றத்தில் தள்ளிவிட்டிருக்கிறது.

மேற்கத்தய மனிதன் ஆன்மீக வெறுமையாக்கம் அவனுடைய அனைத்து கோட்பாடுகளையிம் ஆற்கொன்டு வாழ்க்கையில் தனக்கென மிகப்பெரும் பகுதியை பதித்துகொன்டுள்ளது.

திருச்சபையினால் தூய வழிகாட்டல் என போதிக்கும் அம்சங்கள் மனித இயல்பிற்கு முரணாகாத இருத்தல் மேற்கத்தய சமூகம் சமயத்தைவிட்டும் தூரசெல்வதற்கான மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

அதேநேரம் சமூக முரன்பாடு சீறற்ற குடும்ப கட்டமைப்பு ,தார்மீக வீழ்ச்சி முதலியன அச்சமூகத்தில் இரண்டர கலந்து விட்டது என்பதை மறுக்க முடியாது.

ராஷித்: சரி நாம் நடைமுறை காரனிகளை நோக்கினால் இஸ்லாத்தையிம் ,முஸ்லிம்களையும் கொச்சைபடுத்துவதற்காக மேற்கொள்ளபட்டுவரும் நடவடிக்கைகள் இன்னொரு வழியில் அம்மார்க்கத்தை பற்றி அறிய வேண்டு மென்ற பிறர் அவாவை தூன்டுகின்றன.

அதே நேரம் இஸ்லாமிய அறிஞர்களுக்குமிடையில் வேறு மார்க்க அறிஞர்களுக்குமிடையில் விவாதங்கள் விவாதங்கள் நிகழ்கின்றன.

அது மட்டுமன்றி மேற்குலகில் சிறுபான்மை சமூகங்களில் ஒன்றாக முஸ்லிம்களும் திகழ்கின்றனர் இவ்வாறான காரணிகள் இஸ்லாத்தையிம் முஸ்லீம்களையிம் பற்றி (மேற்கத்தய) அச்சமூகம் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை வழிகோலுகின்றன என்பதையிம் மறந்து விடக்கூடாது.

எனவே இவையனைத்தையிம் பார்க்கும் போது எதிர்காலம் இஸ்லாத்தின் வசமே என என்னால் கூறமுடியிம்.

நட ப ன இணை யதளங கள